பக்தியின் எல்லை சக்தி!

KOVILOOR VEDANTA MUTT

4-6

ஆசிரியர் :

அமரர் திரு. நா. வேணுகோபால் நாயகர்
பி.ஏ., பி.எல்.,

பதிப்பாசிரியர் :

திருமதி பு. ஆ. கௌசல்யாதேவி
பி.எஸ்.ஸி., பி.டி.

நா. வே. நா.வின் 80-வது பிறந்தநாள் நினைவாக
''நாராயண தனம்'' நலக் கட்டளையின்
வெளியீடு.

பதிப்பாசிரியர் குழு

திருமதி. பு. ஆ. கௌசல்யா தேவி
பி.எஸ்.ஸி, பி. டி.,

புலவர் திரு ஏ. பரந்தாம ராமானுஜதாஸர்
எம்.ஏ.பி.எட்.

திரு. வேணு. ராச நாராயணன்,
பி.எஸ்.ஸி., பி.எல்.

முதற்பதிப்பு : ஈஸ்வர, சித்திரைத் திங்கள், ஏப்ரல் 1997

உரிமை : பதிப்பாசிரியர்

வெளியீடு :

நாராயண தனம் நலக் கட்டளை
A. G. 43, அண்ணாநகர் சென்னை-600 040
தொலைபேசி : 6211768

விலை ரூ. 50-00

KOVILOOR AN...AR
A. No. 12342
LIBRARY V...OR

அச்சிட்டோர்
மூவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை-600 014
தொலைபேசி : 8267189

அவர்தம் எண்ணத்திற்கு ஏற்ப அவருடைய கருத்துச் சிற்பங்களை வாழ்வில் வைணவம் என்கிற தலைப்பில் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டிருந்தோம். அதன் அடிப்படையில் இந்த நூலும் உங்கள் கைகளில்;

இந்த நூலை வடிவமாக்க உதவிய புலவர் ஏ.பரந்தாமன் டாக்டர் சுதாசேசையன், மூவேந்தர் அச்சகத்தார், திரு முத்து. முகப்பு படம் அமைத்துத் தந்த திரு ஜமால், முழு முயற்சியும் ஏற்றுக் கொண்ட என் மகன் வேணு. ராச நாராயணன், அவருடைய நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

நா. வேணுகோபால் நாயகரின் கருத்துகளை உலகம் அறிய கொண்டு வரும் இம்முயற்சியை வெற்றியடைய செய்வீர்கள்... சக்தியைக் கொடுப்பீர்கள். என்று நம்பு கிறேன்.

இந்தக் கருத்துப் பெட்டகத்தை அடைத்து விடாதீர்கள்:
''நமக்குள்ளே.....''

''நாராயண தனம்'' அன்புடன்;
ஏ. ஜி. 43, அண்ணா நகர், **பு. ஆ. கௌசல்யாதேவி**
சென்னை—600 040
தொலைபேசி: 621 17 68
5341677

K. Venkataswami

JUDGE SUPREME
COURT OF INDIA
11, Tughlak Road
New Delhi-110 011
Phone : 3793490

April 2 1997

அணியரங்கம்

மக்களின் வாழ்க்கைக்கு ஒளிகூட்டி—நன்னெறி காட்டி—வளம் சேர்ப்பதற்காகத் தோன்றியது மதம். ஆற்று நீருக்கு இருகரைகளைப் போல, இறையருளை நோக்கிப் பிரவகித்துப் பாய்ந்தோடும் மானுட வாழ்க்கையை நெறிப்படுத்தக் கூடியது—நேர்ப்படுத்தக் கூடியது மதம். ஒன்றேயான பரம்பொருளை வெவ்வேறு வழிகளில் சென்றடையலாம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பல மதங்களைத் தங்களது சீரிய சிந்தனைத் திறன்களுக்கு ஏற்ப சான்றோர்கள் வகுத்து வைத்தனர். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் இடைவழியாக மதங்களை அமைத்து அம்மதங்களின் வழியே மக்களின் இறை நம்பிக்கை வளர வேண்டும் என்பதற்காகப் பற்பல புராணங்களையும் பாடல்களையும், காவியங்களையும் எழுதி வைத்தனர்.

இவ்வாறு தோன்றிய பல சமயங்களில் முக்கியமானவை இந்தியாவில் உதித்த சைவமும் வைணவமும் ஆகும். காக்கும் கடவுளான திருமாலின் திருநெறியைப் பரப்புவதே வைணவ சமயம். சைவசமயக் குரவர்கள் சிவன்புகழ் பாடியும். வைணவ ஆழ்வார்கள் பெருமாளைப் போற்றிச் சேவித்தும் தமிழ் வளர்த்தனர். தமிழ்வளர சமயங்களும் வளரலாயிற்று. ஆக, தமிழ்நாட்டில் மொழி வளர்ச்சியும் சமயவளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாக இருந்தது.

நமக்குள்ளே...

ஆக்கம், ஆற்றல், ஆதிகேசவன் (ஆண்டவன்) இந்த மூன்று சொற்களின் முழுப்பொருளாய், விளக்கமாய் வாழ்ந்தவர் என் கணவர் அமரர் திரு நா. வேணு கோபால் நாயகர்

நினைத்த காரியத்தை நெஞ்சில் நிறுத்தி நிலையாரு உருவத்தைக் கொடுத்து அதை உருவாக்கி செயல்பட வைப்பதில் திறமையானவர் திண்மையானவர்.

தோல்வி என்று தன் வாழ்க்கையில் துவண்டு விடாதவர். இயலாது என்று தீர்மானித்ததைக் கூட தன் திறமையால் சாதித்துக் காட்டியவர் திரு நா. வே. நா.

வாழ்நாள் முழுவதும் கற்று உணர்வதையும், கேட்டு அறிவதையும், தன் அறிவுச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதையும் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டவர்.

சமய தத்துவங்கள், சரித்திரம், மொழி இவைகள்மீது அவருக்கு அழியாத ஆசை இருந்தது. ஆனாலும் அருந் தமிழ், அரியுணர்வு இவற்றை அவர் கண்ணெனப் போற்றியவர். பல காலமாக அவர் கேட்டு, உணர்ந்த வைணவத் தத்துவங்களை செம்மைப்படுத்தி சுலபமாக சாமான்யரும் அறிந்து கொள்ளவும், பகுத்தறிவின் அடிப் படையில் புரிந்து கொள்ளவும் வழி செய்தவர்.

அதன் விளைவாக அவருடைய, பேச்சுகளை எழுத்து வடிவில் நமக்கு விட்டு விட்டுச் சென்றதுதான் நம் கையில் இருக்கும் இந்த நூல்!

மற்றும் இந்நூலில் அவர் 'திருக்கோயில்', 'பக்தன்' 'கீதா சாரியன்', போன்ற ஆன்மீக இதழ்களுக்கு அவர் எழுதிய கட்டுரைகளும் அடங்கும்.

'திருமால் திருநெறி,' இலங்கை உலக இந்து மாநாட்டிற்காக மாநாட்டின் மலருக்காக அவர் கலந்து கொண்ட பொழுது எழுதிய கருத்து ஓவியம்.

நா. வே. நா அவர்கள் ஆங்கில மொழியிலும் சிறந்த புலமை பெற்றவர். அதற்கு எடுத்துக் காட்டாகவே இந்நூலில் 'Pirraati in Sri Vaishnavam' எனும் கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையை நா. வே. நா அவர்கள் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எழுதியது. மாநாட்டு மலரிலும் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.

இக்கட்டுரையை அவர் வெளியிட்ட விதமே அவர் தம் நெஞ்ச உறுதியையும், வைணவத்தின் மீதும், தமிழ் மீதும் கொண்ட பற்றை வெளிப்படுத்தும்.

மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற அவருக்கு மதுரையில் மாரடைப்பு ஏற்பட்டது. அவரும் அமரர் திரு தேவநேயபாவாணரும் மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்கள். மருத்துவர்கள் இவரது உடல் நிலை குறித்து கவலை தெரிவித்திருந்தாலும் தன் பணியை முடிக்காமல் செல்லக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த நா. வே. நா. மருத்துவர்களின் அனுமதி பெற்று மாநாட்டில் தன் உரையைச் சமர்ப்பித்தார். இந்த விவரங்கள் சென்னையில் இருந்த அவர் இல்லத்தார்களுக்கு கூட தெரியாது. இதற்கு மேலுமா அவரைப் பற்றியும் அவரது நூலைப்பற்றியும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

உண்மை வழிபாட்டிற்கும், மத முன்னேற்றத்திற்கும் இடையூறுதான் உண்டாகும். ''அனைவர்க்கும் பரமபதம் கிடைப்பதானால், அடியேன் நரகம் புகுந்தால் என்ன?'' என்ற காரேய் கருணை இராமானுசருடைய பரந்த விசாலமான திருவுள்ளம் கன்றாதபடி ராமானுஜ தாசர்கள் நடந்து கொண்டால் 'விண்ணும் ஆள்வர் மண்ணூடே' என்ற நிலைமை ஏற்படும்'' என்ற 'நா. வே. நா'வாக்கினை வைணவத்தைப் பரப்புவோரும், இராமானுஜ கூடங்கள் நடத்துவோரும், மாநாடுகளை நடத்துவோரும் தவறாது பின்பற்றுதல் மனித குலத்திற்கு நன்மை பயப்பதாகும்.

நாராயணன் புகழ்பாடும் 'நா. வே. நா' நூல்களின் கருத்துகளும், அவர் வாதங்களை அமைக்கும் அழகும் இன்றைய இளந் தலைமுறையினரின் உள்ளங்களில் ஆழப் பதிந்து, காலப்போக்கில் இன்னொரு 'நா. வே. நா' உருவெடுப்பாரேயானால் அதுவே இந்தச் சோர்வில்லா சொல்லவல்லார்க்குக் கிடைத்த வெற்றியாகும்.''

வேங்கடசாமி

உள்ளே...

துவைதம், அத்வைதம் என்று இருவேறு வழிகளில் இறைத் தத்துவங்கள் விளக்கப்பட்ட போது, விசிட்டாத் வைதம் என்று மூன்றாவது சமன்செய்யும் கோட்பாட்டை முன் வைத்தது வைணவ சமயம். அதாவது இறைத் தத்துவங்கள் மூன்று எனவும், அசித்தும். சித்தும் ஈசுவர னுக்கு உடலாகின்றன என்றும் ஸ்ரீவைணவம் கூறுகிறது. உயிரற்ற உடம்பாகிய சடப்பொருளிலே, உயிர் கலந்திட உடம்பும் உயிரும் இறைவனுக்கு வாகனமாகின்றன. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தவைதான் பகவானின் திரு அவதாரப் புராணங்கள். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவன், உயிர்களின் உடம்புக்குள் புகுந்து கொண்டு இந்த உலகிலே அவதரித்து, மக்களுக்கு வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்தி, தனது புகழை நிலை நாட்டுகின்றான்.

எம்பெருமானின் ஆற்றல்களை விளக்கி அவனுடைய இறவாப்புகழைப்பாடும் புராணங்களுக்கும் பாடல்களுக்கும் விளக்கம் கூறும் வகையில் தமிழ் மொழியில் பற்பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் தலையாயதாக நா.வே.நாவின் ''வாழ்வில் வைணவம்'' என்ற நூலின் இரண்டு தொகுதிகள் வெளியாகி, தற்போது மூன்றாவது தொகுதி ''பக்தியின் எல்லை சக்தி'' யெனும் நூலாக வெளிவருகிறது. வைணவத் தொண்டர் வழக்குரைஞர் திரு. நா. வேணுகோபால் நாயகர் தமது வாழ்நாளில் எழுதிய பற்பல கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. ''நா. வே. நா'' அவர்களின் தொழில் மாட்சி இந்நூல்ல் நன்கு பிரதிபலிக்கிறது எனலாம். குறிப் பாக, ''காக்கை பிடித்த வைபவம்'' என்னும் கட்டுரை யில் (பக்—22)

''எத்திசையும் திரிந்தோடி இளைந்து விழும் காகம் போல் அடைக்கலம் நான் புகுந்தேனே'' என்ற பாடல்வரி களுக்கு கூறும் விளக்கம் சிறப்பித்துப் பாராட்டத்தக்கது

எதிர்வாதம் ஸ்ரீ ராமானுஜ தாசர் என்ற ஒரு நண்பரை உருவாக்கி, வினாக்களுக்கு எதிர்வினாக்களும்; விடைகளுக்கு எதிர்விடைகளும் தரச்செய்து விளக்குகின்றார். இறைத் தத்துவத்திலேயே மிகவும் உயரியது சரணாகதித் தத்துவம். கால் கையைப் பற்றுதல்—என்று காக்கை பிடிப்பதைப் பற்றி மிகச் சிறப்பாக இயம்புகின்றார். உலக நடப்பியலுக்கு ஏற்றாற் போல உண்மை உரைப்பதாக அமைந்து விட்டது. காகத்தின் ஒரு கண்ணைப் பறித்து இராமபிரான் வழங்கிய தண்டனையும் திருத்தும் தண்டனையாக—Reformative theory of Punishment—அமைந்தது என்பதைத் தமது கூரிய சட்ட அறிவால் விளக்குகின்றார்.

எம்பெருமானின் சீரிய சிறப்பியல்புகளுக்குத் தம் நுண்ணறிவால் விளக்கமும் வியாக்கியானமும் கொடுப்பதோடு நின்றுவிடாமல், வைணவ சமயம் என்றென்றும் தழைத்தோங்க வேண்டும் என்பதற்காக சில உயரிய கருத்துக்களையும் 'நா. வே. நா' நம்முன் வைக்கின்றார்.

''சம்சாரக் கூண்டுகளில் அடைபட்டுக்
கிடக்கும், கோவிந்தன் குணம்பாடும்
கோலக்கிளிகளை குதூகலிக்கச் செய்யும்''

ஸ்ரீ வைணவ மாநாடுகள் நசித்துப் போகக் கூடாது என்கிற ஆதங்கத்தோடு இக்கால இளைஞர்களுக்கு 'நா. வே. நா' விடுத்துள்ள விண்ணப்பங்கள் (பக்—168) நம் சிந்தனையைத் தூண்டக் கூடியவையாக உள்ளன.

''திருக்கோயில்களிலும், வழிபாட்டு நிலையங்களிலும், ராமானுஜ கூடங்களிலும் இளைஞர்கள் மனது புண்படாத வகையில் வழிபட உதவுவது சமயத்தை வளர்ப்பதாகும், இனம், ஆசாரம் என்ற போர்வைகளில் தற்காலப் போக்கிற்குப் பொருந்தாதவைகளைத் திணித்தால் கடவுள்

வேங்கட வேந்தன்

''வேங்கடாசலபதி'' என்றும் ''வேங்கடபதி'' என்றும் வடமொழியில் அமைந்துள்ள திருநாமங்களை, ''வேங்கட வேந்தன்'' என்று தமிழ்மொழியில் ஓதலாம்.

''ஸ்ரீநிவாசன்'' என்ற திருப்பெயரை, ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா'' எனத் திருவாய்மொழியில் (6-10-10) மங்களாசாசனம் செய்தருள் கின்றார் நம்மாழ்வாரும்.

வேங்கட வேந்தனைச் சேவித்தவர்கள் என்றும், சேவிக் கக் கிடைக்காமல்—ஆனால்— சேவிக்க வேண்டுமென்று அவாவுகின்றவர்கள் என்றும் பக்தப் பெருமக்களை இரு சார்பினராகப் பிரிக்கலாம்.

''இவ்விரு பகுதியினருள்ளும், யார் புண்ணியம் செய்தவர் கள்?'' என வினவினால், ''இரு சாராருமே பேறு பெற்றவர் கள்!'' என ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழியில் அடுத் தடுத்த பாசுரங்களில், திருவுள்ளம் பற்றுகின்றார்.

சேவித்தவர்கள் வினை ஓயுமாம்!

''குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்!
அன்று ஞாலம் அளந்த பிரான்! பரன்
சென்று சேர் திருவேங்கடமாமலை ஒன்றுமே தொழ
நம்வினை ஓயுமே! (3-3-8)

சேவிக்கக்கூடாமல், ஆனால் சேவிக்க வேண்டுமென்ற வேட்கையுறுபவர்கட்கு.

''ஓயும் மூப்புப் பிறப்பு இறப்புப்—பிணி,
வீயுமாறு செய்வான்! திருவேங்கடத்து
ஆயன்! நாண்மலராம் அடித்தாமரை,
வாயுள்ளும், மனத்துள்ளும், வைப்பார்கட்கே''
(3-3-9)

முன்னவர்கள் கண்களால் கண்டு, கைகளால் தொழுதனர்; பின்னவர்கள் வாயாலும், நெஞ்சாலும் இறைஞ்சினார்கள்.

வேங்கடவேந்தனின் வேடத்தைக் கண்ணாலும், மனத்தாலும் காண்போம்!

''எம்பெருமான், ஈசன் எழில் வேங்கடமலைமேல், ஈர் இரண்டு (நான்கு) மால்வரைத் தோள்களுடன் (திருக்கரங்களுடன்) சேவை சாதிக்கின்றான்.

சுடராழியை வலத்ததாக உயர்த்தி உள்ளான்; மல்லார் தோள்வட வேங்கடவன்!

''கூன் ஏறு சங்கத்தை இடத்ததாகக் கொண்டுள்ளான் வேங்கடத்தான்!

வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியையும்
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியத்தையும்
ஏன் அணிந்துள்ளான்? ஏழுமலையான்.
நாடாளும் வேந்தனுக்குக் கடமைகள் இரண்டு—.
தீயோரைத் தண்டித்து நல்லோரைக் காப்பதே!
வையம் முழுதும் ஆளும் வேங்கட வேந்தனும்
இவ்விரண்டு கடமைகளை ஏற்றுள்ளான்,

ஏந்துவது சாதுக்களுக்கு அபயம் அளிக்க முழங்கவே. (கம்ப நாட்டாழ்வார் அநுமன் வாயிலாக இராவணனுக்கு அறிவுறுத்துவது போன்று).

''அறம் தலைநிறுத்தி வேதம் அருள் சுரந்து
அறைந்த நீதித் திறம் தெரிந்து உலகம்
பூரணச் செந்நெறி செலுத்தவே!''

கொலை ஆழி தரிப்பது தீயோரைத் தண்டிக்கவே. தவத்தோரின் இடர் துடைக்க; தீயோரை மாய்ப்ப—(தொலைப்ப)தற்கே!

இதனையே துஷ்ட நிக்ரகம் என்றும் சிஷ்ட பரிபாலனம் என்றும் கூறலாம்.

கல்மாரி பொழிந்திடக்கடிது ஆநிரைக்கு இடர்
நீக்குவான் சென்று குன்றம் எடுத்த

திருவேங்கடமுடையான் தனது கீழ்வலது திருக்கரத்தாலே. ''என்றும் வானவர் கைதொழும் தனது இணைத் தாமரை அடிகளைக் காட்டியருளுவது எதற்காக? நாம் அவனது திவ்ய திருவடிகளில் சரணம் புகவே! அதாவது ''அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர்! வாழ்மின்!'' என்று அருள் கொடுக்கின்றான்!

தெள்ளியார் வணங்கும் திருவேங்கடமுடையான் தனது இடது கீழ்க்கரத்தை இடது திருக்காலின் முழங்காலில் இணைத்துக் காட்டுவது ஏன்?

தனது திண் கழல்களில் சரணம் அடைந்தோர்க்குச் சம்சாரக் கடல் முழங்கால் அளவேயாகும் என அறிவுறுத்தி அச்சம் தவிர்ப்பதற்கேயாகும்.

அன்னவயல் புதுவை ஆண்டாள் தமது நாச்சியார் திருமொழியில் அமைந்த மேக விடு தூது பாசுரத்தில்

''வேங்கடத்துத் தன் ஆகத் திருமங்கை தங்கிய
சீர்மார்வன்!''

என மங்களாசாசனம் செய்தருளினார்.

பெரும்பூதூர் மாமுனியான எம்பெருமானார் திருமலை மேல் சந்நிதி கொண்டிருப்பவன் திருமாலே எனத் தெளிவுபடுத்துவதற்காக, அவன் திருமார்பில் வலது பக்கத்தோடு கூட இடது பக்கத்திலும் இலட்சுமிப் பிராட்டியை எழுந்தருள்வித்தார்.

இதனால் ஸ்ரீ ஆண்டாளின் மேற்குறித்த மங்களாசாசனத்தை தன் ஆரத்து இரு (இரண்டு) மங்கை தங்கிய சீர்மார்வற்கு'' என்றும் கொள்ளலாம்-படி உள்ளது!

இது, தங்கையாம் ஸ்ரீ ஆண்டாளின் திருவுள்ளம் நிறைவு பெறும்படி எம்பெருமானாரால் இயற்றியுள்ள கைங்கரியம் என்றும் கொள்ளலாம்.

திருவேங்கடத்து அப்பனுக்குச் சங்கு ஆழி அளித்தருளியவரும் எம்பெருமானாரே; இக்கதை மிக்க சுவையுடையது.

ஸ்ரீஉடையவராம் எம்பெருமானாரின் காலத்தில், "'சென்னி ஓங்கு தண் திருவேங்கடத்திலே, உலகு தன்னை வாழநின்ற நம்பி, தாமோதரனா! அல்லது தாழ்சடைக் கடவுளான சிவனா எனத் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது; ''திருமலை சிவத்தலம்தான்!'' என்ற வாதம் மேலோங்கி, பக்தியை விளைவிக்க வேண்டிய தலம் பக்திக்குப் பங்கத்தை விளைவித்துவிட்டது;

ஸ்ரீ இராமாநுசரின் ஏற்பாட்டின்படி ஒரு நாள் இரவு திருவேங்கடமுடையானின் திருவடிகளில், திருமாலின் சின்னங்களான திருவாழி. திருச்சங்கையும், சிவச்சின்னங்களான மான். மழுவையும் வைத்துத் திருக்காப்பிட்டு. மறு நாள் திருக்காப்பை நீக்கியதும் திருவேங்கடத்து எம்பெருமான் சங்கு சக்கரங்களைத் தரித்துக் கொண்டு திருமாலாகவே சேவை சாதித்தருளினான்; இராமாநுசரின் இந்த மகத்தான சேவையை மதிப்பிட முடியாது. இகதா

சாரியரான எம்பெருமானாரின் இந்த அரிய சேவையால் தான், திருமலை இன்றும் ஸ்ரீ வைணவத் திவ்விய தேசப் பொலிவுடன் திகழ்கின்றது. திருவேங்கடத்து அப்பனுக்கு சங்கு ஆழி அளித்தருளியமையால், எம்பெருமானாருக்கு மட்டும் திருமலையில், ஆசாரிய உபதேச முத்திரையுடன் சந்நிதி, உண்டியலுக்கு எதிரே அமைந்துள்ளது.

வேங்கடவேந்தனின் முகவாய்க்கட்டையிலே பொலியும் ஒரு வெள்ளை ஒத்தடம் கூறும் கதையைக் கேட்போம்.

திருவரங்கத்தில் எம்பெருமானார் தமது திருவாய் மொழிக் காலட்சேபத்தில்.

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழிகுரல் அருவித்திருவேங்கடத்து
எழில் கொள் சோதி எந்தை தந்தைக்கே! (2-9-9)

என்ற பாசுரத்திற்கு விளக்கம் அருளிய போது, வானவர் வானவர்கோனொடும் சிந்து, பூ மகிழும் திருவேங்கடம் சென்று நந்தவனம் அமைத்து வேங்கடவேந்தனுக்குப் புட்ப கைங்கரியம் புரியத் தன் சீடராம் அனந்தாழ்வான் விரும்ப, அவரையே நியமித்தருளினார்.

அனந்தாழ்வானும், சேஷுயர் வேங்கடம் சென்று பிற் காலத்தில் தனது பெயரால் அமைந்துள்ள ஏரியை ஆழப் படுத்துவதற்காக மண்வெட்டியால் மண் எடுத்து. பூரண மகப்பேறு வாய்ந்திருந்த தன் மனைவியின் தலைமீது கூடை யில் வைத்து, மண்ணைக் கரை சேர்த்துக் கொண்டிருந் தார். இராமாநுசர் பெயரால் ஏற்படுத்திய நந்தவனத் திற்குத் தண்ணீர் வசதி செய்ய இந்த ஏற்பாடு.

மணி வயிறு வாய்த்திருந்த அனந்தாழ்வானின் மனைவி மண் சுமப்பதைக் காணப்பொறாத வேங்கடவேந்தன், சிறு பிள்ளைவடிவில் வந்து மண் நிறைந்த கூடையை வாங்கி

பாதி தூரம் அளவுக்கு போய்க் கொட்டி வந்தார். தமது மனைவி முன் போலல்லாமல் சிறிது காலத்தளவில் திரும்பி வந்ததைக் கண்ட அனந்தாழ்வான் அச்சிறுவன் செய்த உதவியைத்தெரிந்து கொண்டார். எம்பெருமானார் நியமித்தருளிய கைங்கரியத்தில் ஒரு பாகத்தைக் களவு கொண்டதால் சினந்து, அச்சிறுவனின் முகவாய்க் கட்டையில் மண் வெட்டியால் தாக்கவும், உதிரம் பெருக அச்சிறுவனும் ஓடி மறைந்தான். அனந்தாழ்வானும் வேங்கடவேந்தனுக்கான மாலைகளைக் கட்டி எடுத்துக் கொண்டு சந்நிதிக்குச் செல்லவும், வேங்கட வேந்தனின் முகவாய்க் கட்டைப் பகுதியில் உதிரம் பெருகுவதைக் கண்டு உடனே பச்சிலைச் சாற்றையும் பச்சைக் கற்பூரத்தையும் அப்பி மருத்துவம் செய்யவும் உதிரம் பெருகுவது நின்றது.

அனந்தாழ்வானின் புட்ப கைங்கரிய உயர்வைக் காட்டும் அவ்வடையாளத்தை வேங்கடவேந்தனின் முகத்தில் இன்றும் சேவிக்கலாம். அவர் உபயோகித்த பூக்குடலும் சந்நிதிக்குள் தொங்குகின்றது.

வேங்கட வேந்தனை ஒரு சமயம் சேவிக்க வந்த தொண்டைமான் சக்ரவர்த்தி அதிக மணமுள்ள மலர்களை அமோகமாகச் சமர்ப்பித்துத் தன் சேவையை வியந்து கொண்டான். வேங்கடவேந்தன் சக்ரவர்த்தியின் கனவில் தோன்றி, ''குயவன் பக்தியுடன் அணிவித்த மண் மலர்களை உகந்தோம்!'' எனத் திருவாய் மலர்ந்து அருளினான்.

சக்ரவர்த்தி உண்மையை விசாரிக்கவும் திருமலையின் அடிவாரத்தில் மண்பாண்டத் தொழில் செய்யும் பக்தர் ஒருவர் தம் தினப் பணியைத் தொடங்கும் முன்னதாக, ளி மண்ணால் சிறு மலர்களை அமைத்து எதிரில் எழுந்தருளப் பண்ணிய திருவேங்கட முடையான் திருவடிகளில் சமர்ப்பிக்கவும், அவை உடனே மறைந்து எழுசிகர வேங்கடத்தின் உச்சியிலே எழுந்தருளியுள்ள வேங்கடவேந்தரின் திருவடிகளில், அரசனால் சேர்ப்பிக்கப்பட்ட நறுமண மலர்களுக்கு மேலே இருப்பதைக் கண்டான்;

இதனால் தொண்டைமான் சக்ரவர்த்தியின் மனக் குறும்பை அறுத்தார் அப்பக்தர்; எனவே அவருக்குக் ''குறும்பு அறுத்த நம்பி!'' என்று சிறப்புத் திருநாமமும் ஏற்பட்டது.

வேங்கடவேந்தன், வட திருவேங்கடத்தில் எழுந் தருளியுள்ள எளிமையையும் கருணையையும் காண்போம்.

அடிமைத்தொழிலும் அவன் உகப்பிற்கே!

திருவேங்கடமுடையானின் திருமுக மண்டலத்தைச் சேவியுங்கள்! அவனுடைய திருமுக மண்டலத்தில் அமைந் துள்ள உதடுகளைச் சேவியுங்கள்! நம்மை மயக்கும் புன்சிரிப் பும் தெளிவாகத் தோன்றுகின்றதே! உதடுகளில் இயற்கை யாக அமைந்துள்ளது புன்சிரிப்பே என்பதை இருபக்கத் தவடைகளிலும் விளங்கும் வளைவுக் கோடுகளும் சாட்சி அளித்து நிச்சயப் படுத்துகின்றனவே!

இந்த மந்தகாசப்புன்முறுவலைச் சேவிக்க வொன்னவி லும் கூர்வேல் குலசேகரப் பெருமாள் ஒருமிக அரிய உபதே சத்தை அருளுகின்றார்.

> ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
> வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்!''

என்று ஸ்ரீ நம்மாழ்வார் உபதேசித்து அருளியபடித் திருவேங்கட முடையானின் திவ்விய திருவடிகளில் நாம் புரியும் கைங்கரியத்தை (குற்றேவலை) மூன்று பிரிவுகளில் அமைக்கலாம்.

1. நமக்கே மகிழ்ச்சி உண்டாவதற்காகப் புரியும் கைங்கரியம்;
2. நமக்கும், நம்மை இரட்சிக்கும் திருவேங்கடவனுக் கும் மகிழ்ச்சியை உண்டாக்குவதற்காகப் புரியும் தொண்டு.

3. பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து எழுந்தருளியுள்ள மின் வட்டச் சுடராழி வேங்கடக் கோனின். விருப்பிற்காகவே, அவன் சிந்தை குளிர்ந்து உதடுகளில் பொலியும் சிரிப்பால் அங்கீ கரித்தருளும் குற்றேவல்:

நம் உகப்பிற்காக புரியும் முதல் இரண்டு வகைப்பட்ட தொண்டுகள் தொண்டைமான் சக்ரவர்த்தியின் மலர்த் தொண்டைப் போல் அகங்காரம் கலந்து அநர்த்தத்தை விளைவிப்பன, மூன்றாவதான அவனுடைய முக உல்லாசம் ஒன்றையே கருதி பாரதந்திரிய நினைவோடு அவனுக் கெனவே புரியும் வழுவிலா அடிமைத் தொழில்:

''கொல்லி காவலன்! கூடல் நாயகன்!
கோழிக்கோன் குலசேகரப் பெருமான்,
ஆனாதசெல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும், மண்ணரசும்'' வேண்டாமல்
''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா!''
நின்கோயிலின் வாசற்படியாக் கிடக்கும்''

தொண்டு செய்வதால் அவன் திருமுக மண்டலத்திலே பொங்கும் சிரிப்பை வெளியிடும் பவள வாயைச் சேவிக்க ஆசை கொண்டார்.

திருவேங்கடமலை என்ன, எல்லா திவ்யதேசங்களிலும் உள்ள கற்பக்கிரகத் (கருவறையில்)தில் அமைந்துள்ள படி களாகவே விளங்க, குலசேகரப் பெருமானுக்கு அருளிய தால், ஸ்ரீ வைணவ சந்நிதிகளில் உள்ள கருவறைப்படி களுக்கு 'குலசேகரன்படி' எனற திருநாமம் ஏற்பட்டது.

கொல்லி நகர்க்கிறை கடல் கோமானாகிய, குலசேகரப் பெருமான் திருவுள்ளத்தையும். திருவேங்கடத்தின் திருமுக மண்டல உல்லாசத்தினையும் வெளியிடும் பாசுரமாகும்.

"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே!

தண்ணீர், முதலிலே ஆகாயத்தில் மேக மண்டலத்தில் தன் பயணத்தைத் தொடங்குகின்றது,

இறைவனும் முதன் முதலில் ஆகாயத்திற்கும் அப்பாற் பட்ட பரமபதத்திலே (வைகுண்டத்திலே) எழுந்தருளி யுள்ளான்.

தண்ணீர் மேக மண்டத்திலிருந்து மழையாகப் பொழிந்து, கடலாக உருவெடுக்கின்றது. ஆகாய மண்டலத்தில் ஒருவருக்கும் உதவாத நீர், கடல் சேர்ந்து உயிர்த் தத்துவங்கள் ஏற்படவும். அவ்வுயிர்த் தத்துவங்களுக்குத் தேவைப்படும் வசதிகட்குவித்தாக அமைகின்றது.

பரமபதத்திலே ஒருவருக்கும் ஒரு குறையும் இல்லை. எம்பெருமானும் தன் கருணையை அருளை வெளியிட சமயம் நேராமல் தவிக்கின்றான்.

அதனால் பரமபதத்தைவிட்டு, திருப்பாற்கடல் சேர்கின்றான். அதாவது பரமபதமான பரம் நிலையிலிருந்து திருபாற்க்கடலாகிற வியூக நிலைக்கு எழுந்தருளுகின்றான்.

வியூகமாகிற திருப்பாற்கடல் நிலையில், தேவர்களும் முனிவர்களும் மட்டுமே சென்று சேவிக்க இயலும். என் அனைய முனிவரும், இமையவரும் இடையூறு ஒன்று உடையரானால், பன்னகரும் பாற்கடலும் சென்று முறையிடுவது கூடும் என விசுவாமித்திரர் வாயிலாக அமைக்கின்றார் கம்ப நாட்டு ஆழ்வாரும்!

எனவே உலகில் வாழ்வோர்க்கு உதவும் வகையில் மூன்றாவதாக அவதாரங்களை எடுக்கின்றான் எம்பெருமான்! இவைகளுள் இராமகிருஷ்ண அவதாரங்கள்

புராண அவதாரங்கள், அதாவது பெருக்காறாக ஓடும் மகா நதிகள் என்றும், ஜீவநதிகள் என்றும் போற்றப் படுவது போல, ஏனைய அவதாரங்கள் சிற்றாறுகள் போல, சிற்றாறுகளும். மகாநதிகளும் கூட, காலப் போக்கில் வற்றி விடுகின்றன, வெள்ளம் ஓடிய காலத்திலே இருந்தவர்கட்கே பயன்பட்டன. அவ்விதமாகவே அவதாரங்களும் அக்காலத் தில் வாழ்ந்திருந்த மக்களை மட்டுமே வாழ்வித்தருளின; பின்புள்ளார்க்குக் கர்ணபரம்பரைக் கதைகளாகவே பயன் பட்டன. காட்சிக்கு அருமையாயின;

ஆற்றுப்பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும்; அவ் வாறே ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும், நீர் நிலைகள். அதாவது கோடரியும் மண்வெட்டியும் கொண்டு மண்ணை அகழ்ந்தால் நிலத்திற்கு அடியில் உள்ளே உறையும் நீர் மட்டம் தோன்றி உதவும்-கிணறுகளை உவமானமாகக் கூறலாம்: கண்ணுக்குத் தெரியாமல் இருந்த தண்ணீர் நம் முயற்சியினால் தோற்றம் அளித்தது.

இவ்விதமாகவே இறைவனும் இராமகிருஷ்ண திருவவ தாரங்களுக்குப் பிறகு மறைந்து, தவங்கிடப்போர்க்கும் பக்திப் பெருக்கு உற்றோர்க்கும், காட்சி தந்தான். இவ்வித மாகக் கண்ணுக்குக் காணாமல் அந்தர்யாமியாக இருந்தது நான்காம் நிலை.

பிறகு பின்புள்ளார்கள் எளிதில் உய்யும்படி "நாட்டி னான் தெய்வம் எங்கும் நல்லது ஓர் அருள் தன்னாலே".

அதாவது ஆங்காங்கு அர்ச்சிக்கப்படும் விக்கிரக வடிவ நிலை யிலே எழுந்தருளினான். தனது பரம கருணையினாலே எல்லோரும் எளிதாக இறைஞ்சும்படி விக்கிரக—உருவ வடிவிலே அமைத்துக் கொண்ட நிலையே அர்ச்சை நிலை;

இவைகளுள் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார் களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற சந்நிதிகள் திவ்ய தேசங்களாகும்.

திவ்விய தேசங்கள் நூற்றெட்டு. அவைகளுள் வேங்கடம் மிக விழுமியது—ஆழ்வார்கள் பதின்மராலும் மங்களாசாசனம் அருளப் பெற்றது.

இவ்விதமாகப் பரமபதத்திலிருந்து வியூகத்திற்கும். பிறகு முறையே விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை நிலைகளிலும் எழுந்தருளி வேங்கடத்தில் வேந்தனாக விளங்கும் விவரத்தை ஒரே பாசுரத்தில் திருவாய் மலர்ந்து அருள்கின்றார் நம்மாழ்வார்.

1. "விண்மீது இருப்பாய்!" (பரமபதத்தில் சேவை தருவது)

2. "மலைமேல் நிற்பாய்!" (வேங்கடவேந்தனாகக் காட்சி தருவது)

3. "கடல் சேர்ப்பாய்!" (வியூக நிலையில் சேவை தருவது)

4. "மண்மீது உழல்வாய்!" (அவதாரங்கள் மூலம் அருள்வது)

5. "இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்! (அந்தர் யாமித்துவம்)

"எண் மீது இயன்ற புற அண்டத்தாய்! எனது ஆவி
உன்மீது ஆடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ!"
(6-9-5)

"எங்கும் நிறைந்தாயே; எங்குச் சென்றாயே!

வேங்கட வேந்தனை விளக்காக வைத்து ஈசுவரனுடைய இலக்கணங்கள் நான்கையும் விளக்கியருள்கின்றார் நம்மாழ்வார் தம் பாசுரத்திலே,

அ) இறைவனிடம் மேலோங்கி விளங்க வேண்டிய கல்யாண குணம் ''வாத்சல்யமாகும்''. அதாவது பரிவு, அன்பு, கருணை—இதுவே அவனுக்கு நிகரில்லாத புகழைத் தருவன—

''நிகரில் புகழாய்''

ஆ) வாத்சல்யத்தை அடுத்த பெருங்குணம் ''சுவாமித் துவமாகும்'' அதாவது இறைவன் எல்லா உயிர்கட்கும் நாதனாகையாலே, எல்லாவற்றையும் அவன் எளிதில் ஆட் கொள்ளும் குணம் அசித்-சித் அனைத்தும் அவன் உடமை கள் ஆதலால் அவற்றை அவன் புறக்கணியாது போற்றிக் காத்தலாகும்,

''உலகம் மூன்று உடையாய்!''

இ) அனைத்து அசித்-சித் ஆகியவற்றைத் தன் உடைமை என்று ஏற்றுக் கொண்ட இறைவன், அவைகளின் தாழ்ச்சியைப் பாராட்டாமல் தன் உயர்வையும் கருதி அகலாமல் சஜாதீயனாக, சம இனத்தவனாக கலந்து பரிமாறிக் காக்கும் குணத்தையே ''சௌசீல்யம்'' என்பது. தன்னைப் போற்றும் அல்லது புறக்கணிக்கும் சீவாத்துமாக் களுடன் புரையறக் கலத்தலே 'சௌசீல்யமாகும்''

''என்னை ஆள்வானே!''

ஈ) இறைவனது நான்காவது மிக அருமையான பெரி தும் போற்றத்தக்க குணம் எளிமையாகும். இதனையே சௌலப்யம் என்று வாழ்த்துகின்றோம்.

தனது சுவாமித்துவ, பரத்துவ உயரிய நிலையைக் கணிக்காமல் எல்லோரும் உய்ய வேண்டி மிகமிக எளியவ னாகக் காட்சித் தருகின்றான். இந்த எளிமைக் குணத்தி னால்தான் வேங்கடவேந்தனாக சர்வ சுலபனாக— எழுந் தருளியிருக்கின்றான்.

"திருவேங்கடத்தானே!"

வேங்கட வேந்தனைச் சுலபமாகத் தடையின்றி அடையும் வழி பிராட்டியின் புருஷகார பலத்தைக்கொண்டுதான். வேங்கடவேந்தனும் திருமாது வாழ் திருமார்பினனாகவே எழுந்தருளியிருக்கின்றான்.

இறைவனுடைய இந்நான்கு சீரிய கல்யாண குணங்களையும். அவனையும் அடையப் பிராட்டியின் புருஷகாரமே துணை என்பதையும் அருளும் நம்மாழ்வாரின் பாசுரத்தைச் சேவித்துச் சேவித்து உய்வோமாக!

'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை
உறை மார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்று உடையாய்!
என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்
கடத்தானே!
புகல் ஒன்று இல்லா அடியேன்! உன் அடிக்கீழ்
அமர்ந்து புகுந்தேனே! (3335)

திருமால் திருநெறி

"திருமால் திருநெறி" என்னும் தலைப்பு, திருமால் அருளும் திருநெறி என்றும். திருமாலை அருளும் திருநெறி என்றும் பொருள்தரும். திருமால் திருநெறி, ஸ்ரீவைணவ சமயம் என்றும் வழங்கப்படுகின்றது. திருமாலைத் தலைவ ராகக் கொண்ட திருநெறியே ஸ்ரீவைணவ சமயம்.

திருமால் திருநெறியில் தலையாய கொள்கை 'தத்துவத் திரயம்' எனப்படும் முப்பொருள் உண்மையாகும். அதாவது இப்பிரபஞ்சம் மூன்று பொருள்களால் இயன்றது என்பது. இம்முப்பொருள்கள் நிலையானவை. நிகரற்றவை, நெடு மாலின் நெறியை நிலைநாட்டுபவை.

முதலாவது, உயிரற்றவைகளான ஐம்பெரும் சக்திகள் என்னும் பஞ்ச பூதங்களும், இவற்றின் சேர்க்கையால் ஏற் படும் பொருள்களும் ஆகும். இவைகளே அசித்து எனப்படும். இவைகள் தாமே இயங்க இயலாதவை. இரண்டாவது பொருள், சித்து என்னும் உயிர்த்திரன்கள். சீவாத்துமா என்றும் இதனைக் கூறலாம்; மூன்றாவது பொருள் கடவுள்' இறைவன் அல்லது ஈசுவரன் எனலாம்.

அசித்தாலான உடலுடன் கூடி, அதனைத் தொழிற் படுத்துகின்றது உயிர் என்னும் சித்து. இவ்விதமாகவே அசித்து ஆகிய உடலையும், சித்து ஆகிய உயிரையும் தனக்கு உடலாகக் கொண்டு, இறைவனாகிய நாராயணன் இயங்குகின்றான்: நாரங்கள் என்றால், பிரபஞ்சத்தில் பரவி யுள்ள அனைத்துப் பொருள்களின் தொகுதியும் உயிர்ப் பொருள்களின் தொகுதியும் ஆகும். அயனம் என்றால்

இவைகளை இயக்குபவன் என்பது பொருள். எனவே இந்த நாரங்களை இயக்குபவனை, இவைகளுக்குத் தன் சக்தியை அருளுபவனை நாராயணன் என்று துதிக்கின்றோம். இவ் விதமாக உயிரற்ற எல்லாப் பொருள்களிலும். உயிர் தத்து வங்களிலும், இறைவன் பரவி நிற்பதைச் சேவித்த சான் றோர்கள். அவ்விறைவனை நாராயணன், விஷ்ணு என்னும் திருப்பெயர்களால் வணங்கினர், விஷ்ணு என்றால் எங்கும் பரவியிருப்பவன் என்று பொருள். இங்ஙனம் தாமே இயங் காத அனைத்துப் பொருள்களையும் உயிர்த்திரன்களையும் உடலாகக் கொண்டு இறைவன் இயங்குவதை நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் பின்வருமாறு விளக்குகின்றார்.

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே''

—திருவாய்மொழி

வேதங்கள் நான்கு அவைகளை விளக்க வந்த அங்கங் கள் ஆறு. நான்கு வேதங்களையும், நான்கு பிரபந்தங் களாகத் தமிழிலே அருளினார் நம்மாழ்வார். இந்நான்கு பிரபந்தங்களுக்கும் தமது ஆறு பிரபந்தங்களால் தமிழில் விளக்கம் தந்தருளிய திருமங்கையாழ்வார், இக்கருத்தையே அடியோற்றிப் பின்வருமாறு அருளுகின்றார்.

மண்ணாய் நீர்எரிகால்
மஞ்சுலாவும் ஆகாசமுமாய்ப்
புண்ணார் ஆக்கை தன்னுள்
புலம்பித் தளர்ந்து எய்த்தொழிந்தேன்
விண்ணார் நீள்சிகர
விரையார் திருவேங்கடவா
அண்ணா வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண் டருளே

—பெரிய திருமொழி

உலகில் உள்ளன எல்லாம் இறைவனான ஒரே தத்துவம் (அத்துவிதம்) என்று ஒரு சாராரும்! உலகில் உள்ளனவெல் லாம் இறைவன், உயிர்கள் என்ற இரண்டு தத்துவங்கள் (துவைதம்) இவ்இரண்டும் தனித்து இயங்குகின்றன என்று வேறொரு சாராரும் உலகினை விளக்க முயன்றார்கள்; இவ்விரு கொள்கைகளையும் சமன்செய்யும் வகையில் உலகில் உள்ள தத்துவங்கள் மூன்று என்றும், அவைகள் முறையே அசித்து, சித்து, ஈசுவரன் என்றும், அசித்து சித் துக்கு உடலாக அமைந்துள்ளது போன்றே அசித்தும் சித்தும் ஆகிய இரண்டும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்து ஒருமைப் பாட்டில் இயங்குகின்றது என்றும் முழுத்தெளிவை உண்டாக்கியது விசிட்டாத்துவிதம் என்னும் ஸ்ரீவைஷ்ண வத் தத்துவக்கொள்கை.

நம்மாழ்வார் தாம் அருளிச்செய்த திருவாய் மொழி யின் முதற் பாசுரத்திலேயே;

''துயர் அறு சுடரடி தொழுதுஎழு என் மனமே'' என்று, தன் திருவுள்ளத்திற்கு நியமித்தருள்கின்றார். இதனால் பெறப்படுவது துயரால் அவதிப்படும் மனம் வேறு. அதனை அவதிப்படுத்தும் துயர் வேறு: அத்துயரை அறுக்கின்ற சுடரடி வேறு என்பதாகும். தொழுது எழும் மனம், சித்து அல்லது உயிர். துயர் என்பது உடலும் ஐம்பூதங்களாலான உலகமும், அதாவது அசித்து. துயரறு சுடரடி என்பது இறைவனாகிய ஈசுவரன். இறைவனுக்குத் திருமேனி உண் டென்பது இதனால் தெளிவாகின்றது. இறைவன் அடி என்பார், தெய்வப் புலவரான திருவள்ளுவரும்.

உயிர் தத்துவங்கள் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து உழல்வதன் காரணம், அவைகள் செய்யும் வினைகளே. திருமாலும் அவ்வப்போது பிறந்தருள்கின்றார். இதனை அவதாரம் என்பர். திருமால் தொடர்ந்து அவதரித்தருள் வதன் காரணம். அவனது ஒப்பற்ற கருணையே. நாம் பிறப்பது நம் ஞான ஒழுக்கக் குறைவுகளாலே. ஆனால் திருமால் பிறப்பது உயிரினங்களாகிய நம்மை ஆட்கொண்டு

காப்பதற்காகவே. உயிர்களாகிய நாம் வினைவசத்தால் பிறக்கின்றோம். ஆனால் இறைவனாகிய திருமாலோ கிருபாவசத்தினால் அவதரிக்கின்றனர். திருமால் நம்முடைய பிறவித் துயரை அறுப்பதற்காகவே பல பிறவிகளை எடுக்கின்றார் என்பதனை நம்மாழ்வார் பின்வரும் திருவிருத்தப் பாடலில் அருளிச் செய்கின்றார்.

''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா
ஒழுக்கும் அழுக்குடம்பும்,
இந்நின்ற நீர்மை இனியாம்
உறாமை, உயிர் அளிப்பான்

எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்
இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன்
செய்யும் விண்ணப்பமே''

—திருவிருத்தம்

திருமாலாம் எம்பெருமானுடைய அவதாரங்களில் சிறந்தவை பத்து. இவைகளைப் பின்வருமாறு பெரியாழ்வார் வரிசைப்படுத்தி அருளிச் செய்கிறார்;

தேவுடைய மீனமா யாமையாய்
ஏனமா யரியாய்க் குறளாய்,
மூவுருவி ராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்,

சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடி
பூவணைமேல் துதைத்தெழுசெம் பொடியாடி
விளையாடும் புனல் அரங்கமே

—பெரியாழ்வார் திருமொழி,

இதன்படி திருமால் மச்சம். கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன். தசரதராமன், பலராமன் கண்ணபிரான், கல்கி என்னும் பத்து அவதாரங்கள் எடுத்

தமைபற்றிய விவரம் தெரிகின்றது. திருமால் இதுவரை எடுத்தருளிய அவதாரங்கள் ஒன்பதுதான். பத்தாவதாகிய கல்கி அவதாரம் என்பது இனி கலியுகத்தின் இறுதியில்நிகழ விருப்பதாக நூல்கள் கூறுகின்றன. எனவே இதுவரை எடுத்த அவதாரங்கள் ஒன்பது: மச்ச கூர்ம வராக நரசிம்ம அவதாரங்களை முன் நான்காகவும், பரசுராம, தசரதராம பலராம, கிருஷ்ண அவதாரங்களைப் பின் நான்காகவும், கொண்டால், நடுநாயகமாக அமைந்திருப்பது வாமன திரிவிக்கிரம அவதாரமேயாகும். ''முன்னம் குறள்உருவாய் மூன்றடிமண் கொண்டு, அளந்த மன்னன் சரிதை'' என்னும் வாமன திரிவிக்கிரம அவதாரத்தின் அருமை பெருமைகள் அளப்பரியன; அதன் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள்கள் ஆராய்ந்து உணர்ந்து மகிழத்தக்கன.

உலகில் அசித்து எனப்படும் உயிரற்ற அசைவற்ற எல்லாப் பொருள்களுக்கும், சித்து எனப்படும் உயிருடைய அசையும் பொருளுக்கும் தலைவனாகி விட்டதால், மாபலி என்பவன் 'சக்கரவர்த்தி' என்னும் சிறப்பை அடைகின் றான். இரணியனுக்கும் இராவணனுக்கும்கூட இப்பட்டம் கிடையாதே! குலந்தான் அசுரகுலம், குணம் அசுர குணமல் லவே; இவன் 'செய்தொழில் வேற்றுமையால்' சிறப்படை கின்றான். மாபலி செய்த தவறுதான் என்ன? தன்னிடம் உள்ள உலகப் பொருள்களையும். பொறுப்புகளையும். உயர்ந்தோர்க்கு வழங்கிவிடவே யாகம் செய்யத் தொடங்கு கின்றான். இந்த யாகம், தியானம் தானே.

இத்தகைய நிலையில், தேவர்கள் ஏன் தலைதெறிக்கத் திருமாலிடம் ஒடி முறையிட வேண்டும் மாவலிக்கு எதிராக. தேவர்கள் உயர்ந்தவர்கள் ஆயிற்றே! அவர்கள் மாவலியிடம் ஏதோ ஒரு அவசியமான விலக்கவேண்டிய தவறு அல்லது செயலைக் கண்டார்கள் போலும்; அதை அவர்கள் தேவாதி தேவனிடம் தேவரகசியமாகவே விண்ணப்பித்தார்கள். தேவர்களின் வேண்டுகோளைத் திருச்செவி சார்த்திய திருமால், அக்குறையைத் தீர்ப்பதாக ஒப்புக் கொண்டார்.

கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாட்டாழ்வார் தேவர்கள் கூறிய மாவலியின் தவறான செயலை வெளிப்படையாகத் தம் பாடலில் கூறாமல். கம்பசூத்திரமாகவே காட்டு கின்றார்.

''ஆயது அறிந்தவர் வானவர் அந்நாள்
மாயனை வந்து வணங்கி இறந்தார்
தீயவன் வெந்தொழில் தீர்என நின்றார்
நாயகனும் அதுசெய்ய நயந்தான்''
—வேள்விப்படலம், 20

''அது செய்ய நயந்தான்;'' எது செய்ய நயந்தான்: திருமால் வாமன உருவில் மாவலியிடம் எழுந்தருளி, தானும் ஒரு வேள்வி இயற்றுவதாகவும், அதற்கு மூவடி மண் தேவை என்றும் வேண்டினான். மாவலி திருமாலின் உட்கருத்தை உணராமல் ஒப்புதல் தந்துவிட்டான். ''மூவடி மண்தா!'' என்றதை மண்ணுலகச் சொற்களாகக் கருதிக்கொண்டான் மாவலி. மாவலியிடம் கேட்டுப் பெற்ற வேண்டுகோளைச் செயற்படுத்த முனைந்த திருமால், தன் கருத்துப்படி செயற் படலானார்.

பிரபஞ்சத்தில் உள்ளவை சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றே. அசித்து, சித்து இவையே பிரபஞ்சம் என்று எண்ணி வாழ்ந்தான் மாவலி. சகல பிரபஞ்சத்தையும் வென்று தன் ஆட்சியில் அடக்கி விட்டதாகவும் நினைத் திருந்தான். இவைகளுக்கெல்லாம் தானே உரிமையாளன் என்றும், தலைவன் என்றும் எண்ணி அவைகளைத் தான மாக வழங்கலானான். இதற்கு மாறாக, அசித்து, சித்து அனைத்தும், ஈசுவரனாகிய தனக்கே அடக்கம் என்று அறிவுச் சுடர்கொளுத்தத் திருவுள்ளம் பற்றினார் திருமால். மாவலியும் இதை உடனே உணர்ந்து கொண்டான். தன் பிழையைத் திருத்திக்கொள்ள முற்பட்டான். அசித்து வடிவ மான சகல உலகப் பொருள்களையும் திருமாலின் திருவடி யிலே அர்ப்பணிக்கவும், திருமால் அவைகளைத் தன் திருவடியில் அடக்கிக் கொண்டான்; அடுத்தபடி மாவலி தன் ஆட்சியில் இருப்பதாக எண்ணிய, சித்து வடிவிலான

சகல உயிர் தந்துவங்களையும் திருமாலினுடையதே என்று மாவலி ஒப்புக்கொண்டான். அவைகளையும் திருமால் இரண்டாவதாகத் தன் திருவடியில் ஏற்றருளினான். மூன் றாவது தத்துவமான ஈசுவரன். தன் ஆளுகையில் இல்லை என்றும், எனவே ஈசுவரனைத் தானமாகத் தருவதற்குத் தன் இயலாமையைத் தாழ்மையுடன் தெரிவித்துத் தலை வணங்கினான் மாவலி. உடனேதிருமால், தானே ஈசுவரன் என்று தன் முழுவடிவம் காட்டியருளி தன்னை உணர்ந்து வணங்கித் தாழ்ந்து பணிந்த மாவலியின் தலையைத் தன் திருவடியில் பொருத்தி, அவனையும் ஆட்கொண்ட அதிச யத்தை வியந்து போற்றுகின்றார் நம்மாழ்வார்.

''ஆழி யெழச்சங்கும் வில்லு மெழ, திசை
வர்ழி யெழத்தண்டும் வாகு மெழ, அண்டம்
மோழை யெழமுடி பாத மெழ, அப்பன்
ஊழி யெழவுல கங்கொண்ட வாறே''

மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவரான அருள்மாரியான திருமங்கையாழ்வார்.

வெந்திறல் வாணன் வெள்ளி யிடமெய்தி அங்கோர்
குறளாகி மெய்ம்மை யுணர,
செந்தொழில் வேத நாவின் முனியாகி வைய
மடிமூன் றிரந்து பெரிதும்,
மந்திர மீது போகி மதிநின்றி றைஞ்ச
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தர மேழி நூடு செலவுய்த்த பாதம்
அது நம்மை ஆளும் அரசே

என்று மாவலிக்குத் திருமால் அருள்புரிந்த மாட்சி மையினைப்பொருள் படப்பாடிப் புகழ்ந்துள்ளார்.

இங்ஙனம் இறைவன் முன்பு; தான் மிகத்தாழ்ந்த நிலையனாதலை மாவலி உணர்ந்தது, ஏன் எல்லாவற்றிற் கும் கீழான பாதாளம் சேர்ந்தான் என்ற குறிப்பாகக்

கொள்ளவேண்டும். எப்பொழுதும் நிலவியுள்ள, சிரஞ்சீவி யான இம்முப்பொருள் உண்மையாகிய தத்துவத்திரயத் தைச் செம்மையுற உணர்ந்த மாவலியும் சிரஞ்சீவியாகத் திகழ்கின்றானாம்.

அசித்து. சித்து, ஈசுவரன், என்ற முப்பொருளால் ஆனதே உலகம் என்பதை உணர்த்த வந்த திரிவிக்கிரம அவதாரத்தின் மேன்மையை நெஞ்சையள்ளும் செஞ்சொற் சிலப்பதிகாரம் என்ற செழுந் தமிழ்க் காப்பியத்தில் இளங் கோவடிகள் "மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகை முடியத் தாவிய சேவடி" என்று புகழ்ந்து துதிக்கின்றார். இத்தகைய திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே? கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே? நாராயணா என்னாத நா என்ன நாவோ?

திருக்குறளாம் தமிழ் மறையை அருளிய செந்நாப்போ தாரும், "மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு" என்று, இவ்வாமன திரிவிக்கிரம அவதாரத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டுப் போற்றியிருத் தல் காணலாம். ஆழ்வார்களும். கம்பரும், இளங்கோவடி களும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும் வாழ்த்தி வணங்கிய மாண்புடையது வாமன அவதாரம். திருமால் நெறியின் அடிப்படையான கொள்கை உலகோர் உணர்தற் பொருட்டுத் திருமால் உகந்தருளிய நடுநாயகமான வாமன திரிவிக்கிரம அவதாரத்தின் மாட்சிமைதான் என்னே!

காக்கை பிடித்த வைபவம் !

முதலாவது—எதிர்வாதப் படலம்!
முனியேல்மின்! படலங்கள் மூன்றே!

எனது இனிய நண்பரைப் பற்றித் தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள்! ஏனென்றால், அடியேன் இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு இவரேதான் காரணம்! இவர் அடியேனுடைய மனதில் எப்போதும் கொலுவீற்றிருக்கின்றார்! எதைப் படித்தாலும், எதைக் கேட்டாலும் எதைப்பற்றிச் சிந்தித்தாலும், இவருடைய குறுக்கு விசாரணைகளுக்கு ஆளாகத்தான் வேண்டும்! எதையும் இவர் ஒப்புக் கொண்டால்தான் சரி! இல்லையானால் அடியேனுக்கும் அந்த விஷயம் பூரணமாக விளங்காது! சந்தேக வெள்ளத்தில் அமிழ்ந்து விடும்!

இந்த நண்பர் யார் என்று தெரிந்து கொள்ள ஆசைப் படுகின்றீர்கள் அல்லவா? இவரேதான் சாட்சாத் எதிர்வாத ராமாநுஜ தாசர் என்ற திவ்ய திருநாமம் பூண்டு எழுந்தருளியிருப்பவர்!

உலகம் எல்லாம் ஆசிரியராக ஏற்றுக் கொள்ளத்தக்க பெருமையை உடைய பிள்ளை உலகாசிரியர் அருளிச் செய்த முமுட்சுப்படி என்னும் நூலைச் ஸேவித்துக் கொண்டிருந்தேன்: உலக வாழ்வு முடிவடைந்த பிறகு மோட்சம் அடைய விரும்புகிறவர்கள் தெரிந்து நடந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. என் இனிய நண்பர் ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசரும்

உடனிருந்து வாசிக்கலானார்! இவர் தான் அடியேன் மனதில் சதாகாலமும் எழுந்தருளி இருக்கின்றாரே!

பிராட்டியின் பெருமையை விளக்கும் பொருட்டு, பிள்ளை உலகாசிரியர், "இவள் ஸந்நிதியாலே காகம் தலை பெற்றது; அஃது இல்லாமையாலே இராவணன் முடிந்தான்" என்று அருளிச்செய்துள்ளார். இந்த வாக்கியத்தைப் படித்ததும், ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜதாசர் தாம் இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார்! அதற்கு அவர் கூறுவதையும் கேளுங்கள்!

"காகாசுரன் பிராட்டியின் மார்பகத்தைத் தன் அலகினால் தீண்டி அபசாரப்பட்டும் தலை பெற்றது, பிராட்டியின் சந்நிதியால் அல்ல: ஆனால், அவன் செய்த சரணாகதியால் தான்! பிராட்டியின் சந்நிதி இல்லாமல் போனாலும்; இராவணன் சரணாகதி செய்திருப்பின் அவனும் பிழைத்திருப்பான். இராவணன் யுத்த களத்திலும் பெருமாளிடம் சரணாகதி செய்யாமையால்தான் மடிந்தான்: "இன்று போய் நாளை வா!" என்று பெருமாள் பணித்து, "நாளை வரும் போதாவது சரணாகதி செய்ய மாட்டானா" என்று எதிர்பார்த்த பெருமாளுடைய திரு உள்ளத்தையும் அறியாமல் மறுநாளும் யுத்தத்திற்கே வந்து நின்றான்! அப்படி யுத்தம் செய்ய வேணுமென்று வந்தபோது பிராட்டி இருந்திருந்தாலும், அவனை எப்படிப் பெருமாள் ரட்சித்திருப்பார்?"

இவ்விதமாக எதிரம்பு கோத்தார் ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜதாசர்!

இதற்குச் சமாதானமாக அடியேன் விண்ணப்பித்ததாவது ;

"காகாசுரன் ஏதோ தூரத்தில் விழுந்தான். காலைப் பெருமாள் பக்கம் வைத்தும் விழுந்தான், பிராட்டி காகத்தைப் பெருமாளுக்குச் சமீபமாயும், தலையைப் பெருமாளின் திருவடிப் பக்கமாயும் இருக்கும்படி மாற்றிப்

போட்டாள். இந்த புருஷகாரத்தினால்தான் காகம் தலை பெற்றது என்று ஆசாரியர்கள் திரு உள்ளம் பற்றுவதால், இந்த விவரங்கள் வான்மீகி ராமாயணத்தில் இல்லாவிட்டாலும், நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமே!''

இந்த சமாதானத்தை ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசர் ஏற்றுக்கொள்ளவில்லை! அவருடைய பதிலாவது.

''காகம் சரணாகதி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் விழுந்திருந்தால் எங்கு விழுந்தாலென்ன? எப்படி விழுந்தாலென்ன? ஒரு தகப்பன் தன் குழந்தையை இப்படித்தான் தன் காலில் விழவேணும் என்று நிர்பந்திப்பதுண்டா? எத்திசையும் திரிந்தோடி இணைத்து விழும் காகத்திடம் சரியான முறைகளை எப்படி எதிர்பார்க்கலாம்? 'என் ஊரைச் சொன்னான், என் பேரைச் சொன்னான்' என்றும் ''தன்னடியார் திறத்தகத்துத் தாமரை யாளாகிலும் சிதகுரைக்குமேல், என் அடியார் அது செய்யார்? செய்தாரேல் நன்று செய்தார்! என்று அருளும், 'இத்தனை அடியரானார்க்கு இரங்கும் பித்தனாய்' பெருமாள் எதிர்ப் பார்ப்பாரா? ஆகவே, பிராட்டி காகத்தைச் சரியாகவும், அருகிலும் இழுத்துப் போட வேண்டியது அவசியம் இல்லையே!

ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசர் மேலும் பேசுகிறார்.

''காகாசுரன் சரணாகதி செய்யும் மனம் இல்லாமல் விழுந்திருந்தால், பிராட்டி அருகில் இழுத்துச் சரியாகப் போட்டுவிட்டாலும், பெருமாள் காகாசுரன் மனத்தை அறிந்து கொண்டிருப்பாரே! உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடன் இருந்து அறிபவர் அல்லவா அவர்!

ஸ்ரீமத் தாசர் எதிர்வாதத்தைத் தொடர்ந்து தம் கட்சியை பலப்படுத்திக் கூறுவதாவது.

'காகாசுரன் உண்மையிலேயே சரணாகதி செய்தான் 'வித்தனே இராமா! ஓ! நின்னபயம்!' என்று கதறிக்

கொண்டுதான் காகம் விழுந்ததாக, இந்த வனவாச சமயச் செய்தியும் சீதை இராமனை ''மல்லிகை மாமாலை கொண்டு ஆர்த்த விருத்தாந்தத்தையும்'' வேறு எவரும் கூறாமல் இருக்க பெரியாழ்வார் வெளியிட்டருள்கிறார். முத்திதரும் நகர் எழில் முக்கியமாம் கச்சி தன்னில் அத்திகிரி அருளாள ரிடம் அடைக்கலம் புகும், ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் ''எத் திசையும் திரிந்தேடி இளைத்து விழும் காகத்தை'' அல்லவா உதாரணம் காட்டி முறையிடுகிறார்! இப்படியாகக் காகாசுரன் உண்மையிலேயே சரணாகதி செய்து கொண்டே தான் விழுந்தான். இதற்குச் சீதையின் 'கை வரிசையை''ச் சேர்க்க வேண்டாமே!''

''சரி! காகம் சரணாகதி செய்தே விழுந்தது. சீதையின் மேல் கோபிக்க வேண்டாம்!'' என்று வேண்டினேன்.

உடனே ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜதாசர் புகல்வார்;

''சீதையின் பெயரையே இங்குப் பேசவேண்டாம்! அவள் சந்நிதியால் தான் காகம் தலை பெற்றது என்று கூறுவது கூடாது! பிராட்டியின் சந்நிதி இருந்தும் காகத் திற்கு ஒரு கண் போயிற்றே! இதுவா இவளுடைய புருஷ கார மேன்மை என்று சீறினார் தாசர்!''

''பிரம்மாத்திரம் தொடுத்து விட்டபடியால் அது பழுது போகாமல் இருப்பதற்காக இப்படி ஒரு கண்ணை மாத்திரம் வாங்கினார் பெருமாள்'' என்று சமாதானப்படுத்த முயன்றேன்.

ஸ்ரீமத் தாசர் விடுவதாயில்லை! விளம்புவார் மேலும்!

'பரசுராமன் எதிரிலும்தான் பாணம் தொடுத்தார் பெருமாள்! அப்பரசுராமனின் தபோபலத்தை ஈர்த்தி அங்கஹீனம் செய்யாமல் விட்டதுபோல் காகாசுரனையும் விட்டிருக்கலாமே! பரசுராமனோ கடைசிவரையில் எதிர்த் தவன்! அவனுக்குத் தபோபல நஷ்டம் மட்டுமே! 'சரணா கதி செய்தும், காகத்துக்குக் கண் போயிற்று' என்றால்

இதற்கா பிராட்டியின் புருஷகாரம்! இதுவா இவள் சந்நிதியின்மேன்மை!''

கடற்கரையிலே சமுத்திரராசன் மீது தொடுக்கப்பட்ட பாணத்தால், கடலரசன் அங்கம் ஏதாவது பங்கப்படுத்தப் பட்டதா? அவனுடைய விரோதிவர்க்கம் அன்றோ அழிக்கப் பட்டது! காகாசுரனுக்கு மட்டும் இந்த நியாயம் இல்லையா?

இப்படி எதிர்வாதம் செய்த ஸ்ரீமத் தாசர், மேலும் ஒரு 'அநியாயத்தை'ச் சொல்லி அங்கலாய்த்துக்' கொள்கிறார்.

காகாசுரனுடைய மூக்குக் குற்றம் செய்திருக்க, கண்ணைப் பறிப்பானேன்?

ஸ்ரீமத் தாசர் காக்கை நாட்டிற்காக மன்றாடுகிறார்! மேலும்! ''இது மட்டிலுமா? என்னைக்கோ அந்தக் காகம் செய்த குற்றத்திற்காக. எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் உள்ள காகங்களுக்கெல்லாம் ஒரு கண் மாத்திரம் இருக்கும்படி நியமிக்கலாமா? மற்றக் காகங்கள் இழைத்த அபசாரம்தான் என்ன? மான் உருக்கொண்டு வந்த மாரீசன் தன் உயிரையும் மான் உடலையும் இழந்தான். மற்ற மான்கள் இதனால் தண்டிக்கப்பட வில்லையே!''

''சுக்கிராச்சாரியார் மாவலியின் தானத்தைத் தடுத்துக் கடைசிவரை எதிர்த்து, ஒரு கண்ணை இழந்தார். இங்குக் காகாசுரன் சரணாகதி செய்தும், சுக்கிராச்சாரியரைப் போல் தண்டிக்கப்படலாமா?''

''ஸ்ரீமத் தாசரை நோக்கி வினயமான மெல்லிய குரலில் விண்ணப்பித்தேன் :

''சீதை பாகவதை; அதனால் பாகவதைக்கு இழைத்த தீமையைப் பெருமாளும் மன்னிக்க முடியாதல்லவா?''

உடனே ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசர் ஆரம்பித்து விட்டார்!

"ஐயயோ! இங்கு சீதையல்லவா புருஷகார ஸ்தானத்தில் நிற்பதாக அருளிச் செய்யப்படுகிறது! அப்படிச் சீதையே மன்னித்து விட்ட பாவத்தைப் பெருமாள் எதற்காகப் பிரபலப் படுத்துவது! "விபீடணன் அல்ல; தேவியைப் பிரித்த பாவியான இராவணனே ஆனாலும் அழைத்து வா; ரட்சிக்கிறேன்" என்னும் பெருமாள், அதே தேவியிடம் அபசாரப்பட்டக் காகத்தைத் தண்டிப்பானேன்?" உயிரோடு விட்டார்? என்பது ஒரு அருளாகுமா? "பொன் திகழ் சித்திர கூடப் பொருப்பினில் உற்ற வடிவில் ஒரு கண்ணும் கொண்ட, அக்கற்றைக் குழலன் கடியன் விரைந்துன்னை மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா!" என்ற பெரியாழ்வார் திருவாக்கினால் காகத்தின் கண்ணைக் கொண்டது பெரிய தண்டனையாக வன்றோ தெரிவிக்கப்பட்டுள்ளது? பிராட்டி சந்நிதியிலும் இந்தத் தண்டனை நேரலாமா?"

ஸ்ரீமத் தாசருடைய உணர்ச்சி வேகம் உச்சத்தை அடைந்துவிட்டது! மேற்கொண்டு பேசாமல் அடியேனை முறைத்துப் பார்த்த வண்ணம் தம்முடைய திவ்ய திருமுக மண்டலத்தை வைத்துக் கொண்டார்!

இரண்டாவது : எடுத்த உரைத்த படலம்

ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசருடைய தாக்குதல்களினால் ஏற்பட்ட அதிர்ச்சிகளை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, மனத்திற்குள் பின்வருமாறு யோசித்து விவாதிக்கலானேன். ஸ்ரீமத் தாசரும் அடியேனது உள்ளக் கமலத்தில் வீற்றிருந்த வண்ணம் அங்கு எழுந்த மன அலைகளை உடனிருந்து உணரலானார்!

இந்தக் காகம் யாரோ? என்ன பேரோ? எந்த ஊரோ?

இக்காகம் காகமல்ல. காகம் உருக்கொண்டு வந்த இந்திரன் மகனே! ஜயந்தன் என்ற பெயருடையவன்! தேவலோகத்தைச் சேர்ந்தவன்!

காகத்தின் உருக்கொண்ட காரணம்?

இயற்கை அழகு பொங்கி வழிகின்ற சித்திர கூடப் பர்வதத்தின் சாரலிலே, சீதாபிராட்டியாரின் பேரெழிலைக் கண்ணுற்ற ஜயந்தன், மதிகெட்டுப் பிராட்டியின் அழகிய உடலைத் தீண்ட விரும்பினான்.

இவன் இந்திரன் மகன்தானே! தந்தை அறிவு மகனுக்கல்லவா! தந்தைக்கும் மகனுக்கும் தபோவனத்தில் உத்தம பத்தினிகளைக் கண்டால் காமம் தலைக்கேறிவிடும்! வேஷம் போட்டுக் கொண்டு வேலை தொடங்குவார்கள்!

கௌதம முனிவரின் ஆசிரமத்தில் அகலிகையைக் கண்ட இந்திரன் முனிவர் வேடம் தாங்கினான்: சித்ர கூடத்தில் சீதையைக் கண்ணுற்ற அவன் மகனான ஜயந்தன் கா(மு)க னாக மாறினான்.

இந்திரனால் கௌதமரை அகலிகையிடமிருந்து பிரிக்க முடிந்தது; வேடமும் கொண்டான். ஆனால் ஜயந்தனால் இராமனைச் சீதையிடமிருந்து பிரிக்க முடியவில்லை! எனினும் சீதையின் மடியில் இராமர் படுத்துக் கண்களை மூடிக்கொண்டிருந்த சமயம், ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது இவனுக்கு! சிறு விஷமங்களாவது செய்து திருப்தி அடைய லாம் என்ற சிறுமை மனத்துடன் திட்டமிட்டான். சிறு காக்கையாக மாறி அலகினால் சீதையின் மார்பகத்தைக் கொத்தவும், ரத்தம் பெருக்கெடுத்து விழுந்ததினால் இராமரும் விழித்தெழுந்தார், புறப்பட்டது ராமபாணம்! புவனம் எங்கும் ஓட ஆரம்பித்தது காகமும்.

புவனமெங்கும் ஓடும்படிக் காகத்தைப் பின்தொடர் வானேன் இராமபாணம்? அற்பக் காக்கையை அக்கணமே அவ்விடமே அழித்திருக்கலாமே? மாரீசமாய மானின் வேகத்தை வென்று அவனையும் தொலைத்த இராமபாணம் இக்காக்கையின் வால் பின்னால் அல்லவா போய்க் கொண்டிருந்தது!

பிரபஞ்ச முழுவதும் திரிந்து தஞ்சம் அடைய முயன்றது காகம்! தன்னுடைய தாக்குதலில் இருந்து இந்தக் காகத்தை எந்தத் தேவதையாலும் எந்த தெய்வத்தாலும் காப்பாற்ற முடியாது என்று நிரூபிப்பதற்காகவா இராம பாணம் இந்தக் காகத்தின் உடற் கூண்டில் புகுந்து இதைக் கொல்லாமல். இதன் வால் பின்னால் சென்று கொண் டிருந்தது? இப்படித் தற்பெருமை அடித்துக்கொண்டதா இந்த ராமபாணம்! இராமனும் தன் பெருமையை இந்த அற்பக் காகத்தை வைத்தா வெளியிட விரும்பினான்! தன் உருவையும் வெளிக்காட்டாமல், காக உருவிலேயே கோழை யாகி ஜயந்தன் புறமுதுகிட்டு ஓடும் சமயத்திலா பெருமாள் தன் பெருமையைக் காட்ட விரும்பினார்! இராமனுடைய மேன்மைக்கு இது பொருந்தாதே!

எனவே இராமபாணம்; காக்கை வாலின் பின்னால் தான் போய்க்கொண்டிருக்க வேண்டியதற்கு வேறு சரியான காரணம் இருக்கவேண்டும்! இராமபாணத்தின் சக்தியைப் போன்ற பலமான ஒரு சக்தி இந்த காகத்தின் உடலைத் தீண்ட ஒட்டாதபடித் தடுத்திருக்க வேண்டும்! காக்கை வாலுக்கும் இராமபாணத்தின் முகத்திற்கும் இடையில் பார்வைக்குப் புலப்படாமல் காகத்தைக் காப்பாற்றிய வண்ணம் சஞ்சரித்துக்கொண்டு பிரபஞ்சம் முழுவதும் சுற்றி வந்த அந்த பெருஞ் சக்தி யாதா யிருக்கலாம்? ஆராய் வோம்!

அசோக வனத்தில் ஒரு காட்சி!

அன்னை சீதா பிராட்டியைத் தன் தோள்மீது ஏற்றிக் கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்று அண்ணல் இராமனிடம் சேர்த்து விடுவதாகக் கூறுகின்றான் அநுமன். அப்போது பிராட்டி தன் பெருஞ் சக்தியை வெளியிடு கின்றாள்! இராவணனுக்குப் பயந்து உன் தோள்மீது ஏறிக் கொண்டு ஓடிவருவதாக இல்லை! இராவணன் ஆளும் இலங்கை ராச்சியம் அல்ல, அவன் ஆட்சிக்கு உட்படாத

''எல்லை நீத்த உலகங்கள் யாவும் என் சொல்லினால் சுடுவேன்! அது தூயவன் (இராமன்) வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்'' என்று கூறுகின்றாள்.

இத்தகைய சீதை தன்னைத் தீண்டி அபசாரப்பட்ட அந்த அற்பக் காகத்தைத் தன் கண் பார்வையாலேயே இராமனுடைய நித்திரைக்கும் பங்கம் ஏற்படாமல்படி எரித்திருக்க முடியாதா? தன் நிஜ உருவை மறைத்துக் கொண்டு வந்த கோழையான அந்த ஜயந்தன் மீது கோபம் வரவில்லை பிராட்டிக்கு! இரக்கமே மேலிடுகிறது இச் 'சிறு'காக்கைமீது! இதுவே பிராட்டியின் அசாதாரணமான மேன்மை!

தன்னைக் கொன்று தின்று விடுவதாகச் சீறி வந்த அசோக வனத்து அரக்கிகளை அழித்து விடுகிறேன் என்று அநுமன் கூறியபோது 'இவ்வரக்கியர்கள் மீது கோபப்படக் கூடாது; இரக்கம் காட்ட வேண்டும்' என்று தன் அருள் வடிவை வெளியிடுபவள் அல்லவா பிராட்டி! பிராட்டியின் இந்தப் பெரு மேன்மையான கருணையல்லவா, இராமனின் சகல கல்யாண குணங்களையும்விட ஸ்ரீவைணவ உலகின் பாராட்டுதலைப் பெற்று விட்டது! இதனாலன்றோ 'சிறையிருந்தவள் ஏற்றம் கூறுவதே இராமாயணம்!'' என்று சாதித்தருள்கின்றார் பிள்ளை உலகாசிரியர் ஸ்ரீவசன பூஷணத்திலே!

இவ்வருள் உள்ளம் பிராட்டிக்கு இடையில் ஏற்பட்ட தன்றே! இளமை தொட்டே இயங்கி வந்ததன்றோ!

இதோ! அநுமன் கூறுவதையும் கேட்போம்! அசோக வனத்திலிருந்து திரும்பி வந்தவன், இராமன் திருமுன் கைக்கூப்பித் தலை வணங்கிச் சொல்லுகிறான்; இலங்கையில், அசோகவனத்தில் இராமனைக் குறித்துத் தவம் செய்து கிடக்கும் ஏதோ ஒரு பெண்ணைப் பார்க்கவில்லையாம் அநுமன்!

''விற்பெருந் தடந்தோள்வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்,
நற்பெருந்ன் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன்
அல்0லன்!''

உண்மையில் அநுமன் கண்ட காட்சிதான்?''

மூன்று குணங்கள் ஒரு உடலிலே நடனம் ஆடிக்கொண் டிருந்தனவாம், தாங்கள் மூவரும் ஒருங்கு அமைய சீதை யான ஒரு சற்பாத்திரம் கிடைத்து விட்ட வாய்ப்பிற்காக! இற்பிறப்பு என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களி நடம் புரிகின்றனவாம் கருணையாகிய மூன்றாம் குணத்துடன்!

''இற்பிறப்(பு) என்ப தொன்றும் இரும்பொறை
என்பதொன்றும்
கற்பெனு ் பெயர(து) ஒன்றும் களிநடம் புரியக்கண்டேன்!''

என்று வெளியிடுகிறான் அநுமன், சீதையின் கருணையைச் சிறப்பித்து!

காகம் அபசாரப்பட்ட போதும், இந்த 'இரும்பொறை சீதையின் இதயத்தில் இருக்கத்தான் செய்தது!' கருணா மூர்த்தியான இராமனும், அருள் வடிவமான தானும் சேர்த்தியில் எழுந்தளியுள்ள அரிய சந்தர்ப்பத்தில் உய்யும் வகை தெரியாமல் அநியாயமாக இச்சிறு காக்கை அபசாரப்பட்டு அழிவைத் தேடிக் கொள்ளுகிறதே!'' என்று இரக்கப்பட்டாள் பிராட்டி! சிறையிருக்கப் போகிறவள் ஏற்றம் சித்திர கூடத்திலிருந்த போதும் தேற்றமாகக் காணப்படுகிறது!

சிறு காக்கைத் தன் அலகால் மார்பகத்தைக் கீண்டி ஏற்படுத்திய இரத்தப் பெருக்கம் மேலே விழவும் விழித் தெழுந்தானாம் இராமன்! எனவே எப்படியும் விழித் தெழுந்து விடப்போகும் இராமனின் தூக்கம் கலையாமல் இருப்பதற்காகவே சீதை காகத்தின் சிறு செயலைப் பொருட்படுத்தாமல் பொறுத்திருந்தாள் என்று கூற முடியுமா? மார்பகத்தைக் கீண்டி அபசாரப்பட்டத்தைப்

பொறுத்துக் கொண்டதற்கு உண்மைக் கருணையே என்று நன்கு விளங்குகின்றது!

சீதையின் கருணை யென்னும் கவசம் காகத்துக்குக் கிடைத்துவிட்டபடியால் ஏழு மராமரங்களையும் துளைக்கக் கூடிய இராமபாணமும், அக்காகத்தின் உடலில் புகுந்து துளைக்க முடியாமல் அதன் வாலின் பின்னால் போய்க் கொண்டிருக்க வேண்டியதாயிற்று! சரி, இராமபாணம் ஏன் புவனம் முழுவதும் திரிய வேண்டியதாயிற்று? இராம பாணம் புத்தியுடையது. பிராட்டியின் கருணைக்குப் பாத்திரமான காகத்தைக் கொல்ல முடியாதென்று தீர்மானித்துக் கொண்டது. ஆனால் அந்தப் பிராட்டியை முன்னிட்டு இராமபிரானைச் சரணாகதி அடையவேண்டு மென்ற புத்தி காகத்துக்கு இல்லை! மோகம் தலைக்கேறிய காகம் என்ன செய்யும்! தன் இருப்பிடமான தேவலோகத் துக்கு ஓடித்தப்பலாம் என்று நினைத்தது. பிறகு பிரம்ம லோகம் முதலான பல இடங்களுக்கும் பரந்தது. எங்கும் காப்பாற்றுவாரில்லாமையால், சிறகு சோர்ந்து சித்திர கூடமே வந்து விழுந்தது! இராமபாணமும் இந்த வேடிக்கை யைப் பார்த்துக் கொண்டு காகத்தைக் கொல்ல முடியா விட்டாலும் அதைக் கொணர்ந்து இராமனுடைய திரு முன்பு சேர்த்தது, காவல் அதிகாரி கைது செய்து கொண்டு வந்து சேர்ப்பது போல!

சீதாபிராட்டியின் கருணைக் கவசத்தின் சிறப்பைச் சிறகு சோர்ந்து விழுந்த காகத்தின் கதறலைக் கொண்டு விவரிக்கின்றார் பெரியாழ்வார் ;

புவனம் எங்கும் திரிந்தபோதும்கூட சீதாபிராட்டியின் கருணை காரணமாக இராமபாணத்தால் கொல்லப் படாமல் உயிரோடு இதோ வந்து உன்முன் விழுவதைத் தெரிந்துகொள்ளும் அதி தீட்சண்யமான புத்தியையுடைய வனே! இராமா!

''வித்தகனே! இராமா!''

''பிராட்டியின் இத்தகைய கருணைக்குப் பாரத்தி மானதால், நானும் நீதான் காப்பாற்றக் கூடியவன் என்பதை உலகம் அறியக் கூவிக் கொண்டு உன்னைச் சரணம் அடைகின்றேன்.''

''ஓ! நின் அபயம்''

பிராட்டியின் அருளால் திருத்தப்பட்ட காகம் இப்படியாகக் கூவிக்கொண்டு சரணாகதியடைந்து விட்டது! இந்த சமயம் மிக ரசமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பெருமாள் பாணத்தைப் பிரயோகித்து விட்டாயிற்று! அது வீண் போகக்கூடாது! ஆனால் பிராட்டி அருள் பாலித்து இரக்கம் காட்டியதும் வீண்போகக் கூடாது தானே! இந்த இரண்டு நிலைமைகட்கும் பொருத்தமாக அமையவேணும் மேற்கொண்டு நிகழும் காரியங்கள்!

ராமன் அம்பைத் தொடுத்த பிறகுதான் பணிந்தான் பரசுராமன்! கடலரசனும் அப்படியே! ஆனால் இங்கு அம்பை வில்லினின்று விடுத்தபிறகே சரணாகதி செய்தான் காகாசுரன். எனவே, பரசுராமனையும், கடலரசனையும் அங்கபங்கப் படுத்தாமல் விட்டதுபோல், காகாசுரனையும் விடுவதற்கில்லையே! இங்கே பாணம் புறப்பட்டு விட்டதே வில்லினின்று!

கோர்ட்டில் தீர்ப்புக் கூறுமுன் வாதங்களை மேலும் மேலும் கேட்டு எவ்விதமும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் தீர்ப்புக் கூறி, நீதிபதியும் கையெழுத்துச் செய்து விட்டபிறகு, தீர்ப்பை ரத்து செய்ய முடியாதே.

மாறுவேடம் பூண்டு அபசாரப்பட்டவன் காகாசுரன் மாத்திரமல்ல! மாய மானாக வந்து, பிராட்டியை மயக்கி; பெருமாளைப் பின்தொடர்ந்து ஓடவைத்து, இருவரையும் பிரித்தான் மாரீசன். மாளும்போதும், "ஓ,! லட்சுமணா! சீதா!" என்று மோசக் கருத்துடன் கூவினான். உண்மையை அறியமுடியாமல் அழகின் மாயத்திலும், ஆபத்தின் சுழலிலும் சிக்கித் தவிக்க வைத்ததால், சீதையின் அருள் மாரீசனுக்குக் கிடைக்கவில்லை! எனவே, இராமனும், பாணமும் துரத்தி வந்த ஆபத்தின் போது மாரீசனுக்குச் சரணாகதி செய்யவேண்டுமென்ற நற்புத்தியும் ஏற்படவில்லை; அவன் மாண்டான்!

இராவணன் சந்நியாசி வேடத்தில் வந்து தன்னைத் தவசி என்று சீதையை நம்ப வைத்து ஏமாற்றினான்; பிறகு தன் நிஜ உருவுடன் சீதையை அபகரித்துச் சென்றபோதும், காம வெறிகொண்டு அசோகவனத்தில் பேசியபோதும்; அவளுடைய வெறுப்பையும், வெஞ்சினத்தையுமே பெற்றான். சீதையின் அருளைப் பெறமுடியவில்லை; எனவே, அவனுக்கும் சரணாகதி செய்து உய்யவேண்டும் என்ற உணர்வு பிறக்காமல் போயிற்று!

இராமனுடன் கங்கையைக் கடந்தபோது சீதையின் கடாட்சம் குகப்பெருமானுக்குக் கிடைத்ததால் அவனுக்கு இராமனின் கருணையும் கிடைத்தது;

சீதையின் நகைகள் சம்பந்தத்தால் திருவடியான அனுமனும், சுக்கிரீவ மகாராஜனும் இராமனின் அன்புக்கும் ரட்சகத்துக்கும் இலக்காயினர்;

லட்சுமியாகக் கடலில் அவதரித்த சம்பந்தமே கடலரசனைச் சரணாகதி செய்யத் தூண்டியது.

திரிசடையின் கைங்கரிய பலத்தால் ஏற்பட்ட சீதையின் கடாட்சமே வீபீடணனின் சரணாகதியைத் தலைக்கட்டித் தந்தது.

எனவே, பிராட்டியின் கருணை விசேஷத்தால் காகமும் தலைப் பெற்றது; ஆனால், பாணம் இராமன் வில்லினின்று விடுபட்டுவிட்டதால் அதற்கு இலக்கமாகக் காகத்தின் ஒரு கண் பறிக்கப்பட்டது!

இது வரையில் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜதாசர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கூறுகின்றார் :

''அப்படி வாருங்கள் வழிக்கு! இப்போது சீதையின் சந்நிதியிருந்தும் காகத்திற்கு ஒரு கண் போயிற்றல்லவா?'' என்று வெற்றி முழக்கம் செய்ய ஆரம்பித்தார்!

ஆனால் பதில் சொல்ல ஆரம்பித்ததும் மறுபடியும் கவனமாகச் செவி சாற்றியருளுகிறார்!

காகத்தின் ஒரு கண் அறுக்கப்பட்டதும் பிராட்டியின் கருணையால் தான்! மார்பகத்தைக் கீண்டி அபசாரம் செய்யக் கருதிய ஜயந்தன், இக்காரியத்திற்கு அநுகூலமாகக் காக உருவை ஏன் எடுத்தான்?

பிறரை ஏமாற்றுவதிலும், பிறர் உடமையைத் தீண்டுவதிலும் காகமே மிகுந்த சாமர்த்தியம் உடையது என்றும், எனவே அவ்வுருவே தன் காரியத்திற்கும் அநுகூலமாகும் என்றதாலும்தான்!

இத்தகைய வசதியை அளிக்கும் காகத்தின் உருவை மறுபடியும் பிறர் உபயோகிக்காமல் இருப்பதற்கும், மேலும் காகங்களுடைய இத்தீய திறமைகளைக் குறைப்பதற்குமே ஒரு கண் வாங்கப்பட்டது! காகங்களுடைய கொடுந் தொழில் புரியும் திறமை குறைக்கப்பட்டு, அவைகள் போதுமான பார்வை வசதியுடன் வாழ்வதற்காக ஒரு கண் மட்டும் அளிக்கப்பட்டது.

இந்திரன், இராவணன், மாரீசன் ஆகியோர் தாங்கள் கொண்ட வடிவை மாற்றிக் கொண்டார்கள். அதனால் நிஜ

உருவில் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால், ஜயந்தன் காக உருவை மாற்றிக் கொள்ளாததால் அந்த உருவிலேயே தண்டிக்கப்பட்டான்!

இந்த ஒரு கண்ணை வைத்துக்கொண்டு காகங்கள் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்! ஆனால் இந்த ஒரு கண் மாத்திரம் இருக்கும் போதும் இக்காகங்கள் நம்மை என்ன பாடுபடுத்துகின்றன என்பதை நாம் தினசரி அறிவோம்! சனீச்வரனும் ஜீவாத்மாக்களை எளிதிலும், அதிகமாகவும் பிடித்துக்கொள்ள காகத்தை அல்லவா தன் வாகனமாக்கிக் கொண்டுள்ளார்! இப்பறவைக்குத் தற்போது ஒரு கண் இருக்கும் போதே உலகில் 100-க்கு 80 பேர் சனி பகவானின் அழுத்தமான பிடியில் கொண்டுவரப்பட்டுள்ளனர்! இவர் வாகனத்திற்கு இரு கண்ணும் இருந்து கொண்டிருந்தால் என்ன நேரும் என்பதைச் சொல்லத் தேவையில்லை!

இதைப்பற்றி பெரியாழ்வாரும் பேசுகிறார். தான் யசோதையாகி வளர்க்கும் குழந்தையான கண்ணனுக்குக் கோல் கொண்டுவரச் சொல்லி, காக்கையை வேண்டுகிறார். மூன்று முறை பிழையைப் பொறுப்பது முறை, பெரிய ஆழ்வாராகையாலே இரு மூன்றுமுறை அதாவது ஆறுமுறை மூன்று பாசுரங்களால் காக்கை கொண்டு வராததால் ஏழாவது பாசுரத்தில் காக்கையினுடைய பழைய குற்றப் பத்திரிக்கையைப் படித்துப்பயமுறுத்துகிறார்! பொன் திகழ் சித்திரகூடப் பொருப்பினில் சரியாக நடந்து கொள்ளாமல் ஒரு கண் இழந்தது போல, மறுபடியும் ஒழுங்காக நடக்காமல் போனால் (விளையாடக் கோல் கொண்டுவரா விட்டால்) கற்றைக் குழலானான கண்ணன் அதன் மற்றைக் கண்ணையும் பறித்து விடுவானாம்;

இப்படி ஏதாவது காரணத்தால் மற்ற ஒரு கண்ணும் போய் விடுமோ என்ற பயத்தால்தான் காகங்கள் இன்றும்

இறைவனை நோக்கிக் "கா! கா" என்று கத்திக் கொண் டிருக்கின்றனவாம்! சரணாகதியின் மேன்மையை அறிந்து கொண்டும், அறிவித்துக் கொண்டும் இருக்கின்றனவாம்!

ஸ்ரீமத் தாசருக்கு ஏதாவது சிறிய அளவிலாகிலும் எதிர்வாதம் செய்ய வேண்டுமென்று அவா! அவர் மேலும் கேட்கிறார்.

"காகாசுரன் அலகால் தானே அபசாரப்பட்டான் அதற்காகக் கண்ணைப் பறிப்பானேன்?"

அலகால் அபசாரப்படுமுன், முதலில் அபசாரப்பட்டது கண்ணால் தானே! கண் அல்லவா முதலில் சீதா பிராட்டி யின் வடிவழகைக் கண்டு காமத்தைத் தூண்டியது. எனவே கண் தான் தண்டிக்கப்படவேண்டும்; எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? ஏவின கண்ணைத் தண்டிப்பதே போதும்! ஏவப்பட்ட அலகையும் தண்டிக்க வேண்டிய தில்லையே!

மறுபடியும் ஸ்ரீமத் தாசர் வாதம் செய்கிறார்! "இப்படியெல்லாம் அறிய வேண்டிய விஷயங்கள் ராமாயணத்தில் வெளிப்படையாகவும் விவரமாகவும் இல்லையே"!

ஆமாம்? அதற்கு வால்மீகி பகவான்தான் காரணம். இந்தக் காக்கை வைபவத்தை ஆரண்யகாண்டத்தில் அருள வில்லை. சுந்தர காண்டத்தில் பிராட்டியின் திருவாக்கிலே வைத்துக் காட்டுகிறார்,

அநுமனைப் பார்த்துப் பிராட்டி கேட்கிறாள் அசோக வனத்திலே ; "அலகால் என்னைத் தீண்டிய காகாசுரன் மீது தன் பாணத்தை ஏவிய ராமன், என்னை அபகரித்துக் கொண்டே வந்துவிட்ட இராவணன் மீது போர் தொடுக் காமல் இருக்கிறாரே!" என்று கேட்கிறாள். இந்த வார்த்தையிலிருந்து காக்கை வைபவத்தைத் தம் ஞானக்

கண்களால் விரிவாகக் கண்டு அருள்கின்றார்கள் ஆழ்வார் களும், ஆசார்யர்களும். அவைகளை நாம் பக்தியுடன் படித்து ஆழமாக ஆராய்ந்து, உண்மைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டும்!

உலகம் உய்யும் பொருட்டு பிள்ளை லோகாசாரியர் முமுட்சுப் படியில் அருளிய வாக்கியத்தின் முதல் பாகம். "இவள் சந்நிதியாலே காகம் தலைப்பெற்றது" என்ற ஐந்து சொற்கள் கொண்டதாக உள்ளது. இச்சொற்களின் உண்மைப் பொருள் என்ன?

"பெற்றது" என்றால் இல்லாத ஒன்றைப் பெறுவதைக் குறிக்கும் அல்லது இழந்த ஒன்றை மீண்டும் பெற்றதையும் குறிக்கும்.

இங்கு காகத்தின் கழுத்தின் மீதிருந்த தலை அபசாரத் திற்கு முன்பும் இருந்தது. பின்பும் இருந்தது. பெருமாள் தன் அஸ்திரத்தால் அதன் தலையை உடலிலிருந்து அகற்றவும் இல்லை; காகம் அதைப் புதிதாகவோ அல்லது மறுபடியுமோ பெறவும் இல்லை. இங்கே, "காகம் தலைப் பெற்றது" என்றால், உடலில் இருந்த உயிரை இழக்காமல் தப்பியது என்றே பொருள்; பாணங்கள் பறவைகளின், மார்பு அல்லது வயிற்றுப் பக்கத்தில் தான் சாதாரணமாகப் பாயும்; தாடகை, மாரீசன், வாலி, இராவணன் உடல்களில் பாய்ந்ததுபோல!

இங்கு தலை என்பது உயிரைத்தான் குறிக்கிறது. தலையில்லாமல் உயிர்வாழ முடியாத காரணத்தினால், உயிர் இழக்க நேர்ந்து உயிர் தப்பியதைத்தான் தலைப் பெற்றது என்று குறிப்பிடுகிறார் உலகாசிரியர். உயிருக்கு வந்த ஆபத்து கண்ணோடு போயிற்று!

'காகம்' என்ற சொல்லும் சாதாரணக் காக்கையைக் குறிக்கவில்லை. காக உருவில் வந்த இந்திரன் மைந்தனான ஜயந்தனையே இச்சொல் குறிக்கிறது. எனவே தலை தப்பி உயிர் பிழைத்தவன் ஜயந்தன்தான்;

இவ்வாக்கியத்தின் முதல் சொல்லான 'இவள்' என்பது சாதாரணப் பொருளில் சீதையைக் குறிக்கும். ஆனால் இங்கும் வேறு விதமாக விசேஷப் பொருள் கொள்ள வேண்டும். இவள் என்னும் சொல், இங்கு ஸ்ரீமத் நாராயணனுடைய முதல் தேவியாரான பெரிய பிராட்டி யாரைக் குறிக்கும். சீதை பெரிய பிராட்டியாரின் அவதாரமே!

இப்படியாக 'இவள்' என்ற சொல்லுக்கும் 'காகம் என்ற சொல்லுக்கும் 'தலைப் பெற்றது' என்ற சொற் களுக்கும் விசேஷமான பொருள் கொண்டு வாக்கியத்தின் உண்மைப் பொருளை அரிய வேண்டுவது போலவே 'சந்நிதியாலே' என்ற சொல்லுக்கும் விசேஷமான பொருள் கொள்வதில் ஆட்சேபணை இருக்க முடியாதே!

ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜ தாசரும் ''ஆட்சேபனை இருக்க முடியாது! முடியாது'' என்று கூறித் தம் தலை யையும் வேகமாக ஆட்டினார்!

இங்கு 'சந்நிதியாலே' என்ற சொல்லுக்கு, 'எதிரில், நேர் முன்னாலே, என்ற சாதாரண பொருளைக் கொள்ளக் கூடாது! 'இவள் சந்நிதியாலே' என்றால், பெரிய பிராட்டியின் கடாட்சத்தாலே, கருணையாலே கிருபை யினாலே, அருளினாலே என்றே பொருள் கொள்ள வேண்டும்!

''குன்றேறி யானைப் போர் கண்டற்றால்; தன் கைத்து
ஒன்று உண்டாகச் செய்வான் வினை''

என்பது ஒரு குறள். இதற்குச் சாதாரணமாகக் கூறப்படும் பொருள்.

'ஒருவன் தன் கையில் பொருளை வைத்துக்கொண்டு (பிறர் ைைப் பொருளை எதிர்பார்த்துக் கொண்டிராமல்) ஒரு காரியத்தில் இறங்குவது, ஒரு குன்றின் மேல் இருந்து காண்டு யானைச் சண்டையைச் சுலபமாகப் பார்ப்பது

போல எளியது'' என்பதாகும். 'கண்டற்றால்' என்ற சொல்லுக்குப் 'பார்த்தல் போல' என்று பொருள் கொண்டால் இப்படி அர்த்தம் கிடைக்கும். ஆனால் யானைப் போரைக் குன்றின்மீது ஏறிப்பார்ப்பவன் கோழை யாகத்தானே இருக்க முடியும்; வெல்லமுடியாத காரியத்தையும், தன் கையில் பணம் இருப்பின் வென்று விடலாம் என்பதைக் கூறவந்த செந்நாப் போதாராகிய திருவள்ளுவர், ஒரு கோழை குன்றின்மீது ஏறிக்கொண்டு யானைச் சண்டையைப் பார்ப்பதை எதற்காக உதாரண மாகக் கூறுவார்?

எனவே, இங்கு ''கண்டற்றால்'' என்று சொல்லி அதன் விசேஷ அர்த்தத்தில் கொள்ளவேணும்! திருக்குறளுக்கு உரை கண்டவர் பரிமேலழகர்" என்று கூறினால், திருக்குறளுக்கு உரை செய்தவர் பரிமேலழகர் என்றே பொருள் படும்.

ஆகவே, இக்குறளை இந்த விசேஷ அர்த்தத்தில் பார்ப்போம். ஒருவன் யானையுடன் சண்டையிடுகையில், அந்த யானை ஏறிவர முடியாத ஒரு குன்றின்மீது ஏறிக் கொண்டு அங்கிருந்து யானையுடன் போர் செய்தால் அதை சுலபமாகத் தாக்க முடியும். அது போலவே பெருங் கஷ்ட மான காரியமானாலும், ஒருவன் தன் கையில் பணத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டு அந்தக் காரியத்தில் இறங்கினால், எளிதில் வெற்றி பெறுவான் என்ற சரியான பொருள் கிடைக்கிறது.

தமிழ்ச் சொற்களுக்கு முற்காலத்தில் இருந்த பூரணப் பொருள்களைக் கொண்டு புரிந்துகொள்ளாமல், தற்கால சாதாரண வழக்குகளைக் கொண்டு பொருள் கொள்வதால் வந்த சங்கடம் இதுவும்!

முமுட்சுப்படியில், பெரியபிராட்டியாரின் புருஷகார மேன்மையைக் கூற வந்த பிள்ளை லோகாசாரியர், 'பெரிய பிராட்டியாரின் கடாட்சம், கருணை, அருள் பெற்றவர்

களே சரணாகதி செய்வார்கள்; செய்தால் பெருமாளால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்; எனவே, அவளை முன்னிட்டே நாம் எம்பெருமானை அடைதல்வேண்டும்'' என்று தெரிவித்து, இதற்கு உதாரணம் காட்டும் வகையில், காகாசுர விருத்தாந்தத்தைக் குறிப்பிட்டு, ''சீதா பிராட்டி யாரின் கருணையும், அருளும், கடாட்சமும் பெற்ற காகாசுரன் அவளாலே நல்லறிவு தரப்பட்டு, அதனால் சரணாகதி செய்து உயிர் தப்பிப்பிழைத்தான்; ஆனால்' அவ்விதமாகப் பிராட்டியின் கருணைக்குப் பாத்திரமாகாத இராவணனுக்கு சரணாகதி செய்யத் தோன்றாமல் மடிந்தான்'' என்று விளக்கியருள்கிறார்!

இவ்விதமே மேலே காட்டியபடி குகப்பெருமாளும், அநுமனும்: சுக்கிரீவனும், வீபீஷ்ணாழ்வானும், கடலரசனும் உய்ந்தனர்; ஆனால் மாரீசனும், இராவணா தியர்களும் மடிந்தனர்.

''காகத்திற்குக் கருணை காட்டி, அதற்குச் சரணாகதி செய்யும் நல்லறிவையும் அபசாரப்பட்ட காகத்தின் உயிரை மாய்க்காமல் பொருத்தருளும்படிப் பெருமாளுக்கு தயையும் ஏற்படும் படி. பிராட்டியார் எப்படிச் செய்தாரோ!'' என்று கேட்டருள்கிறார் ஸ்ரீமத் தாசர்! பிராட்டியாரின் இந்த மகா உபகாரத்தைப் பற்றித்தான் ஸ்ரீவசனபூஷணத் தில் நமது பிள்ளை உலகாசாரியர் மிகநுட்பமாகச் சாதித் தருளினது:

சேதனை அருளாலே திருத்தும்!
ஈசுவரனை அழகாலே திருத்தும்!

அபசாரப்பட்ட சேதனனாகிய காகாசுரனைப் பெரிய பிராட்டியாரி தம் அருளாலே திருத்திப் பெருமாளுடைய திருவடிகளில் பணிய வைத்தார்; இவனுடைய அபசாரத்தைப் பொறாது வெகுண்டு பாணத்தைப் பிரயோகித்த ஈச்வரனாகிய இராமனைத் தம் அழகாலேயே

திருத்திக் காகாசுரனுடைய உயிரை வாங்கி விடாமல் மன்னித்தருளச் செய்தார்! அழகு என்பதில் பிராட்டியின் வடிவழகுடன் குணவழகும் சேர்ந்ததே;

நீரிலே நெருப்புக் கிளருமாபோலே
குளிர்ந்த திருவுள்ளத்தில்
அபராதத்தால் சீற்றம் பிறந்தால்
பொறுப்பது இவளுக்காக வன்றோ!

'வான்மீகி முனிவர் இயற்றிய ஆதி காவியத்தில் சீதா பிராட்டியாரின் திருவாக்கிலிருந்து சுருக்கமாக வெளியாகும் இந்தக் காகாசுர வைபவத்தின் மிகஆழமான கருத்துக்களை அனைவரும் அறியும்படிப் பிள்ளை உலகாசாரியர் முமுட்சுப் படியில் இயற்றியுள்ள வாக்கியத்தின் பெருமையைத் தமிழ் உலகம் அறிந்து கொண்டதா?'' என்று பரபரப்புடன் கேட்கலானார் ஸ்ரீமத் எதிர்வாத ராமாநுஜதாசர்!

மூன்றாவது : எவரும் அறிந்த படலம்

ஸ்ரீ வைணவ மதத்தின் ரத்னமாகிய ராமாயணத்தில் காகாசுரன் விஷயமாக உள்ள ஆழ்ந்த கருத்துக்களைத் தமிழர்கள் அறிந்துகொண்டுள்ள விதத்தைத் தெரிந்து கொண்டால் மிக ஆச்சரியம் அடைவோம்!

''ஊர்க்குருவிமேல் இராமபாணமா?'' என்ற வசனத்தைக் கேள்விப் பட்டிருக்கலாம். மிக உன்னத நிலையில் உள்ள ஒருவர், மிக எளிய நிலையில் உள்ள மற்றவரைத் தண்டிக்க முற்பட்டால்,இப்படியாக மக்கள் கேட்பது வெகு சாதாரணம், இந்த மனப்பான்மை தமிழ் மக்களுக்கு எப்படி வந்தது? காகாசுரன் மீது பெருமாள் பாண தொடுக்கவும், அவன் புவனம் எங்கும் ஓடிக் கடைசியில் பெருமாளின் காலில் வந்து விழவும், கருணை வடிவான சீதாபிராட்டியார் பெருமாளைப் பார்த்துக் கேட்டுவிட்ட கேள்வியேதான் இது! அன்னையாம் பிராட்டியின் அருள் ததும்பிய மனமும், வாக்கும் நம் தமிழ் மக்களின் நாவில்

எவ்வளவு சுலபமாக நடையாடுகிறது! அன்னையின் கருணையின் பெருமைக்கேற்ப வாழும் மக்களல்லவா தமிழ் மக்கள்!

இன்னொரு பழமொழியும் தமிழ் நாட்டில் உலவுகிறது! அது 'குருவிக்கேற்ப ராமேச்சுரம் என்று வழங்கப்படுகிறது. அதன் உண்மை வடிவம் 'குருவிக்கு ஏற்ற ராமசுரம்' என்பதாகும்! 'ஊர்க்குருவிமேல் ராமபாணமா?'' என்று பிராட்டி பெருமானை நோக்கிக் கேட்டு, அவனைத் தன் அழகாலே திருத்தவும். பெருமாள் காகாசுரன் பக்கலிலே தயைபெருகி ஊர்க்குருவிமேல் ராமசுரம் விடுவதைத் தடுத்துக்கொண்டு, 'இதை இந்தக் குருவிக்கு ஏற்ற ராம சுரமாக்கிக் கொள்கிறேன்' என்று பதிலளித்துத் தன் சக்திவாய்ந்த பாணத்தைக் காகத்தின் ஒரு கண்ணை மட்டும் பறிக்கும்படிப் பணித்தாராம்!

எனவே, சித்திர கூடத்தில் பிராட்டியால் திருத்தப்பட்ட பெருமாளுடைய வாசகமாக 'குருவிக் கேற்ற ராமசுரம்' அமைந்து, இன்றும் மக்களுடைய வழக்கிலும் இருக்கிறது. பெரிய அந்தஸ்துடையவர்கள், சிறிய நிலையில் உள்ளவர்கள்மீது வெகுண்டு தண்டிக்கப் புறப்பட்டால், நடுவிலுள்ளவர்கள் குறுக்கிட்டு, ''இப்படித் தண்டிக்கலாமா?'' குருவிக் கேற்ற ராமசுரமாக வல்லவா இருக்க வேண்டும்'' என்று புத்திபுகட்டும் அளவுக்கு இந்தக்காகாசுர வைபவம் தமிழ்நாட்டில் பரவியுள்ளது,

அரிய பெரிய சாதனையை ஒருவன் எதிர்பாராத விதத்தில் செய்து வெற்றியடைகிறான்; 'இவன் எங்கனம், இப்பெருங் காரியத்தைச் செய்து வெற்றி கண்டான்,' என்று நாம் வியப்படைகிறோம். 'வேறொன்றும் இல்லை! ஏதோ காக்கா பிடித்துக்காரியத்தை நிறைவேற்றிவிட்டான் என்று ரகசியம் வெளியாகிறது! நாமும் நம் வியப்பை ற்றிக்கொண்டு திருப்தி அடைகிறோம்;

காரியத்தில் வெற்றி அடைய ஏன் காக்கை பிடிக்க வேணும்? சர்வ வல்லமை பொருந்தியதா காக்கை! 'காக்கை பிடிக்கிறது' என்றால், அதிகாரம் உடைய ஒருவரைப் பலவித சாகசங்களினால் வசப்படுத்தி, அவர் மூலமாக சாதாரண முறையில் சாதிக்க முடியாத காரியத்தை சாதித்துக் கொள்வதேயாகும். இப்படிச் சாகசங்களினால் வெற்றி காணும் திறமைக்குக் காக்கை பிடித்தல் என்று ஏன் நாமகரணம் ஏற்படவேண்டும்!

இராமர் காகாசுரன்மீது பாணம் ஏவினார். இந்த பாணத்தினால் கொல்லப்படாமல் தப்ப வேண்டுமென்ற காகாசுரன் இராமர் காலில் விழுந்து பிடித்துக் கொண்டானாம்!

கருணையே வடிவமாக அருகில் எழுந்தருளியிருந்த சீதாபிராட்டியும், காகாசுரனைக் காப்பாற்ற வேண்டுமென்று இராமனின் கைகளைப் பிடித்துக் கொண்டாளாம்!

இவ்விதமாக இராமபிரானுடைய கால் கைகளைப் பிடித்துக் கொண்டதால் காகாசுரன் தப்பிப் பிழைத்து விட்டான், மகா அபராதத்தைப் புரிந்துங் கூட! இராவணன் சீதையைத் தீண்டி எடுத்துப் போனான், தீண்டாமலும் எடுத்துப் போனான் என்று சொல்வதுண்டு. அவ்வளவே! காகாசுரன் ரத்தகாயம் செய்து அபசாரப்பட்டான்.

கால், கையைப் பிடித்து இராமாயணத்தில் இப்படிக் காரியம் நிறைவேறியதை அறிந்தவர்கள், யாராவது அரிய காரியத்தைப் பணிவான முறையில் சாதித்து விட்டால், அவன் கால் கையைப் பிடித்து சாதித்து விட்டான் என்பார்கள். கால் கையைப் பிடித்துக் காரியத்தை நிறைவேற்றியது பிறகு பாமர ஜனங்களில் சொல் வழக்கில், 'காக்கை பிடித்துக் காரியம் செய்து விட்டான்' என்று மருவிவிட்டது.

எனவே, சித்திரகூடத்தில் காப்பாற்றப்பட்டான்- இந்த அறிய சம்பவத்தையே 'காக்கை பிடித்தான்; காரியம் செய்தான்' என்ற வசனம் குறிப்பிடுகிறது.

சீதா பிராட்டியின் கருணையின் விளைவாகக் காகம் தலைப் பெற்றது. காகத்தின் அபசாரத்தின் விளைவாக சீதா ராமனின் குளிர்ந்த திருவுள்ளத்தில் சீற்றம் பிறக்கவும், புறப்பட்டது இராமபாணம். குற்றம் செய்த குறு குறுத்த மனத்துடன் பறந்து தப்பப்பார்த்தது காகம். கண் சிமிட்டும் நேரத்திற்குள் அதன்மீது பாணத்தை ஏவ வேண்டியதான நிலமை. அருகில் இருந்த தர்ப்பைப் புல்லையே ஆயுதமாக வைத்துப் பிரயோகம் செய்தான் மாற்றாரை மாற்றழிக்க வல்லானாகிய இராமன்]

ஒரு பாணத்தாலே, மூன்று விளைவுகள் ஏற்பட்டன! குற்றத்தை உணர்ந்த காகத்திற்குப் பாவமன்னிப்புக் கிடைத்தது. கழுத்திற்கு வந்தது (கரு) கண்ணோடு போயிற்று! தண்டனையும் திருத்தும் ஆயுதமாக அமைந்தது இதனையே Reformative Theory of Punishment- என்று சட்டக் கலைஞர்கள் கூறுவர்; இரண்டாவதாக இராம பாணத்தை எதிர்த்து மற்ற எந்த தேவராலும் காப்பாற்ற முடியாது என்பதும் ஏற்பட்டது; அவனே சர்வ வல்லமை யுடையவன் என்று அவனுடைய ஸ்வாமித்வமும் நிலை நாட்டப்பட்டது. மூன்றாவதாக, பிராட்டியின் கருணையே நமக்குத் தஞ்சம் என்ற உண்மையும் ஏற்பட்டது.

இந்த அரிய உண்மைகளை உள்ளடக்கி மேலும் ஒரு சொல் வழக்குத் தமிழ் மக்களிடையே உலவுகிறது; அதுவே "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!" என்பதாகும்,

இராமாயணத்தில் உள்ள பரம ரசமான விஷயங்களை தமிழ் மக்கள் வெகு எளிதாகப் பழமொழிகள் மூலம் பரப்பி வருவதைப் பற்றிப் பெருமைப்பட்டார் நமது ஸ்ரீமத் எதிர் வாத ராமானுஜதாசர்.

"முமுட்சுப்படி, முதுமொழிகளில் அடங்கியுள்ள காகாசுர சரணாகதியின் மேன்மையை இணைத்துத் தமிழ்ப் பாடலாகவும் நம் ஆசாரியர்கள் அருளியிருக்க வேண்டுமல்லவா?" என்று விசாரித்தார் ஸ்ரீமத் தாசர்!

திருமலை மேல் திருமணியாய்த் திகழும் ஸ்ரீமத் நிகமாந்த மகா தேசிகர், தாம் அருளிய அடைக்கலப்பத்தில் மணிஓசை போல் இதை நன்றாக வெளியிடுகிறார்!

இறைவனை அடைய விரும்புகிறார் ஞானவைராக்ய பூஷணரான சுவாமி தேசிகன். அதற்கான (1) இடம் (2) பொருள் (3) ஏவலைத் தேர்ந்தெடுக்கின்றார்!

பரத கண்டத்தில் முத்தி தரும் நகரங்கள் ஏழாகும். இராமன் அவதரித்தருளிய அணி நகர் அயோத்தி, கண்ணன் அவதரித்தருளிய (வட) மதுரை மாநகரம்! ஆக இரண்டு. கண்ணன் குருகுலவாசம் புரிந்த சாந்தீபிநி முனிவருடைய ஆச்சிரமம் அமைந்துள்ள அவந்தி மாநகரம்; கண்ணன் அரசு செய்து வீற்றிருந்தருளிய வண்துவராபதி (துவாரகை) ஆக நான்கு. பிரம்மலோகத்தில் விஷ்ணு பாதத்தைத் தொட்டுக்கொண்டு ஓடும் மாயா (ஹரித்துவாரம்) நகரம்; விஷ்ணுவின் ஜபாத தீர்த்தமான கங்கை அகண்ட கங்கையாக ஓடும் காசி; ஆக ஆறு. இந்த ஆறு நகரங்களும் ஸ்ரீமந் நாராயணன் விபவதாரத்தில் ஒவ்வொரு காலத்தில் எழுந்தருளியபோது புனித மடைந்து முத்திதரும் க்ஷேத்திரங்களாயின.

இறைவன் தன்னை அவதாரங்கள் மூலம் விபவநிலையில் வெளிபிட்டுக் கொண்டதை ஆற்றுப் பெருவெள்ளத்துடன் ஒப்பிடுகிறார்கள் நம் ஆசாரியர்கள்; ஆற்றுப் பெருவெள்ளங்கள் அந்தப் பிரவாகக் காலங்களில் உள்ள மக்களுக்கே பயன்தரும். ஆனால் தேங்கின மடுக்களில் உள்ள நீர் மக்களுக்குப் பயன்தரும்; இறைவனுடைய அர்ச்சாவதார நிலைதேங்கின மடுக்களுக்கு ஒப்பிடப்படுகின்றது. தேசங்கள்தோறும் இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையே அர்ச்சாவதாரமாகும்.

முத்தி யருளும் ஏழாவது நகரம் தமிழகத்தில் உள்ள கச்சியம் பதியாகும். விபவத்தினும் சிறந்ததான அர்ச்சையின் மேன்மை அபரிமிதமாகப் பொலிவது கச்சியம்பதியாகும்.

கச்சியம்பதியின் திவ்ய தேசங்களில் உள்ள எம்பெருமான்களைப் பற்றித் திருமங்கை மன்னன் பாடுகிறார்

(1) நீரகத்தாய்! (2) நெடுவரையின் உச்சிமேலாய் (3) நிலாத் திங்கள் துண்டத்தாய் (4) நிறைந்த கச்சி ஊரகத்தாய்! (5) ஒண்துறைநீர் வெஃகாஉள்ளாய்! உள்ளுவார் உள்ளத்தாய்! (6) உலகம் ஏத்தும் காரகத்தாய் (7) கார்வானத்துள்ளாய்! (8) கள்வா, (9) காமருபூம் காவிரியின் தென்பால் மன்னு பேரகத்தாய்! பேராது என் நெஞ்சின் உள்ளாய்! பெருமான்! உன் திருவடியே பேணினேனே;

எனவே வேதாந்த ஆசிரியர் சரணாகதி செய்யும் பொருட்டுத் தேர்ந்தெடுக்கும் இடம்;

முத்தி தரு நகர் ஏழில் முக்கியமாம் கச்சி தன்னில்;

தமிழ்நாட்டில், அதிலும் காஞ்சீபுரத்தில் அவதரித்தருளியமையால் தேசிகன் இப்படித் தெரிவிப்பதாக எண்ண வேண்டாம்! வட மொழியில் 'மகா கவி' என்று பட்டம் பெற்ற காளிதாசனும், "நகரேஷு காஞ்சீ!" என காஞ்சீபுரம்தான் முத்திதரும் நகரங்களுள் உயர்ந்தது என்று சாசனம் செய்துள்ளான். இந்த அவந்திமாநகரத்தை சேர்ந்த அருங்கவி;

முத்தி தரும் இம்முக்கிய இடமாகிய கச்சியம் பதியிலே, மேலே கண்டபடி பல எம்பெருமான்கள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதால், எவரைப் பொருளாகக் கொண்டு சரணாகதி செய்தார் ஸ்ரீவேதாந்த ஆசிரியர் என்று பார்ப்போம்!

எம்பெருமானுடைய திருவருளே பக்தர்கள் பெறும் பேறு: அணி திகழும் அத்திகிரியில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் பக்தர்கட்கு அருள் சுரப்பதில் ஈடு இணையற்றவன் என்பதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள வேதன் திருநாமத்தையும் 'அருளாளன்' என்றே இங்கு

வைத்துக் கொண்டிருக்கிறானாம்! வரங்களைத் தருவதிலே ராசனாம் இவ்வரதராசன்! வரங்களிற் சிறந்த வரம் முத்தி வரமே யல்லவா?

திருமலை, கோயில், பெருமாள் கோயில் என்று சிறப்பித்துப் பேசப்படும் மூன்று திவ்ய தேசங்களின் எம்பெருமான்களுடைய திருவடிகள் மிகத் தனிச் சிறப்புடையனவாகும். திருவேங்கடம் சிந்து பூமகிழும் பூவரர் கழல்களாகும்!, திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப்பொன்னி காவிரி திரைக்கையால் அடிவருடப்பள்ளி கொள்வதால், ரங்கநாதனான பெரிய பெருமாளின் திருவடிகள் பொன்னங் கழல்களாகும்! அயர்வறும் அமரர்கள் அதிபதியான அருளாளனின் திருவடிகளோ துயரறு சுடரடிகளாகும்! பிறவித் துயரை அறுப்பதால் சுடரும் இப்பெயர் அருளாளனின் அடிகளைத் தொழுது எழுக (உயர்வாயாக) என்று நம்மாழ்வாரும் தம் திருவுள்ளத்திற்குப் பணிக்கின்றார்.

சரணாகதி செய்யச் சரியான இடமாகக் கச்சியைத் தேர்ந்தெடுத்த வேதாந்த ஆசாரியர் பொருளையும் (எங்கு நோக்கி சரணாகதி செய்யவேண்டுமென்பதையும்) வெளியிட்டருள்கின்றார்' அத்தி கிரி அருளாளர்க்கு என்று பேரருளாளப் பெருமாளையே தேர்ந்தெடுக்கின்றார்!

இடம், பொருளுக்குப் பிறகு ஏவல்; ஏவல், என்பது முடித்துத் தரும் சாதனம். இறைவனை அடைவதற்குப் பக்தி, கர்ம, ஞான மார்க்கங்கள் சிரமமானவையே. பிரபத்தியாகிய சரணாகதி மார்க்கமே எளியதும் சிறந்ததும் ஆகும், கீதையில் கண்ணன் கூறுவதும் இதுவே.

எனவே விளம்புகிறார் வேதாந்த ஆசாரியர்:

பக்தி முதலாம் அவற்றுள் பதி எனக்குக் கிட்டாமல்
முத்தி தரும் நகர் எழில் முக்கியமாம் கச்சி தன்னில்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே!

அடைக்கல மார்க்கத்தை அநுஷ்டித்தவர்களில் முக்கிய மானவர்கள் : விபீடணன், காளியன், அர்ச்சுனன், திரௌபதி, கஜேந்திராழ்வான், காகாசுரன் முதலானோர் விபீடணனும், காளியனும், அர்ச்சுனனும் பெருமானிடம் நேரே, எதிர் நின்று சரணாகதி செய்யா விட்டாலும், ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமங்களை உச்சரித்துக் கொண்டே சரணாகதி செய்தார்கள். தூரத்தில் இருந்து கொண்டும், நேரடியாகத் திருமாலின் திருநாமத்தைச் சொல்லாமலும், கஜேந்திராழ்வான் 'ஆதி மூலமே' என அழைக்கவும், மற்றத் தேவர்கள் எவரும் பெறாத இச்சிறப்பை ஏற்றுக்கொண்டு அருள் செய்து, தானே 'ஆதிமூலமான பரம் பொருள்' என்று காட்டியருளினான்.

ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்துவத்தை வெளியிட்ட இந்த கஜேந்திர சரணாகதியைவிட, காகாசுர சரணாகதி உயர்ந்ததாகும்; 'ஆதி மூலமே, என்று கஜேந்திராழ்வான் கூவிக்கதறியது தங்கள் செவியில் விழவில்லை. அந்த விஷயம் தங்களுக்கும் தெரியாது என்றும், மற்றைத் தேவர்கள் பதில் சொல்லித் தட்டிக் கழித்துவிட முடியுமே! அந்தச் சந்தேகத்திற்கும் இடமில்லாமல் செய்யப்பட்டது காகாசுர சரணாகதி! காகம் ஒவ்வொரு லோகமும் சென்று தன்னைத் துரத்திவரும் ராமபாணத்தினின்றும் காப்பாற்றும்படிச் சரணடையவும், எவரும் காப்பாற்றாமல் போகவும், இராமனாக எழுந்தருளி ஸ்ரீமந் நாராயணனே புகல் எனக் காட்டித் தந்து சரணாகதி செய்தது. எந்த உபாயமும் பலிக்காமல், காகாசுரனுக்கு ஸ்ரீமந் நாராயண னைச் சரணடையும் வகையே உதவியது. பத்தி முதலான எந்த வகையிலும் உய்ய முடியாமல், சரணாகதி மார்க்கத்தை அநுஷ்டித்து, உய்ய விரும்பிய வேதாந்த தேசிகரும், காகாசுரனைப் போலச் சரணாகதி செய்ய விரும்புவதாகத் தெரிவிக்கின்றார்.

எத்திசையும் திரிந்தோடி இளைத்து விழும் காகம் போல்
அடைக்கலம் நான் புகுந்தேனே!

தயவு செய்து பாடலை ஒருமுறை முழுவதும் சொல்ல வேண்டும் என்று வேண்டுகிறார் ஸ்ரீமத் தாசர்!

'பக்தி முதலாம் அவற்றுள் பதி எனக்குக் கிட்டாமல்
முத்தி தரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சி தன்னில்
எத்திசையும் திரிந்தோடி இளைத்து விழும் காகம்போல்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே

ஜயந்தன் காக்கை (செய்த சரணாகதியில் உள்ள உண்மையைக் கண்டு) பிடித்த வைபவத்தைக் கேட்டருளிய ஸ்ரீமத் தாசர் திருவாய் மலர்ந்தருளுகிறார்.

"ஆழ்வார்களும், ஆசாரியர்களும், தமிழ் மக்களும் காகாசுர சரணாகதியைப் பற்றி ஆழ்ந்த உண்மைகளை நாம் அறிந்து கொள்ளும்படி உபசரித்துள்ளதற்காக மிகவும் கடமைப்பட்டுள்ளோம்! காகாசுரன் கதையை மனத்துக் கொண்டு, அத்திகிரி அருளாளரின் துயரறு சுடரடிகளில் சரணம் செய்ய வேண்டாமா நாமும்?"

இவ்வாறு பரவசத்துடனும் பரபரப்புடனும் கூறிக் கொண்டே காக்கையாகப் பறந்துவிட்டார், ஸ்ரீமத்தாசர் கல்லார் மதிள்சூழ் கச்சியை நோக்கி!

இனி இவரைப் பிடிக்க முடியுமா! அல்லது இவரிடம் எதிர்வாதம் தான் செய்ய முடியுமா!

ஆனையின் துயரம்

ஸ்ரீ வைணவ சமயத்தின் கொள்கைகளில் சிறந்த கொள்கை சரணாகதிதான். சரணாகதியே ஸ்ரீமந் நாராயணனுடைய திரு அருளைப் பெறுவதற்குச் சிறந்த சுலபமான வழி.

சரணாகதி மார்க்கம் நான்காவது உயர்ந்த மார்க்கம். மற்றைய மார்க்கங்கள் — அதாவது இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு உதவும் வழிகள் எல்லோருக்கும் எளிபவை அல்ல; முதலாவதான ஞான மார்க்கம் ரிஷிகளுக்கும் அடைய முடியாததாகும். ஞானம் பெறுவதற்கே பலகாலமாகும்.

இரண்டாவதான பக்தி மார்க்கம் சுலபமாகக் கிட்டாது; மனதை அடக்கினால் தான் பக்தி செய்ய முடியும். இறைவனையே இடைவிடாது சிந்தனை செய்து கொண்டிருக்கும் பக்தி மார்க்கமும் எளிதில் அடையக் கூடியது அன்று.

மூன்றாவதான கைங்கரிய அல்லது கர்ம மார்க்கம் உடல் நலத்தையும் பொருள் வளத்தையும் பொறுத்தது. கைங்கரியத்திற்கு நேரமும் தேவை. எனவே இதிலும் கஷ்டம் உண்டு.

பிரபத்தி அல்லது சரணாகதி மார்க்கத்திற்கு எவ்விதக் கஷ்டமும் இல்லை; நாராயணா! நீ தான் கதி என்று நம்பிக்கையுடன் அவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, மன அமைதி அடைய வேண்டும். இது போதும் சரணாகதி செய்வதற்கு!

இந்த மனநிலையை அடைந்து சரணாகதி செய்தால் இறைவன் நம்மைக் காப்பாற்றுவது திண்ணம். இதை

விளக்குவதற்காக சிறப்பான ஐந்து சரணாகதிக் கதைகள் உண்டு.

1. தர்மபுத்திரர் தொடக்கமான பஞ்ச பாண்டவர்கள் செய்த சரணாகதி
2. திரௌபதி செய்த சரணாகதி
3. காகாசுரன் செய்த சரணாகதி
4. வீடணன் செய்த சரணாகதி
5. கஜேந்திரனாகிற ஆனை செய்த சரணாகதி

இந்த சரணாகதிகளில் ஆனையாகிற கஜேந்திரன் செய்த சரணாகதியே மிகக் சிறந்தது.

1. தர்மபுத்திரரும், அர்ச்சுனனும் ஏனைய பாண்டவர்களும் அரசு வேண்டுமென்று சரணாகதி செய்தனர். அரசு அழியக் கூடியது.

2. திரௌபதி தனக்குப் புடவை வேண்டி சரணாகதி செய்தாள். தனக்கு நேரப்போகும் அவமானத்தைக் காத்துக் கொள்ள சரணாகதி செய்தாள்.

3. காகாசுரன் தனக்கு உயிர்ப் பிச்சை வேண்டுமென்று சரணாகதி செய்தான்.

4. வீடணன், தனக்கு இராமனுடைய பாதுகாப்பை வேண்டினான்.

5. அஃறிணைப் பிராணியான கஜேந்திரனோ, பெருமாளுக்குக் கைங்கரியம் செய்ய வேணும் என்று விரும்பி சரணாகதி செய்தான்.

கஜேந்திரனுடைய கதை எல்லோருக்கும் தெரிந்தது. அதில் உள்ள விசேஷங்களை மட்டும் விண்ணப்பிக்க விரும்புகிறேன்.

திருவல்லிக்கேணி திவ்விய தேசத்தைச் சேவிக்க எழுந்தருளிய திருமங்கை ஆழ்வார், கஜேந்திர வரதனைத்

தொழுதார். கஜேந்திரனைக் காக்க கருடன் மீது ஏறி ஓடி வந்த திருக்கோலத்தை இந்த சந்நிதியிலே சேவிக்கலாம்.

இந்தத் திருக்கோலத்தைச் சேவித்த திருமங்கை மன்னன் கஜேந்திர மோட்சக்கதையை, விஷயமாக வைத்து அரிய கருத்துகள் அடங்கிய ஒரு பாடலைப் பாடியுள்ளார்; இந்த பாடலைப் பிரித்துப் படித்துக் கவனிக்கலாம்.

காட்டில் வாழ்ந்த கஜேந்திரனாகிய யானை, அதாவது

''கான் அமர் வேழம்''

மலர்களைப் பறித்து வருவதற்காக ஆசைப்பட்டு

''நாண் மலர் கொய்வான் வேட்கையினோடு''

வளமான குளத்திற்குச் சென்று, அதற்குள் இறங்கி

''மீனமர் பொய்கை சென்று இழிந்தது''

எதற்காகப் பொய்கைக்குள் புகுந்தது? கஜேந்திரன் அன்று அப்போது அலர்ந்த புட்பங்களைப் பறித்துப் பெருமாளுக்குச் சமர்ப்பிப்பதற்குத்தான். அதாவது

'நாண் மலர் கொய்வான்' (நாண்-புதிய)

அப்போது கஜேந்திரனுக்கு வந்த ஆபத்து என்ன? கஜேந்திரனின் காலினைப் பொய்கையில் இருந்த முதலை கவ்விப் பற்றிக் கொண்டது;

அதாவது 'கரா அதன் காலினைக் கதுவ' (கரா என்றால் முதலை) உடனே யானை செய்தது என்ன?

தனது துதிக்கையை ஆகாசத்தை நோக்கி உயர்த்தி, ''ஆதிமூலமே'' என்று ஓலமிட்டது. அதாவது ''கை எடுத்து அலறி'' என்ன நடந்தது?

ஆதிமூலமான பெருமாளும் கருடன் மீது ஏறிப்பறந்து ஓடி வந்தார் அந்தப் பொய்கைக் கரைக்கு!

அதாவது ''புள் ஊர்ந்து சென்று'' கரையிலே இருந்த வண்ணம், குறிபார்த்து சக்கராயுதத்தைத் தொட்டதுதான் தாமதம்.

''நின்று ஆழி தொட்டானை''

ஒழிந்தது ஆனையின் மனவருத்தம்!

அதாவது ''ஆனையின் துயரம் தீர!''

இங்கே ஆனையின் துயரம் என்ன என்பதை விண்ணப்பிக்க விரும்புகிறேன். கஜேந்திரனின் காலை முதலை கவ்விக் கொண்டு இழுக்கின்றது. யானையின் காலையே கவ்விக் கொண்டதால் ஏற்பட்ட வேதனைக்காக யானை துயரம் அடைந்ததா? முதலையின் பிடியில் அகப்பட்டு யானை தன் உயிருக்கு ஏற்பட்ட ஆபத்துக்கு அஞ்சி 'ஆதிமூலமே'! என அலறியதா என்றால், இல்லை.

சந்தேகம், மறதி, தவறு இல்லாத ஞானத்தை உடையவர்கள் ஆழ்வார்கள். அப்பழுக்கற்ற ஞானம் படைத்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் மயர்வற மதிநலம் உடையவர்கள். எனவே, திருமங்கையாழ்வாரின் திருவாக்கைச் சேவித்து நாம் உண்மை ஞானம் பெற வேணும்.

பொய்கையிலே தினமும் தாமரை மலர்கின்றது. அன்று அலர்ந்த தாமரை மலரை, அந்த மலர் வாடிவிடாத முன்பு பெருமாள் திருவடியில் சேர்ப்பது தான் கஜேந்திரனின் விரும்பிய கைங்கரியம். அப்படி இன்றும் அலர்ந்த மலரை கஜேந்திரன் பறித்துவிட்டது. நாண்மலர் என்றால் அன்று அப்போது அலர்ந்த தாமரை மலர் என்று பொருள்.

''நாண் மலர் கொய்வான் வேட்கையினோடு
சென்று இழிந்த கான் அமர்வேழம்''

அன்று மலர்ந்த மலரை அது வாடாத முன்பு அதைப் பெருமாளின் திருவடிகளில் சேர்ப்பதற்கு முன், முதலையின் வாயில் அகப்பட்டுக்கொண்டது. அந்த மலரைச்சமர்ப்பிக்

முன் அதற்கு இடையூறு ஏற்பட்டு விட்டதே! என்று கஜேந்திரன், வருத்தப் மிகுதியால்தான் அலறினான் பெருமாளை நோக்கி!''

''கை எடுத்து அலற''

கை எடுத்து அலற என்பதை முன்னே அமைத்து அதன் பிறகு

''கரா (முதலை) அதன் காலினைக்கதுவ

என்று பாசுரத்தில் திருமங்கை மன்னன் அமைத்துள்ள அழகை, நுணுக்கத்தைக் கவனிக்கவேணும்; முதல் நடந்த காரியம் காலை முதலை கவ்விக் கொண்டது. என்றாலும் அதை முதலில் அமைக்கவில்லை பாசுரத்தில் திருமங்கை மன்னன்;

பறித்த புஷ்பம் வாடி விடுமுன் அதைப் பெருமாள் திருவடியில் சேர்க்க முடியவில்லையே! என்று பெருமாளை நோக்கி தும்பிக்கையை உயர்த்திக் கதறியதையே முதலில் அமைத்துள்ளார். கஜேந்திரனின் திருவுள்ளத்தில் ஏற்பட்ட துயரம் என்ன என்பதை எடுத்துக்காட்டும் முறையில் திருமங்கை மன்னன்;

எனவே ''ஆனையின் துயரம்'' என்று மங்கை மன்னன் திருவுள்ளத்தாலே, பறித்த மலர்வாடா முன்பே பெருமாளுக்குச் சமர்ப்பிக்கும் கைங்கரியம் தடைப்பட்டு விட்டதே என்ற துக்கமேயாகும் என்று விண்ணப்பிக் கின்றேன். முதலையால் ஏற்பட்ட ஆபத்தினால்தான் கஜேந்திரன் கதறினான் என்றால் பாசுரத்தில்;

''கரா அதன் காலினைக்கதுவ''
''கானமர் வேழம் கை எடுத்து அலற''

என்று பாசுரம் அமைத்திருக்கும்.

பெருமாளும் தான் பரமபதத்தில் இருந்த படியே சக்கராயுதத்தை விட்டு முதலையைக் கொன்றிருக்கலாமே! ஏன் தலைகுலைய அரைகுலைய கருடன் மீது ஏறிப் பறந்து குளத்தின் மடுவின் கரைக்கு ஓடி வந்தார்?

பெருமாளுக்கும் யானையின் காலைக் கவ்விக் கொண் டிருந்த முதலையைக் கொல்வது இரண்டாம் காரியந்தா னாம்! அதைவிட முதல் காரியம் என்ன?

பக்தனான கஜேந்திரன் தன்னை ஆதிமூலமே! என்று அலறி அழைத்தான். அவன் துதிக்கையில் உள்ள மலர் வாடுமுன் திருவடியில் சமர்ப்பிக்கத் துடித்தான். எனவே பெருமாளும் வேகமாக மடுவின் கரைக்கே எழுந்தருளி கஜேந்திரனைக் கடாட்சித்து அவன் பறித்த மலரையும் தன் திருவடிகளில் ஏற்றுக் கொண்டு, பக்தனின் கைங்கர்யத் தையும் பூர்த்தி செய்தார். அதனால் முதலையைக் கொன்றது இரண்டாவது காரியமே என ஏற்படுகிறது;

இதுவும் நுணுக்கமான ஓர் பொருள். இதைத் தெரிவித் தருள்கிறார் நம்மாழ்வார். பெருமாள் எங்கிருந்தாலும், தானே போய் எதிரிகளை அழிக்கும் வல்லமை உடையது சக்கராயுதம்!

''மழுங்காத வை நுதிய சக்கரம்''
அதை வலக்கரத்தில் ஏந்தியிருப்பான் பெருமான்
சக்கர நல்வலத்தை யாய்;

இப்படிப்பட்ட சக்ராயுதத்தை ஏவி விடாமல் ஏன் பெருமாளே மடுவின் கரைக்கு எழுந்தருளினார்?

கஜேந்திரனாகிய களிற்றை (ஆண் யானையை) துதிக்கையால் தொழும் களிறு } என்று பாடுகிறார் நம்மாழ்வார். எப்படித் தொழுகிறது? உள்ளம் உருகத் தொழுகிறதாம்! காதலுடன் தொழுகிறதாம். எனவே தொழும் காதல்களிறு என்று குறிக்கின்றார் நம்மாழ்வார். இப்படியான தொழுங் காதல்களிற்று யானைக்குத் தன் திருக்கோலத்தைக் காட்டி, அதன் துதிக்கையில் உள்ள மலர் வாடுமுன் அதைத் தன் திருவடியில் சேர்த்துக் கொள்வதற்காகவே ஓடிவந்தான் என்பதைக் காட்ட அளிப்பான் என்றால் சேவை சாதித்துக் கடாட்சிப்பான் என்று பொருள்...

தொழும் காதல் களிறு அளிப்பான்
புள் ஊர்ந்து தோன்றினையே!

என்று பெருமான் அவசரமாக எழுந்தருளிப் பக்தனாகிய கஜேந்திரனுக்குக் காட்சியளித்ததைப் போற்றி மகிழ்கிறார் நம்மாழ்வார்!

இவ்விதமான பக்தியால் தன் கஷ்டத்தையும் மறந்து, பெருமாளுடைய, கைங்கரியம் தடைப்பட்டு விட்டதே என்று வருந்திய கஜேந்திரனின் பக்திக்கு மெச்சி ஸ்ரீவைணவ உலகம் அவனை கஜேந்திர ஆழ்வான்! எனப் போற்றுகிறது:

வாழ்க கஜேந்திராழ்வானுடைய பக்தி!
வளர்க அவன் காட்டிய பக்தி!

ஐம்பொருள் அமுது

ஸ்ரீவைணவ மாநாடுகளின் சிறப்பு என்ன? சீர்மை என்ன?

ஸ்ரீமத் நாத முனிகள் தொடக்கமான ஆச்சாரிய புருஷர்கள் காலத்திலே ஒரு ஆசாரியனிடத்தில், ஒரு விஷயத்தைப் பயிலலாம் என்று நியதி இருந்தது. திருக்கோட்டியூர் நம்பிகளிடம் பதினெட்டு முறை சென்று கடுமையான நிபந்தனைகளுடன் திருமந்திரத்தின் பொருளை அடைந்த அனுபவத்தை அகத்தில் கொண்ட ஸ்ரீ இராமாநுஜர் இந்த வரம்பு முறையை அறுத்து ''ஏககாலத்தில் ஏக ஆச்சாரியனிடம் ஏக விஷயத்தை ஆசையுடையோர் எவரும் கற்கலாம்'' என்று அருளியதைப் பொய்யில்லாத மணவாள மாமுனிகளின் திருவாக்கிலே சேவிக்கலாம்.

''ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால்—பாருலகில்
ஆசை உடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று
பேசி வரம்பறுத்தார் பின்''

காலட்சேபமாகச் சேவிப்பதும் காலப்போக்கில் கஷ்டமாயிற்று! அடியவர்கள் பலர்கூடி, ஒரு ஆச்சாரியரை நாடி அநுதினமும் ஸ்ரீ வைணவ காலட்சேபங்களை அனுபவிப்பதும் அருமையாயிற்று. எனவே வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களைத் திரட்டி ஒரே மேடையில், ஒரே காலத்தில் இன் அடிசிலொரு பாலமுதாகப் பல அரிய விஷயங்களையும் கால வரம்பு அமைத்துச் சொற்பொழிவு

களாக ஆற்றி, சம்சாரக் கூண்டுகளில் உள்ள கோவிந்தன் குணம் பாடும் கோலக் கிளிகளைக் குதூகலிக்கச் செய்யவே ஸ்ரீவைணவ மாநாடுகள் ஆங்காங்கே சுமார் 60 ஆண்டு களாக நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீவைணவ தரிசனத்தின் சிறப்பையும், சீர்மையையும் செப்பி, செயபேரிகை எழுப்புவதே நமது ஸ்ரீ வைணவ மாநாடுகளின் சேவையாகும்.

அர்த்த பஞ்சக ஞான அமுது அளிக்கும் ,திருவாய் மொழி ஆழ்வார் அருளும் ஐம்பொருள் உணவை,

ஒரு மதத்தின் சிறப்பை உலகம் அறிய, வெளியிட ஐந்து உரைகல்கள் உள்ளன.

ஒரு மதத்தின் சிறந்த கொள்கைகளை அறிந்து!

1. பகுத்தறிவு பாராட்ட வேண்டும்.
2. மனச்சாட்சி மார்தட்டி மகிழ வேண்டும்.
3. தர்க்கம் தலைவணங்கி நிற்க வேண்டும்.
4. மேதாவிலாசம் மெச்சிப் புகழ வேண்டும்.
5. பக்திப் பயிர் தழைத்து முக்தி நெறி ஓங்க வேண்டும். இல்லையெனில் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமை இல்லை.

இந்த ஐந்து உரைகல்களிலும் ஸ்ரீவைணவ தரிசனத்தின் சிறப்புக் கொள்கைகளைச் சிறிது தேய்த்துத் தீட்டி நுவல விண்ணப்பிக்க,

''நோற்ற நோன்பிலேன், நுண்ணறிவிலேன்! நியமனம்
வேண்டுகின்றேன்
எங்ஙனம் சொல்லினும் இன்பம் பயக்கும் இச்செவிக்
கினிய செஞ்சொற்களை
அழுக்குடம்புஎச்சில் வாயால் தூய்மையில் தொண்டனேன்
நான் சொல்லுகேன்,
என் பிறவித் தொல்லை தீர!

திருவாய் மொழி அருளும் ஐம்பொருள் அமுது

ஸ்ரீ	வை	ண	வ	ம்
1	2	3	4	5

என்ற ஐந்து எழுத்துக்களால் ஆன மகுடம் அமைந்த நமது தரிசனத்திற்குக்

கு	ல	நா	த	ன்
1	2	3	4	5

என்ற ஐந்து எழுத்துக்களால் ஆன விருது சூட்டி வணங்கப் படுவர்.

ச	ட	கோ	ப	ர்
1	2	3	4	5

என்ற ஐந்து எழுத்துக்களால் ஆன நாமம் உடைய மகிழ் மாறனுக்கு, மற்றத் திருநாமங்கள் இருப்பினும் ஆழ்வார் தம்மைப் பத்துப் பத்துக்களால் அமைந்துள்ள நூறு திருவாய்மொழிகளிலும் ''நூறுமுறை குருகூர் சடகோபன்'' என்றே அறிவித்துக் கொள்ளுகின்றார்.

கம்ப நாட்டாழ்வார் தாம் இயற்றிய இராம கதையை அரங்கேற்ற அரங்கன் திருமுன் எழுந்தருளவும், நம் திருவரங்கப் பெருமாளும் 'நம் சடகோபனைப் பாடினாயோ', என்று அருளப் பாடிடவும் கவிச்சக்கரவர்த்தியும், சடகோபரந்தாதியினைச் சாதித்தருளினார்.

மிகு ஞானச் சிறுகுழவியான சடகோபரும் தமது ஏனைய மூன்று பிரபந்தங்களில் அர்த்த புஷ்டியுள்ள ஸ்ரீவைணவ ஞானத்தை ஐந்து துறைகளாக்கி, ஐந்து எழுத்துக்களாலான.

"ப ஞ் ச க ம்"

1 2 3 4 5

என்றும், "அர்த்த பஞ்சகம்" என்றும் அருளியுள்ளார்.

முன்னே 1. திருவிருத்தம், 2. திருவாசிரியம் 3. பெரிய திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களிலும் சுருக்கமாக அருளிச் செய்த ஐம்பொருள் ஞானத்தைத் திருவாய் மொழியிலே இருபது திருவாய் மொழிகளைக் கொண்டு குறிப்பாக அருளிச் செய்து ஏனைய எண்பது திருவாய் மொழிகளில் மேலும் பரப்பியருளியதால், திருவாய் மொழியும் ஐந்து எழுத்துக்களாலான.

"த மி ழ் ம றை"

1 2 3 4 5

என்றே உச்சி மேற்கொண்டு போற்றப்படுகின்றது.

இமையோர் தலைவனும் திருமாலும் இந்தத் தமிழ் வேத இசையான திருவாய் மொழியைத்தானும் எழுந்தருளி இருந்தவிடத்தை விட்டு எடுத்து அடி வைத்து நகராமல் மெய் நின்று கேட்டருளுகின்றான்!

குருகூர்ச் சடகோபன் சொன்ன அவாவில் அந்தாதி களால் அமைந்த ஆயிரம் பாடல்களிலே, அருளப்பட்ட அர்த்த பஞ்சக ஐம்பொருள் அமுதை விவரித்தருள்கிறார். பட்டர் ஒரே பாடலிலே!

1. மிக்க இறைநிலையும், 2. மெய்யாம் உயிர் நிலையும் 3. தக்க நெறியும் 4. தடையாகித்—தொக்கியலும், மறு வினையும், 5. வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத் தியல்.

திருவாய்மொழி ஆயிரம் பாடல்களில் அமைந்த ஞான அமுதை ஒரே பாடலில் விவரித்துத் தந்தமையால் மொழி யைக் கடக்கும் பெரும்புகழாளரான கூரத்தாழ்வாரின்

திருக்குமாரரான பட்டரும், "பறப்பதின் குஞ்சு தவழுமோ" என வியந்து போற்றப்பட்டார் போலும்; நாம் அறிய வேண்டும் அர்த்தங்கள் ஐந்தே! இவைகளைக் கூட்டவோ குறைக்கவோ முயன்றால், அநர்த்தமேயாகும் என்பதை உணர வேண்டும்.

"மூன்றும், மூன்றும் ஆறு" என்பது கணிதம்.

"மூன்றும் மூன்றும் ஐந்தே!" என்று ஐயம் திரிபற அருள்கின்றது ஸ்ரீவைணவம்.

1. அசித் 2. சித் 3. ஈசுவரன் என்பது தத்துவத் திரய ஞானம்.

1. தத்துவம், 2. இதம் 3. புருஷார்த்தம் என்பது மதத்தின் முக்கூறுகள்.

1. அசித், 2. சித் 3. ஈசுவரன், 4. தத்துவம், 5. இதம், 6. புருஷார்த்தம் என்ற இவைகளைப் பெறுவது ஆறல்ல. அர்த்த பஞ்சகமான ஐந்தே!

1. அசித்—தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை (தடை இயல்)
2. சித்—மெய்யாம் உயிர்நிலை (உயிர் நிலை)
3. அ) ஈஸ்வரன் — மிக்க இறைநிலை (இறை நிலை)

அல்லது

ஆ) தத்துவம் — ஈஸ்வரனே தத்துவம்.

ஈஸ்வரனே தத்துவம், தத்துவம் வேறு ஈஸ்வரன் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே! ஈஸ்வரனே தத்துவம். ஈஸ்வரன் இல்லை என்றால், பரதத்துவம் இல்லை. பரதத்துவமாக அமைபவன் ஈஸ்வரனே.

4. இதம்—தக்க நெறி (நெறி இயல்)
5. புருஷார்த்தம்—வாழ்வினை (வீட்டு இயல்)

ஸ்ரீவைணவ ஞானத்தை எப்படிக் கூட்டினாலும், குறைத்தாலும் அர்த்த பஞ்சகமாகவே அமையும். ஆகையினாலே அறியவேண்டும் அர்த்தங்கள் எல்லாம் இதற்குள்ளே அடங்கியிருக்கும்!

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஸ்ரீநம்மாழ்வார், பட்டொளி வீசிப் பறக்கவிட்ட ''அர்த்த பஞ்சகம்'' என்னும் ஐந்து வர்ணக் கொடியே ஸ்ரீவைணவ தரிசனத்தின் ஞானக் கொடியாகும், பண் தரு மாறன் பசுந்தமிழாலாகிய இப்பஞ்சவர்ணக் கொடியை—

1. பகுத்தறிவு பாராட்டுகின்றதா?
2. மனச்சாட்சி மார்தட்டி மகிழ்கிறதா?
3. தர்க்கம் தலைவணங்கி நிற்கின்றதா?
4. மேதாவிலாசம் மெச்சிப் புகழ்கின்றதா?
5. பக்திப் பயிர் தழைக்கவும் முக்தி நெறி ஓங்கவும்

இக்கொடி உதவுகிறதா? என்பதை நடுவு நிலைமையுடன் சுருக்கமாகக் காண்போம்!

1. மிக்க இறை நிலை

மதத்திற்கும் தலையான கருத்து கடவுளே! கடவுளை ஒப்புக் கொள்ளாத மதம் தலையில்லாத முண்டமே! கடவுளை ஒப்புக் கொள்ளாமல், சீவகாருண்யத்தையே வலியுறுத்திய மதங்கள் வெகுவாகச் சுருங்கி விட்டன. பெரும்பாலும் நாடு கடந்து(த்தப்பட்டு) விட்டன!

''புலை அறம் ஆகின்ற புத்தொடு சமணம் எல்லாம்
கலை அறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ? தாம்!
எதிர்மறையாலே கேள்விக்கணையை ஏவுகின்றார் துளபத்
தொண்டாய தொல்சீர் தொண்டர் அடிப்பொடியாழ்வார்!

1. கடவுளை ஒப்புக் கொண்டாலும் அவனைப் பூரண மாகவும் தெளிவாகவும் அறியாத மதங்களும் உண்டு, அவனுக்குக் குணங்கள் இல்லை என்றார்கள் சிலர், அவனுக்கு உருவம் இல்லை என்றனர் வேறு சிலர்.

2. கடவுளின் தன்மை—திருமாலின் மிக்க இறைநிலை அதாவது மற்றத் தெய்வங்களின் எல்லா குணங்களைவிட மிக்க மேம்பட்ட குணநலமுடையவன் திருமால்.

''உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்,
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!''

பக்தர்களின் துயரை அறுத்துச் சுடர்விடும் திருவடி என்பதை விட பக்தர்கள் படும் துயரைக் கண்டு இறைவன் தானே துயரடைவதால் அவனுடைய துயரையும் அறுத்துப் பொலிவடையும் திருவடி எனப் பணிப்பாராம் ஸ்ரீ எம்பெருமானார்.

3. இதில் எம்பெருமானாருடைய சொந்த அனுபவமும் அடங்கியுள்ளது. 'அயர்வறும் அமரர்கள் அதிபதி' யான காஞ்சி வரதராசனும், ஆறு வார்த்தைகளினாலே ஸ்ரீ எம்பெருமானாரின் சந்தேகத் துயரை அறுத்து, அதனால் தன் துயரையும் அறுத்துக் கொண்டானே!

4. எடுத்த எடுப்பிலேயே இந்த நிர்க்குணவாதியினுடைய கழுத்தில் கைவைப்பது போல், ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய் மொழியை, கருணா மூர்த்தியான கார் வண்ணனின் கல்யாண குணங்களையும் கண்ணைக் கவரும் திருவடி தொடக்கமான திருவுருவினையும் போற்றி ஆரம்பித்தார். என்று குதூகலிப்பாராம் கூரத்தாழ்வான்!

நம்மை ஆட்கொள்ளும் இறைவனின் நான்கு குணங்கள்

ஸ்ரீ நம்மாழ்வார் நாவினால் நவின்று தலைக்கட்ட முடியாத நாராயணனின் திருக்கல்யாண குணங்களை நான்கு வகையாக வடித்தெடுத்து, திருவாய்மொழிப்பாசுரத்தில் தருகிறார். இறைவனுக்கு நிகரில்லாத சிறந்த குணம்,

''அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை
யுறைமார்பா,
நிகரில் புகழாய்! உலகமூன்று உடையாய்! என்னை
ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திரு
வேங்கடத்தானே,
புகலொன் றில்லா அடியேனுன் அடிக்கீ ழமர்ந்து
புகுந்தேனே'' (6-10-10)

என்னும் ஒரே பாசுரத்தில் தருகிறார்.

1. **நிகரில் புகழாய்** என்பதனால் வாத்சல்யம் என்பதைக் கருதுகின்றார், அதாவது குற்றங்களையே குணமாகக் கொள்ளுதல் கன்றினிடத்தில் பசுவிற்கு உள்ள அன்பு. இதுவே இவனுக்கு நிகரில்லாத புகழைத் தருவது.

2. **உலகம் மூன்றுடையாய்** என்பதால் இறைவனுடைய சுவாமித்துவத்தைக் குறிப்பிடுகின்றார். அதாவது கடவுள் பிறருக்குத் தாழாது நிற்கும் பெருமை. இறைவனே! உலகம் மூன்றிற்கும் அதிகாரி—உடையவன்,

3. **என்னை ஆள்வானே** என்பதனால் இறைவனுடைய சௌசீல்ய (தானே வந்து ஆட்கொள்ளும் கருணையை) குணத்தை வெளியிடுகின்றார்.

4. திருவேங்கடத்தானே என்பதனால் சௌலப்யத்தை (அதாவது எளிமை) எல்லோரும் வந்து சுலபமாக வழிபட்டு வாழ்த்தி அனுபவிக்க எக்காலத்தும் எழுந்தருளியிருக்கும் எளிமையை அருளிச் செய்கின்றார். இந்த எளிமையால் தானே சுலபமாகச் சேவிக்கும் வண்ணம் திருமலையிலும் திவ்விய தேசங்களிலும் திருக்கோயில் கொண்டு சேவை சாதித்தருள்கின்றான்.

இறைவனின் நிலைகள் ஐந்து:-

இறைவனுடைய பர (1) வியூக, (2) விபவ, (3) அந்தர் யாமித்துவ, (4) அர்ச்சை, (5) என்கிற ஐந்து நிலைகளை யும் ஸ்ரீநம்மாழ்வார் அரைப் பாசுரத்தில் அருளிச் செய்யும் அழகு!

(1) "விண்மீது இருப்பாய்!"
(பரமபதத்தில் வீற்றிருந்து அருள்பவனே!)

(2) "மலைமேல் நிற்பாய்!"
(அர்ச்சையிலே திருமலையில் நின்றருளுபவனே!)

(3) "கடல் சேர்ப்பாய்!"
(திருப்பாற் கடலில் கண் வளர்ந்தருளுபவனே)

(4) மண்மீது உழல்வாய்

(இராம கிருஷ்ணாதி அவதாரங்கள் எடுத்து மண் மீது உலாவியருள்பவனே)

(5) இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்.

இந்த உலகில் சகல பதார்த்தங்களிலும் அந்தர்யாமி யாய் உள்ளிருந்து ஊனக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து வர்த்தித்திருப்பவனே அவைகளைத் தொழிற் படுத்தி அருள்பவனே.

உயிர் உடல் முழுவதும் பரவியுள்ளது. அதனால் எங்கு வலித்தாலும் உடனே உயிர் உணர்ந்து கொள்கிறது இப்படித்தான் உலகம் முழுவதும் உருவம்; உருவமற்

எல்லாப் பொருள்களிலும் பரவி அவைகளை எல்லாம் தனது உடலாகக் கொண்டு தொழிற்படுத்தியருளுகின்றான் இறைவன். இவ்வேத முதல்வன், ஊழியின் இறுதிக் காலத்திலே தன்னுள் எல்லாப் பொருள்களையும் அடக்கிக் காத்தருள்கின்றான்.

இதனை உபதேசிக்கும் எளிமையான திருவாய் மொழிப் பாசுரம்,

திடவிசும்பு, (1) எரி (2) வளி (3) நீர் (4) நிலம்
(5) இவைமிசை,
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்,
உடல்மிசை, யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்,
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே. (1-1-7)

அசித், சித் தத்துவங்களை உடலாகக் கொண்டு ஈஸ்வரன் உயிராக விளங்கும் இப்பேருண்மையைக்கொண்டு ஸ்ரீஎம்பெருமானார் விசிஷ்டாத்துவைதக் கோட்பாட்டை விளங்கச் செய்தாராம். இதனையே, ஸ்ரீவைணவ ஞானிகள் சரீர — சரீரி பாவமென்றும் நிர்வகிப்பார்கள்.

மெய்யாம் உயிர் நிலை

அதாவது மிக்க இறைநிலையைப் போன்றே மெய்யாம் (உண்மையானது) உயிர் நிலையும்,

''உலகில் கடவுளே உண்மை, உருவமற்றவன். இறைவன் தவிர மற்றவை எல்லாம் மாயை; உண்மையல்ல மாயைக்குக் குண ரூபங்களைக் கற்பிக்க வேண்டியதில்லை'' அப்படியானால் மாயையால் சூழப்பட்ட நிர்க்குணமான சொரூபமற்ற இறைவனுக்கு என்ன வேலை? ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்து விட்டால் அந்த ஈஸ்வரனிடம் தன்னை வேறுபடுத்திக் கொண்டு ஆன்மா மறுபடி பிறவி எடுப்பது எப்படி?

இந்த மகா மாயையில் நாமும் சிக்கிக் கொள்ளாமல் ஸ்ரீ நம்மாழ்வார் திருவாய்மொழி எட்டாம் திருமொழி இரண்டாவது பாசுரத்திலே தெள்ளத் தெளிவாக (1) ஆத்மா உண்டென்றும், (2) அது இறைவனை விட வேறு பட்டது என்றும், (3) ஆத்மாவிற்கும் குணங்கள் உண்டு என்றும் அக்குணங்களிலே சிறந்தவைகளாகக் கொள்ள வேண்டியவை ஞானம் (1) ஆனந்தம் (2) என்றும் இந்த ஞான ஆனந்த குணங்களையும் விட மிகச் சிறந்த குணம் இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தலே என்றும் இவ்வரிய குணங்களை உடைய ஆத்மா அது உறையும் உடலினும் வேறு பட்டது என்றும் ஆத்மாவிலும் உடலிலும் இறைவன் வியாபித்துள்ளான் என்றும் உபதேசித் தருளும் முறையில்,

"அடியேன் உள்ளான் உடலுள்ளான்"

என்று அருளிச் செய்துள்ளார்.

இதனையே தம் திருவுள்ளத்தில் தேக்கிய மெய்ம் மதிக் கடலாம் ஸ்ரீ இராமானுசரும்,

பேதையர் வேதப் பொருள் இது என்று உன்னிப்
பிரமம் நன்று என்று
ஓதி, மற்றெல்லா உயிரும் அஃதென்று, உயிர்கள்
மெய்விட்டு
ஆதிப்பரனோடு ஒன்றாம்!" என்று
சொல்லும் அவ்வல்லல் எல்லாம் வாதில் வென்றான்"

அதாவது பகுத்தறிவு, மனச்சாட்சி, தர்க்கம், மேதா விலாசம் எல்லாம் துணைக் கொண்டு பரமாத்மா சீவாத்மா சம்பந்தத்தை நிலை நாட்டினார் எனத் திருவரங்கத்து அமுதனார் பாடுகிறார்.

ஸ்ரீ உடையவர் நியமனப்படி கூரத்தாழ்வான், திருக் கோட்டியூர் நம்பி பக்கலின் ஆறு மாத காலம் ஆச்சாரிய சேவை புரிந்து! ஆத்ம லட்சணத்தைப் பற்றி

ஸ்ரீநம்மாழ்வார் அருளியுள்ள இந்த ''அடியேன் உள்ளான், உடலுள்ளான்'' என்ற பொன்னடியின் பொருளை மகா நிதியாகப் பெற்று வந்து, ஸ்ரீ உடையவரிடம் விண்ணப்பித்தாராம்!

பிள்ளை லோகாசாரியரும் ஸ்ரீ வசனபூஷணம் 74வது சூர்ணிகையில்:-

'அகம் அர்த்தந்துக்கு, ஞாநாநந்தங்கள், தடங்தம் என்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிருபகம்' என்று அருளிச் செய்தார்.

ஈஸ்வரனுக்கும் ஞான, ஆனந்தங்கள் உண்டு. எனவே தாஸ்யத்தை (அடிமைத் தொழிலை) ஆத்மாவுக்குச் சேர்க்க வேணும், ஈசுவரனிடமிருந்து வேறு படுத்திக் காட்ட; உயிரற்ற அசித்துக்கும்; சேஷத்துவம்; அடிமைப் பட்டுக் கிடத்தல் (பிறர் உபயோகிக்கும்படி இருத்தல்) உண்டு. எனவே ஞான ஆனந்தத்தையும் சேர்த்து உயிரற்ற அசித்தினிடமிருந்து ஆத்மாவை வேறு படுத்த வேணும்;

''பக்திப் பயிர் தழைத்து, முக்தி நெறி ஓங்கச் செய்ய சீரார் சடகோபன் செந்தமிழ் வேதமே துணை! வழி காட்டி'' என்பது இதனால் நன்கு விளங்குகின்றது.

தக்க நெறி

அதாவது மிக்க இறைநிலையை, மெய்யாம் உயிர் நிலை அடையத் தக்க சிறந்த வழி.

ஆறு என்றால் உபாயம், இறைவனை அடைய உதவும் வழி அவனது இணையடித் தாமரைகளே!

இதை உபதேசிக்கும் நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரம்!

''ஆறெ னக்குநின் பாதமே சரணாகத் தந்தொழிந் தாய்
உனக்கோர்கைம்மாறுநானொன் றிலேன்என தாவியு முனதே,
சேறு கொள்கரும் பும் பெருஞ் செந்நெலும் மலிதன் சிரீவர
மங்கை
நாறு பூந்தண் துழாய்முடி யாய் தெய்வ நாயகனே!''
(5-7-10)

நாம் கடைப் பிடிக்க வேண்டிய தக்க நெறியை] மேலும் திருவாய் மொழியில் விவரிக்கின்றார் ஸ்ரீ நம்மாழ்வார்;

''களைவாய் துன்பம்; களையா தொழிவாய் களைகண்
மற்றிலேன்!
வளைவாய் நேமிப் படையாய்! குடந்தைக் கிடந்த மாமாயா,
தளரா வுடலம் என்ன தாவி சரிந்து போம்போது,
இளையா துனதாள் ஒருங்கப் பிடித்துப் போத இசை நீயே.'',
(5-8-81)

இதனால்;

''உழலை யென்பின் பேய்ச்சி முலையூ டவளை யுயிருண்டான்
கழல்கள் அவையே சரணாக் கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்து ளிப்பத்தும்,
மழலை தீர வல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே''
(5-8-11)

நாமங்க ளாயிர முடைய நம்பெரு மானடிமேல்
சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந்துரைத்த,
நாமங்க ளாயிரத்துள் இவைபத்தும் திருவல்லவாழ்,
சேமங்கொள் தென்னகர்மேல் செப்புவார் சிறந்தார்பிறந்தே''
(5-9-11)

அதாவது நம்மாழ்வார் அருளிய தக்க நெறியைக் கடைப் பிடிப்பவர்களும் பிறந்ததினால் சிறப்படைவார்கள்.

''நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்நமக் கென்று
நாடொறும்
ஏக சிந்தைய னாய் ——''
(5-10-11

எழுந்தருளிய குருகூர்ச் சடகோபனான மாறன் அருளிய இறைவனை அடையத் தக்க எளிய நெறிக்கும், ஈடும், இணையும் உண்டோ? மேதா விலாசத்தின் மேல் தளத்தி லிருந்து மொழிந்த இந்த ஞான மழையினால் பக்திப் பயிர் செழித்து முக்தி நெறி ஓங்கும்! ஓங்கும்!!

தடையாகித் தொக்கு இயலும் ஊழ்வினை:-

அதாவது (1) மிக்க இறை நிலையை (2) மெய்யாம் உயிர் நிலை (3] தக்க நெறியை அடையாதபடி (4) தடை யாகித் தொக்கு இயலும் ஊழ்வினை!

பகவானல்லாத பிற பொருள்களின் மீது 'நமக்கு ஆசை ஏற்படுவது ஏன்? ''யான்'' என்னும் அகங்காரம் அப் பொருள்களை அடையத் தூண்டுகிறது. அப்பொருள்களை அடைந்தபின் அவைகள் என்னுடையவை'' என்னும் அடிப்படையில் மமகாரம் எழுகின்றது. இந்த அகங்கார மமகாரங்களே, நாம் இறைவனை அடைவதற்குத் தடை யாக உள்ளவைகளாதலால், இவைகளை அடியோடு விட்டு விடவேணுமென்று திருவாய் மொழியில் ஆழ்வார் அருளு கிறார்.

''வீடுமின் முற்றவும்—வீடுசெய்து, உம்முயிர்,
வீடுடை யானிடை,—வீடு செய்ம்மினே''
நீர்நும தென்றிவை, —வேர்முதல் மாய்த்து இறை,
சேர்மின் உயிர்க்கு, அத—னேர்நிறை யில்லே,'
உள்ள முரைசெயல், —உள்ளவிம் மூன்றையும்,
உள்ளிக் கெடுத்து -இறை யுள்ளிலோ டுங்கே.

உலக உடைமைகளைத் தனக்கே எனக் கொள்ளாமல், அவைகளைப் படைத்த இறைவனுக்கும், அவனது அடியார் கட்கும் ஆட்படுத்த வேண்டுமென்பதே உட்கருத்து.

(1-2,-1, 3, 8)

வாழ்வினை!-

வாழ்வினையைப் புருஷார்த்த சொருபம் என்றும், பவ சொருபம் என்றும், வீட்டின் இயல் என்றும் கூறுவது மரபு. இதுவே வைணவர் தம் வாழ்வு. அர்த்த பஞ்சக ஞானத்தின் சிகரம்! (1) மிக்க இறை நிலையை, (2) மெய் யாம் உயிர்நிலையை (3) தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையை அகற்றிக் கொண்டு (4) தக்க நெறியைக் கடைப் பிடித்தால் (5) ஸ்ரீ வைணவர் பெறுவதே பெரும் வாழ்வு! வாழ்வினை! புருஷார்த்தம்!

இந்நிலவுலகில் பிறவி எடுத்துள்ள நாம் அர்ச்சையிலே உருவ வடிவில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு இடைவிடாமல் குற்றமற்ற கைங்கரியம்; தொண்டு செய்து வாழ வேண்டும்.

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே'' (3-3-1)

திருவேங்கட மலைமேல் எழுந்தருளியுள்ள எம் பெருமானுக்கு (வேங்கடத்து உறைவாற்கு) 'நாம்' என்றும் தொண்டு பூண்டால்; போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும். இதுவே நம் பேறும் வாழ்வு மாகும்!

வேங்க டங்கள்மெய்ம் மேல்வினை முற்றவும்,
தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்,
வேங்க டத்துறை வார்க்கு நமவென்ன
லாங்க டமை அதுசுமந்த தார்கட்கே'' (3-3-6)

இறைவன்பால் அடிமை பூண்டு தொண்டு செய்தால் அது மேற்கொண்டு, அவனுடைய அடியவர்கள் பால் தொண்டினையும் ஏற்கச் செய்யும், பகவத் கைங்கரியத்தின் எல்லை நிலமே (முடிவு) பாகவத கைங்கரியம்; எனவே

புருஷார்த்தம் அல்லது பேறு, அல்லது வாழ்வினை, முதலில் பகவத் கைங்கரியத்தில் ஈடுபட்டு முடிவில் பாகவத கைங்கரியத்தை மேற்கொள்ளுதலாகும். பாகவத கைங்கரி யத்தை சிறப்பித்துச் சாதித்தருளும் ஸ்ரீ நம்மாழ்வார் பகவானுடைய அடியார் (1) அவர் அடியார் (2) அவர் அடியாரை (3) அவர் அடியாரை (4) தன்னை ஆளும் பரமர் களாகவே ஊழிதோறு ஊழி வாய்க்க வேண்டுமென வேண்டுகிறார்.

''வாய்க்க தமியேற் கூழிதோ றூழி யூழி, மாகாயாம்
பூக்கொள் மேனி நான்கு தோள் பொன்னா ழிக்கை
யென்னம்மான்
நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியார் அடியாரெங்
கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச் செல்லும்
நல்லகோட்பாடே''
(8-10-10)

எம்பெருமான் தம்மிடத்தில் வைத்த அன்பு தம் அடியார்களிடத்தும் பெருகுவதைக் காணப்பேரானந்தம் அடைவதால் இறைவனுடைய திருக்கண்களும், அலர்ந்த அல்லிக் கமலக் கண்களாகின்றவாம்! இவ்விதமாகப் பாகவத கைங்கரியத்தில் ஈடுபடும் பேறு படைத்தவர்கள். பாகவத சேஷத்துவத்தைப் (தொண்டர்கட்குத் தொண்டு செய்யும் நிலை) பெற்று, இல்லறத்திலே இருந்து வழி வழி ஆட் செய்து இன்பம் எய்துவார்களாம்: இல்லறமே நல்லறம். பகவத் பாகவத கைங்கரிய சிறப்புடன் வாழப் பெற்றால்: கூரத்தாழ்வானும் அனந்தாழ்வானும் இல்லறத்திலே இருந்து பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் துணை செய்ய வாழ்ந்தருளினார்களல்லவா? திருமால் அடியார் களைப் பூசிக்க நோற்பதே நோன்பு.

''நல்ல கோட்பாட் டுலகங்கள் மூன்றினுள்ளும்
தான்நிறைந்த
அல்லிக் கமலக் கண்ணனை, அந்தண் குருகூர்ச்
சடகோபன்

சொல்லப்பட்ட ஆயிரத்துள் இவையும் பத்தும் வல்லார்கள்,
நல்ல பதத்தால் மனைவாழ்வார், கொண்ட பெண்டிர் மக்களே'' (8-0-11)

அர்த்த பஞ்சகமும் நம் ஐந்து விரல்களும்

அர்த்த பஞ்சகத்தை ஒரு கைக்கு உபமானமாகக் கொண்டால் அது விவரிக்கும் ஐந்து அரிய கருத்துகளையும் ஐந்து விரல்களாகக் கொள்ளலாம்.

(1) கடவுள் மிக்க இறைநிலைத் தத்துவமே கட்டை விரல்—(இன்றியமையாதது.)

(2) ஆன்மாவே—மெய்யாம் உயிர் நிலை—அடுத்துள்ள ஆள்காட்டும் விரல்—ஆள் என்பது ஆத்மா. கட்டை விரலான பரமாத்மாவுடன் நெருங்கிப் பணிந்து தொழிற் படுகிறது.

(3) நீண்ட நெடுவிரலே தக்க நெறி—கட்டை விரலான கடவுள் தத்துவத்துடன், ஆள்காட்டும் விரலான ஆன்மா ஒன்றுவதற்கு உதவும் வகையில் தொழில்படும்.

(4) தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையைக் குறிப்பது அதனை அடுத்த மோதிர விரல்—அகங்கார மமகாரங்களுக்கு அடி கோலியான பொன் மோதிர அணியைப்பூண்டு தடையை வளர்க்கின்றது; அது மட்டுமா? தக்க நெறியாகிய நடு விரலுக்கும், வாழ்வினை யாகிற சுண்டு விரலுக்கும் நடுவே தடையாகவல்லவா அமைந்துள்ளது!

(5) வாழ்வினையே சுண்டு விரல்! தக்க நெறியைக் கடைப்பிடித்துத் தடையை வென்றால்; பகவத்—பாகவத கைங்கரியப்பேறு சுண்டு விரல் நுனியில் அல்லவா வந்து சுலபமாகவே ஒட்டிக் கொள்ளும்!

ஆழ்வார் அருளிய ஸ்ரீ வைணவ சமயத்தின் அர்த்த பஞ்சக ஞானத்தை,

1 பகுத்தறிவுக் கண் கொண்டு;

2 மனச்சாட்சியின் அடிப்படையில்

3 தர்க்க ரீதியாகவும் ஆராய்ந்தால்

4 மேதாவிலாசமும் இஞ்ஞானத்தை மெச்சிப் புகழும் என்பதில் ஐயமில்லை]

5 பக்திப் பயிர் செழித்து முக்தி நெறி ஓங்கச் செய்ய

அர்த்த பஞ்சக ஞானமே நமக்கு அருந்தனம்

அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபர், உயர்த்தியுள்ள அர்த்த பஞ்சக ஞானமாகிய ஸ்ரீவைணவ பஞ்சவர்ணக் கொடியை நம் அகத்தில் எப்போதும் உயர்த்தி உய்வோமாக!

செத்தது! சிறியது! எத்தை! எங்கே!

தென்பாண்டி நாட்டிலே, திருக்கோளூரிலே திருவவதரித்த மதுர கவிகளுக்கு, தக்க ஆசாரியரை அடைந்து உண்மை ஞானம் பெற வேண்டுமென்ற அவா! பல திவ்ய தேசங்கள் திரிந்து, வடக்கே திருவயோத்தியை அடைந்தார் இடையில் கண்டு வார்த்தையாடிய ஒருவரையும் அவர் தமது ஆசாரியராக ஏற்றுக் கொள்ள இயலவில்லை!

தெற்கிலிருந்து ஒரு ஒளிப்பிழம்பு திடீரென அவரை வந்துதொட்டது! பின்னிட்டார்! அது முன்னிட்டது! தெற்குநோக்கி அப்பிழம்பும் பின்னிட்டது! அதனால் தெற்கு நோக்கியே நடந்தார். ஒளிப்பிழம்பும் குறைந்து வந்து, திருக்குருகூர் திவ்யதேசத்திலே ஓங்கி வளர்ந்திருந்த ஒரு புளிய மரத்தின் பொந்திலே அடங்கியது;

அப்புளிய மரப்பொந்தில் ஒரு குழந்தை வசீகரமான தோற்றத்துடன் காட்சியளித்தது. அதனுடைய தேஜசே அயோத்தி வரை நீண்டு வந்து மதுரகவிகளைத் தொட்டது. விசாரித்ததில், குறுநில மன்னரான காரிமாறருக்கும் உடைய நங்கையாருக்கும் திருக்குறுங்குடி எம்பெருமானின் திருவருளால் பிறந்த அந்த ஆண் மகவு, கண் திறவாமலும், வாய்பேசாமலும், உண்ணாமலும் இருக்கக் கண்டு மனமுடைந்து, அதனை திருக்குருகூரில் எழுந்தருளியுள்ள பொலிந்து நின்றபிரான் சந்நிதியில் கிடத்தி, உலகின் தன்மைக்கு மாறுபட்டு இருந்ததால் ''மாறன்'' எனப் பெயரிட்டு விட்டுவிட; அம்மகவும் அருகிருந்த புளிய மரப் பொந்திலே சேர்ந்து கொண்டு பதினாறு ஆண்டுகளாக வளர்ந்தும் வருகிறது எனத் தெரிய வந்தது,

பொந்துக் குழந்தையின் பொலிவு, தொண்டு கிழவரான மதுர கவிகளையும் மயக்கிவிட்டது! ஒருவரையும் ஏறிட்டுப்பாராத அக்குழந்தையின் திருக்கரங்கள் தம்மீது படவேண்டுமெனத் துடித்த மதுரகவிகள், ஒரு கல்லை எடுத்துக் கீழே போட்டார்! உள்ளத்தால் உறங்காத அக்குழந்தையும் தன் திருக்கண்களைத் திறந்தது. மதுரகவிகளையே நோக்கி மலர விழித்தது.

ஒருவரிடமும் பேசாத அக்குழந்தை தம்மிடம் பேச வேண்டும், தனக்கு உபதேசம் செய்து தன்னுடைய ஆசாரியனாக வேண்டும் என்ற அவாவில் மதுரகவிகள் மேம்பட்டார். கூடியிருந்த கூட்டமும் கூர்ந்து கவனித்தது! தம்முடைய ஞானத்தை எல்லாம் தகர்த்துக் கொண்டிருந்த ஒரே கேள்விக் கணையை விடுத்தார் மதுரகவிகள்.

> ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்!
> எத்தைத் தின்று? எங்கே கிடக்கும்?

அதைவிடச் சுருக்கமாகவும், அழுத்தமாகவும், திருத்தமாகவும் குழந்தையிடமிருந்து எதிர் கணை பதிலாக வந்தது!

> ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்''

இவ்வினா, ஸ்ரீ வைணவ சமயத்தின் சாறு! அதற்கு விடை; அச்சாற்றைத் தெளிவாக்கிக் காய்ச்சி எடுத்த கற்கண்டு! இதுவே, ஸ்ரீ நம்மாழ்வாரின் முதல் முழக்கமாகும்!

ஸ்ரீ வைணவ சமயத்தின் தலையாய கொள்கைத் தத்துவத் திரயம் அதாவது பிரபஞ்சம் மூன்று பிரிவுகளால் ஆனது. இவையே உயர்ந்தவை, நிலையானவை, நிகரற்றவை. இம்மூன்றின் இயக்கமே பிரபஞ்சம்.

முதலாவது, உயிரற்ற பொருட்களான பஞ்ச பூதங்கள். மற்றும் இவற்றின் சேர்க்கையால் ஏற்பட்ட பொருள்கள். இவையே மண்ணாகவும் கல்லாகவும் தானே நடையாடாப் பொருள்களாகவும் காணப்படுபவை,

இரண்டாவது, சித் என்னும் உயிர்த்திரள். ஜீவாத்மா என்றும் கூறலாம்.

மூன்றாவது, கடவுள் அல்லது ஈஸ்வரன். சித் அசித் ஈஸ்வர சொரூபமே பிரபஞ்சம்?

மதுரகவிகள் கேட்டது. ஒரு கேள்வி; கிடைத்ததோ மூன்று விடைகள்.

சகல நூல்களையும் கற்று, சகலரையும் கேள்வி கேட்டுத் திருப்தி பெறாத மதுரகவிகள் ஏவிய கேள்விக் கணையின் பொருள் யாது?

செத்தது என்பது உயிரற்ற சித், இவை பஞ்சபூதங்கள் மற்றும் அவற்றின் சேர்க்கையால் ஏற்பட்டன. நம் உடம்பும் பஞ்சபூதங்களின் சாமர்த்தியமான, ஆச்சர்யப் படத்தக்க சேர்க்கையே! இப்பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்ட உடம்பிலே! அதாவது செத்ததின் வயிற்றில்;

சிறியது என்பது அவை அளவாக உள்ள ஜீவாத்மா பஞ்சபூத சேர்க்கையாலான அசித் சம்பந்தமான உடம்பிலே சிறியதான சித் ஜீவாத்மாவும் சேர்ந்து கொண்டு மண் உலகில் பிறவியை ஆரம்பித்து விட்டால்;

''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்''

பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலான அசித்தான உடம்பின் அடிப்படையில் ஜீவாத்துமாவும் கலந்து தேக யாத்திரையைத் தொடங்கினால்—அத்தகைய ஜீவாத்துமா எத்தைத் தின்று;

எதைத் தனக்கு உணவாகக் கொண்டு அதாவது தொடர்ந்த சாதனமாகக் கொண்டு எங்கே கிடக்கும்?

எதைத் தன் குறிக்கோள் எனக்கொண்டு கிடக்கும் என்று மறைபொருளாகக் கேட்டார் மதுரகவிகள்!

அதாவது உடம்போடு கூடிய உயிர் தன்னை இயக்கிக் கொள்ள எதை உணவாகக் கொள்ளும், அவ்விதமான உணவைக் கொண்டு எதை எந்த நிலை எனக் கொண்டு வாழும்? என்று மதுரகவிகள் வினவினார். இதைத்தானே திருவயோத்தி வரையினும் அடுக்கிக் கொண்டே போனார்.

பளிச்சென்று வந்தது பதில், அந்த ஞானக் குழந்தை யிடமிருந்து,

பஞ்சபூத அசேதன அசித் சேர்க்கையால் ஏற்பட்ட உடலினுள் பொதிந்துள்ள உயிர்த் தத்துவம், பிறவியை ஏற்றுக் கொண்டால், அத்தைத் தின்று—அந்த உடலினால் ஏற்படும் சுகதுக்கங்களை உணவாகக் கொண்டு, அங்கே கிடக்கும், அப்படியான சுகதுக்கங்களுக்கு ஏதுவான உடலையே தஞ்சம் எனக் கொண்ட உயிரானது பற்றிக் கொண்டிருக்கும்!

மதுரகவிகள் இப்பதிலால் உலகத்தின் இயல்பை அறிந்து கொண்டார். அது மாத்திரம் அல்ல, அவரது கேள்வி! இப்படியான பஞ்சபூதங்களால் ஆன உடம்பில் உயிர்த்தத்துவம் கூடிப் பிறந்துள்ள நீர் எதை உணவாக கொண்டுள்ளீர்! எதைப் பற்றிக் கொண்டுள்ளீர்! நீரும் ஏன் மற்ற உயிர்களைப் போல் உடம்பின் காரணமான சுகதுக்கங்களில் உழலவில்லை? ஏன் இவைகளுக்குக் காரண மான உடலையே தந்தும் பற்றிக் கொண்டிருக்கவில்லை.; 'உலக வழக்கத்திற்கு மாறாக உண்ணாமல் உரையாடாமல் வளராமல் இந்தப் புளிய மரத்தின் பொந்திலே கிடப்பது என்று மடக்கிவிட்டார் மதுரகவிகள்!

சிறுமாமுனிவர்! தன்மை; உலகில் பிறக்கும் உயிரினங் களின் தன்மை! அதாவது செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால், அந்த உடலினால் ஏற்படும் சுகதுக்கங்களையே உணவாகக் கொண்டு உடம்பையே பெரிதெனஎண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும். ஆனால் என் நிலையே வேறு, என் உடம்பு என் உயிரைக் கட்டுப்படுத்தாது; உயிர் என் உடம்பின் வசமல்ல. செத்ததின் வயிற்றில், அதாவது அசித்

சம்பந்தமுடன் உடலும் ஜீவாத்துமா சிறியது பிறந்தால் எனக்குப் பிறவி ஏற்பட்டாலும் கூட, செத்ததுடன் சேராது இச்சிறியது; ஆகையால் செத்ததின் சம்பந்தத்தால் ஏற்படும் சுகதுக்கங்களை உணவாகக் கொள்ளாது. இவைகளின் காரணமான இந்த உடலையே தஞ்சமெனக் கொள்ளாது.

உலக இயற்கைக்கு மாறாக வளரும் இக்குழந்தை பெற்றோர்களின் வாக்குப்படி மாறனல்லவா?

தாயின் கர்ப்பப்பையிலிருந்து வெளிப்படும் சிசு முதலில் நுகர்வது தன் மூக்கினால் உலகக் காற்றையே. இக் காற்றுக்குச் சடம் எனப் பெயர். இக்காற்று சிசுவின் உயிரில் புகுந்ததும் உலகின் அஞ்ஞானத்திற்கும் அதன்பால் ஏற்படும் சுகதுக்கங்களுக்கும் அடிமையாகிறது, இப்படி தனக்கு நேராமல் தடுத்துக் கொண்டாராம் மாறன்! அதாவது தமது மூக்கின் வழியாக நுழைய இருந்த சடம் என்னும் காற்றினை 'ஊம்' என்று அதட்டி உள் நுழையாத படிக்கோபித்தாராம். எனவே இவர் சடகோபர் எனப் புகழ் பெற்றார். இவரும் தமது பிரபந்தங்கள் முழுவதும் தம்மைச் சடகோபன் என்றே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்!

செத்ததின் வயிற்றில் பிறந்த இச்சிறியது பின் எத்தைத் தான் தின்று எங்கே தான் கிடக்கும்! என்று கேட்கின்றீரா? விடை தருகிறார் சடகோபர்.

உலக வழக்குகளிலிருந்து மாறுபட்டும், சடம் என்னும் காற்றையே உடலில் புகவொட்டாமல் கோபித்தும் சடகோபனாக உள்ள என் ஆத்மா தின்ன வேண்டியது என்ன? கிடக்க வேண்டியது எங்கே?

அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!

எழுத்துக்களிலே அகரம் திருமாலைக் குறிக்கும். ஓம் என்பது அ உ ம என்றும் மூன்று எழுத்துக்களின் சேர்க்கையே. இதில் அ—திருமாலையும் உ—திருமகளை

யும்—உயிர் அல்லது ஜீவாத்துமாவையும் குறிக்கும். மகாரவாக்கியனான ஜீவாத்துமா, உகாரவாக்கியளான திருமகளின் துணை கொண்டு அகார வாச்சியனான திருமாலை அடைதல் வேண்டும் என்பது பிரணவமான ஓம் தரும் உபதேசம்.

எனவே மகாரவாச்சியனான சிறிய அகார வாச்சியனா திருமாலின் கல்யாண குணங்களையே உணவாகக் கொண்டு அத்தைத் தின்று: அங்கே கிடக்கும்—அவன் திருவடி களையே தஞ்சமெனக் கொண்டு அவன் சக்தியில் உள்ள புளிய மரத்தின் பொந்தில் கிடக்கிறது.

உலக சிருஷ்யில் ஆத்மாவுக்குரிய நிலையையும், இதற்கு மாறான தம் ஆத்மாவின் நிலையையும் உணர்த்தியருளி னார் சடகோபர்.

மதுரகவிகளின் கேள்வியிலே தன்னலமும் கலந்து இருந்தது.

செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் என்ற நிலை யில் பிறவி எடுத்துவிட்ட தனக்கு உஜ்ஜீவிக்க வேண்டிய உபதேசத்தை உள்ளுறைப் பொருளாக அருளும்படி வேண்டினார், மதுரகவிகள். செத்ததின் வயிற்றில் பிறந்து விட்ட சிறியரான மதுரகவிகள் எத்தைத் தின்று எங்கே கிடக்க வேண்டும் என்பதைப் பணிவுடனும் பக்தியுடனும் விளக்க வேண்டினார்.

அம்மிகுஞானச் சிறு குழவியின் விடையிலேயே மூன்றாவதான விளக்கமும் அமைந்திருப்பது தெள்ளென விளங்குகிறதே.

பஞ்சபூதங்களின் சேர்க்கையிலான உடம்பில் பிறந்துள்ள சிறியதான ஜீவாத்மாவான நீரும், அகார வாச்சியனான திருமாலின் திருக்கல்யாண குணங்களையே உணவாகக் கொண்டு, அவன் திருவடிகளையே சரணம்

செய்து கொண்டிருந்தவர்களையே நிலையாகக் கொள்ள வேணும் என்று உபதேசித்து அருளினார், ஆசாரியரான குருகூர் சடகோபர்.

மதுரகவிகளும் 'தேவு மற்றறியேன்' என நம்மாழ்வாரின் திருவடிகளில் சாய்ந்தார்.

நம்மாழ்வார், இந்த உபதேசத்தையே ஆயிரம் பாடல்களான திருவாய்மொழியில் உலகம் அறிய வெளியிட்டார் எனவும், அதனை மதுரகவிகளும் பட்டோலை கொண்டு எழுதினார் எனவும் கூறப்படுகிறது. இத்திருவாய் மொழி ஆயிரமும், துவய மந்திரத்தின் பொருளாகும். துவயம் என்றால் இரண்டு எனப் பொருள். இந்த மந்திரத்தையே ஈஸ்வரனான திருமால் தன் உயரிய சொத்தாக மதிக்கிறான். ஆசாரியரும் இந்த துவய மந்திரத்தையே ஆட்கொள்ள, ஆபத்தில் தனக்கு உதவும் நிதியாக மதிக்கின்றார். துவயமந்திரம் இரண்டு வாக்கியங்களால் அமைந்துள்ளது.

ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே

ஸ்ரீமதே நாராயணாய நம:

இவ்விரண்டு வாக்கியங்களும் பத்து பிரிவுகளாக அமைந்துள்ளன:-

1. ஸ்ரீமந் — இலட்சுமிக்கு பதியாயிருக்குந் தன்மை.

2. நாராயண — நாராயணராகும் தன்மை

3. சரணௌ — நாராயணனுடைய சர்வ போக சரண்யமான சரணாரவிந்த யுகளம்

4. சரணம் — அத்திருவடியினை பிராகமாயிருக்கும்.

5. பிரபத்யே — சேதனனுடைய பிரார்த்தனையை உள்ளடக்கிக் கொண்டுள்ள விஸ்வாசம்.

6. ஸ்ரீமதே — திருமகள், இவர்களுடைய நித்திய சம்பந்தம். கைங்கரியம் கொள்ளும் ஈஸ்வரன் பரமயோக்யமாக இருக்கும் தன்மை.

8. நாராயண — எல்லோருக்கும் சுவாமியாக இருத்தல்.

9. ஆய — நித்திய கைங்கர்யம்

10. நம — கைங்கர்யத்துக்குத் தடையாக உள்ள அவற்றைப் போக்குதல்.

மதுரகவிகளுக்கு சாதித்தருளிய வித்தாக இப்பத்த அர்த்தங்களையும் (விடியல்களையும்) திருவாய்மொழியின் பத்துப் பத்தாலும் சாதித்துள்ளார், நம்மாழ்வார்.

இம்மகத்தான கேள்வியும் அதற்கு விடையாக எழுந்த உயரிய உபதேசமும் வாழ்க!

வாழ்க! மதுரகவிகள்!
வாழ்க! சடகோபர்;
வாழ்க! திருவாய்மொழி!
வாழ்க! உலகு என்று போற்றும்

வாழ்த்துப் பாடலையே வைணவர்கள் நித்தியப் பிரபஞ்சத் தோத்திரங்களின் கடைசிப் பாடலாக அமைத்துள்ளார்கள்:

அடியார்கள் வாழ! அரங்க நகர் வாழ!
சடகோபன் தண் தமிழ் நூல் வாழ!
கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ!
மணவாள மாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டிரும்!

முதல் முழக்கம்—முழு முழக்கம்

முதல் முழக்கம்! முழு முழக்கமும் ஆகும்
''சேமம் குருகையோ!
செய்ய திருப்பாற்கடலோ!
நாமம் பராங்குசமோ!
நாரணமோ!—தாமம்
துளவோ! வகுளமோ!
தோள் இரண்டோ! நான்கும்
உளவோ! பெருமான் உனக்கு!!

என மதுரை தமிழ்ச் சங்கப்புலவர்களே, திருமாலுடன் ஒப்பிட்டு உவந்து, வியந்த நம்மாழ்வார் திருக்குருகூரிலே, ஆதிசேடனார் திருப்புளியாழ்வாரின் திருநிழலிலே எழுந்தருளி முழக்கிய முதல் முழக்கத்தையும்; தமிழ் மறை என்றும் சாமவேதம் என்றும் சாமப் (கடைசி) பிரபந்தம் என்றும் போற்றப்படுகின்ற திருவாய்மொழி அருளும் முழு முழக்க்த்தையும் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் முதல் முழக்கமே முழு முழக்கமாயும் ஆயிற்று!

முதல் முழக்கம்!

தெற்கே திருக்கோவலூரிலிருந்து வடக்கே திரு அயோத்தி வரை தர்க்க விசாரணைசெய்து கொண்டும் தக்க ஆசாரியனைத் தேடிக் கொண்டும், தேசம் திரிந்து வந்த ஸ்ரீ மதுரகவிகளை; ஒரு ஜ்ளிப் பிழம்பு அழைக்கவும், அதன் பின் சென்று, திருக்குருகூரிலே. திருப்புளியாழ்வாரின் நீழலிலே கண்திறவாமலும், வாய் பேசாமலும் இருந்த ஸ்ரீ நம்மாழ்வாரைச் சேவித்து, பரவசமாகி தம்மைத் துளைத்துக் கொண்டிருந்த கேள்விக் கணைகளை விடுத்தார்.

அதாவது,

செத்தது சிறியது! எத்தை எங்கே?

1. "செத்ததின்" 2. வயிற்றில் 3. சிறியது 4. பிறந்தால் 5. எத்தைத் 6. தின்று 7. எங்கே 8. கிடக்கும்?

என்ற எட்டு வார்த்தைகளால் தமது தர்க்கத்தை ஆரம்பித்தார் மதுரகவிகள்!

பராங்குசரும்,

1. அத்தைத் தின்று 2. அங்கே 3. கிடக்கும்!
என்ற நான்கே வார்த்தைகளால் தர்க்கத்தைத் தீர்த்து விடவும், ஸ்ரீ மதுரகவிகள் ''தேவுமற்று அறியேன்'' எனத் தெண்டனிட்டுச் சீடரானார்!

நம்மாழ்வார் நான்கு வார்த்தைகளால் பதிலுரைத்தாலும் உண்மையாக அவரும் எட்டு வார்த்தைகளை உள்ளடக்கிப் பேசுகிறார். அதாவது,

1. செத்ததின் 2. வயிற்றில் 3. சிறியது 4. பிறந்தால்; 5. அத்தைத் 6. தின்று 7. அங்கே 8. கிடக்கும்!

மதுரகவிகளும் பெயர்ச் சொல்லை உபயோகிக்காமல் 'எத்தைத் தின்று' என்றும் 'எங்கே கிடக்கும்' என்றும் சுட்டுப் பெயரை உபயோகித்ததால், ஸ்ரீ நம்மாழ்வாரும் 'அத்தைத் தின்று' என்றும் 'அங்கே கிடக்கும்' என்றும் சுட்டுச் சொற்களால் விடையளித்தார்.

விளக்கமாக விண்ணப்பித்தால், மதுரகவிகளின் 'எத்தை' என்ற கேள்விக்கு ஸ்ரீ நம்மாழ்வார் அத்தை என்றும் 'எங்கே' என்ற வினாவிற்கு 'அங்கே' என்றும் விடையும் பகர்ந்தார்.

அதாவது, கேள்வியைக் கலைக்காமல் இரண்டு வார்த்தைகளை மட்டும் மாற்றி பதிலுரைத்த சீர்மை சிந்திக்க வைக்கின்றது.

மேலும் விளக்கமாக விண்ணப்பித்தால் மதுரகவிகளின் 'எத்தை' என்பதில் 'எ' எழுத்தை நீக்கி 'அ' எழுத்தைச் சேர்த்து அத்தை என்றும், 'எங்கே' என்பதில் உள்ள 'எ'

எழுத்தை நீக்கி 'அ' எழுத்தையும் வைத்து 'அங்கே' என்றும் இரண்டு இடத்திலும் 'எ' எழுத்தை நீக்கி, 'அ' எழுத்தைச் சேர்த்து எழுத்துச் சிலம்பம் அல்ல வார்த்தைச் சிலம்பம் அல்ல கருத்துச் சிலம்பமே ஆடிவிட்டார் ஸ்ரீ நம்மாழ்வார்.

சீடருக்கும், ஆச்சார்யருக்கும் இடையே ஏற்பட்ட இக்கருத்துச் சிலம்பம் தொடர்வதைக் காண்போம்.

செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்; அத்தைத் தின்று அங்கே கிடக்கும்! என உபதேசித்தருளும் ஆசாரிய சுவாமிகளே!

தேவரீரும் செத்ததின் வயிற்றில் பிறந்த சிறியதுதானே!

தேவரீர் மட்டும் ஏன் அத்தைத் தின்று (அச்சரீரத்தைச் சார்ந்த இன்பதுன்பங்களை அனுபவித்து அங்கே கிடக்க வில்லை? அந்தச் சரீரத்திலுள்ள ஐம்புலன்களை அனுபவித்து அந்த பிரகிருதியிலேயே உழலவில்லை?) என வினவ முற்படுவது போல் குறும்புப் புன்னகை பூத்தார் மதுரகவிகள்.

இந்த சந்தர்ப்பத்திற்காக, எதிர்பார்த்திருந்தும் ஸ்ரீநம்மாழ்வார், மதுரகவிகளின் குறும்புப் புன்னகையை எளிதில் புரிந்து கொண்டு விடையருளுகின்றார்.

உலக வழக்கிலிருந்து மாறுபட்டும், 'சடம்' என்னும் காற்றையே உடலில் புகவொட்டாமல் கோபித்தும், சடகோபனாக உள்ள எனது ஆத்மா, தின்ன வேண்டியது என்ன? கிடக்க வேண்டியது எங்கே!

அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!

'உண்ணும் சோறும் பருகும் நீர்தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றே கண்கள் நீர்மல்கிக் கிடக்கின்றேன்!

இவ்வாறாக, உலகத்துச் சித்து அல்லது ஆத்மாக்கள் தன்மையினையும் இதற்கு மாறான தமது ஆத்மாவின் நிலையினையும் உணர்த்தியருளினார் சடகோபர்.

மதுரகவிகளின் குறும்புப் புன்னகை, கண்ணீராக அரும்பி மாறியது.

மோட்சத்தை அடைய விரும்பும் மதுரகவிகளுக்கு தத்துவத் திரய ஞானத்தை அருளுகிறார் ஸ்ரீ நம்மாழ்வார்:

முமுக்ஷுவான தனக்கு மோட்சமுண்டாம் போது தத்துவத் திரய ஞானம் உண்டாக வேணும்! என்பதல்லவா ஸ்ரீ பிள்ளைலோகாச்சாரியரின் திருவாக்கு.

செத்தத்தின் என்பதனால் அசித்தையும் 'சிறியது' என்பதனால் சித்தையும் மதுர கவிகளுக்கு ஈஸ்வர ஞானத்தையும் சாதித்தருளினார் ஸ்ரீ நம்மாழ்வார்.

'பஞ்ச பூதங்களின் சேர்க்கையான உடம்புடன் பிறந்துள்ள 'சிறியதான, ஜீவாத்துமாவான நீரும். "'அ'" கார வாச்சியனான திருமாலின் கல்யாண குணங்களையே அவன் திருவடிகளையே நிலைக்களம் என்று பற்றுக் கோடாகப் பெற்று, வாழ்ந்தருள்வீராக! என்று உபதேசித்தருளினார் மூன்றாவது பொருளிலே! பராங்குச வள்ளல்!

மதுரகவிகளின் மனதிலே நான்காவதான ஆவலும், ஆர்வமும் உண்டாயிற்று!

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!" என்ற உபதேசத் திருவாக்காலே முதலில் உலகோர்கள் நிலைமையினையும், இரண்டாவதாக ஸ்ரீ நம்மாழ்வாரின் ஏற்றத்தையும், மூன்றாவதாக தமக்கு வேண்டிய உபதேசத்தையும் அறிந்த பிறகு, இனியாவது உலகோர்கள் நற்கதி அடைய, அவர்களுக்கும் ஸ்ரீ நம்மாழ்வார் அறிவுரை அருளவேண்டும் என்று ஏங்கினார்.

குரு'சடகோபரின் அதே உபதேசத்தில் உலகோர்க்கும் வேண்டிய உபதேசமும் அமைந்திருப்பதை அறிந்து ஆச்சரியமானார்! உலகோர்கள் அத்தைத் தின்று அகாரவாச்சியனான திருமாலின் கல்யாண குணங்களையே பொழுது போக்காக ஏற்று அங்கே கிடக்கும்! என்ற நிலையிலே ஸ்ரீமந் நாராயணன் திருவடி வாரத்திலேயே கைங்கர்யங்கள் புரிந்து சரணடைய வேண்டும் என்பதை நான்காவதான நானிலத்தோர்க்குத் தேவையான அருள் வாக்கு, எனவே அத்தைத் தின்று, அங்கே கிடக்கும்! என்ற நான்கு சொற்களாலே நாடெல்லாம் அறியக் கிடக்கும் நான்கு வகைப்பட்ட உபதேசங்களின் சீர்மையை எண்ணிக்கையாக நாம் சேர்க்க வேண்டும்.

ஸ்ரீவைணவ ஞானம், நான்கு திக்கும் ஓங்க, கொட்டு முரசே என்று, நான்கு முரசங்களை அருளியுள்ளார் ஸ்ரீ நம்மாழ்வார். அவையே (1) திருவிருத்தம் (2) திரு ஆசிரியம் (3) பெரிய திருவந்தாதி (4) திருவாய்மொழி என்பனவாம். இவைகளிலே முதல் முரசாக அமைவது திருவிருத்தம்.

திருவிருத்தம் என்னும் முரசிலே, முதல் முழக்கமாக அமைந்துள்ள பாசுரம்,

> ''பொய்நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும்; அழுக்குடம்பும்
> இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
> எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா
> மெய்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே''

இந்த முதல் முரசு முதல் முழக்கப் பாடலே, ஸ்ரீ நம்மாழ்வார் ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்ற நான்கு வார்த்தைகளால் அருளிய நான்கு உபதேசங்களும்; மிக ஆச்சரியமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் அமைந்துள்ளதைச் சேவித்து மகிழ்வோம்!

1. உலகோர் நிலை :

அசித்தாகிய சரீரத்திலே அவை வடிவமான (சிறிய) உயிர் சம்பந்தப்பட்டால், அது அச்சரீரத்தைச் சார்ந்த ஐம்புலன்களை அனுபவித்த அச்சரீரத்திலேயே பரந்திருக்கும்.

புலன்கள் வழி நிற்கும் உடம்பு அழுக்கு உடம்பு: அழுக்கு உடம்பால் ஏற்படுவது பொய் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கமும், அத்தைத் தின்று அங்கே கிடப்பதாவது ''இந்நின்ற நீர்மை''

''பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை''

ஸ்ரீ நம்மாழ்வாரின் உயரிய நிலை :

சடகோபருக்கு :

உடம்புண்டு ஆனால் அழுக்குடம்பு இல்லை(நல்வாழ்வு)

ஒழுக்கம் உண்டு ஆனால் பொல்லா ஒழுக்கமில்லை

ஞானம் உண்டு

ஆனால் பொய்நின்ற ஞானம் இல்லை

இதுவே இவரின் இந்நின்ற நீர்மை.

மதுரகவிகளின் மறுமலர்ச்சி

ஞானமும், ஒழுக்கமும், உடம்பும் இந்நின்ற நீர்மை பரம கவிகளுக்கு ஏற்பட்டது.

''கண்டு கொண்டு என்னைக் காரிமாறப் பிரான்,
பண்டை வல்வினை பாற்றி அருளினான்;
எண்திசையும் அறிய இயம்புகேன்!
ஒண் தமிழ்ச் சடகோபன் அருளையே!

4. நாட்டார்க்காக நாட்டுக்காக மன்றாடும் நம்மாழ்வார்! நாட்டாரின் இயல் :-

பொய் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கமும்
அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை!
தலைவனிடம் தாம் மன்றாடுவது அவர் உய்விற்காக!
இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா!
மெய்நின்று கேட்டருளாய்' அடியேன் செய்யும்
விண்ணப்பமே!

ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்திலே வகுளபூஷண பாஸ்கரரோ நாட்டுக்காக மன்றாடும் முதல்வழக்குரைஞர்!

நம்மாழ்வாரின் கடைசிப்பிரபந்தமான திருவாய்மொழி அர்த்த பஞ்சக ஞானம் அருள்வதாக ஒரு தனியன்,

மிக்க இறை நிறையும், மெய்யாம் உயிர்நிலையும்,
தக்கநெறியும் தடையாகித் தொக்கியலும்,
ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழின் இசைவேதத்து இயல்!

இத்தனியனை நம்மாழ்வாரின் முதல் முரசமான திருவிருத்தத்திற்காக அமைந்துள்ள முதல் முழக்கமான பொய் நின்ற ஞானம் பாசுரத்திற்கும் கூட அதைச் சிந்திக்கலாம்.

1. இமையோர் தலைவா—மிக்க இறை நிலை.

2, அடியேன்—மெய்யாம் உயிர்நிலை.

3; கருணையினாலே அவன் பிறரை உய்விக்க அவதரித்தலால் அக்கருணையே உபாயம் எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய்!

4. பொய் நின்ற ஞானம் பொல்லா ஒழுக்கு, அழுக்கு. உடம்பு இந்நின்ற நீர்மை இவையே தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை;

5. கேட்டருளாய், நம் குறைகளை அவன் திருச்செவி சாற்றியருளுவதுவே நமக்குப் பேறு. கேட்பதோ அருளானந்தன் இம்முதல் முரசும். ஓங்குக முதல் முரசும் வெல்க! ஸ்ரீமந் நாராயணன் உலகில் எந்நின்ற யோனியு மாய்ப் பிறப்பது உயிரளிப்ப தறியாததுவே.

பகவத் கீதையில் கண்ணபிரான்தான் இந்நிலத்தில் வந்து அவதரிப்பதற்குக் காரணங்களைக் கூறுமிடத்து, பரித்ராணாய சாதுனாம்! என்று அடியவர்களை ரட்சிக்கும் பொருட்டே வந்து பிறக்கிறேன் என்பதை முதல் காரணமாகக் கூறினான். துஷ்டர்களை ஒழிப்பதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் அவன் பரம பதத்தி லிருந்து எண்ணியபடியே சாதிக்க சக்தியுண்டு.

இங்ஙனமே நம்மாழ்வாரும் நெஞ்சிலே படுகையாலே நாட்டுக்காகத் தாம் மன்றாடவே! அவதரித்தார்.

இவைகளையெல்லாம் மனதில் தேக்கிய புலவர் பெருமக்கள் நம்மாழ்வாரை வியந்து வினவியபடி நாமும் வினவலாமே!

சேமம் குருகையோ? செய்ய திருப்பாற்கடலோ?
நாமம் பராங்குசமோ? நாரணமோ?—தாமம்
துளவோ? வகுளமோ?
தோள் இரண்டோ? நான்கும் உளவோ?
பெருமான் உனக்கு!

தவம் செய்த தவம்!

மிதிலையிலே இராமனைச் சேவித்த மக்கள் குருடர்கள் அல்லர். காண்பதில் தேர்ச்சி பெற்ற வாள் போன்று ஒளி வீசும் கண்களையுடைய பெண்கள், இவர்களாலேயே இராமனின் ஒரு அங்கத்தைத் தவிர அவனுடைய திருமேனி யின் மற்றைப் பாகங்களில் கண் வைக்க முடியவில்லையாம்.

''வாள்கொண்ட கண்ணார் யாரோ வடிவினை முடியக்
கண்டார்''

முக்கோணத்தில் இராம பராக்கிரம சேவை.

மிதிலை மக்கள் இராமனின் வருகையை எதிர் நோக்கி இருக்கின்றார்கள். ஏன்? யானை—யாகிய இராமன் மிதிலை வருமுன்னே, அவன் கீர்த்தியாகிய மணி ஓசை மிதிலை மக்களின் காதுகளுக்கு எட்டிவிட்டது.

பல காலமாக அட்டகாசம் செய்து கொண்டு மக்களுக்கு இயமனாக உலவிக்கொண்டு வந்த தாடகையை சிறுபிள்ளையான இராமன் வதம் செய்த ஆச்சரியத்தைக் கேள்விப்பட்டார்கள் மக்கள். எனவே 'தாடகை வதம்' செய்த இராமனின் தோள்களைச் சேவித்தவர்கள். அந்தத் தோள்களையே கண்டு, அவனுடைய அந்தப் பராக் கிரமத்தைப் பாராட்டிக் கொண்டே இருந்தார்களாம்.

எனவே, இராமனின் தோள் கண்டார் தோளே கண்டார்.

அதைவிடப் பெரிய அதிசயத்தை நடத்திக்காட்டினான் இராமன். கௌதம முனிவரின் சாபத்தாலே கல்லாகச் சமைந்த அகலிகை பலருடைய பரிதாபத்திற்குள்ளானாள். கௌதம சாபத்திற்கு எதிர்கணை ஏவ எவரால் முடியும்?

இராமன் தன் திருவடிகளால் அகலிகைக்குச் சாப விமோசனம் அளித்ததால் அவனுடைய திருவடிகளைச் சேவித்தவர்கள், வேறு ஒரு அவயவத்தையும் பார்த்து ரசிக்க விரும்பாமல், அந்தத் திருவடிகளிலேயே லயித்து விட்டார்களாம். எனவே தொடு கழல் கமலம் அன்ன தாள் கண்டார், தாளே கண்டார்'.

சரி, இவைகளெல்லாம் எங்கேயோ, எப்போதோ நடந்தவைகள். சொல்லக் கேள்விதான். பார்த்ததில்லையே நேரில். ஆனால் மற்றொரு அதிசயத்தை மிதிலை மக்கள் நேரிலேயே தம்முடைய கண்களாலேயே கண்டார்கள்.

சிவதனுசை எவராவது ஒடிக்கிறதாவது, சீதைக்குக் கல்யாணம் ஆகிறதாவது? என்று வெறுப்படைந்து, உள்ளம் குன்றிக்கிடந்த நிலைமையிலே, இராமன் சிவதனுசை—பொன்மயமான மேருமலை போன்ற அந்தப் பிரம்மாண்டமான வில்லை—சீதையைத் திருமணம் செய்துகொள்வதற்காக, அவள் கழுத்தில் அணிவிக்கத் தக்க மாலையாகவே மதித்து எளிதாக எடுத்துவிட்டானாம்.

ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை எனும்பூந்
தோடலர் கொம்பினைச் சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை இ(து)என்ன எடுத்தான்

சரி, அடுத்தபடி, சுயம்வர சபையில் இருந்தவர்கள்.

எடுத்தது கண்டார்! இற்றது கேட்டார்;

தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாதாம்.

இப்படியாக, சிவதனுசை ஒடித்த இராமனின் திருக்கைகளைச் சேவித்தவர்கள் கூட, நேரில் பார்த்தவர்கள் கூட "இந்த மிக மகத்தான சாதனையைச் செய்த திருக்கைகள் இவைகளா!" என்று நம்பமுடியாமல் ஆச்சரியப்பட்டனர். மிதிலை மக்கள் அந்தத் திருக்கைகளின் அழகிலே, தீரத்திலே சொக்கிக் கிடந்தார்கள், நன்றியும் மகிழ்ச்சியும் கலந்து.

"தடக்கை கண்டாரும் அஃதே"

எனவே, இராமனின் தோள்கள், தாள்கள் தடக்கைகள் மூலம் மூன்று அரிய சம்பவங்களைக் காட்டி, ஜாலவித்தை செய்கிறார் கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாட்டாழ்வார்.

இராமனின் தோள், தாள், தடக்கைகளைச் சேவித்த மிதிலையின் வாள் கொண்ட கண்ணார்களை, இன்னும் ஒரு மெருகு போட்டுக் காண்பிக்கிறார் கம்பநாட்டாழ்வார் பார்த்தவர்கள் சாமானிய ஜனங்கள் அல்லவே. பல்லூழிக் காலமாக இறைவனுடைய வடிவழகையும், தத்துவத்தையும் அறிய முயன்று வரும் சாதுகோட்டியர்களைப் போல; மிதிலை மக்களும் அவனுடைய வடிவழகையும் குணவழகையும் காண முயன்றார்களாம்:

"ஊழ்கண்ட சமயத்(து) அன்னான் உறவு கண்டாரை
ஒத்தார்"

இதனால் எத்தனை அரிய பெரிய தத்துவங்கள் விளங்குகின்றன.

அவதாரந்தோறும் உடன் பிறக்கும் பிராட்டியின் நோக்கம்.

இறைவன் உலகில் அவதரிக்கும் போதெல்லாம் பிராட்டியும் உடன் அவதரிக்கின்றாள். காரணம், 'ஈசுவரன் தன் இச்சையாக மக்களின் குற்றங்களைக் கண்டு அவர்களைத் தண்டித்துவிடுவானே" எனப் பயந்து அதைத் தடுப்பதற்கே.

முமுட்சுப்படியின் துவய அதிகாரத்திலே, பிராட்டியின் இந்தத் தன்மையை வெளியிட்டருளுகிறார் பிள்ளை உலகாசாரியர்.

''ஈசுவர சுவாதந்தரியத்தையும், சேதனனுடைய (சீவாத்துமாக்களின்) அபராதத்தையும் கண்டு, அகல மாட்டாள்'' முமுட்சுப்படி (132)

இக்காரணத்தினால்தான், இறைவனோடு அவதாரம் தோறும் பிராட்டியும் அவதரிக்கிறாள்.

எனவே இராமனாக இறைவன் அவதரித்தபோது பெரிய பிராட்டியாரும் சீதா பிராட்டியாக அவதரித்தாள்.

இராமன் சிவதனுசை ஒடித்தது ஏன்?

இங்கே நாம் கவனிக்க வேண்டிய மிக நுணுக்கமான சிகரமான பாகம் வருகிறது. அர்ச்சுனன், திரௌபதியின் சுயம்வரத்தில் வில்லை நாணேற்றி மீனக்குறியை அடித்தான் இங்கே சீதையின் சுயம்வரத்தில் வெறும் வில்தான் உள்ளது. அம்பு இல்லையே, மேருவைப் போன்ற வில்லைக் கையாண்டு வளைத்தல்லவா பராக்கிரமத்தைக் காட்ட வேண்டும்? அதுவும் வானுலகில் ஏற்கனவே திருமால் சிவன் போரில் உடைந்துவிட்ட வில்லாமே. அப்படியானால் அதை ஏன் வளைக்க வேண்டும் மேற்கொண்டு?

ஸ்ரீராமனுக்குச் சீதையிட்ட நிபந்தனை :

பெரிய பிராட்டியார், சீதா பிராட்டியாராக மிதிலையிலே அவதரித்த பிறகு, இராமனுக்கு விசுவாமித்திர மாமுனி கற்றுத்தந்த கலைகளைப்பற்றி எல்லாம் அறிந்தாள்.

பிரபஞ்சத்தை ஆளும் (அரசனுக்கும்) இறைக்கும் உலகை ஆளும் இறைவனுக்கும் இரண்டு குணங்கள் பொதுவானவை. ஒன்று துஷ்ட நிக்ரகம், மற்றையது சிஷ்ட பரிபாலனம்.

இராமன் தாடகை வதம் மூலமாகத் துஷ்ட நிக்ரகம் பயின்றான். அகலிகை சாபவிமோசன மூலம் சிஷ்ட பரிபாலனம் பயின்றான்.

சீதா பிராட்டி இந்த இரு குணங்கள் மட்டும் அமைந்த மாப்பிள்ளை தனக்குத் தேவையில்லை என்றாள்.

"நான் உலகின் தாய். எனவே என் மக்களில் சிலரைத் துஷ்டர்கள் என்று வேறுபடுத்தி அவர்களை நிக்ரகம் செய்ய ஒப்ப மாட்டேன், சர்வ லோகமும் அறிய இராமன் (பெருமாள்) துஷ்டர்களையும் பரிபாலனம் செய்வதாக, (காப்பாற்றுவதாக) சபதம் பூண்டால்தான் அவரைத், திருமணம் செய்து கொள்வேன் என்றாள்.

சிஷ்ட பரிபாலனத்தின் சின்னமானது நாரணன் வலியில் ஆண்டவில். துஷ்ட நிக்ரகத்தின் சின்னமானது சம்மார மூர்த்தியான சிவனின் வில்.

துஷ்ட நிக்ரக் கொள்கை சிஷ்ட பரிபாலனக் கொள்கையை விடத் தாழ்ந்தது என்பதைக் காட்டவே முன்பு சிவதனுசு நாராயண தனுசுடன் தேவர்கள் அறிய மோரதி விரிசல் பட்டது.

அந்தத் துஷ்ட நிக்ரகச் சின்னமான சிவதனுசை சுயம்வர மண்டபத்திலே அடியோடு முறித்து, அதன் மூலம் "இனி துஷ்ட நிக்ரகம் செய்வதில்லை. துஷ்ட பரிபாலனம் தான் செய்வேன்" என்று பலர் அறியச் சபதம் பூண வேணும் என்றாள் சீதாபிராட்டி, இதையே பலகணி வழி யாகச் சீதை இராமனைப் பார்த்த போது நயன(கண் வழி) பாஷையில் தெரிவித்தாள். இதை இராமனும் புரிந்து கொண்டான். அப்படியே ஒப்புக் கொண்டு சிவதனுசை முறித்துப் போட்டான் இராமன்.

இவள் சந்நிதியின் ஏற்றம்

இதனால் ஒரு சமரசமும் ஏற்பட்டது. சீதாபிராட்டியுடன் எழுந்தருளியிருக்கையில் துஷ்ட நிக்ரகம் செய்வதில்லை. சிஷ்ட பரிபாலனம் தான். ஆனால் அவள் அருகில் இல்லாத சமயம் இராம அவதார நோக்கம் நிறைவேறவே துஷ்ட நிக்ரகம் நடைபெறலாம்.

இதை அடிப்படையாக வைத்தே பிள்ளை உலகாசாரியர் முமுட்சுப்படியில் பிராட்டியின் பெருமையாக ஓர் இரகசியத்தை வெளியிடுகிறார்.

''இவள் சந்நிதியாலே காகம் தலை பெற்றது.
அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்.
(முமுட்சுப்படி-135)

சேர்த்தியில் செய்யும் தொண்டு

சீதையைக் காயப்படுத்தி அபசாரப்பட்ட காகாசுரன். சீதையின் முன்னிலையில் அவளுடைய கருணைப் பரிந்துரையால் தலை தப்பினான்;

சீதையைத் தீண்டாத இராவணனோ, தலைகளை இழந்தான், பிராட்டி எதிரில் பரிந்துரைக்க இன்மையாலே!

எனவே நாம் பெருமாளை அடையும்போது, ''இளைய பெருமாளைப் போல (பெருமாளும் பிராட்டியுமான) இருவருமான சேர்த்தியிலே (தொண்டு) அடிமை செய்கை முறை'' என்றும் ''அடிமைதான் சித்திப்பதும், ரசிப்பதும், அச்சேர்த்தியிலே'' (பொறுப்பது இவளுக்காக) என்றும் உபதேசித்தருள்கிறார், பிள்ளை உலகாசாரியர் (முமுட்சுப் படி-168, 169)

இருவருமான சேர்த்தியிலே, அடிமை செய்தால், நம் குற்றங்களைப் பொறுத்தருளும்படி ஈசுவரனிடம் புருஷ

காரம் செய்ய முடியுமா பிராட்டியால் எனச் சந்தேகம் வேண்டாம்.

''நீரிலே நெருப்பு கிளருமா போலே (பெருமாளின்) குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக'' என இதை விளக்கு கிறார், பிள்ளை உலகாசாரியர் (முழுட்சுப்படி-127).

''முரட்டுச் சுபாவமுடைய அநுமனையே திருத்தி, அசோகவன அரக்கியரை அவனிடமிருந்து காப்பாற்றிய பிராட்டி, தன் சொற்படிக் கேட்கக் காத்திருக்கும் பெருமாளை நிச்சயமாக நம் குறைகளைப் பொறுத்து ரட்சிக்கும்படி செய்வாள்'' என்று உபதேசிக்கின்றார் பிள்ளை உலகாசாரியர்.

''திருவடியைப் (அநுமனைப்) பொறுப்பிக்குமவள் தன் சொல்வழி வருபவனை (பெருமாளைப்) பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறெ'' (முமுட்சுப்படி-129)

''பிராட்டி, ராட்சசிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் (அநுமானுக்கும்) அறிவியாதவள் போல'' (ஸ்ரீவசனபூஷணம் 366 :)

பிராட்டியின் மூன்று பிரிவுகள்

வடிவாய் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும், ''அகல கில்லேன் இறையும்' என்று அவன் மார்பில் உறையும் அலர்மேல் மங்கையுமான பிராட்டி, சீவாத்துமாக் களை இரட்சிக்கும் பொருட்டும்' தன் தன்மையை வெளிப் படுத்தும் பொருட்டும் மூன்று காரணங்களுக்காகப் பெரு மாளை விட்டுப் பிரிகிறாள். அவை.

1. தன் கருணையை [கிருபையை] வெளிப்படுத்த.
2. அவன் இட்ட வழக்காக இருக்கும் தன் தன்மையை [தன் பாரதந்திரியத்தை] வெளியிட.

3. அவனைத் தவிர வேறு கதியில்லை என்பதை [அநந்யார்தத்தை] வெளியிடுக்கைக்காக.

இம்மூன்று காரணங்களுக்காகவும் பெரிய பிராட்டியார் சீதா பிராட்டியாக அவதரித்தபோது பிரிந்ததைக் காண லாம்.

முதலாவதாக இராவணனால் தான் பிரிக்கப்படுவ தாகக் காட்டி, முதலில் பிரிந்தபோது, தேவமாதர்களை இராவணனது சிறையிலிருந்து மீட்டும், அசோகவன அரக்கியர்களை அநுமனிடமிருந்து காப்பாற்றியும் தனது கருணையை (கிருபையை) வெளியிட்டாள்.

இரண்டாவதாக மணிவயிறு வாய்த்திருந்தபோது பெரிய பெருமாளின் ஆணையால் வால்மீகி ஆசிரமத்தில் விடப்பட்டபோது பிரிந்தது. அவன் (இராமன்) இட்ட வழக்காகத் தான் இருப்பதை பாரதந்தர்யத்தை வெளிப் படித்தவே. இதனையே பிராட்டி சுய சக்தி (தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் திறமையை) விட்டாள் என்று காட்டுகிறார். (ஸ்ரீவசன பூஷணம் 83)

சீதா பிராட்டி வால்மீகி முனிவரின் ஆசிரமத்திலிருந்து அயோத்திக்கு மீண்ட பிறகு பூதேவியை நோக்கி "நான் தூய்மையானவள் என்பதைக் காட்ட உன்னுள் இடம் தருவாயாக!" என்று சூளுரையிட்டு பூதேவி அளித்த பீடத்தில் அமர்ந்து பூமிக்குள் மறைந்து பிரிந்தபோது 'இராமனைத் தவிர வேறு கதியில்லை' என்று வாழ்ந்து (அநந்யார்தத்துவத்தை) வெளிட்டாள்.

பிராட்டியின் இப்பெருமைகளைப் பிள்ளை உலகாசாரி யர் ஸ்ரீவசனபூடணத்தில் விளக்கியருள்கிறார்.

1. "பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய கிருபையை வெளியிடுகைக்காக.

2. நடுவிற் பிரிந்தது பாரதந்தர்யத்தை வெளி யிடுக்கைக்காக,

3, அநந்தரம் (கடைசியாக) பிரிந்தது அநந்யார்தத் துவத்தை வெளியிடுக்கைக்காக. (சூத்திரம்.9)

பரமாத்துமாவை அழகாலே திருத்தலும், ஜீவாத்து மாக்களை உபதேசத்தாலே திருத்தலும்

பிராட்டியின் ஏனைய முக்கியமான சில சிறந்த குணங் களைக் காண்போமாக.

பிராட்டி, இறைவனுடன் சேர்ந்திருப்பினும் பிரிந்திருப் பினும் சீவர்கட்கு இறைவனின் கருணையைப்பெற உதவுவாள்.

''சம்ச்லேஷ விச்லேச்ஷங்கள் இரண்டிலும் புருஷ காரத்வம் தோன்றும்,''

கூடியிருக்கும் நிலையில் ஈசுவரனைத் திருத்துவாள். பிரிந்திருக்கும் நிலையில் சீவர்களையும் திருத்துவாள். இருவரையும் தன் இனிய உபதேசத்தாலே திருத்துவாள்.

சம்ச்லேஷ தசையில் ஈஸ்வரனைத் திருத்தும்; விச்சேஷ தசையில் சேதனனைத் திருத்தும். இருவரையும் திருத்துவ தும் உபதேசத்தாலே. (உபதேசம் பலனளிக்காவிடில்) உபதேசத்தாலே மீளாதபோது, சேதனனை அருளாலே திருத்தும். ஈசுவரனை அழகாலே திருத்தும். (ஸ்ரீவசன பூஷணம். 10, 11, 12, 14,).

இராம நம்பியைக் காணச் சீதை நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும் என்று எடை போட்ட கம்பநாடர், சீதையான கொம்பினைக் காணும் தோறும் [ஒவ்வொரு முறை பார்க்கும் போதும்] இராம குரிசிற்கும் அன்னதே யாம் என்று சீதாபிராட்டியின் வடிவழகைச் சிறப்பித் துள்ளார்.

எனவே, பிராட்டி தன் கடைசி ஆயுதமாக தன் அழகாலே பெருமாளைத் திருத்துகிறாள் என்பதில் என்ன

ஐயம், பெரிய பிராட்டியாரின் பெருமையை, அதாவது வைபவத்தை சீதாபிராட்டியின் மூலமே சிறக்க அறிந்தோம்;

துவயமே ஸ்ரீ வைணவரின் கவசம்

பிராட்டியின் பெருமையை மிகச் சிறந்த முறையில் தருவது துவய மந்திரமேயாகும்.

'முமுட்சுப்படி' என்னும் அரிய நூலில், மோட்சத்தில் விருப்பமுடைய ஸ்ரீ வைணவர்கள் அறிய வேண்டியவை.

(1) திருமந்திரம்,(2) துவயம், (3)சரம சுலோகம் ஆகிய மூன்று என்றும், சாதாரணமாக எல்லா நூல்களும் தேகத்தாலே பேறு என்று போதிப்பதாயும்,

1. திருமந்திரம் ஆத்மாவாலே பேறு என்றும்,
2. சரம சுலோகம் ஈஸ்வரனாலே பேறு என்றும்,
3. துவயம் பெரிய பிராட்டியாலே பேறு என்றும் உபதேசிப்பதாயும் அருளுகின்றார்.

"எல்லா பிரமாணங்களிலும் தேகத்தாலே பேறு என்கிறது;

1. திருமந்திரத்தில் ஆத்மாவாலே பேறு என்கிறது.
2. சரம சுலோகத்தில் ஈஸ்வரனாலே பேறு என்கிறது;
3. த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறு என்கிறது.

(முமுட்சுப்படி-118)

1. ஆத்மாவோடுகூடிய தேகத்தை அடக்குவது கடினம் எனவே தேகத்தால் பேறு பெறுவது அரிது;
2. சர்வ சுதந்திரனான ஈசுவரனும் நம் வசப்படுவது அரிது. ஆகையால் ஈஸ்வரனால் பேறுபெறுவதும் கடினம்,

ஆனால் நம் தாயாராகிய பெரிய பிராட்டியோ நம்மைக் காப்பாற்றவே காத்துள்ளாள். எனவே துவய மந்திரமே நமக்குத் தஞ்சமாகும்.

பெரிய பிராட்டியாருடைய பரிந்துரையான புருஷ காரமே கேட்பாரற்ற சுதந்திரனான பெருமானின் கருணைக்கு அடிகோலியாகும். வேறு கதியில்லை.

பிராட்டியாராலேதான் பேறு

"பெரிய பிராட்டியாராலே பேறாகையாவது இவள் (பரிந்துரைத்தால் அல்லது) புருஷகாரமானாலல்லது ஈசுவரன் காரியஞ் செய்யான் என்கை."

(முமுட்சுப்படி.119)

1. ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் பிரபத்யே.

2. ஸ்ரீமதே நாராயண ஆய நம:
என்பதே துவய மந்திரமாகும். இது மந்திரரத்னம் என்றும் போற்றப்படும்.

துவயத்தின் முதல் வாக்கியம், பெரிய பிராட்டியாரைத் துணைக் கொண்டே பெருமாளுடைய இரண்டு திருவடி களையும் உபாயமாகப் பற்ற வேண்டுமென்று போதிக் கிறது.

இரண்டாம் வாக்கியம், பெரிய பிராட்டியாரும் பெருமாளுமாகிற இருவருடைய சேர்த்தியில் எப்போதும் அடிமையும், குற்றேவலும் புரிய வேண்டுமென உபதேசிக் கின்றது.

"இதில் முற்கூற்றால், பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈசுவரன் திருவடிகளை உபாயமாகப்பற்றுகிறது. பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையை இரக்கிறது.

(முமுட்சுப்படி.122)

எனவே பெரிய பிராட்டியாரின் பரிந்துரையே நமக்கு வழிகாட்டி; வாழ்விற்கு விமோசனம்.

நமது பிரபன்ன ஜனகூடஸ்தராகிய நம்மாழ்வார் அலர்மேல் மங்கையை முன்னிட்டு, அமரர் விரும்பும் திருவேங்கடத்தானைச் சரணடைவதைப் பின்பற்றி நாமும் சரணடைந்து உய்வோமாக!

''அகலகில்லேன் இறையும்'' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே!
புகல் ஒன்று இல்லா அடியேன், உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!

ஸ்ரீ ஆண்டாள் அருளும் ஸ்ரீ வைணவத் தத்துவங்கள்

மென்னடை அன்னம் பரந்து விளையாடும் வில்லி புத்தூர் உறைவான் தன் பொன் அடிகளைப் போற்று கின்றேன்!

கோலச்கரி சங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும் சீலத்தனள்! தென் திருமல்லி நாடி! செழுங்குழல் மேல் மாலைத் தொடைத் தென் அரங்கருக்கு ஈயும் மதிப்புடைய சோலைக்கிளி! அவள் தூய நற்பாதம் தொழுகின்றேன்!

1. மின் அனைய நுண் இடையார்! ஸ்ரீ ஆண்டாள்—
(நுண் இடையார் — தன்மை — பன்மை மரியாதை— விகுதி)

2. விரி குழல் மேல்!

(சங்கத் தமிழ்மாலை முப்பதாகிய திருப்பாவை மீதும் ஒரு நூற்று நாற்பத்து மூன்றாகிய நாச்சியார் திருமொழி யின் மீதும்!

3. நுழைந்த

(மிக்க பத்தி கொண்டு குள்ளக் குளிரக் குடைந்து, குதூகலிக்கும்.)

4· வண்டு!

ஞான கர்மங்களாகிற வீசும் சிறகால் பதிந்து எம் ஈசன் விண்ணார் பிரானார் மாசு இல் மலர் அடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே, பக்தப் பெருமக்களே! நீங்கள்

5, இன்னிசைக்கும்! குழலின் மலியச் சொல்ல,

6. வில்லிபுத்தூர்!

இதுவோ! கோதை பிறந்த ஊர்!
இதுவோ! கோவிந்தன் வாழும் ஊர்!
இதுவோ! சோதி மணிமாடம் தோன்றும் ஊர்!
இதுவோ! நீதியால் நல்ல பக்தர் வாழும் ஊர்!
இதுவோ! நான்மறைகள் ஓதும் ஊர்!
இதுவோ! வேதக் கோன் ஊர்!

என வியந்து எழுந்தருளியுள்ள இந்த ஸ்ரீவில்லிபுத்தூராகிய திவ்ய தேசந்திலே.

7. இனிது அமர்ந்தீர்!

கருத்தரங்காக இனிது அமர்ந்து உள்ள இவ்வின்ப மிகு பெருங்குழுவைக் கண்ணாரக் கண்டு உருகின் கையாரத் தொழுவேன் இக்கடையனேனே!

ஸ்ரீ ஆண்டாள் அருளும் ஸ்ரீ வைணவத் தத்துவங்கள் என்ற மகுடம் ஏற்று, இக்கருத்திதழை, நீசனேன் நிறைவு ஒன்றுமிலேனாகிய அடியேன் சமர்ப்பின்றேன்!

ஸ்ரீ வைணவத் தத்துவங்கள் அநாதியானவை.

இறைவன் திருவருளாலே எழுந்த வேதங்கள். நாக் கொண்ட மானிடங்களால் இயற்றப்படாதவை,

வேத உட்கருத்துக்களை விளக்கி உறுதிப்படுத்துபவை களே; சுருதிகள், இதிகாசங்கள், புராணங்கள்.

''வேதாந்தம் அறுதியிடுவது ஸ்மிருதி, இதிகாச புராணங்களாலே! அங்ஙனமே தான் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களை சிரமேற் கொள்ள வேண்டும். வேதத் தின் எதிரொலிகளே நமது திராவிட வேதமான திவ்யப் பிரபந்தங்கள்!

''நற்றமிழால், நூல் செய்து நாட்டை உய்த்த'' ஏனைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களைவிட; அன்ன வயல் புதுவை ஆண்டாளின் அருளிச் செயல்களுக்குத் தனி ஏற்றம் உண்டு; ''மற்றுள்ள ஆழ்வார்கள்'' விஷ்ணுவைச் சித்தத்திலே கொண்டிருக்கின்றனர். விஷ்ணுவோ ஆண்டாளைத் தன் சித்தத்திலே கொண்டிருக்கின்றான்!

''அல்லி நாள் தாமரை மேல் ஆரணங்கின் இன்துணைவி
மல்லி நாடு ஆண்ட மடமயில்! மெல்லியலாள்!
ஆயர்குலவேந்தன் ஆகத்தாள்!''

எனவே, இவ்வேயர் பயந்த விளக்கின் ஒளி, தனி, ஒளிதான்.

குன்றாத வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை இகழ்ந்து; (பெரிய) ஆழ்வார் திருமகளாராய், எ(ந) மக்காக அன்றோ இங்கு, ஆண்டாள் அவதரித்தாள். தன் அழகாலே அச்சுதனைத் திருத்தவும், தன் அருளாலே நம்மைத் திருத்தவும் அன்றோ! இயலாது போயின. இருவரையும் திருத்துவது உபதேசத்தாலே;

தேன் துளிக்கும் திருப்பாவையிலே ''வையத்து வாழ் வீர்களே! கேளீரோ!'' என்று உபதேசித்து நம்மைத் திருத்தினாள்! ''உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள்'' என்று கோவிந்தனையும் உபதேசத்தால் திருத்தினாள்!

ஓங்கி உலகளந்த உத்தமனுக்குப் புரிந்த உபதேசத்தை விட, நமக்கும் அருளும் உபதேசமே உயர்ந்தது! அவளுடைய உபதேசம் நமக்கும் தாய்ப்பால்; தன்னிகரற்றது! அருளாலே காப்பது! தானே தருவது! இன்சுவை பயப்பது இன்பம் தருவது! எளிமையானது! ஏற்றம் உடையது!

பாதகங்கள் தீர்த்துப் பரமன் அடிகாட்டும் வேதம் அனைத்தையும் வித்தாக்கிய கோதை தமிழ்; எதையோ சொல்லி எப்படியோ மயக்கி, நமக்கு எல்லா ஞானத்தையும் அருள்வது.

சிசுவைச் சுவையாலே ஈர்த்து, சுரப்பாலே நிரப்புவது போலக் காணப்படும் தாய்ப்பால்; உண்மையில் ஊட்டச் சத்தை உட்செலுத்தி சிசுவின் உடல் நலத்தை வளர்க்கின்றது;

அதுபோல, நமது திருத்தாயாரான ஆண்டாள், நாமசங்கீர்த்தனத்தால் நம்மை ஈர்த்து, பாவைக் கிரிசைகளால் நம்மனங்களை நிரப்பி ஸ்ரீ வைணவத் தத்துவங்களாகிய ஊட்டச் சத்தை உபகரித்து, நம் ஆன்ம நலத்தை வளர்க்கும் அழகைக் காண திருப்பாவையிலே;

அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்! ஆழ்வார்கள் தம் செயலை]
விஞ்சி நிற்கும் தன்மையளாய்! பிஞ்சாய்ப் பழுத்த ஆண்டாள்;

தனது மேதையினாலே, விண்ணோர் பெருமானின் திருவருளை அடைதற்கும் ஸ்ரீ வைணவ தரிசனத்தின் கொள்கைகளை உணர்ந்து உயர்வதற்கும் சுலபமான வழி திருநாமசங்கீர்த்தனமே என திருவுள்ளம் பற்றுவதைத் திருப்பாவையிலே சேவிக்கலாம்.

இறைவனது திருநாமங்களின் மேன்மை என்ன, அத்திருப்பெயர்கள் அவனுடைய கல்யாண குணங்களை வெளியிடுகின்றன, விளக்குகின்றன,

பெயரை உடைய இறைவனைக் காட்டிலும், அவனுடைய பெயரே சிறப்புடையது!

(வாச்சியம்—பெயரை உடையவன்; வாசகம்—அவனது திருநாமம்)

வாச்சிகப் பிரபாவம் போலன்று வாசகப் பிரபாவம்!
(ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் அருளிய முமுட்சுப்படி—14)

இப்படி ஏன்? அவனது திருநாமம் சிறப்புற்றது அவன் தூரஸ்தனானாலும் இது (திருநாமம்) கிட்டி நின்று உதவும் இப்படியும் நடந்தது உண்டா?

திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே!
(முமுட்சுப்படி 15–15)

''சங்கு சக்ர கதாபாணே! துவாரகா நிலய அச்சுதா!
கோவிந்தா! புண்டரீகாட்சா ரட்சமாம் சரணாகதம்!

என்று திரௌபதி அத்தினாபுரந்திலே, கௌரவர் சபையின் நடுவிலே, ஆடை குறைவுற்று நின்ற போதும், 'ஆ' என்று அழுது துடித்த போதும், கண்ணன் தூரமான துவாரகையில் இருப்பினும், அவளைக் கிட்டி நின்று, புடவை சுரந்து உதவியது. அவனுடைய திருநாமமே!

''நாம சங்கீர்த்தனத் திருப்பாவை''

அணி புதுவைப் பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதையான ஸ்ரீ ஆண்டாளும், தான் சொன்ன சங்கத் தமிழ் மாலையாம் திருப்பாவையின் மூன்றாவது பாசுரத்திலே, ஒங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி'' பாவை நோன்பிற்கு சாற்றி நீராடுகின்றாள்.

இவ்விதமாகவே,

''பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்!

''ஊழி முதல்வன்''

"மாயன், மன்னு வட மதுரை மைந்தன்?

'தூய பெருநீர் யமுனைத் துறைவன்'

'ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு'

'தாயைக் குடல் விளக்கும் செய்த தாமோதரன்'

'வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்து!'

"தேவாதி தேவன்!"

'யாமாயன்''மாதவன்!''வைகுந்தன்''முகில் வண்ணன்'

சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்!';

புள்ளின் வாய் கீண்டான்!

பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தான்!

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்!

வல்லான்! மாற்றாரை மாற்றழிக்க வல்லான்!

என்று இறைவனின் ஒவ்வொரு கல்யாண குணங்களையும் வெளியிடும் திருநாமத்தை ஒரு முறைதான் ஓதி உவந்தருளிய ஸ்ரீ ஆண்டாள்! நாராயண நாமத்தை ஓதமுறைப் பட்டு, அத்திவ்ய, திருநாமத்தை மும்முறை ஓதுகின்றாள், ஏன்?

திருநாமங்களில் சிறப்புத் திருநாமங்கள்

பகவானுக்குப் பல திருநாமங்கள் உள்ளன. இவைகள் அவன் குணங்களையும், அக்குணங்களை வெளிப்படுத்தும் அவதாரங்களையும் விளக்குகின்றன.

"பகவத் மந்திரங்கள் அனேகங்கள்" (முமுட்சுப்படி-)

மந்திரங்கள் என்றால் திருநாமங்கள். எல்லாப் பொருள் களிலும் நிறைந்துள்ள பகவானை விளக்கமாகத்

தெரிவிப்பவை வியாபக மந்திரங்கள் எனப்படும். மற்றையவைகள். அவ்வியாபக மந்திரங்கள்.

''அவைதான் வியாபகங்கள் என்றும்,
அவ்வியாபகங்கள் என்றும் இரண்டு வர்க்கம்!''
(முமுட்சுப்படி-9)

வியாபக மந்திரங்கள் மூன்று. இவை மூன்றும், அவ்வியாபக மந்திரங்களைக் காட்டிலும் உயர்ந்தவை:

'அவ்வியாபகங்களில் வியாபகங்கள் மூன்றும் சிரேஷ்டங்கள்'
(முமுட்சுப்படி-10)

இந்த வியாபக மந்திரங்களே

(1) நாராயணன், (2) வாசுதேவன், (3) விஷ்ணு என்பனவாம்.

நாராயண, வாசுதேவ, விஷ்ணு என்ற வியாபகத் திருநாமங்கள் மூன்றிலும் உயர்ந்தது ! நாராயண பதம். இதுவே பெரிய திருமந்திரம் என போற்றப்படுகிறது.

முப்பெரும் உண்மை விளக்கம்

ஸ்ரீ வைணவ சமயத்தின்படி தத்துவங்கள் மூன்று, தத்துவங்கள், சத்தியமானவை, நித்தியமானவை! நிகரற்றவை, இன்றியமையாதவை. ஆனால், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒன்றுக்கொன்று அணியாக விளங்கும். இம்மூன்று தத்துவங்களும் தனித்தன்மை உடையனவாக இருப்பினும், சரீர, சரீரி—அதாவது உடம்பும் உயிரும் போலத் தழுவித் திகழும் அற்புதம் உடையன.

இம்முப்பிரிவின் கூட்டமைப்பை, தத்துவத்திரயம் எனப்படும். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும்; அசித் (உயிர் அற்றவை) சித் (உயிர் உள்ளவை) ஈஸ்வரன்

(ரட்சிக்கும்-இறைவன்) என்ற மூன்று பிரிவுகளாக இணைந்து இயங்குகின்றன என்பதே தத்துவத் திரயத்தின் சாரமாகும். ஸ்ரீ ஆண்டாள் இத்தத்துவந்திரய ஞானத்தை முப்பெரும் உண்மை விளக்கத்தை—வேதம் அனைத்திற்கும் வித்தான திருப்பாவையிலே, பெரிய திருமந்திரமான—நாராண நாமத்தை மும்முறை ஓதும் முகத்தால் ஆச்சரியமாக விளக்கியருள்கிறாள்.

அ) உயிரற்ற அசித் தத்துவம்

நாராயணனே நமக்கே பறை தருவான்! என்ற சொற்றொடர் அமைந்த "மார்கழித் திங்கள்! என்னும் முகற்பாசுரத்திலே, ஸ்ரீ ஆண்டாள் அசித் தத்துவத்தை வெளியிட்டருள்கிறாள்.

மண் (1) நீர் (2) எரி (3) கால் (காற்று) (4) மஞ்சு (மேகம்) உலாவும் ஆகாசம் (5) எனப்படுபவை பஞ்ச பூதங்கள். இவையும் இவைகளின் சக்தியாலும், சேர்க்கையாலும் ஏற்படுபவைகளும் அசித், எனப்படும் உயிர் அற்றவை.

இந்த பஞ்ச பூத; அசித், சேர்க்கையுடன், உயிர்த் தத்துவமும் கூடிவிட்டால், ஜீவாத்துமாவோடு கூடிய உடம்பும் ஏற்படுகிறது. அசித்துடன் கூடிய சித், ஈஸ்வரனை சரணாகதி மூலம் அடைய வேண்டும். இதுவே வாழ்க்கையின் நியதி.

"மண்ணாய், நீர், எரி, கால் மஞ்சுலாவும் ஆகாசமுமாய்,
புண்ணார் ஆக்கை தன்னுள் புலம்பித்தளர்ந்து எய்த்து ஒழிந்தேன்)
விண்ணார் நீள் சிகர விரையார் திருவேங்கடவா!
அண்ணா வந்தடைந்தேன்! அடியேனை ஆட்கொண்டருளே!
(திருமங்கை மன்னன் பெரிய திருமொழி 1—)—6

மதி எனப்படும் சந்திரனும், சூரியனும் கோள்கள்; கோள்களால் ஏற்படுபவை நாள்கள். நாள்களால் ஏற்படுவது திங்கள் என்னும் கால அளவு.

சூரியனும் அதன் வசப்பட்டுத் தொழில் புரியும் சந்திரனும் பஞ்ச பூதங்களில் ஒன்றான தீயை(நெருப்பைக்) குறிக்கின்றன. திங்கள் என்னும் கால அளவு. மதியாலும் கதிரவனாலும் கணக்கிடப்படுவதே.

தீயை அடுத்து நீர் குறிப்பிடப்படுகிறது: நீர் மேகமாகி காற்று நிலவும் ஆகாசத்தில் (மழையாகத்) தோன்றி. மண்ணை (நிலத்தை) வந்து அடைகிறது. எனவே; பஞ்ச பூதங்களில் ஒன்றான, சூரியனான தீயின் சாயலாக உள்ள மதியைக் (சந்திரனைக்) குறிப்பிட்டு, அதன் பிறகு பஞ்ச பூதங்களில் மற்றொன்றான நீரைக் (2) குறிப்பிட்டதால் பஞ்சபூதங்களில் மற்றவைகளான, ஆகாசம் (3) காற்று (4) மண் (5) இவைகளையும் குறிப்பிட்டதாகிறது!

நீர்,காற்று உலாவும் ஆகாசத்தில் வேகமாகத் தோன்றி மண்ணை அடைந்தால், ஏற்படும் மங்களத்தைச் சீர்மல்கும் ஆய்ப்பாடி! என்பதாலே, ஸ்ரீ ஆண்டாள் சுட்டிக் காட்டு கிறாள்!

'சீர்மல்கும் ஆய்ப்பாடி!' என்ற சொற்றொடரின் மூலம் அசித் தத்துவத்தைக் குறிப்பிடும் நாராயண பாசுரத்தைச் சேவிப்போம்.

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ! நேர் இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்!
ஏரார்ந்த கண்ணி, யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்!
நாராயணனே நமக்கே பறை தருவான்!
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்!

(ஆ) உயிருள்ள சித் தத்துவம்

இரண்டாவதாக, நாராயணன் மூர்த்தி! என்ற சொற்றொடர் அமைந்த "கீசு! கீசு" பாசுரத்தில், சித் அல்லது சீவாத்தும தத்துவத்தை விளக்கியருள்கிறாள் நம் ஆண்டாள். இப்பாசுரமே சீவாத்துமாவான 'நாயகப் பெண் பிள்ளையை' நோக்கி அருளப்படுகின்றது.

சீவாத்துமாவின் சிறந்த குணங்கள் என்ன? அவை சீவாத்துமாவினாலேயே அநுபவிக்க இயல்வதான,, ஞானமும் ஞானத்தால் ஏற்படும் ஆனந்தமுமாகும். எனினும் ஞானமும், ஆனந்தமும் சீவாத்துமாவின் வெளியழகுகளே!

அவ்விதமாயின், சீவாத்துமா தத்துவத்தின் உள் அழகு அல்லது அக—அழகு என்ன? சீவாத்துமாவிற்கு அக—அழகாக அமைந்துள்ள மிகச் சிறந்த குணம் இறைவனுக்கு ஆட்பட்டிருத்தலே! அடிமைத் தொழில் "தாஸ்யம்" எனவும் "சேஷத்துவம்" எனவும் பேசப்படும்.

மிகு ஞானம் அடைந்த சீவாத்துமா மற்றவர்களை விட உயர்ந்த நிலைமையை அடைகிறது. மற்றவர்களுக்கு வழி காட்டியாகி, அவர்களை நடத்திச் செல்லும், நாயகத் தன்மையை அடைகிறது. எனவே, இப்பாசுரத்தில் "நாயக" என்னும் சொல் சீவாத்துமாவின் முதல் புற—அழகுக் குணமான ஞானத்தைக் குறிக்கின்றது.

இரண்டாவதான சீவாத்துமாவின் சிறந்த புற—அழகுக் குணம் ஆனந்தம். ஆனந்தத்தின் அடிப்படையிலே பரமாத்துமாவிற்கும் சீவாத்துமாவிற்கும் ஏற்படுவது நாயக—நாயகி பாவ இன்பம். அதாவது இறைவன் நாயகன் (தலைவன்) சீவாத்துமா நாயகி (தலைவி) இந்த நாயக—நாயகி உறவாலே ஏற்படும் இன்பத்தைக் குறிப்பதே "பெண்" என்னும் சொல்.

வெளித்தோற்றக் குணங்களான, ஞானம், ஆனந்தத்திலும் சீவாத்துமா இறைவனை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய தலையாய குணம், அவனுக்கு அடிமைப்பட்டிருத்தலே! இறைவனிட்ட வழக்காகவும், அவனைத் தவிர வேறு கதியில்லை என்றும் உணர்ந்து ஒழுகும் அடிமைக் குணத்தைக் குறிப்பது, 'பிள்ளாய்' என்னும் சொல்.

''நாயகப் பெண் பிள்ளாய்!'' என்னும் விளியாலே, சீவாத்துமாவின் (சித்தின்) புற-அகக் குணங்களை வெளியிடும், இரண்டாவதான, ''நாராயணன் — மூர்த்தி'' பாசுரத்தைச் சேவிப்போம்.

''கீசு! கீசு! என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம், கேட்டிலையோ! பேய்ப் பெண்ணே!
காசும், பிறப்பும், கலகலப்பக் கைபேர்த்து,
வாச நறுங்குழல் ஆய்ச்சியர், மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ!
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி!
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ!
தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய்!

(இ) நான்கு நற்குணங்களை நன்கு உடையவனே ஈஸ்வரன்

நோற்றுச் சுவர்க்கம் புகுவது; ஈஸ்வரனை அடைவதற்கே. எனவே, நோற்றுச் சுவர்க்கம் புகும் என்று தொடங்கும் பாசுரத்தில், ஈஸ்வர லட்சணத்தை வெளியிடுகிறது பரமன் அடிகாட்டும் திருப்பாவை.

ஈஸ்வரன் எல்லையற்றவன். கட்டுக்கு அடங்காதவன். சீவாத்மாக்களின் எல்லையற்ற குற்றங்களைக் கண்டு வெகுண்டு, அவர்களைத் தண்டிக்கமுற்படுகையில், பிராட்டி சேதனர்களான சீவாத்துமாக்கள்பால் இரக்கம் கொண்டு,

பரிந்து உரைக்கின்றான். இதனால் ஈஸ்வரனுடைய கட்டுக் கடங்காத, காவலற்ற தன்மையும் குலைவதால்; அவனிடம் நான்கு சிறந்த குணங்கள் வெளிப்படுகின்றன.

இந்நான்கு உயரிய குணங்களையே நம் ஆண்டாள் நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற பாசுரத்திலே ''நாற்றத் துழாய் முடி நாராயணன்'' என்பதால் மங்களாசாசனம் செய்தருள்கிறாள்!

(1) நாராயணன்!

இறைவனின் வாத்சல்ய குணத்தைக் காட்டுவது இப்பதம். (வாத்சல்யம்: பரிவு, அன்பு) அதாவது இறைவன் மிக்க அன்புடன் எல்லா நாரங்களிலும் (அசித்,சித் பொருள் களிடம்) எழுந்தருளி (நிறைந்து) அவைகளை இயக்கு கின்றான். இந்த நாரங்கள், ஊழிக் காலத்தில், தன்னை வந்து. தன்னுள் அடைக்கலம் புகும் படியாகவும் எழுந் தருளி உள்ளான்.

(2) முடி நாராயணன்

'முடிநாராயணன்'என்னும் பதத்தால்,இறைவனுடைய 'ஸ்வாமித்துவம்' வெளிப்படுகின்றது. இப்பதத்தால் 'எல்லாப் பொருள்களையும் உடையவன் நானே!' என்ப தைத் திருமுடிதரித்து விளக்குகின்றான். ''சுவாமித்துவம்'' என்பது எல்லாவற்றையும் உடைமையாக உடைய தன்மை. அசித்-சித் எல்லாம் தன் உடைமைகளே என்றும் அவை களை ஆட்கொள்ளுபவனும் அவனே தான் எனக் காட்டுவது.

(3) துழாய் முடி நாராயணன்

உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு சாமானியனாகக் (சம இனத்தவனாக) கலக்கும், சௌசீல்ய குணத்தைத் (உயர்வு தாழ்வு அற்ற தன்மையை) துழாய்! என்ற பதம் காட்டு

கின்றது. திருத்துழாயை எடுத்து, பக்தன் உரிமையுடன் பகவானின் அடிமுதல் முடிவரையில் அணியும்படியாகத் தன்னைத் தந்தருளும் சமத்துவ எளிமையே, சௌசீல்யம்.

(4) நாற்றத் துழாய் முடி நாராயணன்

நாற்றம் என்றால் வாசனை, மணம். திருத்துழாய் மணம் கமழும் தன்மையாலே (குணத்தாலே) நம்மை வசீகரிக்கின்றது. அது போலவே, இறைவனும் தன் சௌலப்பிய (எளிமைக்) குணநலங்களால் தன்பால் அடியவரை ஈர்க்கின்றான். இப்படியாகப் பக்தர்களை எளிமையால் வசீகரிக்கும் குணத்தை உடையவன் ஈஸ்வரன்;

ஸ்ரீவில்லிபுத்தூர் நந்தவனக் கைங்கரியச் செல்வரான பெரியாழ்வாரின் பெண் பிள்ளையான ஸ்ரீ ஆண்டாளின் திருவுள்ளத்தைத் திருவரங்கம் நந்தவனக் கைங்கரியச் செல்வரான தொண்டரடிப் பொடியாழ்வார் தமது திருமாலைப் பிரபந்தத்தில் 39-வது பாசுரத்தில் விளக்கி அருள்கின்றார்;

''அடிமையில் குடிமையில்லா அயல் சதுப்பேதி மாரில்
குடிமையில் கடமைப் பட்ட குக்கரில் பிறப்பரேலும்
முடியினில் துளபம் வைத்தாய்! மொய்கழற்கு அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும்! அரங்கமா நகருளானே!

அதாவது, மிகக் கடமைப்பட்ட பிறப்புடையவர்களானாலும், திருமாலின் மெய்கழற்கு அன்பு செய்யும் அடியவர்களானால் அவர்களையும் உகந்து ஆட்கொள்ளச் சித்தமாக இருப்பதைத் தெரிவிக்கவே முடியில் திருத்துழாய் அணிந்து நாற்றத் துழாய் முடிநாராயணனாகக் காட்சி அளிக்கின்றானாம்.

நாராயண மந்திரத்தை மூன்றாம் முறையாக ஒலிக்கும் பாசுரம்!

**"நாற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்!
நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால் போற்றப்
பறைதரும் புண்ணியனால், பண்டொரு நாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ!
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்!"**

ஸ்ரீ ஆண்டாள் இவ்விதமாகப் பரமன் அடிகாட்டும் திருப்பாவையிலே எம்பெருமானின் நாம சங்கீர்த்தனத்தில் திளைத்து, பெரிய திருமந்திரமான நாராயண பதத்தாலே, ஸ்ரீ வைணவ சமயத்தின் முக்கிய, முதன்மையான, மூலாதாரமான தத்துவத் திரய ஞானத்தை முப்பொருள் உண்மையை வெளியிட்டருள்கிறாள்.

கோவிந்தன் குணம் பாடும் கோதை

ஸ்ரீ ஆண்டாள் பாவை நோன்பு நோற்கும் முகத்தால் திருப்பாவையை அருளியது ஸ்ரீ வில்லிபுத்தூர் திவ்யதேசத்திலே; கற்பனையின் சிகரத்தை அடைந்து, ஸ்ரீ வில்லிப்புத்தூரையே திரு ஆய்பாடியாகவும்; வடபத்திரசயனரின் சந்நிதியையே நந்தகோபாலன் திருமாளிகையாகவும்; அப்பெருமாளையே கண்ணனாகவும், தன் தோழியரையே சீர்மல்கும் ஆய்பாடிச் செல்வச் சிறுமியர்களாகவும்; தன்னையே "இடை நடையும், இடை முடியும், இடைப் பேச்சும், முடை நாற்றமும்" திகழும் நப்பின்னைப் பிராட்டியாகவும் பாவித்துக் கொண்டதனால், எம்பெருமானை நாராயணன்" என்று போற்றியது தவறு என உணர்ந்தாள்.

சுவாமித்துவமும், சுவாதந்தரியமும் தோற்ற (பரம பதத்தில்) எழுந்தருளியுள்ள நாராயணன்'' என்னும் திருநாமம் பெரிய திருமந்திரமாக இப்பூமண்டலமான இருட்டறையில் சுடர்விட்டுத்திகழ்வது எளிமைக் குணத்தை வெளியிடும் கோவிந்த திருநாமமே எனத் தேர்ந்து கோவிந்த திருநாமத்தையும் மும்முறை — நாராயண பதத்தை விட்டு விட்டு மும்முறை சேவித்தது போலல்லாமல் தொடர்ச்சி யாகவே சேவிதிதருள்கிறாள்.

மதத்தின் மூன்று அம்சங்கள் தத்துவம்—இதம்— புருஷார்த்தம்.

பரிபூரணமாகத் திகழும் மதம், மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்; அவை

1. அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய மேலாம் பொருள் அல்லது தத்துவம்; 2. அந்தத் தத்துவத்தை அடையும் வழி அல்லது இதம் 3. இத்தத்துவத்தை உணர்ந்து கொண்டு அதை அடையும் வழியினையும் கைப் பிடித்தால் நாம் அடையும் பேறு அல்லது புருஷார்த்தம்;

கோவிந்த நாமத்தை ஓதும் திருப்பாவையின் மூன்று தொடர்ந்த பாசுரங்களிலே ஸ்ரீ வைணவ சமயத்தின் தத்துவத்தையும் இதத்தையும் புருஷார்த்தத்தையும் வெளி யிட்டருள்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

1. கோவிந்தனே தத்துவம்

எது எல்லாவற்றிற்கும் ஆதாரமோ, எது எல்லாற்றை யும் விட உயர்ந்ததோ, எது ஈடு இணையற்றதோ அதுவே தத்துவம்.

தத்துவம் என்றால் பரம்பொருள், பரமாதிமா, இறைவன் தெய்வம் எனப் பொருள். தத்துவம் இல்லாத ஒரு மதம் இருப்பின் அது தலையில்லாத உடல்தான்;

தத்துவம் என்ற சொல்லைத் தெய்வம் என்ற பொருளில் ஸ்ரீ ஆண்டாளே 'நாச்சியார் திருமொழியில் இரண்டு இடங்களில் சாதித்துள்ளாள்.

அனங்க தேவனாகிய காமதேவனையும் அவன் தம்பியையும் தொழுதலும். அவர்கள் தத்துவமிலிகளே!

"எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் இருடிகேசனாகிய
தத்துவனை வரக் கூகிற்றியாகில்
தலையல்லால் கைம்மாறு இலனே! என்று
கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை

கொள்ளும் இளம் குயிலைக் கெஞ்சுகின்றாள்

ஸ்ரீ வைணவ சமயத்தின் தத்துவம் கோவிந்தனே! அவனே பரதத்துவம். அவன் சீர்க் கோவிந்தன்! எல்லா கல்யாண குணங்களும் நிரம்பப் பெற்றவன். கூடாதவர்களையும் அவன் கருணையினாலே தன் வசப்படுத்தி விடுவான். எனவே, இந்தக் கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தனே பரதத்துவம் என்று கொப்பி அடித்துப் பாடுகிறாள். பாண்டியன் கொண்டாட பரதத்துவ நிர்ணயம் செய்தருளி, பெரியாழ்வாரின் பெண் 'கொடி' கோவிந்தன் கொப்பியை கேட்கலாமே.

கூடாரை வெல்லும் சீர்க்	கோவிந்தா!
உன் தன்னைப் பாடிப்பறை கொண்டு	கோவிந்தா!
யாம் பெறும் சன்மானம்	கோவிந்தா!
நாடு புகழும்	கோவிந்தா!
பரிசினால் நன்றாக	கோவிந்தா!
சூடகமே! தோள்வளையே	கோவிந்தா!
தோடே! செவிப்பூவே	கோவிந்தா!
பாடகமே என்றனைய	கோவிந்தா!
பல்கலனும் யாம் அணிவோம்	கோவிந்தா!
ஆடை உடுப்போம்	கோவிந்தா!

அதன் பின்னே பால்சோறு மூட கோவிந்தா!
நெய் பெய்து கோவிந்தா!
முழங்கை வழிவாரக் கோவிந்தா!
கூடி இருந்து கோவிந்தா!
குளிர்ந்தேலோர் எம்பாவாய் கோவிந்தா!

2. கோவிந்தனின் நாம சங்கீர்த்தனமே (சிறுபேர் அழைத்தலே) இதம்

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தனாகிய தத்துவத்தை சுலபமாக அடையும் வழி அல்லது இதம் அவனுடைய சிறுபேர் அழைத்தலே என்று அடுத்த 'கறவைகள் பின் சென்று' பாசுரத்திலே உபதேசித்தருளு கின்றாள். எனவே, திருப்பாவையை நாம சங்கீர்த்தன மாலையாகவே புனைந்தருள்கிறாள். சூடிக் கொடுத்த சுடர்க்கொடி 'நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணனை யும் சுலபனாக்கி, எளிதில் கைப்பிடிக்கக் கூடிய இதமாக்கி—வழியாக்கிக் 'கோவிந்த பட்டாபிஷேகம்' செய்தருளும் அடுத்த பாசுரத்தைச் சேவிப்போம்.

''கறவைகள் பின் சென்று கானஞ் சேர்ந்து உண்போம்!
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன் தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்!
குறைவு ஒன்றுமில்லாத கோவிந்தா! உன்றன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீ தாராய் பறை ஏலோர் எம்பாவாய்!''

3. புருஷார்த்தம் (பேறு) கோவிந்தனின் திருவடிகளில் ''வழுவிலா அடிமை'' செய்தலே!

கோவிந்தனைச் 'சிறுபேர் அழைத்து' அடைந்தால், கிட்டும் பேற்றைப் புருஷார்த்தத்தை—அடுத்த சிற்றஞ்சிறு காலைப்பாசுரத்திலே சிறக்கப் பேசுகின்றாள் ஸ்ரீஆண்டாள்

புருஷார்த்தம் என்பது சீவாத்துமா, இம்மையிலும் மறுமையிலும் அடையும் மிக உயரிய பேறு! கைங்கரியமே (குற்றேவலே — அடிமை செய்தலே) புருஷார்த்தம் என நம்மாழ்வார் அருள்வது:

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்!
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில் கொள் சோதி எந்தை தந்தைக்கே''
—திருவாய்மொழி-3-3-1

தொடர்ச்சியாகவும், மூன்றாவது முறையாகவும் கோவிந்த நாமத்தைச் சேவிக்கும்—பேறான பறையைத் தரும்—அடுத்த பாசுரத்தைச் சேவிப்போம்:

சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்!
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து, நீ
குற்றேவல்எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!

பூவுலகிலும் பொன் உலகிலும் பெறும் பேறு பெரியாழ்வாரின் திருவாக்கு குற்றேவலே (கைங்கரியமே) நாம் இம்மையிலே பெறும் பேறு என்பதைப் பெரியாழ்வார் திருப்பல்லாண்டின் 11-வது பாசுரத்திலே, திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்த அபிமானதுங்கன் என்ற பக்தரை உதாரணமாக வைத்துக் காட்டுகிறார்:

அபிமானதுங்கனைப் போல நாமும் நாராயணனுக்குப் பழ அடிமை புரிவதே பேறு. பிறவிதோறும் `கைங்கரியம் புரியும் பாக்கியம்'' என வெளியிடுவதுடன், இப்பேற்றை அடைவதும், நாம சங்கீர்த்தனமாகிய வழியாலே (இதத்தாலே] என்பதையும் வெளியிட்டு அருளுகின்றார்!

''அல்வழக்கு ஒன்றும் இல்லா அணிகோட்டியர் கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப்
பழ அடியேன்
நல்வகையால், நமோ நாராயணா என்று நாமம்பலபரவிப்
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு
கூறுவனே.

மறுமையிலே, பரமபதத்திலே, சீவாத்துமா, பரதத்து வமாகிய நாராயணனை அடைந்து பெறும்பேற்றை, அடுத்த பாசுரத்தில் வெளியிட்டருள்கின்றார் ஸ்ரீ வில்லி புத்தூர் விஷ்ணுசித்தர்.

பவித்திரனைப் பரமேட்டியை [பரமபத நிலையனை] சார்ங்கமென்னும் வில்லாண்டான் தன்னை, ''நாம சங்கீர்த்தனமே இதமாக—உபாயமாகக்' கொண்டு, 'பரமபத நாதனை அடைந்தவர்கள் [ஸ்ரீமந் நாராயணனை] சூழ்ந் திருந்து [குற்றேவல் புரிந்து] ஏத்துவர் பல்லாண்டே.

''பல்லாண்டு என்று பவித்திரனைப் பரமேட்டியைச்
சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை! வில்லிபுத்தூர் விட்டு சித்தன்
விரும்பிய சொல்
நல்லாண்டு என்று நவின்று உரைப்பார் ''நமோ!
நாராயணாய வென்று!
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர்
பல்லாண்டே!''

1. ஸ்ரீ வைணவ மதத்தின் தத்துவம் ஸ்ரீமந் நாராயணனே என்றும் 2. இதம் அவனுடைய திருநாம சங்கீர்த்தனமே என்றும், 3. புருஷார்த்தம் அவனது திருவடிகளில் குற்றேவல் — கைங்கரியம் புரிவதுதான் என்றும், திருப்பாவையில் கோவிந்த கோஷம் பொதிந்த, மூன்று தொடர்ந்த பாசுரங்களாலே, தெளிவாக உபதேசித் தருளும், ''அன்னைவயல் புதுவை ஸ்ரீ ஆண்டாளின் தூய நற்பாதம் துணை நமக்கே!''

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்!

''பாவை—மொழி''

பாவை மொழி என்ற சொற்றொடர் பாவையாகிய ஸ்ரீ ஆண்டாள் மொழிந்தவை என்று பொருள்படும். இரண்டாவதாக, ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவையில் உள்ள பாவை என்ற சொல்லையும், நாச்சியார் திருமொழி என்னும் சொற்றொடரில் மொழி என்ற சொல்லையும் இணைத்துப் ''பாவை—மொழி'' என்றும் பொருள் கூறலாம்;

ஸ்ரீ வைணவத்திற்கு தமிழ்நாடு தந்த தனிப்பெரும் பரிசு ஸ்ரீ ஆண்டாள்! ஸ்ரீ ஆண்டாள் தமிழுக்குத் தந்த பரிசுகள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியுமாகும்.

வேதாந்த தேசிகர் தம்முடைய பிரபந்தசாரம் என்ற பாமாலையில், ஸ்ரீ ஆண்டாள் அவதரித்து, சூடிக் கொடுத்த —பாடிக் கொடுத்த வைபவத்தைச் சுருக்கமாக அருள் கின்றார்;

'வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் மேன்மேலும் மிக விளங்க, விட்டு சித்தன் தூய திருமகளாய் வந்து, அரங்கனாரிக்குத் துழாய்மாலை சூடிக் கொடுத்த மாதே! நேயமுடன் திருப்பாவைப் பாட்டு ஆறு ஐந்தும் நீயுரைத்த 'தையொருதிங்கள்' பாமாலை ஆய புகழ் ஒரு நூற்றுடன் நாற்பத்து மூன்றும் அன்புடனே அடியேனுக்கு அருள் செய் நீயே!

கோதை தமிழாம் ஐயைந்தும் ஐந்துமான, திருப்பாவை வேதம் அனைத்துக்கும் வித்தாகும். வேதம் பரமன் அடி காட்டும். பரமனடி பாதகங்கள் தீர்க்கும்.

இதை இன்னொரு விதமாகவும் சேவிக்கலாம் பாதகங்கள் தீர்க்கும் கோதை தமிழ் பரமனடி காட்டும் கோதை தமிழ். கோதை தமிழ் வேதம் அனைத்துக்கும் வித்தாகும்.

எனவே, வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ், பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் அழகைச் சேவிப்போம். வேதத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஸ்ரீ வைணவ தரிசனக் கொள்கைப்படி இறைவன் தன்னை ஐந்து நிலைகளில் வெளிப்படுத்திக் கொள்ளும் வகைகள், திருப்பாவையில் அழகாகவும் வரிசைக்கிரமமாகவும், அமைந்துள்ளன.

பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்பவர்க்கும் இந் நிலைகள் ஏற்கத்தக்கவைகளே. இறைவனது ஐந்து நிலை களை விவரிக்கும் இம்மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானமும் வெறுக்காமல் வேண்டி ஏற்றுக் கொள்ளும் சிறந்த இயல்புடையதாகும்.

நடுத்தெருவில்போகும் ஒருவனை அடியுங்கள்! ஆமாம் அடியுங்கள்! அவன் (என்னை) ஏன் அடிக்கின்றீர்கள்? என்று கேட்பான். பதில் சொல்லாதீர்கள். மேலும் அடியுங்கள்! அவன் தன் பலத்தை நம்பி எதிர்த்துத் தாக்கு வான். மேலும் புடையுங்கள்! தன் பலத்தில் நம்பிக்கை குறையவும், பக்கத்தில் செல்பவர்களைக் கூவி அவர்கள்மீது நம்பிக்கை, வைத்து, அவர்களிடம் முறையிடுவான். அவர் களும் அவனை அடிக்க வேண்டும், ஆமாம் காரியமாகத் தான்! இப்படி எல்லோரும் தன்னை அடிப்பதைக் கண்ட (அவன் எல்லோர் மீதும் நம்பிக்கையைக் கைவிட்டு) (ஆகாயத்தை நோக்கி, இரு கைகளையும் விரித்து) ஐயோ! கடவுளே! அடிக்கின்றார்களே! உனக்குக் கண் இல்லையா?" எனக் கதறுவான்.

நடுத்தெருவில் போன இவனுக்கு, ஆகாயத்தில் கடவுள் இருக்கிறார் என்று எப்படித் தெரியும்? சகல ஜீவாத்மாக்

களிடத்தும் பரவியுள்ள பரமாத்மாவின் தொடர்பால் ஏற்பட்டுள்ள உள் உணர்ச்சியே (Intuition) திக்கற்ற நிலையில் இருந்தவனை, ஆகாயத்தை அண்ணாந்து நோக்கி அழுது முறையிடச் செய்தது.

கடவுளை இவன் கண்டவனா? என்றாலும், கடவுளை நேரில் கண்டவன் போல், 'கடவுளே உனக்குக் கண் இல்லையா? என்று கதறினானே! கடவுளுக்குக் கண்ணும், ஏனைய புலன்களும் அமைந்த திருமேனியும் இருப்பதாக நம்பவில்லை யானால், இப்படி நம்பிக்கை இல்லாத ஒரு எண்ணத்தை அடிப்படையாக கொண்டு கதறியிருப்பானா?

இவ்விதமாக கடவுளுக்குக் கண் உண்டு என்றும், அவர் எல்லா இடங்களிலும் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் அறிய வல்லவர் என்றும், அறிந்தும் ஆபத்தில் வந்து உதவும் தன்மையும் சக்தியும் உடையவர் என்றும், எவ்வளவு ஆழமான நம்பிக்கைகள் இந்த அலறலிலிருந்து வெளிப்பட்டன; இந்த நம்பிக்கைகள் எல்லாம் எழுந்தமைக்குக் காரணம் என்ன? பரமாத்மா, ஜீவாத்மாக்களில் பரவி எழுப்பும் உள் உணர்ச்சியே காரணம்.

ஆகாயம் என்பது பூமிக்கு மேலுள்ளது. அண்ணாந்து பார்த்தாலும் எங்கே முடிகிறது என்று அளவிட்டுச் சொல்லிவிட முடியாத வெளிப்பரப்பாகும். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உலாவும் வெளிப்பரப்புகளுக்கும் அப்பால் நீண்டு கிடப்பது என்று மன அமைதி அடையக் வேண்டும். இம்மண்டலம் காற்று உலவாத பாழ் வெளியாகும்.

இந்த பாழ்வெளிக்கும் அப்பால் உள்ள மண்டலத்தில் தான் தன்னைக் காப்பாற்றக் கூடிய கடவுள் இருப்பதாக உள் உணர்ச்சியின் உணர்வு கொண்டு கதறினான், 'தெய்வமே துணை' என்று நம்பிய அத்திக்கற்ற மனிதன். இப்படிச் சாதாரண மனிதனும் உருவகப்படுத்திய மண்டலத்தையே 'பரம்' என்று வைணவ தரிசனம் குறிப்பிடுகிறது.

ஆகவே ஊழி முதல்வனான இறைவன் தன்னை முதலில் வெளிப்படுத்திக் கொண்ட நிலை, பரம் அல்லது பரமபதம், இந்த இறைவன் எல்லா உயிர்த் தத்துவங்களிலும் பொருள் களிலும் வியாபித்து, உள்பரவி, மலரினில் மணம் போல் நிற்கின்றான்!

உயிர்த் தத்துவங்களும் ஏனைய உயிரில்லாப் பொருள் களும், யாவும் அழிந்துவிடும். பிரளய ஊழிக் காலங்களில், மூலப் பிரகிருதி என்னும் நுண்ணிய அளவில் தன்னிடம் வந்து அடைக்கலம் ஆகி, மறுபடியும் முன்னைய வடிவில் வியாபிக்கத் தொடங்கும் வரை, தன் திருமேனியிலேயே அடக்கிக் கொண்டு காத்தருளுகின்றான். அதாவது அசித் சித் (உயிரற்றவை, உயிர்த்தொகுதி) என்ற நாரங்களாகிய கூட்டங்களுக்கு அயனமாக அடைக்கலமாக விளங்குவதால் 'நாராயணன்' என்ற நாமம் பெறுகிறான்;

இறைவனை அறிமுகப்படுத்தி அனுபவிக்க ஆரம்பிக்கும் கோதை தீந்தமிழாம் திருப்பாவையில், முதல் பாசுரத்தில் பரமபதநாதனான அவனை நாராயணன் எனக் குறிக்கின் றான்.

பரம் என்ற முதல் நிலையில் எழுந்தருளியுள்ள இறைவன் நாராயணன்! சகல பேறுகளையும், அளிக்க வல்லவன் இவனே! பேறுகளில் உயர்ந்ததான எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் (இறைவன்) அவன் தன்னோடு உற்றோ மாய் ஆகி, அவனுக்கு நம்மை ஆட்செய்ய வைத்து, மற்றைய நம் காமங்களை மாற்றி, சர்வ கால, சர்வ நிலைமைகளிலும் அமைய வேண்டியதான குற்றவேல் பேற்றையும் நாராயணனே அளிக்கவல்லவன்.

வில்லிபுத்தூர் விளக்கமான ஸ்ரீ ஆண்டாள், திருப்பாவை யில் முதல் பாசுரத்தில் 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றாள். பரமபதத்தை வெளியிடும் அந்த முதல் பாசுரமானது :

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ! நேரிழையீர்!
சீர்மல்கும் ஆயப்பாடிச் செல்வச் சிறுமீர்கள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏராந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்!
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

பரமபதத் திருநாட்டிலே, தோன்றி வளர்ந்து மறையும் உடலுடன் வாழ முடியாது. இருளகற்றும் எரி கதிரோன் மண்டலத்திற்கு இப்பாலும் அப்பாலும் ஒருவாறு சிந்தனை செய்து ஊகித்தும் கொள்ளக்கூடிய ஆகாய வெளிப்பரப்பில் காற்று உலவுகிறது. பல ஊழிக்கால அளவில் அக்காற்று சூடாகும். குளிர்ச்சி அடையும். குளிர்ச்சி அடைந்த நிலையில் மேகமாக மாறுகிறது. மேகம் மழைக்குக் காரணம், மழை கடலாக உருவம் எடுக்கின்றது. உயிரினத்தின் முதல் உணவு பால். உயிரினங்களுக்கு முதன் முதலில் உடலுக்கும் உயிரான ஆத்மாவிற்கும் உணவுத் தத்துவத்தை அளிப்பது பாற்கடலே. இவ்விதமான திருப்பாற்கடலிலே இறைவன் எழுந்தருளுகின்றான். திருப்பாற்கடலில் இறைவன் எழுந்தருளுகின்றான் எனக் கூறலாமா? சம மட்டமான திருப்பாற்கடலிலே ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டானாம் எதைப் படுக்கையாகக் கொண்டு? ஜல மண்டல உதவியால் உயிரினங்கள் தோன்றி சஞ்சரிக்க முடிவதால் மிகப் பெரிதான ஆதிசேடன் முதல் முதலில் அடிமைத் (கைங்கரியத்) தொழில் ஏற்றுப்—படுக்கையாகி விட்டானாம். சேடன் என்றால் அடிமை. ஆதிசேடன் என்றால் முதல் அடிமை, திருப்பாற் கடலில் இறைவன் திருக்கண் வளர்ந்தருளுகிற இந்த இரண்டாவது நிலைக்கு வியூகம் எனப்பெயர்.

தோன்றிமறையும் உடலின் சேர்க்கை இல்லாமல் பரமபதத்தில் திகழும் நித்திய சூரிகட்குக் கவலைகள் இல்லை, குறைகள் இல்லை; ஆனால் உடல் சேர்க்கையுடன்

கடலில் வாழ்கின்ற உயிரினங்களுக்குக் கவலைகள் உண்டு குறைகளும் உண்டு. எனவே கஷ்டம் ஆபத்து என்றால், திருப்பாற் கடலின் கண் வளர்ந்தருளும் பரமனிடம்தான் கூப்பாடு போடலாம்: பரமபதம் அடைந்துவிட்டால், உடலும் அங்கே வராது. அதனால் ஏற்பட்ட துயரமும்' தேவையும் அங்கே நம்மைத் தொடரா! எனவே பரமபதம் கும்பிடு போடும் இடம்; திருப்பாற்கடல் கூப்பாடு போடும் இடம்.

பாவை நோன்பு என்பது இறைவனுக்குத் தொண்டு செய்யும் பேற்றை விரும்பி, அடைந்து அவ்விதமே வாழ்வதாகும். இப்பாவை நோன்பையியற்றப் பல தேவைகள் ஏற்படுகின்றன. அதைவிடப் பல தேவைகளை அகற்றிக் கொள்ள வேண்டும். நாட்காலே நீராட, மழைத்தேவனின் கருணை தேவை. ஐயமும் பிச்சையும் புரிந்து உய்யும் வகையை எண்ணி இருக்க வேண்டும். உடல் சுகங்களுக்காக நெய்யுண்ணாமலும் பாலுண்ணாமலும் கண்ணுக்கு மையிட்டு எழுதாமலும், மலர் இட்டு முடியாமலும், தீய குறைகளை (கோள் சொல்வதை) சென்று ஓதாமலும் இருக்க வேண்டும். இப்படி எல்லாம் நமக்கு வேண்டிய தேவைகளையும் ஏற்படுத்திக் கொண்டு காப்பாற்ற வேண்டிய நியமனங்களையும் நமக்கு அருளும்படி எங்கே போய்க் கூப்பாடு போடலாம்?

பட்டர்பிரான் கோதை இரண்டாவது பாசுரத்தில் இதற்கு விடையளிக்கிறாள். 'வையத்து வாழ்வீர்காள்! பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அடிபாடி தேவைகளைத் தரவும் குறைகளை அகற்றவும் பாவை நோன்பினை நிறைவேற்றி அருளவும் 'கேளீரோ' எனப் பணிக்கின்றாள். வியூக நிலையைக் காட்டும் அந்த இரண்டாவது பாசுரம்,

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம்! மலரிட்டு நாம் முடியோம்!
செய்யாதன செய்யோம்! தீக்குறளை சென்றோதோம்
ஐயமும், பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி,
உய்யுமாறு எண்ணி, உகந்தேலோர் எம்பாவாய்!

கடல் நீர்ப்பரப்பில் திட்டுகள் ஏற்பட்டு நிலப்பரப்பாகி, நீரிலும் நிலத்திலும் ஜீவராசிகள் உருவெடுத்தபின், அசித் சம்பந்தத்தால், அஞ்ஞானமும் அதன் அடியாகப் பாபமும் மலியலாயின. பொய் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கமும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை ஏற்பட்ட பிறகு, தன் படைப்பின் பயன் வீணாவதைக் கண்டு வருந்திய இமையோர் தலைவனான இறைவன் எந்நின்ற (எல்லாவித) யோனியுமாய்ப் பிறக்க வேண்டியதாயிற்று! உலகை உய்விக்க இறைவனும் ஒன்பது அவதாரங்கள் எடுத்தான். பத்தாவது அவதாரம் எடுக்கவும் உள்ளான். இப்படி இறைவன் அவதாரங்கள் எடுத்துத் திகழ்ந்த நிலைக்கு விபவம் என்று பெயர்.

மற்றைய அவதாரங்களைவிட, இறைவனுடைய திருவிக்கிரம அவதாரத்திற்குப் பல தனிச் சிறப்புகள் உண்டு: ஆகாயம், நிலம்,கடல், பரப்பு இவைகளை எல்லாம் உள்ளடக்கிப் பரவிய அவதாரம் திருவிக்கிரம அவதாரமே. ஆண்டாளும் இறைவனது மூன்றாவதான விபவ நிலையைப் பாடும்போது 'ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்று மங்களாசாசனம் செய்தருள்கிறாள்.

இதோ! அந்த மூன்றாவது பாசுரம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி,
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்;
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து,

ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்க, குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

இறைவனது நான்காவது நிலை அந்தர்யாமித்துவம் அதாவது கட்புலனுக்கும் ஏனைய புலன்களுக்கும் எட்டாத நிலை. எங்குமுளன் ஈசன் என்றாலும், நம்மால் எளிதாக அறியக் கூடாத நிலை. இரவில் சூரியனைப் பார்க்கா விட்டால் சூரியன் இல்லை என்று கூறுவதா?

விஷ்ணு என்ற சிறப்புப்பெயர் ஸ்ரீமந் நாராயணனுக்கே உண்டு. விஷ்ணு என்றால் எங்கும் நிறைந்தவன் என்று பொருள்.

புலன்களுக்குப் புலப்படாத இறைவனின் இந்த அந்தர்யாமித்துவ நிலையை நமக்குத் தெளிய அறிவிப்பதற்காக, ஒரு அருமையான உதாரணத்தைக் காட்டி விளக்குகின்றாள் ஸ்ரீ ஆண்டாள்.

மழை பெய்கிறது. பார்க்கிறோம். ஆனால், அது எங்கிருந்து வந்தது? மழை வானத்தின் உயரத்தில் உலவும் மேகத்திலிருந்து கொட்டுவதாகக் கொள்ளலாம், இந்த மேகம் எப்படி உருவெடுத்தது? உலகம் முழுவதும் பரவியுள்ள நீர் பரப்பிலிருந்து கண்ணுக்குப் புலனாகாத நீராவிகள் எழுந்து, உயரக் கிளம்பி வானில் மேகங்களாக உலவுகின்றன.

அவதாரம் எடுத்து, அவ்வப்போது மக்கள் காணும்படி எழுந்தருளியுள்ள இறைவனும் மக்கள் காணமுடியாத அந்தர்யாமித்துவ நிலையில் அவதாரங்களுக்கு முன்னும் பின்னும் எழுந்தருளிப் பரவியுள்ளான்; இறைவனது நான்காவதான அந்தர்யாமித்துவ நிலையை 'ஆழி மழைக் கண்ணா' என்று தொடங்கும் நான்காவது மழைப் பாசுரத்

தில், உள்ளுறைப் பொருளாக வைத்துக் காட்டி, தீங்கின்றி நாடெல்லாம், திங்கள் மும்மாரி பெய்து, நீங்காத செல்வம்' நிறைய வேண்டுமென வாழ்த்துகின்றாள்; போகத்தில் வழுவாத புதுவைக் கோன் கோதை. இதோ அந்த நான்காவது பாசுரம்!

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்!
ஆழியுள் புக்கு, முகந்து கொடு. ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைய பத்ப நாபன் கையில்,
ஆழி போல் மின்னி, வலம் புரிபோல் நின்று அதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய்! நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

ஆற்றில் வெள்ளம் போகிறது. அனைவருக்கும் மகிழ்ச்சி! இறைவன் விபவ நிலையில் ஒன்பது அவதாரங்கள் எடுத்து கூராழி வெண் சங்கேந்தி விண்ணும் மண்ணும் உய்ய வந்த போது அப்போதிருந்த மக்கள் கண்டு களித்தார்கள், அவதார காலங்களுக்குப் பிறகும் மக்களைத் தவிக்க விட விரும்பாத இறைவன், "நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோர் அருள் தன்னாலே." இதனால் பற்பல திவ்விய தேசங்களிலே விக்கிரக (உருவ) வடிவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளானாம்! ஆற்றில் வெள்ளம் அற்றுவிட்ட நிலையில் தேங்கின மடுக்கள் போல. இத்திவ்விய தேசங்கள் மக்களுக்கு ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டு கின்றனவாம்! பக்தி உணவளித்து!

எனவே, நாம் முன்னம் சுடரொளி மாயோன் மருவிய கோயில் சேவிக்க வேண்டுமென்று நியமிக்கின்றார் நம்மாழ்வார். இப்படி மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த அருள் மாரியாம் திருமங்கை மன்னனும் முற்ற முத்துக்கோல் துணையா, முன்னடி

நோக்கி வளைந்து, இற்ற கால்போல் தள்ளி மெள்ள இருந்தங்கு ஏங்கி இளையாமுன் வடக்கே வதரியிலிருந்து தென்கோடிக் குறுங்குடிவரை வணங்க வேண்டுமென்று பணிக்கின்றார்.

திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ள நிலைக்கு 'அர்ச்சை' (பூசிக்கப்படும்) நிலை என்று பெயர். பிறக்கும் போதே மணத்துடன் பிறப்பது திருத்துழாய். இறைவன் எடுத்த ஒன்பது அவதாரங்களிலும் தேவகி — வசுதேவ தம்பதிகளுக்கு மகனாகத் திருவாழி, திருச்சங்கு முதலான திவ்விய ஆயுதங்களுடனே ''தானே இறைவன்'' என வெளிப்படுத்திக் கொண்டு அவதரித்த பெருமை வடமதுரையானுக்கே உரியது. ஆற்று வெள்ளத்தைப் பின்பு அது தேங்கின மடுக்களில் காண்பது போல, விபவத்தில் அவதாரங்கள் மூலம் எழுந்தருளிய இறைவனே ஐந்தாவதான அர்ச்சை நிலையில், பின்புள்ளாரும் காணும்படியாக எழுந்தருளியுள்ளான் என்பதைக் காட்டவே, விபவமும், அர்ச்சையும் சேர்ந்து மிளிரும் மாயனுடைய மன்னு வட மதுரையும் அதனைச் சார்ந்த தூய பெருநீர் யமுனைத் துறையையும் மங்களாசாசனம் செய்தருள்கிறாள். ஐந்தாவது பாசுரத்தில் அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள். தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் பிஞ்சாய்ப் பழுத்த ஆண்டாள் அர்ச்சை நிலையைக் காட்டும் பாசுரம் !

''மாயனை! மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை!
ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும், செப்பேலோர் எம்பாவாய்!

இங்ஙனமாகத் திருப்பாவையில் ஆண்டாள் ஊழி முதல்வனுடைய பரமபதம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளையும் திருப்பாவையில் முதல் ஐந்து பாசுரங்களில் அருளியுள்ளார்.

''மார்கழித் திங்கள்''என்று ஆரம்பமாகும் திருப்பாவையிலே ஸ்ரீ ஆண்டாள். எம்பெருமானுடைய ஐந்து நிலைகளை விளக்கியருளினாள்,

''தையொரு திங்கள்''என்று ஆரம்பமாகும் நாச்சியார் திருமொழியிலே ஸ்ரீ ஆண்டாள் தன்னுடைய ஐந்து நிலைகளை விவரித்து அருள்கிறாள் :

அவைகளாவன ,

1. கண்ணனாகிற எம்பெருமானை நாடித் தூது விடுகின்றாள்.
2. கண்ணனை நினைந்து வாடி வருந்துகிறாள்,
3. கண்ணனைத் தேடித் திகைக்கின்றாள்.
4. கண்ணனிடம் ஊடி உணங்குகின்றாள்;
5. கண்ணனைக் கூடிக் குதூகலிக்கின்றாள்.

ஸ்ரீ ஆண்டாள் கண்ணனை நாடித் தூதுவிடல்;

மன்னு பெரும்புகழ் மாதவன்! மாமணி வண்ணன்!
மணிமுடி மைந்தன்!
தன்னை, உகந்தது காரணமாக, என் சங்கு இழக்கும்
வழக்கு உண்டே!
புன்னை, குறுக்கத்தி, ஞாழல், செருந்திப் பொதும்பினில்
வாழும் குயிலே
பன்னி எப்போதும் இருந்து, விரைந்து என் பவளவாயன்
வரக்கூவாய்!

குயில் வேகமாகப் பறந்து போய் தூது சொல்லுமா? எனவே, ஸ்ரீ ஆண்டாள் மனோ வேகம் காற்று வேகமாய்த் தாவும் மேகத்தைத் தூது விடுகின்றாள்!

சலங்கொண்டு; கிளர்ந்து எழுந்த தண் முகில்காள்!
மாவலியை
நிலங் கொண்டான்! வேங்கடத்தே நிரந்தேறிப்
பொழிவீர்காள்!
உலங்குண்ட விளங்கனி போல், உள் மெலியப் புகுந்து,
என்னை
நலம் கொண்ட நாரணற்கு என் நடலை நோய்
செப்புமினே!

2. கண்ணனை நினைந்து ஸ்ரீ ஆண்டாள் வாடி வருந்துதல்.

நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா! நானே! உன்னை
மாமிதன் மகனாகப் பெற்றால் எமக்கு வாதை தவிருமே!
காமன் போதரு காலமென்று பங்குனி நாள்கடை
பாரித்தோம்
தீமை செய்யும் சிரீதரா எங்கள் சிற்றில் வந்து
சிதையேலே!

வாதை தவிர விரும்பும் ஸ்ரீ ஆண்டாள்; கண்ணனுடைய ஆடையால் தன்னுடைய வாட்டம் தணியும்படி, வீசும்படி வேண்டுகின்றாள்.

கண்ணன் என்னும் கருந் தெய்வம்[] காட்சி பழகிக்
கிடப்பேனை!
புண்ணில் புளிபெய் தாற்போலப் புறம்நின்று அழகு
பேசாதே
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் அரையில்
பீதக
வண்ண ஆடை கொண்டு, என்னை வாட்டம் தணிய,
வீசீரே'

3. ஸ்ரீ ஆண்டாள் கண்ணனைத் தேடித் திகைத்தல் கண்டு களித்தல்.

பட்டி மேய்ந்தது ஓர் கார் ஏறு பல தேவற்கோர்
கீழ்க்கன்றாய்,
இட்ட றிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே!
இட்டமான பசுக்களை, இனிது மறித்து நீருட்டி,
விட்டுக் கொண்டு விளையாட விருந்தா வனத்தே
கண்டோமே.

கண்ணன் கன்றுகளை மேய்க்கும் சாதாரணமானவன் அல்லன். திருச்சங்கு திருவாழி, பீதக ஆடை முதலியன அணிந்த திருமால்தான்! அந்த எம்பெருமானைத்தான் தேடுகின்றோம் கண்டதுண்டா? அன்பு கூர்ந்து அறிவியுங்கள்! என்று வேண்டுகிறாள்.

வெளிய சங்கொன் றுடையானைப் பீதக ஆடை
உடையானை!
அளி நன்குடைய திருமாலை ஆழியானைக் கண்டீரே!
களி வண்டு எங்கும் கலந்தாற்போல்கமழ் பூங்குழல்கள்
தடந்தோள் மேல்
மிளிரநின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே

4. கண்ணனிடம் ஊடி உகத்தல்!

''கண்ணா'' உன் தீமைகளை நாங்கள் பொறுக்க முடியவில்லை. எங்கள் பேச்சுக்கு வரவேண்டா. நாங்கள் கூடிக்கட்டுகின்ற மணல் வீட்டை வந்து உன் காலால் கலைக்க வேண்டா.

உன்முகம் மாய மந்திரம் தான்! அதைக் காட்டி எங்களை மையல் ஏற்றி மயக்காதே! நாங்கள் எளியவர்கள்! எங்களை விட்டுவிடு! எங்கள் மணல் வீட்டையும் கலைக்காதே. சிவந்த தாமரைக்கண்கள் உனக்கு இருந்தும் இப்படிச் செய்யலாமா?

''பெய்யுமா முகில் போல்வண்ணா! உந்தன் பேச்சும்
செய்கையும் எங்களை
மையல் ஏற்றி மயக்க, உன்முகம் மாயமந்திரந்தான்
கொலோ!
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு உன்னை நோவ
நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள் சிற்றில் வந்து
சிதையேலே!

நாங்கள் மணல் வீடு கட்டும் இடத்திற்கு வராதே என்றோம். அதை மதியாமல் ஊரிலுள்ள பல பெண்கள் குடைந்து ஆடும் சுணையில் நீராடுகையில், எங்கள் ஆடைகளைப் பறித்துக் கொண்டு குருந்த மரத்தில் ஏறிக் கொண்டாயே! நீ குரங்குப் படைக்குத்தலைவன் என்பதை அறிவோம்! எங்கள் ஆடைகளைக் கொடுத்துவிடு எங்கள் பேச்சுக்கும் வராதே!

''பரக்க விழித்து எங்கும் நோக்கிப் பலர் குடைந்துஆடும்
சுனையில்
அரக்க நில்லா கண்ண நீர்கள் அலமரு கின்றவா
பாராய்;
இரக்கம் மேல் ஒன்று மிலாதாய்! இலங்கை யழிந்த
பிரானே!
குரக்கு அரசு ஆவது அறிந்தோம் குருந்திடைக் கூறை
பணியாய்!

(5) கண்ணனைக் கூடிக் குதூகலிப்பது! ஊடலின் எல்லை கூடவே!

''ஊடுதல் காமத்திற்கு இன்பம்! அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின் என்பது தெய்வப் புலவரின் பொய்யா மொழியாகும்,

ஸ்ரீ ஆண்டாள் கண்ணனைக் கலியாணம் செய்து

கூடுவது :

''மதத்ளம் கொட்ட! வரிசங்கம் நின்று ஊத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்!

கைத்தலம் பற்றிய கண்ணனுடன், ஸ்ரீ ஆண்டாள் அவனி அறிய ஆனை மீது பவனி வரல்!

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதிவலம் செய்து மணநீர்
அங்கு அவனோடும் உடன் சென்று அங்கு ஆனை மேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழி! நான்

ஸ்ரீ ஆண்டாள் இவ்விதமாக நாடி, வாடி, தேடி, ஊடி, கூடியது; உலகில் காணப்படும் காதலைத்தான் குறிக்கின்றது என்பது தவறு பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நானாவித சம்பந்தங்களில் நாயக—நாயகி சம்மந்தமும் ஒன்று இந்த நாயகி—நாயக சம்பந்தத்தை ஸ்ரீ ஆண்டாள் பெண்ணாகையினாலே இயல்பாகவும், எளிதாகவும் அடைந்தாள்.

நாயகி—நாயக பாவம் (உணர்ச்சி) ஸ்ரீ ஆண்டாளுக்குப் பள்ள மடை என்றும், மற்ற ஆழ்வார்களுக்கு மேட்டு மடை என்றும் நமது ஆச்சாரியர்களின் நிர்வாகம் (பராங்குச பரகால நாயகிகள்)

567: கருப்பூரம் நாறுமோ! கமலப்பூ நாறுமோ!
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித் திருக்குமோ!
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!

என்று உடலும் உள்ளமும் உருக முடிந்ததா!

564. ''வரிசிலை வாள் முகத்து என்னை மார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன்! அச்சுதன்! கைமேல் என் கைவைத்துப்
பொரி முகந்தட்டக் கனாக் கண்டேன் தோழி நான்!

என்று இவர்களால் கனவாவது காண முடிந்ததா? நாயகி—நாயக சம்பந்தம் தரும் நன்மை என்ன? எம்பெருமானை அடைவதற்குச் சரணாகதியே சிறந்தவழி. சரணாகதி மார்க்கத்தினைக் கடைபிடிக்க நாயகி—நாயக பாவமே சிறந்தது.

''கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும்,
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்
விண்தோய் மதின் புடைசூழ் வித்துவக் கோட்டம்மா! நீ
கொண்டு ஆளாய் ஆகிலும், உன் குரைகழலே
கூறுவளே''

என்று குலசேகரப் பெருமாளும், தமது பெருமாள் திருமொழியிலே சரணாகதி செய்வதற்கு நாயக—நாயகி பாவமே ஏற்றது என்று அருளுகின்றார்.

ஸ்ரீமந் நாராயணன் இந்நிலவுலகில் வராக, இராம கிருஷ்ண அவதாரங்கள் எடுத்து, சரணாகதியே தன்னை அடைவதற்குச் சிறந்த மார்க்கம் என்று மூன்றுமுறை உபதேசித்து அருளினான். இந்த வராக சரமஸ்லோகம், இராம சரமஸ்லோகம், கிருஷ்ண சரமஸ்லோகம் (இறுதியான மூன்றினையும் ஏற்றமாக உபதேசம்) ஸ்ரீ ஆண்டாள் தன் நாச்சியார் திருமொழியில், சரணாகதி மார்க்கத்தின் உயர்வை வற்புறுத்தியுள்ளாள்.

வராக சரமஸ்லோகம்

''பாசி தூர்க்குக் கிடந்த பார்மகட்கு பண்டொரு நாள்
மாசு உடம்பில் நீர் வார மானமிலாப் பன்றியாம்
தேசு உடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி இருப்பனகள் பேர்க்கவும் பேராவே!

(நாச்சியார் திருமொழி (11—8)

பேசி இருப்பனகள் ஆவது...— "எவனாவது ஒருவன். என்னை ஒரு க்ஷணம் நினைத்துச் சரணாகதி செய்து விட்டால், அவனை நான், ஆழமாக மனதில் வைத்துக் கொண்டு அவனுடைய அந்திம காலத்தில் நானே நேரில் அவனிடம் வந்து அவனை வைகுந்தத்திற்கு அழைத்துப் போவேன். வைகுந்தத்திற்கு அழைத்துப் போகும் சேவகர்கள் கையிலும் அவனைத் தரமாட்டேன்"

2. இராம சரமஸ்லோகம்

"முல்லைப் பிராட்டி நீயுன் முறுவல்கள் கொண்டு எம்மை!
அல்லல் விளைவியேல்! ஆழி நங்காய்! உன்
அடைக்கலம்!
கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட குமரனார்
சொல்லும் பொய்யானால் நானும் பிறந்தமை
பொய்யன்றே!

கொல்லை அரக்கியை—வரம்பு கடந்த சூர்ப்பனகை என்ற அரக்கியின்; மூக்கரிந்திட்ட—இலட்சுமணன் மூலம் மூக்கை அறுத்துவிட்ட; குமரனார் சொல்—இராமபிரான் விபீஷணனுக்கு அடைக்கலம் அளித்தபொழுது கூறிய உறுதி மொழியாவது;

"ஒருவன் மெய்யான அன்போடு என்னை வந்து பற்றா விட்டாலும், அன்பன் போல் பாவனை செய்து கொண்டு வந்து சேர்ந்தாலும் அவனையும் நான் ஒரு விதத்திலும் கைவிட மாட்டேன்"

3. கிருஷ்ண சரமஸ்லோகம்

"செம்மை உடைய திருவரங்கர் தாம் பனித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர்,
தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும் சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர் இனியே!

திருவரங்கர்—அரங்கநாதர் கண்ணனாக அவதரித்த போது;பணித்த மெய்மைப்பெரு வார்த்தை அர்ச்சுனனுக்கு அருளிய சரமஸ்லோகம்; உறுதிமொழி;

''அறிவினால் குறைவு இல்லா அகல் ஞாலத்து அவர் அறிய
நெறியெல்லாம் எடுத்து உரைத்த நிறை ஞானத்து ஒரு
மூர்த்தி''யான

கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு அருளிய சரமசுலோகம் உறுதிமொழியாவது ''உன் காரியங்களையெல்லாம் குறையற முடித்து வைக்க நான் இருக்கிறேன்;நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை; உனது சகல பாரங்களை யும் என் பக்கல் சமர்ப்பித்து நிர்ப்பரனாய் இரு''

இந்தக் கண்ணனுடைய உறுதிமொழியைப் பெரியார், குருமுகமாகக் கேட்டு அதன்படி கவலையற்று இருப்பார்.

அறுநூறு சுலோகம் கொண்ட பகவத் கீதையிலே; ஸ்ரீவ தர்மாந், பரித்யஜ்ய, மாம், ஏகம், சரணம் வ்ரஜ' என்ற ஆறு பதங்களால் ஆன கிருஷ்ண சரமசுலோகத்தை ஸ்ரீ ஆண்டாள், மிக சுலபமாகவும் எளிய நடையிலும்;

''தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும் சொல்'' என்ற ஆறு பதங்களாலே தந்தருள் கின்றாள்; இங்ஙனமாக வராகப் பெருமாளும், இராமபிரானும் கண்ணனும் சரணாகதியே சிறந்தது என்று உபதேசித்தனத ஸ்ரீ ஆண்டாளும் ஏற்றுக் கொண்டு உபதேசிப்பது.

''கோவிந்தா!

''எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உந்தன்னோடு
உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!''

''கைதைசேர் பூம்பொழில் சூழ்கச்சி நகர் வந்து உதித்த பொய்கைப் பிரான் கவிஞர் போர் ஏறு'' ஏற்றி அருளிய சொல்மாலையாம் திருவிளக்கு.

''வையம் தகளியாய்! வார்கடலே நெய்யாக!
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை!
இடர் ஆழி நீங்குகவே என்று''

இவ்வகையில், ஸ்ரீ ஆண்டாள் ஏற்றி அருளும் திருவிளக்கைச் சேவிப்போம்!

ஸ்ரீ ஆண்டாளே நாச்சியார் திருமொழியிலே' தன்னையே தகளியாக்கிக் கொள்ளுகின்றாள் ஐந்து முகங்கள் கொண்ட குத்துவிளக்காகத் திகழ்கிறாள்; ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருமொழியிலே

நாடி (1), வாடி (2) தேடி (3), ஊடி (4) கூடி (5) அடைந்த ஐந்து நிலைகளே; ஐந்து தீபங்கள் ஐந்து சுடர் ஒளிகள்;

இந்த ஐந்து நிலைகளையும் எதற்காக ஸ்ரீ ஆண்டாள் அடைந்தாள்? எம்பெருமானைச் சரணாகதி அடைவதற்கே; சரணாகதிதான் இந்த ஐந்து நிலைகளையும் ஒளிவிடச் செய்கின்றது.

ஆகவே, இந்த ஐந்து தீப நிலைகளிலே ஆன நாயக—நாயகி பாவத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது சரணாகதி என்னும் நெய். இவ்விதமாக ஆண்டாள் என்னும் தகளியிலே ஐந்து பிரிவுகளாவன நாயகி—நாயக பாவஉணர்ச்சி, சரணாகதி என்னும் நெய்யினால் ஒளிவிடச் செய்கிறது.

வாழ்க! வேயர் பயந்த விளக்கு!
வாழ்க! ஸ்ரீ ஆண்டாள் அருளிய ''பாவை மொழி''
ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்!

எம்பெருமானும் எம்பெருமானாரும்!

ஸ்ரீ பெரும்பூதூரிலே திருவவதரித்தருளிய இராமாநுசர் தமது ஐந்து ஆசாரியர்களிடத்தும், ஐந்து அரிய ஸ்ரீ வைணவ விஷயங்களைக் கற்றார்.

இளையாழ்வார் என இளமையில் பெயரிடப் பெற்ற இராமாநுசர், மதுராந்தகம் ஏரிக்கரையில் திருவரங்கம் பெரிய நம்பிகளைச் சந்தித்தபோது; அவரிடம் சங்கு சக்கர திருஇலச்சினைப் பெற்று, துவய மந்திரத்தையும் உபதேசிக்கப் பெற்றார். காஞ்சி ஸ்ரீ வரதராசப் பெருமானின் நியமனப்படி, பெரிய நம்பிகளையே பிரதம ஆசார்யராக ஏற்றார்.

இலட்சுமண முனி எனவும் பெயர் பெற்ற இராமநுசர் திருமலையில் தமது தாய் மாமனான திருமலை நம்பி களிடம் ஸ்ரீ ராமாயணக் காலட்சேபம் சேவித்தார்.

எதிராசர் எனவும் ஏற்றம் அடைந்த இராமநுசர், தமது ஆசாரியரான பெரியநம்பிகள் நியமனப்படி திருக் கோட்டியூர் நம்பிகள் பக்கலிலே 'ஓம் நமோ நாராயணாய" என்னும் பெரிய திருமந்திரத்தின் உட்பொருளைக் கற்க விரும்பித் திருவரங்கததிலிருந்து திருக்கோட்டியூருக்கு பதினேழு முறை எழுந்தருளினார்.

இராமநுசர் இவ்விதமாக அடிக்கடி எழுந்தருள்வதை யும் சோகமுகத்துடன் திரும்புவதையும் கண்ட திருக் கோட்டியூர் ஸ்ரீ வைணவப் பெருமக்கள் வருந்தி, தாம்

இருக்கும் இடமே தெரியாமல் வசிக்கும் திருக்கோட்டியூர் நம்பிக்குத் திருமந்திரத்தின் உட்பொருள் தெரியுமா என்பது சந்தேகத்திற்கு இடமான விஷயம் என்றும், அப்படி அந்த நம்பிகளுக்குத் தெரிந்திருப்பின் தங்களுக்கு உபதேசித்திருப்பாரா என்றும், அல்லது பதினேழு முறை வருகை தரும் இராமநுசருக்காவது உபதேசித்திருப்பரா என்றும், அவ்விதம் உபதேசிக்காமையால், நம்பிகளுக்குத் தெரியாது என்றுதான் ஏற்படுகிறது என்றும் நினைத் தார்கள். அப்படி ஒரு வேளை அவ்வர்த்தம் உபதேசிக்கப் பட்டாலும், இராமரனுசருக்கே இவ்வளவு கஷ்டப்பட்டு கிடைக்கவே நமக்குக் கிடைக்காது என்றும் தீர்மானித் தார்கள். ''ஒரு வேளை தேவரீருக்குக் கிடைக்குமானால் எங்களை மறந்து விடாதீர்'' என்று இராமாநுசரையும் பிரார்த்தித்தார்கள்.

இராமாநுசரோ தமது ஆசாரியரான பெரியநம்பிகள் நியமனத்தை நிறைவேற்ற வேண்டுமென விரும்பினார். பதினெட்டு ஒரு நல்ல என் ஆயிற்றே புராணங்கள் பதினெட்டு, ஸ்ரீ வைணவ ரகசியங்கள் (அஷ்டாதசம்) பதினெட்டு, மகாபாரத்தின் அத்தியாயங்கள் பதினெட்டு பாரதப் போர் நடந்த நாட்கள் பதினெட்டு, கண்ணன் அருளிய கீதையின் அத்தியாயங்களும் பதினெட்டு, எனவே இராமாநுசரும் பதினெட்டாவது முறையாக திருக் கோட்டியூர் சென்று நம்பிகளிடம் திருமந்திரத்தின் உட்பொருளை உணர்த்தும்படி வேண்டினார்.

இராமநுசருடைய ஆழ்ந்த விருப்பத்தை உணர்ந்த திருக்கோட்டியூர் நம்பிகளும், அத்தலத்தில் உள்ள சௌம்ய நாராயணப் பெருமாள் சந்நிதிக்கு அழைத்துச் சென்று, அங்கு நரசிம்மர் எழுந்தருளியுள்ள ஒரு இருட்டான பகுதியை அடைந்தார்.

நம்பிகள் இராமாநுசருக்குத்தான் திருவடிகளைக் காட்டி, தாம் அருளப்போகும் திருமந்திரார்த்தத்தை

ஒருவருக்கும் வெளியிடக் கூடாதென்றும் அப்படி வெளியிடின் நரகம்தான் சித்திக்கும் என்றும் உறுதி வாங்கிக் கொண்டு திருமந்திரத்தை சாதித்தருளியதே தாமதம்! தம்மைப் பிரார்த்தித்தவர்களுக்கு அவ்வார்த்ததையை உபதேசித்து விட்டார்.

ஆகாயத்தை எட்டிப் பிடிக்கும் ஏற்றக்கோல் பாதாளத்தில் உள்ள கிணற்றுநீரை அடைவதற்காகத் தன் முனையில் கட்டியுள்ள சாலைக் குனிந்து கொண்டு வந்து முகந்து கொண்டதும், உடனே கிணற்றைத் திரும்பிக் கூடப் பாராமல் உயரக் கிளம்பித் தன்னை எதிர்பார்த்துக் கிடக்கும் வாய்க்காலையும், வயலையும் நிரப்புவது போல! திருமந்திரார்த்தத்தை இராமநுசர் வெளியிட்டு விட்டார்.

இதனை அறிந்த திருக்கோட்டியூர் நம்பிகளும் பொங்கி எழுந்தார், இராமநுசரைக் கடிந்தார்! இராமாநுசரும் அமைதியாக நம்பிகளை நோக்கி, திருமந்திரார்த்தத்தைச் செவியேற்ற அனைவருக்கும் பரமபதம் கிடைப்பது நிச்சயமானால், இதனை ஆசாரியரின் ஆணையை மீறி வெளியிட்டதனால் தான் ஒருவன் ஏன் நரகம் புகுதல் கூடாது என விண்ணப்பித்தார்! நீர்ப்பண்டமாய் உருகிப் விட்ட நம்பிகளும் இராமாநுசரைக் கட்டித் தழுவிக் கொண்டு, "எம்பெருமான் கருணைக்கடல் எம்பெருமானையும் கருணையில் விஞ்சிய நீர் கருணைப் பெருங்கடலே! அதனால் அவனோ எம்பெருமான்! நீரே எம்பெருமான் ஆனீர் (எம்பெருமானார்) என்றும் எம்பெருமானை விட நீரே அதிகமாகக் கொண்டாடப் படவேண்டியவர்" என்றும் பாராட்டிப் பாராட்டி மகிழ்ந்தார்.

இங்கு சில கேள்விகள் எழுகின்றன! இராமாநுசரின் பதிலைக் கேட்டதும், திருக்கோட்டியூர் நம்பிக்கு அவர் பக்தியிலே அளவு கடந்த அன்பு பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டதென்றால், அவர் எப்படி ஆச்சரியப்பட்டுப் பேசியிருக்க வேண்டும்?

திருமந்திரார்த்தத்தைத் தெரிந்து வைத்திருந்தும் ஊரிலுள்ள ஒருவருக்கும் அருளாமல், பதினெழு முறை வந்து வேண்டிய இராமாநுசருக்கும் அருளாத தன்னுடைய கல்நெஞ்சை விட இராமாநுசரின் நெஞ்சு, கனிந்த நெஞ்சு என்றல்லவா பாராட்டியிருக்க வேண்டும்.

சகல பக்தர்கட்கும் திருமந்திரார்த்தத்தை உபதேசித்து அவர்கட்கு எல்லாம் பரமபதம் வாய்க்கும்படி என்று அருளாமல் 'பழுதே பலபகலும் போயின அஞ்சி அழுதேன்'' என்றல்லவா புலம்பியிருக்க வேண்டும்!

இராமாநுசர் திருமந்திரார்த்ததைத் தன் திருவுள்ளதில் தேக்கியது!

''வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகிலைப் போன்றும்,
சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண் முகிலைப் போன்றும்''
''கார்காலத் தெழுகின்ற கார்முகிலைப் போன்றும்''
''மாமுத்த நிதி சொரியும் மாமுகிலைப் போன்றும்''

திருக்கோட்டியூரில் பக்தர்களின் மனம் குளிரத் திருமந்திரார்த்தத்தைத்

''திரண்டேறிப் பொழிந் தமைக்கும்,
நிரந்தேறிப் பொழிந்த தமைக்கும்,
மதயானை போலெழுந்த''

இராமாநுசர் முனிவேழத்திற்கு! வறண்ட, சூல் கொள்ளாத மேகம் என வாழ்ந்து விட்ட தம்மை ஒப்பிட்டுக் கொண்டு,

''காரேய் கருணை இராமாநுச! இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின்னருளின் தன்மை! அல்லலுக்கு,
நேரே உறைவிடம் நான்! வந்து நீ என்னை உய்த்த பின் உன்
சீரே உயிர்க்குயிராய், அடியேற்கு இன்று தித்திக்குமே''
(இ. நூ. அ)

என்றல்லவா தம்மட்டில் இப்புகழ் மாலையை முடித்திருக்க வேண்டும்!

அவ்விதமில்லாமல், எம்பெருமானாகிற ஸ்ரீமந் நாராயணனை இழுத்துப் போட்டுக் கொண்டு, அவனுடைய கருணையை விட உம்முடைய கருணை அளவு கடந்துள்ள படியினாலே அவன் ''எம்பெருமான்'' நீரோ, ''எம்பெருமானார்'', என்று போற்றியது எங்ஙனம் பொருந்தும்?

ஆகவே, திருமந்திரம் விஷயமாகவும் அதன் உட்பொருளான திருமந்திரார்த்தம் விஷயமாகவும் எம்பெருமானாகிற இறைவன் எவ்விதம் தன் கருணையை வெளியிட்டுள்ளான் என்பதை ஆராய வேண்டும்.

ஸ்ரீ வைணவக் கொள்கைப்படி எம்பெருமான் ஐந்து நிலைகளிலே உலகோர் உய்யும் பொருட்டு எழுந்தருளியுள்ளான்.

பரமபதத்திலே பரமபதநாதனாக எழுந்தருளியுள்ள நிலையிலே பெரிய பிராட்டியாருக்குத் துவய மந்திரத்தை உபதேசித்தருளினார்:

2. வியூக நிலை என்னும் திருப்பாற் கடலில் சயன நிலையில் அவதியினால் அவசரமாகப் போகும் முனிவர்கட்கும், தேவர்கட்கும் அபயமளித் தருள்வதே வேலை! உபதேசத்திற்கு இது இடமில்லை!

3. கண்களுக்கும் ஏனைய பொறிகளுக்கும் புலனாகாத அந்தர்யாமித்துவ நிலையிலே இறைவனைக் காணவும் முடியாது; அவன் குரல் கேட்கவும் முடியாது! எனவே உபதேசத்திற்கு இடமில்லை;

4. அவதாரங்கள் எடுத்துக் காட்சி தரும் விபவ நிலையிலே (அ)வராக நயினாராக வராக சரம (உயர்ந்த) சுலோகத்தையும் (ஆ) இராமபிரானாக இராம சரம சுலோகத்தையும் (இ) கண்ணனாக பகவத் கீதையில் கிருஷ்ண சரம சுலோகத்தையும் வெளியிட்டருளினான்;

வழி பாட்டிற்கு உரிய உருவ வடிவாகிற அர்ச்சை நிலையிலே, திருவதரியாசிரமத்திலே, வதரி விருட்சத்தின் கீழ், வேதங்களிலும் வெளியிடப்படாத குறையை நீக்கி திருமந்திரத்தை முதன் முதலாக வெளியிட்டருளினான். உயர்ந்த இத்திருமந்திரத்தை உலகறிய வேண்டுமென்ற பரம கருணையிலே, தன்னையே உபதேசிக்கும் நாராயண ஆசார்யனாகவும், அதனைச் செவியேற்கும் நர நாராயண னாகவும் இரண்டு கூறுகளாக நியமித்துக்கொண்டு வெளி யிட்டருளினான், கேட்பதற்கு ஒரு நரன் (மனிதன்) கிடைக்காத நிலையிலே!

ஸ்ரீவைணவ ஆசாரியரான பிள்ளைலோகாசாரியர், தாம் அருளிய முமுட்சுப்படி என்னும் நூலிலே, திருமந்திரப் பிரகணத்திலே எம்பெருமான் அர்ச்சை நிலையிலே திருமந்திரத்தை வெளியிட்டதை எட்டு பாகங்களாலான வாக்கியத்திலே குறிப்பிடுகின்றார். திருமந்திரமும் எட்டெழுத்து தானே!

1. சம்சாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து
2. ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து,
3. இழந்தோம் என்கிற இழவும் இன்றிக்கே
4. சம்சாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட
5. சர்வேச்வரன் தன் கிருபையாலே, இவர்கள் தன்னை அறிந்து கரைமரம் சேரும்படி
6. தானே சிஷ்யனுமாய்
7. ஆசார்யனுமாய் நின்று
8. திருமந்திரத்தை வெளியிட்டருளினான்!

இவ்விதமாகத் திருமந்திரத்தை வெளியிட்டதனால் ஈச்வரனுடைய கருணை பலித்ததா? சம்சாரிகள் கரைமரம் சேர்ந்தார்களா? பிறவிப் பெருங்கடலினின்றும்!? வதரியாச்

சிரமத்தில் ஸ்ரீமந் நாராயணனும், நர நாராயணனும் படி, தாண்டாப் பத்தினி'களாக எழுந்தருளியுள்ளனர்! அங்கே வெளியிடப் பட்டத் திருமந்திரமும் 'கடல் சூழ்ந்த மண் உலகம் வாழப்' பரவவில்லை!

தமிழ் நாட்டின் மண்ணிலே, முதன் முதலாகத் திருமந்திரம் அசல் நரன் காதிலே ஓதப்பட்டது! தம்மை மணக்க விரும்பினால், ஓராண்டுக் காலம் பாகவத ததியாராதனை புரிய வேண்டுமென்ற நிபந்தனையை நிறைவேற்றப் பொருள் இல்லாமல் வழிப் பறி நடத்தி நித்திய ததியாராதனையைப் புரிந்து வந்தார் குறையலூர் வாழ்வேந்தனான திருமங்கை ஆழ்வாரும்; இவரை ஆட் கொள்ள வேண்டுமெனத் திருவுள்ளம் பற்றிய திரு ஆலி திரு நகரியிலே எழுந்தருளியுள்ள வயலாளி மணவாளப் பெருமாள், பிராட்டி சகிதமாகத் திருமணங் கொல்லைக்கு எழுந்தருளினான். அவர் ஆபரணங்களை அபகரித்துக் கொண்ட ஆலி நாடராம் திருமங்கை ஆழ்வாரும் அவை களை மூட்டையாய்க் கட்டிக் கீழே வைத்ததை எடுக்க முடியாமற் போகவும், 'என்ன மந்திரம் செய்தீர்' என வாளை உருவிக் கேட்கவும், மாயோனும் திருமங்கையாழ் வாரைத் தம் வலது திருச் செவியை தாழ்த்தச் சொல்லி 'ஓம் நமோ நாராயணாய'என்னும் பெரிய திருமந்திரத்தை உபதேசித்தருளினான்; இங்ஙனம் மாயோனை வாள் வலியால் மந்திரங்கொண்டார் மங்கையர் கோனும்.

எம்பெருமானிடம் திருமந்திரத்தைச் சேவித்த திருமங்கை மன்னன் அதன் உட்பொருளை ஆராய்ந்தார். எம்பெருமான் அன்றி வேறு ஒருவருக்கும் உரியேன் அல்லேன் என்ற திருமந்திர அர்த்தத்தை உணர்ந்தார்.

''மடையார் நீலம் மல்கும் வயல் சூழ்கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ''

இதுவே இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தல் அவனுக்கே தொண்டு செய்தல், அதாவது பகவத் சேஷத்துவம்.

திருமந்திரத்தின் உட்பொருள் இறைவனுக்கு அடிமைப் பட்டிருத்தலாகிய பகவத் சேஷத்துவம் என்று மேல் எழுந்த வாரியாகக் காணப்படினும், பக்தர்கட்கு அடிமைப்பட்டு அவர்கட்குத் தொண்டு செய்தலே அதாவது பாகவத சேஷத்துவமே திருமந்திரத்தின் மிக்க உட்பொருள் என்பதை மேலும் தெரிந்து கொண்டதையும் வெளியிடு கிறார் திருமங்கை ஆழ்வார்.

''மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன்! உற்றதும் உன் அடியார்க்கு அடிமை!
மற்றெல்லாம் பேசிலும் நின்திரு எட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறையம் மானே.

திருமந்திரத்தில், அனேக உட்பொருள்கள் அடங்கி யிருப்பினும், அவற்றுள் தாம் சிறந்ததாகத் தெரிந்து கொண்ட மிக்க நுண்ணிய உட்பொருள் பக்தர்கட்கு அடிமைப்பட்டு, அவர்களுக்குத் தொண்டு புரியும் பாகவத சேஷத்துவமே என வெளியிட்டருள்கிறார் திருமங்கை ஆழ்வார்.

இவ்விதமாகத் திருமந்திரத்தின் உட்பொருளை ஆழ்வார்கள் வித்தாகக் காட்டியதை, இவர்களுக்குப் பின் வந்த ஆசார்யர்கள் தங்களுடைய மிக உயர்ந்தவியாக்கி யான உரைகளால் பெரும் விருட்சங்களாக்கியதை குரு— சீடன்—ஆசான் சீடன் என்ற வழிமுறையிலே பக்குவம் அடைந்த நிலையினைச் சோதித்து, போதித்துப் பாது காத்து வந்தனர். (இதற்கு ஓராண் வழி என்று பெயர்) பரவலாக எல்லோருக்கும் இயம்பவில்லை. இந்த நிலையை ஸ்ரீ எதிராசர் மாற்றி, வைணவத்தால் வையமெல்லாம் பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்குடன்; உயர்ந்த

ஞான நோக்குடைய ஆசாரியப் பெருமக்களை, அவனி யிலே, ஆசை உடையவர்கட்கெல்லாம் கட்டுப்பாடுகள் இல்லாமல் உபதேசிக்க வேண்டுமென்று நியமித்தருளினார். அதாவது முன்பு இருந்த வரம்பை அறுத்துப் போட்டார்.

ஸ்ரீ மணவாள மாமுனிகள் என்னும் ஸ்ரீ வைணவ ஆசார்யர், தாம் இயற்றிய உபதேச ரத்தினமாலையிலே, எதிராசர் தமது இன்னருளினாலே உலகு உய்யச் செய்த உதவியைப் பாராட்டுகிறார்.

ஓரான் வழியாய் உபதேசித்தார் முன்னோர்,
ஏரார் எதிராசர் இன்னருளால்—பாருலகில்
ஆசை உடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள் கூறும்என்று
பேசி வரம்பறுத்தார் பின்!

கருணைக் கடலான எம்பெருமான் திருமந்திரத்தை வதரியாச் சிரமத்தில் தானான நர நாராயணனுக்கும் திருவாலி திருமணங் கொல்லையில் திருமங்கை ஆழ்வாருக் கும் திருமந்திரத்தை — ஒருவருக்கு ஒருவர் உபதேசிப்பது —என்ற முறையை ஏற்படுத்தினான்,

கருணைப் பெருங்கடலான எம்பெருமானாரோ திருமந்திரத்தையும், அதன் உட்பொருளையும்கூட ஆசை யுடையோர்கள் திரள் திரளாகத் திரண்டுவரினும், கூறுங்கள் என்று நியமித்தார். ஸ்ரீ இராமாநுசர் அவதரித் தருளிய ஸ்ரீபெரும்பூதூரிலே ஆண்டுப் பெருவிழா சமயம் ஆதிசேடவாகன சேவையின் போது, திருமந்திரார்த்தத்தை அவர் முன் சேவிப்பார்கள். ஆதிசேடனின் அவதாரமான எதிராசரே பரம கருணையுடன் உலகோர்க்கு திருமந்தி ரார்த்தத்தை உபதேசித்தருள்கிறாராம்.

எம்பெருமான் திருமந்திரார்த்தத்தைப் பர, வியூக அந்தர்யாமித்துவ: அவதார நிலைகளுக்குப் பிறகு கடைசி யாக ஏற்பட்ட அர்ச்சை (வணங்கப்படுவதற்காக உருவ வடிவு கொள்ளும்)நிலையிலே வெளிட்டான். அவ்வளவு கால தாமதமாயிற்று எம்பெருமானுக்கு. எம்பெருமானாரோ,

நொடி நேரமும் தாமதிக்காமல் திருமந்திரார்த்தத்தை வெளியிட்டருளி, தமது ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பிகளால், "எம்பெருமானார்" என்ற கீர்த்திக் கிரீடம் சூட்டப்பட்டார்.

பூலோக வைகுண்டமான, திருவரங்கம், பெரிய கோயிலிலே எழுந்தருளியுள்ள நம்பெருமானாகிய அரங்கத் தம்மானும், எம்பெருமானார் என்ற விருதை ஆமோதித்து; அவருடைய பரந்த கருணையை, கைங்கர்யத்தைப் பாராட்டி, ஸ்ரீ வைணவ மதத்திற்கே, "எம்பெருமானார் தரிசனம்" என்று திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தார். தரிசனம் என்றால் உண்மையை வெளியிடும் மதம் எனப்பெயர். உடையவர் ஸ்ரீ வைணவ தரிசனத்தை மகோன்னதமாகவும் புரட்சிகரமாகவும் பரவச் செய்ததை, உலகோர் உணர்வதற்காக, நன்றியறிதலுடன் இப்படிப் பெயரிட்டருளினானாம் பொன்னரங்கனும் மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையிலே இதை வெளியிட்டு உபகரிக்கின்றார்.

"எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்—அம்புவியோர்!
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா."

ANDAVAR
A. No. 12342
LIBRARY KOVILOOR

காரேய் கருணை

சுவாமி எம்பெருமானார் எம்பெருமானைப் பல சிறப்புக் குணங்களால் குறிப்பிடுகின்றார்' எம்பெருமானுடைய அனேக குணங்களில் சிறந்தது, பரம காருண்யமே இந்தக் கருணையினால்தான் ஸ்ரீமந் நாராயணன் வேதங்களையும் நீதி நூல்களையும் உலகோர் உய்வதற்காக அருளினான்.

கன்னி நன்மா மதிள் மங்கை வேந்தன்,
காமரு சீர்க் கலிகன்றி குன்றா
இன்னி சையால் சொல்லும் செஞ்சொல் மாலை;
கலைகளும் வேதமும் நீதி நூலும்
சற்பமும், சொற்பொருள் தானும், மற்றை
நிலைகளும், வானவர்க்கும், பிறர்க்கும்
நீர்மையினால் அருள் செய்து, நின்றான்.

இதனையே.

மன்னு மாமணி மாட மங்கை வேந்தன் மானவேல் பரகாலன் கலியன் திருநெடுந் தாண்டகக் கடைம்ப் பாசுரத்தில் மீண்டும் அருள்வது.

அன்னமாய முனிவரோடு அமரர் ஏத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை

இவ்விருள் தருமாஞாலத்தினுள் வடமொழியில் அவதரித்த வேதங்களும் நீதிநூல்களும் அதாவது இராமாயண, மகாபாரத இதிகாசங்களும் அதிகம் பயன்

தரவில்லை. இக்குறையை நீக்குவதற்காகவே மறுபடியும் தன்னுடைய நீர்மைக் குணத்தினால் எம்பெருமான் ஆழ்வார்களையும் அவதரிக்கச் செய்து அருளிச்செயல்களையும், ஆச்சாரியர்களையும் அவதரிக்கச் செய்து ஏனைய நூல்களையும் வியாக்கியான உரைகளையும் அவதரிப்பித்தான்.

நம் ஆச்சாரியர்கட்குத் தான் உபய வேதாந்த பிரவர்த்தர்கள் என்ற சிறப்புப் பெயர் உண்டு. அதாவது வடமொழியில் உள்ள வேத உபநிஷத்துக்களையும் தென்மொழியில் உள்ள ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் சேர்த்துப் போற்றி நமக்கு அருள்கின்றவர்கள்—வடமொழி சாத்திரங்களை ஆழ்வார்களின் அருளிச் செயல்களால் நன்கு அறிந்தனர்.

இதனையே,

விரித்திரை நீர் வையர்
தன்னுள் விளங்கிய வேதாந்த ஆரியரும்
பொய்கை முனி பூதத்தார், பேயாழ்வார் தான்
பொருநல், வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம்பாண நாதன்
தொண்டர் அடிப்பொடி மழிசை வந்த சோதி
வையம் எலாம் மறைவிளங்க வாள், வேல் ஏந்தும்
மங்கையர் கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே.

நமது சுவாமி எம்பெருமானாரும் அகராதிகளாக உள்ள வேத உபநிஷத்துக்களில் திகழும் கருத்துக்களை எல்லாம், ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிற விளக்கைக் கொண்டு விளக்கியருளினார்.

"இது கொண்டு (நம்மாழ்வாரின் திருவாய் மொழியைக் கொண்டு) பாஷ்யகாரரர் சூத்திர வாக்கியங்கள் (வேத வியாசர் அருளிய பிரம்ம சூத்திரங்களை) ஒருங்க விடுவர்—

ஒன்றுக்கொன்று முரண்படாமல் சரி செய்து அமைத்து அருளினார், என்ற முன்னோர்கள் திருவாக்கினாலும் இதை அறியலாம்.

இப்படியாக இறைவன் தொடக்கமாக எம்பெருமானார் ஈறாக புனிதம் பெற்றுத் திகழ்ந்த நம் ஸ்ரீ வைணவ தரிசனம் பலருக்கும் பயன்பாடமல் போனது.

இதன் காரணத்தை நன்கு ஆராய்ந்து தெரிந்து கொண்டார் நம் மெய்ம் பதிக்கடலாம் எம்பெருமானார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான ஆச்சாரிய புருஷர்கள் காலம் முதற்கொண்டு ஸ்ரீ வைணவ ஞானம் ஓரான் வழியாகவே பெறப்பட்டு வந்தது. அதாவது ஒரு ஆசாரியனிடத்தில் ஒரு சமயத்தில் ஒரு சீடர் தான் காலட்சேபம் சேவிக்கலாம் என்ற கண்டிப்பு இருந்தது. ஒரே விஷயத்தை இருவர் சேவிக்க விரும்பினாலும், இருவரும் சேர்ந்து சேவிக்க இயலாது. ஒருவர் காலட்சேபம் சேவித்த பிறகுதான், மற்றவர் காத்திருந்து போய் காலட்சேபம் சேவிக்க வேணும்.

கரேய் கருணை இராமாநுசர் இப்படி ஓரான் வழியாக உபதேசிக்கப்பட்ட வரம்பைத் தன் காலத்தில் அறுத்தார். காலாகாலமாக ஆச்சாரிய புருஷர்களால் அநுஷ்டிக்கப் பட்ட வரம்பை அறுக்கிறது என்பது மிகவும் பெரிய விஷயம் சுலபமானது அன்று! ஆசையுடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள் கூறுமின்! என்று பேசி வரம்பை அறுத்து விட்டார்.

இதையே ஸ்ரீ மணவாள மாமுனிகள் மொத்தம் 73 பாடல்கள் கொண்ட தம் உபதேச ரத்தினமாலையில் நடு நாயகமாக விளங்கும் 37-வது பாடலில் பொறித்து வைத்து கொண்டாடுகிறார்.

ஓரான் வழியாய், உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராச ரின் னருளால்—பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று
பேசிவரம் பறுத்தார் பின்.

ஸ்ரீ எம்பெருமானாரும் தமது காலத்தில் ஸ்ரீ வைணவ ஞானத்தை அடைவதற்குப் பட்ட கஷ்டத்தைச் சொல்லி முடியாது. பெரிய திருமந்திரத்தின் பொருளைத் தெரிந்து கொள்வதற்காகவே 18 முறை திருவரங்கத்திலிருந்து, திருக்கோட்டியூரில் எழுந்திருளியிருந்த நம்பிகளிடம் கால் கடுக்க நடக்க வேண்டியதாயிற்று. ''பெரிய திருமந்திரத்தின் பொருளை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது—தெரிவிப்பின் நரகமே கதி!'' என்ற திருக்கோட்டியூர் நம்பிகளின் கட்டளையையும் மீறி திருமந்திரத்தின் பொருளை,கோயில் கோபுரமேறி உலகோர் உய்ய அறிவித்து விட்டார். 'எம்பெருமானார்' என்ற விருதும் பெற்றார்: எம்பெருமானை விடக் கருணையில் மேம்பட்டவர் எனப் போற்றப்பட்டார்.

''கடலளவாய திசையெட்டி னுள்ளும் கலியிருளே
மிடை தரு காலத் திராமானுசன், மிக்க நான் மறையின்
சுடரொளியால் விருளைத் துரத்தில னேல் உயிரை
உடையவன் நாரணன் என்றிற் லாரில்லை!
உற்றுணர்ந்தே''

எனத் திருவரங்கத்து அமுதனார் எக்களித்துப் பாடுகிறார் இராமாநுச நூற்றந்தாதியிலே.

இராமாநுசரின் ஸ்ரீ வைணவப் பிரசாரத்தின் பலனையும் தெரிவித்தருள்கின்றார் அமுதனார்:

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன நாரணனை
காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகை வள்ளல்
வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமாநுசன் தன் இயல்பு கண்டே

இராமானுசரின் இப்பேருபகாரத்தை மெச்சிய பெரிய பெருமாளும் உகந்த வண்ணத்தை ஸ்ரீமணவாள மாமுனிகள் தம் பொய்யில்லாத வாக்கினால் உபதேச ரத்தின மாலையில் அருள்வது:

எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிக்கைகா!

இப்படி எம்பெருமானார் பாடுபட்டு வளர்த்த ஸ்ரீ வைணவ மதமும் காலப்போக்கில் சுருங்கலாயிற்று.

அடியவர்கள் பலர் கூடி நம் ஆசாரியனை நாடி, அனுதினமும் ஸ்ரீ வைணவக் காலட்சேபங்களை அநுபவிப்பதும் அருமையாயிற்று: காலட்சேப சுவாமிகளும் குறையலாயினர். காலட்சேபம் சேவிக்க வந்த பாகவதர்களை, ஒரு புறம் ஒதுக்கியும், நிற்க வைத்தும், நூல்களைத் தொடக் கூடாது என்று கண்டித்தும் நடத்திய ஏனைய செயல்கள் ஞாபகத்தில் இன்றும் அகல வில்லை.

மக்கள் தொடர்பில்லாத மதம் நசிக்கும். பக்தர்களை அதிக பாகுபாடுகளுக்கு உட்படுத்தி, அனாவசியமான கட்டு திட்டங்களுக்கு உட்படுத்தினாலும் மதம் வளராது.

எனவே இக்குறைகளை நீக்கவும், ஸ்ரீ வைணவ மதத்திற்கு மக்கள் தொடர்பு ஏற்படுத்தவும் சுமார் 60 ஆண்டுகளாக ஸ்ரீ வைணவ மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆசை உடையோர்க்கு எல்லாம் கூறுங்கள் என்று எம்பெருமானாரின் கட்டளையின் அடிப்படையிலே நடைபெறுபவை ஸ்ரீ வைணவ மாநாடுகள்—நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீ வைணவ மாநாட்டின் மேடைகளில் ஏறி சொற்பொழிவாற்றி உள்ளனர். ஆயிரக்கணக்கான பக்த

பெருமக்கள் ஸ்ரீ வைணவ மாநாடுகளில் கூடி செவிச் செல்வம் பெற்றுள்ளனர். காலட்சேபங்கள் அருகிவரும் இந்நாளில் ஸ்ரீ வைணவ மாநாடுகள் ஸ்ரீ வைணவ பிரசாரத் திற்கு மிகவும் பயனுள்ளவைகளாக உள்ளன. காலட்சேப முறை கட்டுப்பாட்டாலும் பாதிக்கப்படாமல் பக்தியின் அடிப்படையில் பலம் கூட ஸ்ரீ வைணவ மாநாடுகள் உதவுகின்றன.

''வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்'' இனப்பாகுபாடு இல்லாமல் ஒரே மேடையில் ஒரே காலத்தில் திரட்டி, இனி அடிசிலுக்கொரு பாலமுதாகப் பல அரிய விஷயங்களையும் கால அவகாச வரம்பும் அமைத்து சொற் பொழிவுகளாக ஆற்றி, சம்சாரக்கூண்டுகளில் அடைபட்டுக் கிடக்கும், கோவிந்தன் குணம் பாடும் கோலக்கிளிகளைக் குதூகலிக்கச் செய்யவே ஸ்ரீ வைணவ மாநாடு நடத்தப்படு கின்றன இம்மாநாடுகள் வாசா கைங்கரியத்தில் சிறந்தவை.

ஸ்ரீ வைணவ மாநாட்டு இயக்கம் தமிழ்நாட்டில் நசித்து வருகிறதாக அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சத்திற்கு இடம் தராமல் பக்தப் பெருமக்கள் ஸ்ரீ வைணவ மாநாட்டு இயக்கத்தை வளர்த்தல் வேண்டும்.

ஸ்ரீ ரங்கமன்னார் திருத்தேவிகளான அன்னவயல் புதுவை ஆண்டாள், மொழியைக் கடக்கும் பெரும் புகழாள ரான ஸ்ரீ கூரத்தாழ்வான் தேவிகள் ஸ்ரீ ஆண்டாள்; பொன்னாச்சியார், திருக்கோளூர் பெண் பிள்ளை போன்ற பக்தைகளின் பிரதிநிதிகளான மாதர்களையும் ஸ்ரீ வைணவ மாநாட்டிற்கு அழைத்துச் சொற்பொழிவாற்ற உதவவேண்டியது மிக மிக முக்கியமான கடமையாகும் உயர்ந்த நோக்கங்களுடன் கூட்டப்பட்டுகின்ற இந்த ஸ்ரீவைணவ மாநாடுகள் இனிது நடைபெற பிரார்த்திக் கிறேன்.

வைணவமும் இளமையும்

ஸ்ரீமந் நாராயணனான எம்பெருமான், உலக மக்களிடையே வாழ்ந்து, அவர்களை உய்விப்பதற்காகவே, ஒன்பது அவதாரங்களை எடுத்தான். இந்த அவதாரங்களிலே, பூர்ண அவதாரங்கள் என்று கொண்டாடப்படுபவை இரண்டே, அவை இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் ஆகும். இந்த இரண்டு அவதாரங்களிலும், எம்பெருமானுடைய பால்ய லீலைகள் கொள்ளை கொள்ளையாக அமைந்துள்ளன. இவ்விதமாக எம்பெருமானை இராமனாகவும், கண்ணனாகவும், தொட்டில் தொடங்கி, அவனது இளமைப்பிராய வைபவங்களை, நாம் அறிந்து போற்றக் கிடக்கின்றன. அதனால்தான் இந்த இரண்டு அவதாரங்களையும் பூரண அவதாரங்கள் என்று சிறப்பித்து போற்றுகின்றோம்.

இங்ஙனமாக எம்பெருமான் வித்திலிருந்து விருட்சம் வரை இராமனாகவும் கண்ணனாகவும் தன் முழு வாழ்க்கை வடிவம் காட்டியருளியதால்தான், அவனது சிறப்புமிக்க சரிதங்கள் ராமாயணமென்றும், மகாபாரதமென்றும் கவி மேகங்களாகிப் பக்தி மழை பொழிகின்றன.

இளமையைத் தழுவி இயங்காததால்தான் ஏனைய ஏழு அவதாரங்களும் இப்பெரும் சிறப்பினை அடைய முடியவில்லை என்று விண்ணப்பித்தால் அது தவறாகுமா? வடமொழியில் இராமாயணம் என்று வால்மீகி முனிவரும்; மகாபாரதம் என்று வியாச முனிவரும் பொழிந்த இப்பக்தி மழைகளை! எத்தனை மொழிகளில் எத்தனை கவியரசர்கள்

தேக்கங்கள் ஆக்கி; வடமொழி அறியாத ஏனைய நலப்பிரய் விற்பனர்க்கு மடை திறந்த வெள்ளமாகப்பாய்ச்சி, ஞானப் பயிரை விளைவித்துள்ளனர்.

"கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ" என்கிறார் நம்மாழ்வார். கல்வியில் சிறந்தது இராமாயணம் எனவே, இராமாயணத்தைப் பாடியமையால்தான் நம் தமிழ்க் கவிச்சக்கரவர்த்தியும் 'கல்வியிற் சிறந்தவர் கம்பர்' எனப் பாராட்டப்படுகிறார் போலும்.

'மையோ! மறிகடலோ! மரகதமோ! மழை முகிலோ! அய்யோ! இவன் அழகு என்பதோர் அழியா அழகுடையான்' என வியக்கக்கூடிய இராமனின் இளமையைக் கம்ப நாட்டாழ்வார் வாக்கினால்தான் களிக்கலாம்! இதனால் அன்றோ, கன்னித் தமிழ் எனும் பெருமையை எல்லாம் கம்பன் கவியால் வந்ததுவே! என்று நிச்சயிக்கிறார் நம் தமிழ் நாட்டுக்கவி!

ஐந்தாம் வேதம் எனக் கொண்டாடப்பெறும் மகா பாரதத்தைத் தமிழில் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வார் முன் சக்கையற்ற பாடல்களைப் புலவர்கள் பாடினால் சகிக்க மாட்டாராம்; எம்பெருமானுடைய இளமைத் திருக் குணங்கள் கலவாத பாடல்களைப்பாடி, தன் காதைத் துளைத்த புலவர்களின் காதைக் குடைந்து தோண்டி அறுத்து விடுவாராம் வில்லியார்.

இளமை பாடிய கவிகள்

ஆழ்வார்களில் தலைவரானவர் நம்மாழ்வார் தான் இவர் இளமைப்பிராயம் கடந்ததும் இவ்வுலகில் வாழவே இல்லை. பரமபதத்துக்கு எழுந்தருளினார். 'சிறு மா மனிசர்' எனத்திகழ்ந்தார் இந்த இளைஞரான பெரியார்! நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த திருப்புளி ஆழ்வாரும் இதனால்தான் 'பிஞ்சிலே பழுத்தவராக' இருக்கிறார் போலும்! இத்திருப்புளி ஆழ்வாரை, இன்றும் ஆழ்வார் திருநகரியிலே சேவித்துச் சந்தோஷம் கொள்ளலாம்.

வடமொழியில் உள்ள நான்கு வேதங்களையும்; செவிக்கினிய செந்தமிழ்ச் சொல்லில்! திருவாய்மொழி என்றும், திருவிருத்தம் என்றும், திருவாசிரியம் என்றும், பெரிய திருவந்தாதி என்றும் வடித்துத்தந்த பெருமை இளமைக்கே என்றால்; அது மிகையாகுமா?

இளமை அருளிய இக்கவியமுதைப் பருகிய கவிச் சக்ரவர்த்தியாம் கம்பரும், "ஒரு சொல் பெறுமோ உலகில் கவியே!" என்று பணிந்துக் கப்பம் கட்டிப் பரவுகின்றார்.

'வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' என வியக்கத் தக்கது கோதை தமிழ்; அதாவது ஸ்ரீ ஆண்டாள் அருளிய பாசுரங்கள்! ஸ்ரீ ஆண்டாளின் ஐயைந்தும் ஐந்தும் (முப்பது பாடல்களான திருப்பாவையை) அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு' எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது! இத்தகைய சிறப்புற்றத் தன் சொல்லைத் துதிக்க வல்லார்களுக்கு; ஸ்ரீ ஆண்டாள் பெருமிதத்தோடு தன் இளமையைத் தானே அறிமுகப்படுத்துகிறாள். 'வில்லைத் தொலைத்த புருவத்தாள்!' என்று.

இளமை, ஆண்டாள் வடிவில் அருளியவை திருப்பாவையும், நாச்சியார் திருமொழியுமான ஒரு நூற்று நாற்பத்து மூன்றும்; கவிக்கனிகள்! "கற்பூரம் நாறுமோ! கமலப் பூ நாறுமோ!" என்று, கோல சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும் ஸ்ரீ வில்லிப்புத்தூர் சோலைக் கிளியின் பாடலுக்கு நிகரான அகப்பொருள் இலக்கியப் பாடல் உலகில் உண்டோ? என வியக்கின்றார், பாரிஸ்டர், தேசபக்திச் சிங்கம் திரு.வ.வே.சு. அய்யர் அவர்கள்!

இளமையைப் பாடிய கவிகள்

இளமையில் பாடிய கவிகளை அடுத்து, இளமையைப் பாடிய கவிகளைப் போற்றுவோம்.

எம்பெருமானுக்கும், 'பல்லாண்டு பாடி' வாழ்த்தியவர் பெரியாழ்வார் என்னும் விஷ்ணுசித்தர். இறைவனது திரு;

கல்யாண குணங்களை அநுபவிப்பதற்கு, குழந்தையான கண்ணனையே தமக்குச் சாதனமாகக் கொள்கிறார்.

கண்ணன் கேசவன் நம்பி பிறந்ததிலிருந்து தன் பிள்ளைத் தமிழைத் தொடங்குகின்றார் விஷ்ணுசித்தர். கம்சன் சிறையிலிருந்த தேவகி. திருவாய்ப் பாடி அசோதைக்குப் போத்தந்த பேதைக்குழவி பிடித்துச் சுவைத்து உண்ணும் பாதக் கமலங்கள் காணீரே! என அழைக்கின்றார். பாதாதி கேசமாக வண்ணப்படம் தீட்டிக்காட்டும் இப்பாடல்களைச் சேவித்தால்,

கண்ணில் தெரியுது ஒரு தோற்றம்—அதில்
கண்ணன் அழகு முழுதுண்டே!

எனக் களிக்கலாம்!

தாமரைக் கண்ணனுக்குத் தாலேலோ பாடுவார்! என் மகன் கோவிந்தன் கூத்தினை நின்முகம் கண் உளவாகில், நீ இங்கே நோக்கிப்போ! என்று மாமதியிலும், இளமாமதியை அழைப்பார்!

ஆனை! எனக்கு ஒருகால் ஆடுக! செங்கீரை!
ஆயர்கள் போர் ஏறே! ஆடுக! ஆடுகவே!

எனக் கெஞ்சுவார்.

தேவகி சிங்கம் சப்பாணி கொட்டவேணும்! உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப, உடைமணி பறை கறங்க, தடம் தாளினைக் கொண்டு சார்ங்கபாணி, தளர்நடை நடக்கவேணும்! நச்சுவார் முன்னிற்கும் நாராயணன் தன்னை அச்சோ! வருக! என்று நிச்சலும் பாடுவார்! "குட்டன் வந்து என்னைப் புறம் புல்குவான், கோவிந்தன் வந்து என்னைப் புறம் புல்குவான், என்று குழந்தைக் கண்ணன் பின்னால் ஓடிவந்து அசோதையாகிவிட்ட தன்னைக் கட்டிக் கொள்வதைக் களிப்புடன் தெரிவிக்கின்றார், வேயின் குழல் ஊதி வித்தகனாய் நின்ற ஆயன் வந்து அப்பூச்சி காட்டுவானாம்.

உபசாரங்கள் பல செய்ய, உள்ளம் கனிந்துக் கண்ணனை அழைத்து உவக்கின்றார். பெரியாழ்வார்! கேசவ நம்பீ! உன்னைக் காது குத்த ஆய்ப்பாலர் பெண்டுகள் எல்லோரும் வந்தார். என அழைக்கின்றார். ஆம்! இன்று அவன் பிறந்த நாளல்லவா? குளிக்கவாவது வேண்டாமா? நீ பிறந்த திருவோணம் இன்று; நீ நீராட வேணும் எம்பிரான்! ஓடாதே வாராய்! எனப் பின் தொடர்ந்து ஓடிக் கூவுகின்றார்! காக்கையைக் கூப்பிடுவது போல் தளுக்காகப் பிராக்குக் காட்டி அடங்காத பிள்ளையின் தலையைச் சீவி முடிக்கிறார், காயா அலர்வண்ணன்· கண்ணன் கருங்குழல் தூய்தாக வந்து குழல் வாராய், அக்காக்காய் தூமணி வண்ணன் குழல் வாராய். அக்காக்காய், ஆயர் பிள்ளை தானே மாடு மேய்க்கக்கோல் வேண்டுமல்லவா? இதோ, காக்கையும் தயாராகக் காத்திக் கிடக்கிறது; காலிப்பின் (பசுக்களுக்குப் பின்) போவதற்கு ஓர் கோல் கொண்டு வா. கடல் நிறவண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா; கன்றுகள் மேய்பதற்கு ஓர் கோல் கொண்டு வா! கடல் நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா! (என ஆணையும் பிறக்கிறது).

மாடு மேய்க்க வெளியே செல்லு முன் சீவிமுடித்த தலையில் பூச்சூட வேணுமே! செண்பகம் மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி எண்பகர் பூவும் கொணர்ந்து இவை சூட்ட வாவென்று அழைப்பார்! மாடு மேய்க்கப் போன பிள்ளை மாலைக்குள் திரும்ப வேண்டாமா? எத்தனை பேர் கண்பட்டிருக்கும்! திருஷ்டி கழிக்க வேண்டாமா? இதோ அழைக்கிறார் ஆழ்வார்! அந்தியம் போது இதுவாகும் அழகனே! காப்பிட வாராய்! திரிந்து வந்த உடலில் தான் எத்தனை அழுக்கு! குளிக்க வைத்து உண்பிக்கிறார்! கற்றாளி காண் உன் உடம்பு! பேதை மயில் சாயல் பின்னை மணாளா! நீராட்டம் அமைத்து வைத்தேன்! நீராடி அமுது செய்! அப்பனும் உண்டிலன்! உன்னோடு உடனே உண்பான்,

எத்தனை காலம் தான் மாடு மேய்க்கும் பிள்ளையாக இருக்கிறது? நப்பின்னையும் காத்துக் கிடக்கிறாளே! கலியாணம் செய்து கொள்ள வேண்டாமா? கண்ணாலம் செய்யக் கறியும் கலத்தரிசியும் ஆக்கி வைத்தேன்; கண்ணா! நீ நாளை தொட்டுக் கன்றின்பின் போகேல்! கோலம், செய்து இங்கே இரு! என்று நிறுத்திக் கொள்கிறார்.

கண்ணன் இளைய காளையாகிக் குழல் ஊதுகின்றான்! வேணு கோபாலனின் கானம் கேளுங்கள்.

''சிறு விரல்கள் தடவிப் பறிமாறச்,
செங்கண் கோடச் செய்யவாய்க் கொப்பளிப்பக்,
குறு வெயர்ப்புருவம் கோடலிப்பக்,
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது,
பறவையின் கணங்கள் கூடு திறந்து,
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப,
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்
கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்டகில்லாவே.

நம்மை ஆட்கொள்ளுவதற்காகவே, இறைவன் இளமைத் திருக்கோலங்கள் காட்டி, மயக்கி மகிழ்வித்துள்ள இந்திர ஜாலங்களை, எத்தனை முறைச் சேவித்தாலும் அலுப்புத் தட்டுமா? வாழ்க அவன் இளமை! வளர்க நம் பக்தி.

இளமையும் பக்தியும்

''கடவுளை வணங்கல், பக்தி நெறியில் நிற்றல் இவைகளை முதியவர்களான பிறகே கவனித்துக் கொள்ளலாம்! இளமையில் தேவையில்லை'' என்று எண்ணுவது சரியல்ல! இளமையில் ஏற்படாத குணங்கள், இடையிலும் முதுமையிலும், ஏற்படா. பலவிதக் கவர்ச்சிகளால் அறிவு முதிர்ச்சி இன்மையால் சுலபமாக ஈர்க்கப்படும் நிலைமையில் உள்ள இளமையில்தான்; பக்தி உணர்ச்சியும், கடவுள் வணக்க

குணமும் அவசியம் தேவை, தாய்ப்பாலுடன், பக்தி அமுதமும் சேர்ந்து பருக வேணுமாம்! இளமையில் பக்தி உணர்ச்சியில்லாதவர்கள், பிறகு வீணாகக் காலத்தைக் கழிப்பார்கள்!

இதைத் தொண்டர் அடிப் பொடி ஆழ்வாரும்,
மருவிய பெரிய கோயில் மதிள் திரு அரங்கம் என்னா,
கருவிலே திருவிலாதீர்!' காலத்தைக் கழிக்கின்றீரே!

என உளம் வருந்துகின்றார்.

பெரியாழ்வார் துயரத்தையும் அறியலாம்;

துற்றி ஏழுலகு உண்ட தூமணி வண்ணனைத்
தொழாதவர்,
பெற்றதாயர் வயிற்றினைப் பெரு நோய் செய்வான்
பிறந்தார்களே!

பக்தியற்றவர்கள் விரல்களை உபயோகிக்கும் விதம்:

மாலவன் திரு நாமங்கள்
எண்ணக் கண்ட விரல்களால், இறைப்,
பொழுதும் எண்ணகிலாது போய்,
உண்ணக் கண்ட நம் ஊத்தை வாய்க்குக்
கவளம் உந்துகிறார்களே!

இவர்கள் உண்ணும் நீரும், உடுக்கும் துணியும்:

நரக நாசனை நாவில் கொண்டு
அழையாத மானிட சாதியர்
பருகும் நீரும், உடுக்கும் கூறையும்
பாவம் செய்தன தாம் கொலோ,

இவர்களை உண்ணவிடாமல் என்ன செய்ய வேணுமாம்

நேமி சேர் தடங்கையினானை
நினைப்பு இலா வலி நெஞ்சுடைப்
பூமி பாரங்கள் உண்ணும் சோற்றினை
வாங்கிப் புல்லைத் திணிமினே,

தொண்டர் அடிப் பொடியாழ்வாரும் இதை ஒரு திருத்தத்தோடு பின் மொழிகிறார்.

வண்டினம் முரலும் சோலை!
மயிலினம் ஆலும் சோலை!
கொண்டல் மீது அணவும் சோலை!
குயில் இனம் கூவும் சோலை!

அண்டர் கோன் அமரும் சோலை!
அணி திருவரங்கம் என்னா!
மிண்டர் பாய்ந்து உண்ணும் சோற்றை
விலக்கி நாய்க்கு இடுமின் நீரே!

பக்தர்களுடைய பாத தூளியின் மேன்மையைப் பாடுகிறார் பெரியாழ்வார்.

நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்தில் தோன்றி ரட்சிக்கக் காத்துள்ள நம் ;

நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே!
பக்தர்கள் நடமாடும் கோயில்கள். இறைவனின் சின்னங்கள்

நம்பனை நரசிங்கனை நவின்று
ஏத்துவார்களைக் கண்டக்கால்
எம்பிரான் தன் சின்னங்கள் இவர்
இவர் என்று ஆசைகள் தீர்வனே.

பக்தர்களுடைய சிறப்பு! உரிமை!

கேசவா! புருடோத்தமா! கிளர்
சோதியாய்! குறளா! என்று
பேசுவார் அடியார்கள்! எந்தம்மை
விற்கவும் பெறுவார்களே

இளமையும் திவ்விய தேச வழிபாடும் :

இளமையின் சிறந்த பரிசு உடல் வலிமை. இந்த உடல் வன்மையை நாம் பக்தி நெறியில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேணும். இசைந்த போதெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டுள்ள பல தலங்களுக்கும் சென்று வணங்குதல் நலம். திருமணம் ஆகுமுன் ஒரு இளைஞன் காசித்தலம் வரை யாத்திரை சென்று வருதல் வேண்டும், என முன்னாளில் வழக்கம் ஏற்படுத்தினார்கள். இந்த வழக்கம் இடையில் உள்ள திருத்தலங்களைச் சேவித்துப் பக்தி நெறியில் நிற்க பழக்கப்படுத்திக் கொள்ளுவதற்குத் தான் என்று கொள்ளலாம். தற்காலங்களில் திருமணப் பந்தல் அமைந்துள்ள தெருவின் கோடிதான் காசிப்பதியாக மாற்றப்படுகிறது, திருமணத்திற்கு முன் காசித்தலம் வரை போய் வராவிட்டாலும்; இளைஞர்கள் தாமாகவும், பாட சாலைகள் மூலமாகவும் சில தலங்களையாவது சேவித்தல் நலம். கூடிய வரையில் மலையில் அமைந்துள்ள திவ்ய தேசங்களுக்குக் காலால் நடந்தும், ஏறியும் சென்று சேவிப்பது நலம். இயற்கைக் காட்சியினை நன்கு, அவசர மில்லாமல் அருகிலும் கண்டு களிக்கலாம்.

இதோ! நம்மாழ்வாரின் உபதேசம் கேட்கலாம்.

கிளர் ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோயில்
வளர் இளம் பொழில் சூழ், மால் இரும் சோலை
தளர்விலர் ஆகில், சார்வதும் சதிரே''

திருமங்கையாழ்வாரும் இதை வழி மொழிகிறார்!

முற்றமுத்துக் கோல் துணையா, முன்னடி நோக்கி வளைந்து
இற்ற கால்போல் தள்ளி மெள்ள, இருந்தங்கு இளையா முன்,
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி, பெருமுலையூடு, உயிரை
வற்ற வாங்கி உண்டு உமிழ்ந்தான், வதரி வணங்குதுமே,

மனச்சோர்வும், பக்தி ஊக்கமும்

இளைஞர்களிடையே அடிக்கடி ஏமாற்றமும், மனக் கசப்பும் ஏற்படுகின்றன. இவைகளை நீக்கிக் கொள்ள ஆலய வழிபாடும், இறை வணக்கமும் மிகவும் உதவும். வாழ்க்கையில் ஏமாற்றத்தால் மனம் உடைந்து தற்கொலை புரிந்து கொள்வது உலகில் வெகு அதிகமாக உள்ளது. நம் நாட்டிலும் இவைகள் பெருகிவருகின்றனவாம். உலகில் நடைபெறும் காரியங்கள் நம் சக்திக்கு மேற்பட்ட இறைவனின் செயல் என்றும், எந்த இடுக்கண் வரினும் இறைவனது திருவடித் தாமரைகளே தஞ்சம் என்றும் இருக்கும் மன நிலையைப் பெற வேண்டும். மன வியாதிக்கு இதுவே மருந்தாகும்.

வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி அடைவோரும் இறைவனிடம் பக்தி செலுத்துதல் வேண்டும். எல்லா நலன்களுக்கும் அவன் அருளே காரணம் என்று கொண்டு அமையாவிட்டால்; அகங்காரத்திற்கு அடிமையாகி விடுவோம்! அதன் பயனாகப் பிறர் வெறுப்பும், பொறாமையும் பகையும் அடைந்து; வெற்றிகளைத் தோல்விகளாக்கிக் கொள்வோம்.

துஞ்சும் போது அழைமின்! துயர்வரில் நினைமின்!
துயர் இலீர்! சொல்லிலும் நன்றாம்! நஞ்சுதான் கண்டீர்!
நம்முடைய வினைக்கு நாராயணா என்னும் நாமம்.

என்று விளிக்கின்றார்.

'கொங்கு மலி குழலியர் வேள் மங்கை வேந்தன்'

என்று தன் இளமையையும், அழகையும் காட்டி மகிழ்விக்கும் திருமங்கை மன்னன்!

விண்ணப்பங்கள்

இளைஞர்கள் தற்காலத்தில் கடவுள் வழிப்பாட்டிலும் பக்திவழியிலும் வாழத் துணைப்புரிய வேண்டுவது பக்தர்களுடைய கடமையாகும். திருக்கோயில்களிலும், வழிபாட்டு நிலையங்களிலும், ராமாநுஜ கூடங்களிலும், இளைஞர்கள் மனது புண்படாத வகையில், வழிபட உதவுவது சமயத்தை வளர்ப்பதாகும். இனம், ஆசாரம் என்ற போர்வைகளில் தற்காலப் போக்கிற்குப் பொருந்தாதவைகளைத் திணித்தால் கடவுள் உண்மை வழிபாட்டிற்கும், மத முன்னேற்றத்திற்கும் இடையூறுதான் உண்டாகும். "அனைவருக்கும் பரமபதம் கிடைப்பதானால்! அடியேன் நரகம் புகுந்தால் என்ன?" என்ற காரேய் கருணை இராமநுசருடைய பரந்த விசாலமான திருவுள்ளம் கன்றாதபடி ராமசநுஜ தாசர்கள் நடந்து கொண்டால் 'விண்ணும் ஆள்வர் மண்ணூடே' என்ற நிலைமை ஏற்படும். பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடைய மதிப்பைப் பெறத் தவறியதால்தான்; தற்போதைய நிலைமை கவலைக்கிடமாகி வருகிறது. இதனைத் திவ்விய தேசங்கள் மடங்கள், ராமாநுஜ கூடங்கள், இறை வழிபாட்டு நிலையங்கள் இவைகளை நடத்துபவர்களும் சமயத்தை பரப்புநர்களும் கருத்தில் வைத்துக்கொண்டால், நம்சமயம் கேடுறாது. அறியாமையாலும்; அநுபவத்தாலும், ஏற்படும் பிழைகளைத் திருத்தி உதவ வேண்டும்.

பயனன்றாகிலும் பாங்கலர் ஆகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வதன்றோ, ஸ்ரீ வைணவ மரபு,

பாமர மக்களும் அறிந்து உய்யவேண்டும் என்ற பெரு நோக்கத்துடன் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் செவிக்கினிய செஞ்சொற்களாலான பாடல்களை அருளினார்கள். நமது சமயத்தைப் பரப்புவதற்காக வெளிவரும் வெளியீடுகளும், சொற்பொழிவுகளும் எல்லோரும் எளிதில் அறிந்து; உணர்ந்து பயன்பெறும்

முறையில் அமைதல் நலம் பயக்கும். இல்லையானால் இவைகள் காட்டில் எரிந்த நிலவாகும். அறியக் கூடிய முறையில் உரைகளும் வெளியீடுகளும் அமைந்தால்; இளைஞர்கள் கணிசமாக இவைகளினால் பயன்பெறுவார்கள். இந்நோக்குடன் புரியப்படும் தொண்டு பெருந்தொண்டாகும்.

உதாரணத்திற்காகவும், விரிவுக்கு அஞ்சியும் சிலவற்றையே விண்ணப்பித்துள்ளேன். இளைய சமுதாயத்தினரும் கடவுள் வணக்கத்திலும், பக்தி நெறியிலும் நிற்றலுக்கு அமைந்த சூழ்நிலையை அமைத்தால்,

எந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன்
ஏழ்படி கால் தொடங்கி
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம்.

என்று பெருமிதத்துடன் இளைய சமுதாயத்தினரும் பாடி மகிழும் வாழ்வு பெருகும்.

ஸ்ரீ வைணவ இளமை

திருத்துழாய், மணத்தோடே பிறக்கின்றது! அது போலவே நாமும் குழந்தைப் பருவம் தொடங்கியே திருமால் பக்தி உணர்வுடன் வளர வேண்டும்! இவ்வுயரிய நோக்கத்தைப் பரப்பும் வகையில், நமது ஸ்ரீ வைணவ இளைஞர் மகாநாடு, ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றது வருகின்றது:

''அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்,
ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும்
தன்மையளாய்
பிஞ்சாய்ப் பழுத்தாள்; ஆண்டாள்

என்று, மனம் மகிழ்ந்து, பக்தியுடன் நாளும் வாழ்த்து கின்றார்! நம் மணவாள மாமுனிகள்!

எனவே, இளமை தொட்டு பக்தியின் சூழ்நிலையில் வளர்வது, நம் மரபு! பிறப்பு உரிமை என்றும் கூறலாம்!

வயது என்ற வரம்பும், வாயிலும் உண்டோ!

திருமால் பக்திக்கு வயது என்ற வரம்பும், வாயிலும் இல்லை என்பது உலகு தொடங்கிய நாள் முதலாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

துருவன் கதை கேளீர் !

ஆழ்வார்கள் பாடல்களிலும் அடங்காதது துருவன் சரிதம். உலகில் ஏற்பட்ட பிறவிக்குக் காரணமான தந்தையின் அன்பு கிட்டாமல் போனது; சிறுவன் துருவனுக்கு. சிறு மாமனிசனான துருவன் எந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தையான திருமாலின் திருவருளே அடையத்தக்க அன்பு என்று தெளிந்தான். தவம் இயற்றினான்! தண் துழாய் அலங்கல் மார்பன் தமர்களில் தலைவனானான்! நேமி சேர் தடம் கையினானை நேரிலேயே கண்டான்! அவனை நாம் நேரில் காண முடியாத குறை தீர, ஓர் அரிய ஆழ்ந்த பொருள் கொண்ட புனித வழக்கம் ஏற்பட்டுள்ளது. நமது வாழ்க்கையில் மிகச் சிறந்த திருநாளான திருமண நாளிலே, 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்ற தந்தை திருமாலே'! எனப் புகட்டிய துருவனை நட்சத்திர வடிவில் சேவிப்பது ஒரு காரணத்தைப் பற்றியது. அதாவது, துருவன் காட்டிய வழியில் நின்று, துருவன் சாட்சியாகத் திருமண வாழ்க்கையையும் திருமால் பக்தி வாழ்க்கையாக அமைத்துக் கொள்வதேயாகும்.

துருவ நட்சத்திரம் பெரிது என்றால், துருவன் மேற்கொண்ட வாழ்க்கை லட்சியம் பெரிது என்றே பொருள். துருவ நட்சத்திரமே சுடர்விட்டு விளங்குவது என்றால், துருவன் கடைப்பிடித்த, திருமால் வழிபாட்டு நெறியே சுடர்விட்டுப் பொலிவது எனப் பொருள்.

எங்கும் போய்க் கரைகாணாது எறிகடல் வாய் மீண்டு ஏயும் வங்கங்களும் (கப்பல்களும்) துருவ நட்சத்திரத்தையே துணையாகக் கொண்டு, திசை தெரிந்து கரை சேர்வது, இன்றைக்கும், உண்மை. சம்சாரக் கடலில் ஆழங்கால்பட்டு அல்லல் உறும் நாமும், ''துளப நீண்முடியான் திருவடிகளே தஞ்சம்'' எனக் காட்டி அருளிய துருவனையே வழிகாட்டி

யாகக் கொண்டு, கரை ஏற வேண்டும் என்ற மறை பொருளையும் இது உணர்த்துகின்றது அல்லவா, வாழ்க்கைக் கடலில் அலை அலையாக எழும் சந்ததிகட்கு, எஞ்ஞான்றும் இந்த உயரிய 'குறிக்கோளை உணர்த்தவே; துருவனும் வட விண்ணில் மீனாக பக்திச் சுடர் விட்டு விளங்குகின்றான். மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் பாலமாகவும் அமைந்துள்ளான்.

பள்ளியில் ஓதிவந்த சிறுவன்

ஒத்துழையாமை வழியில் நின்று, சங்கொடு சக்கரம் ஏந்தினானைக் கண்டவன் துருவன். சத்தியாக்கிரக அறப்போர் வழியில் திளைத்து நின்று, தெள்ளிய சிங்கம் ஆகிய தேவனைக் கண்டவன் பிரகலாதன் என்னும் பள்ளி யில் ஓதிவந்த சிறுவன்! பாடசாலையின் படி ஏறாத, குழந்தை துருவன்! வகுப்பினின்றும், வெளியேறாது! ஆசானையும் அவமதிக்காது, அதே சமயத்தில் கருத்து வேற்றுமைக்காக மட்டுமல்ல—குறிக்கோளைக் கைவிடாது தனி நபர் சத்தியாக்கிரக அறப்போர் வழியில்; பாடசாலை அதிகாரிகளை மட்டும் அல்ல; அதை ஏற்படுத்திய அரசாங்கத்தையே எதிர்த்து வென்றவன் பிரகலாதன்.

> 'நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்று ஓராதார்
> கற்கின்றது எல்லாம் கடை'

என்று காட்டினான் பிரகலாதன்!

> அந்தியம் போதில் அரி உருவாகி அரியை அழித்தவனை
> பந்தனை தீரப் பல்லாண்டு பாடிய

பிரகலாத பாகவதன், அறப்போர் வீரன் மட்டும் அல்ல "அரி" போர் வீரனும்கூட!

நரசிங்க வைபவத்துடன் பிரகலாதனையும் சேர்த்து, பரக்க மங்களா சாசனம் செய்தருளியவர் மங்கை மன்னனே ஒரு அரச குமாரன் வைபத்தை, ஒரு அரச கவி பாடுவது பொறுத்தம் தானே!

திருவல்லிக்கேணியிலே சேவை சாதிக்கின்ற நரசிங்கப் பெருமான் தெளிந்த திருமுக மண்டலத்துடனும், தெளிந்த திருவுள்ளத்துடனும் விளங்குகின்றாராம்!

''தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக்கேணி கண்டேனே''

இதற்குக் காரணம் என்ன?

பிரகலாதனை ஆட்கொள்ள கோபத் திருக்கோலம் சாதிக்கலாமா?

சரி! பிரகலாதனை ஆட்கொள்ள அன்று தெள்ளிய சிங்கமானவன், இன்றும் திருவல்லிகேணியில் எழுந்தருளி யிருப்பது எதற்கு!

திருமங்கை மன்னனையும், அவர் வழிவந்த நம்மையும் ஆட்கொள்ளவே!

பிரகலாதனை ஆட்கொள்ளக் காரணம் என்ன?

பள்ளியில் ஓதிவந்தான் அந்த சிறுவனான பிரகலாதன். ஆசான் 'ஓம் இரணியாய நம' என்று சொல்லும்படித் தூண்டினான். இறைவனுடைய ஆயிரம் பெயர்களுக்கு, வித்தும் விளக்கமுமாக அமைந்துள்ள ''ஓம் நமோ நாராய ணாய'' என்னும் பெரிய திருமந்திரத்தைத் தன் திரு வாயால் மொழிந்து, அறிவுச்சுடர் கொளுத்தினான், பிரகலாதன்.

''பள்ளியில் ஓதிவந்த தன் சிறுவன்
வாயில் ஓர் ஆயிர நாமம்
ஒள்ளியவாகிப் போத...

இதோடு விஷயம் நிற்கவேண்டுமே! இல்லை! இது இரணியன் காதில் விழுந்தது. துளித்தது! அவனால்

பொறுக்க முடியவில்லை. தன் மகனே தன்னைக் கடவுளை விட உயர்த்திக் கொள்வதைத் தடை செய்வதைக் கண்டு பொங்கினான்,

— ..ஆங்கு அதனுக்கு

ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி!

என்ன செய்தான் பொறுக்காத இரணியன். இவன் செயல்களை மூன்றாக பிரித்துக் காட்டுகிறார் நாலு கவிப் பெருமான்.

1. பிள்ளையைச் சீறி 2. வெகுண்டு 3. தூண்புடைப்ப.

இந்த மூன்று இழிசெயல்களுக்கும் எதிராக நரசிங்க உருவில் வந்த இறைவன் செய்த செயல்களும் மூன்றே தானாம்.

இதோ மங்கை மன்னன் சாட்சியம்:

1. பிள்ளையைச் சீறியபோது தன் பக்தனான பிரகலாதனுக்கு இழைக்கும் தீமையைப் பொறாமல் இறைவன் பிறை எயிற்றைக் (கோரைப்பல்) காட்டி அசட்டுச் சிரிப்பு சிரித்தானாம்.

2. பிள்ளையை வெகுண்டபோது; இறைவன். தானும் அதிகமாகக் கோபித்துத் தன் சிங்கக் கண்களில் அனல் கக்க விழித்துக் காட்டினானாம்.

3. அடுத்து, தூணைப்புடைத்தான், இரணியன். இறைவன் எழுந்த நளியிருந்த தூணையா புடைத்து விட்டான் இரணியன்? இல்லை, அதைவிட, பாகவதனான பிரகலாதன் அந்தர்யாமித்வ நிலையில் வழிபட்ட தூணை யல்லவா புடைத்தான் அவன். அதனால் தான் இதுவரை மௌனமாகச் சிரித்து, எதிர்த்த இறைவன், இரணியன் தூணைப்புடைத்தபோது சுரங்கம் போன்ற தன் சிங்க வாயைத் திறந்து கார்ச்சித்து, ஆரவாரித்து, மூரி நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டானாம்!

"பிறை எயிற்று' அனல் விழிப் பேழ்வாய் –சிங்கம்"

இதோ, இந்த முழு நாடகத்தையும் காணலாம்;

கன்னி நன் மாட மங்கையர் தலைவன் காமரு சீர்க்கலி கன்றியின் பாடலிலே.

"பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்
வாயில் ஓர் ஆயிர நாமம்,
ஒள்ளிய வாகிப் போத, ஆங்கு அதனுக்கு
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி,
பிள்ளையைச் சீறி, வெகுண்டு தூண்புடைப்ப
பிறை எயிற்று, அனல் விழிப் பேழ்வாய்,
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக்கேணி கண்டேனே.

பிரகலாதன் ஓதிய 'அரிச் சுவடி'யைத்தான், அங்கமலத் தடவயல் சூழ் ஆலி நாடரான அருள்மாரி, ஆயிரம் பாடல்களால் அமைந்த தன் பெரிய திருமொழியின் ஆரம்பத்தில் தம் 'அரிச்சுவடி'யாக அமைந்துள்ளார். பிரகலாதன் பேசிய பெரிய திருமந்திரத்தின் பெருமையைத்தான், முதல் பத்துப் பாடல்களில் பரக்கப் பாடுகிறார் பரகாலர். ஆசானையும், இரணியனையும் முன்னிலைப்படுத்திப் பிரகலாதன் செய்த பேருரையின், பொழிப்புரையை, தமிழாக்கமும், கவியாக்கமும் செய்து, கலி கன்றி தரும் பாடலை இதோ கேளுங்கள்.

குலம் தரும்! செல்வம் தந்திடும்! அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்,
நிலந்தரச் செய்யும்! நீள் விசும்பு அருளும்!
அருளொடு பெருநிலம் அளிக்கும்!
வலம் தரும்! மற்றும் தந்திடும்! பெற்ற
தாயினும் ஆயின செய்யும்!
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்!
"நாராயணா!" என்னும் நாமம்,

''வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக'' என்று', பிரகலாதனைத் தழுவிக்கொள்ளும் பாக்கியத்தை இழந்தான் இரணியன். இப்பேறு சிங்கப்பெருமானுக்கே கிடைத்தது. இப்பாடலில் பிரகலாதனைக் குறிக்கும் 'தன் சிறுவன்' என்ற அடைமொழி 'தெள்ளிய சிங்கம் ஆகிய தேவன் தன் சிறுவன்'' என்று கொள்ளும்படியாகவும், அமைந்துள்ளதை ரசிகர்கள் காணலாம்.

'ஓதாது உணர்ந்த' இந்த இளம் பக்தனான பிரகலாதனை, ஸ்ரீ வைணவ உலகம் பிரகலாத ஆழ்வானாகப் போற்றி வணங்குகின்றது.

பக்த—துருவனும், பிரகலாதாழ்வானும் ஏழு சிரஞ்சீவிகளில் இருவராக இடம் பெற்றுள்ளனர். அதாவது பக்தி உணர்ச்சி என்றும் இளமையுடன் திகழ்கிறது என்பதுதான் பொருள்.

வில்லைத் தொலைத்த புருவத்தாள் வேட்கை

இளமையைப் பக்திக்காதல் வழியிலேயே வளர்த்த பெருமை ஸ்ரீ ஆண்டாளைச் சாரும். ஏனைய ஆழ்வார்களுடைய பக்திக்காதல்; மேட்டை எதிர்த்துத் தடைப்படும் வெள்ளம் போல இருக்கும். ஆண்டாளின் பக்திக்காதல் பள்ளத்தை நாடிப்பாயும் வெள்ளம் போன்றது; ஆழ்வார்களுடையது மேட்டு மடை! ஆண்டாளுடையது பள்ளமடை

மானிடவர்க்கு என்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!

என்று மன்மத பாணத்திற்கும் எதிரம்பு கோத்து நின்றது; ஆண்டாளின் பக்தி கனிந்த இளமையாகும்.

பழுதின்றிப் பாற்கடல் (விசாலமான கடல்) வண்ணனுக்கே பணி செய்து வாழ கருப்பு வில் மலர்க்கணைக் காமவேளைப் பணிகின்றாள் பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர் கோன் விட்டு சித்தன் கோதை.

நாச்சியார் திருமொழி இளைஞர் ஆழ்ந்து படித்து ஆராய்ந்து பயனடைய வேண்டிய தமிழ் அகப்பொருள் இலக்கியச் சுரங்கமாகும்.

"அண்டமும் நிலனும் அடி ஒன்றினால்
கொண்டவன் வரில் கூடிடு கூடலே"

என்று முழம் அளவு மண்ணிலே கூடல் இழைக்கும் ஆண்டாள் மூன்று உலகமும் அளந்த முதல்வரின் கதையை அடக்கிக்காட்டுகிறார்.

ஆண்டாள் தன் சோகத்தை வெளியிடுகிறாள்.

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூர் உறைவான் தன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால்; என்
பொருகயல் கண்ணிணை துஞ்சா"

அதனால் அவள் குயிலுக்கு விடுக்கும் வேண்டுகோளும்; அளிக்கும் பரிசும்.

"இன்னடிசி லொடு பாலமுதூட்டி
எடுத்த என் கோலக்கிளியை
உன்னோடு தோழமை கொள்வன் குயிலே
உலகளந்தான் வரக் கூவாய்"

"நாளை வதுவை மணம் என்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக் காணும்"

ஆண்டாளின் பாடல்கள், அட்சர லட்சம் பெறும். அவனியிலே இதற்கு இணை இல்லையாம்;

குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! உன் தன்னோடு,
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது—என்றும்,

இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று!

என்றும் வேண்டும் திருப்பாவையான கோதை தமிழ்: பாதங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும் வேதம் அனைத்துக்கும் வித்தாகும்.

நாட்டுக்கு மன்றாடிய நம்மாழ்வார்

இளமைப் பொலிவுடன் திகழ்ந்த இவ்வுலகை வாழ்வித்து அருளிய நம்மாழ்வார்; ஆழ்வார்களில் தலைவராவார்; திருவரங்கம் பெரிய பெருமாளுடைய திருவாக்காலேயே நம்மாழ்வார் என்று கொண்டாடப் பெற்றவர்.

கண்ணன் கழலினை—நண்ணும் மனம் உடையீர்
எண்ணும் திருநாமம்—திண்ணம் நாரணமே''

என்ற ஞானப்பாடல்; சங்கப் புலவர்கள் உச்சி மேற்கொண்டு போற்றியதாகும்.

எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்; இமையோர்
தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய்; அடியேன் செய்யும்
விண்ணப்பமே;

என்று திருவிருத்தத்தை ஒருமையில் ஆரம்பித்த இந்த குருகூர் நகரான்.

பொய்ந்நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும், அழுக்கு
உடம்பும்,
இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை!

வேண்டும் எனப் பன்மையில் மன்றாடுவது தமக்காக மட்டுமல்ல; நாட்டுக்காகவுமே! என்று தெளியக் கிடக்கிறது!

நமக்காக மன்றாடும் இவரை, நாமும், ''நம் ஆழ்வார்'' என்று கொண்டாடலாமே!

ஆளவந்த ஆசாரியர் :

ஆழ்வார்கள் கோஷ்டியிலே இளமையின் பொலிவைக் கண்டோம். ஆசாரிய கோஷ்டியிலும் இளமையின் பொலிவைக் காண்போம்!

சோழ தேசத்திலே, வித்வஜன கோலாகலன் என்பவன் தன்னை வெல்வாறில்லை என விருது முழங்கிப் பவனி வந்தான். மதம் பிடித்த யானையின் மத்தகத்தில் பாய்ந்து அதன் மண்டையைப் பிளக்கும் சிங்கக்குட்டியாக எழுந்தருளினார் யமுனைத் துறைவர்! மூன்றே கேள்விகளின் வித்வஜன கோலாகலனின் கொட்டத்தை அடக்கித் தம் மேதையின் உயர்வை வெளியிட்ட யமுனைத் துறைவராய் இளஞ்சிறுவனை வாரியெடுத்து; "என்னை ஆளவந்தீரோ" எனப் பாராட்டி மகிழ்ந்தாள் சோழ அரசி; யமுனைத் துறைவர், மணக்கால் நம்பியினால் திரு அரங்கனின் திருவடிகளுக்கு ஆட்படுத்தப்பட்டு ஸ்ரீ வைணவ மதத்தின் தலைவரானார். இவரே ராமாநுஜரின் பெரும் ஆசாரியரானார்! இராமாநுஜருக்கு, ஆளவந்தாரிடம் நேர்முக உபதேசம் பெற முடியாமற்போயிற்று; அப்படிப் பெறும் பேறு கிடைத்திருப்பின்; விண்ணுக்கும் மண்ணுக்கும் உருளலாம்படி படிகட்டியிருப்பாராம் நம் இராமாநுசர்!

ஸ்ரீ ரங்க சீடன்

நம் பெருமாள் தாமாக மாமுனிகளைத் தனித்து அழைத்து, "நீ மாறன் செந்தமிழ் வேதத்தின் செழும் பொருளை நாளும் இங்கு வந்துரை என்று ஏவினாராம்.

இது பொய்யில்லாத மணவாள மாமுனிகள் புகன்றது.

அவ்விதமே, திருவரங்கம் பெரிய திருமண்டபத்தில் மணவாள மாமுனிகளும் ஓராண்டுக்காலம் முழுவதும், திருவாய்மொழிக் காலட்சேபம் நடத்தினாராம்! இந்த ஓராண்டுகாலம் முழுவதும், திருவரங்கன் தன் திருவிழாக்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, காலட்சேபத்தை திருச்

செவி சாற்றினான். காலட்சேப பூர்த்தியில், காலட்சேபம் சாதித்தருளிய மணவாள மாமுனிகளுக்குத்தன் காணிக்கையைச் செலுத்த விரும்பினான் திருவரங்கன்! அதற்காக அவன் கொண்ட கோலம் இளமைக் கோலமே! இளம் பிள்ளையாக எழுந்தருளிய திருவரங்கன் வழங்கிய ஆசாரிய வணக்கப்பாடல் ஸ்ரீவைணவ உலகில் சிகாமணியாக விளங்கி வருகிறது!

இளைஞர் கடமைகள்

ஸ்ரீ வைணவ இளைஞர்கள் பாக்கியசாலிகள். மேற்கூறிய விசேடங்களால் ஸ்ரீ வைணவம் இளமையைப் போற்றிப் புகழ்ந்துள்ளது. இளமையும் ஸ்ரீ வைணவக் கோட்பாடுகளால் இசை பெற்றுள்ளது! ஸ்ரீ வைணவ இளைஞர்கள் இவைகளை மனதில் நன்கு பதிய வைத்து, தீதில் நன்னெறியாம் திருமால் திருநெறியில் நிற்றல் வேண்டும். ஸ்ரீ வைணவ நூல்களை நன்கு கற்க வேண்டும். ஸ்ரீ வைணவத்தைப் பரப்புவதற்காகத் தொண்டு புரிய வேண்டும், ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற திவ்ய தேசங்களுக்குள் சென்று வணங்கி வழிபட வேண்டும். சாதி, மொழி முதலிய தடைகளால் மனச் சோர்வு எய்தக் கூடாது வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும், பூசித்தும் பொழுது போக்க வேண்டும். புருடோத்தமன் பொன்னடி போற்றி (பகவத்—பாகவத தொண்டாற்றி) மனம் பூரித்து, நலம் பல பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்வோமாக!

கண்ணன்

"கற்கண்டு" என்று நினைத்தாலே மனதில் இனிக்கிறது. "கற்கண்டு" என்று சொன்னாலும் நாவில் தித்திக்கின்றது!

அப்படியேதான் "கண்ணன்" என்ற நாமமும்; கண்ணன் என்ற திருநாமத்தை நாம் மனத்தினால் சிந்தித்தால்; நம் உள்ளம் "தேன் ஊறி எப்பொழுதும் தித்திக்கின்றது" "கண்ணன்" திருநாமத்தை நாவினால் நவிற்றி இன்பம் எய்துகிறோம்"

"கண்ணன்" என்பது நயமாய மந்திரச் சொல் "கண்ணன்" என்ற சொல் எத்தனை உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. "கண்ணன்" என்னும் திருநாமம் ஆழ்வார்களை எப்படிக் கவர்ந்துள்ளது என்பதைக் காண்பதே நம் நோக்கமாகும்.

' கண்ணன்" என்பது தமிழ்ச் சொல்லாகும். கண்ணை உடையவன் கண்ணன் என்று பொருள்படும். எல்லோருக்குமே கண் உள்ளது. வடமதுரையில், தேவகி வாசுதேவரின் மகனாகப் பிறந்து, நடுஇரவில் யசோதை நந்தகோபர் மகனாகக் கோகுலத்தில் ஒளிந்து வளர்ந்த நாராயண நம்பியின் திருக்கண்களே ஈடும் எடுப்பும் இல்லாதவை, அவ்விதமான திருக்கண்களை உடையவனுக்குத் தானே, கண்ணன்" என்ற திருநாமம் ஏற்படும், பொருந்தும்,

யசோதை—நந்தகோபர் திருமாளிகையிலே ஆண் குழந்தை பிறந்த நற்சேதி எட்டியதாம் பெரியாழ்வாருக்கு, பார்த்ததுதான் தாமதம்; உடனே குழந்தைக்கு வைத்த முதற்பெயர், ''கண்ணன்'' குழந்தையின் கண்ணழகைச் சேவித்ததுமே வேறு பெயர் எப்படி வரும் எண்ணத்தில்?

''கண்ணன், கேசவன், நம்பி'' என்று பாடுகிறார்.

திரு ஆயப்பாடியிலே வெகு காலமாகத் தலைவராக அரசு செய்கிறார் நந்தகோபர். எனவே நந்தகோபர் திருமாளிகை என்றல்லவா கூறவேண்டும். பிறந்த உடனே கண்ணழகாலேயே வசீகரித்து தகப்பனாரின் எல்லா உடைமைகளுக்கும் தானே நிர்வாகனாகிவிட்டானாம் கண்ணன்?

அதனால் நந்தகோபர் இல்லம் என்றாவது, நந்த கோபர் முற்றம் என்றாவது கூறுவதற்கு இடமில்லையாம் எல்லாம் கண்ணனுடையது தானாம்.

கண்ணன்—பிறந்த இன் இல்

கண்ணன்—முற்றத்தில்

அவன் பிறந்ததைக் கொண்டாடும் ஆயர்கள் தூவிய எண்ணெயும், சுண்ணமும் கலந்து (சேறு) அளராகி விட்டதாம்.

பெரியாழ்வார் சேவித்த கண்ணழகைப் பிறரும் சேவிக்க வேணுமென்று அழைக்கிறார்.

''விண்கொள் அமரர்கள், வேதனை, தீர முன்,
மண்கொள், வசுதேவர்தம், மகனாய் வந்து,
திண்கொள் அசுரரைத், தேய வளர்கின்றான்,
கண்கள் இருந்தவா காணீரே கனவளையீர் வந்து காணீரே

பெரியாழ்வாரும், ஆயர் மங்கையரும் சேவிக்கக் கிடைத்த திருக் கண்களை நாமும் சேவிக்க வேண்டு மல்லவா?

திருவரங்கம் திருப்பதியில் திளைத்தவர்கள் தொண்டரபொடி ஆழ்வாரும், திருப்பாணாழ்வாரும்.

தொண்டர் அடிப்பொடி ஆழ்வாருக்குப் பத்தினி ஆழ்வார் என்பது ஒரு சிறப்பு, அரங்கனைத் தவிர ஒரு திவ்ய தேசத்துப் பெருமானையும் பாடாதவர்.

திருமாலை என்னும் பிரபந்தத்தின் கடைசிப் பாசுரமான 45—வது பாடலில் வட ''மதுரை மா நகரந்தன்னுள் 'கவளமால் யானை கொன்ற கண்ணன்'' தான் அரங்கன் என்று அடையாளம் காட்டுகிறார்.

அரங்களைப் பாதாதி கேசமான (அடிமுதல்—முடிவரை) சேவித்த திருப்பாணாழ்வார் அரங்க மாலான கண்ணனின் கண் அழகைக் கண்டு வியந்து விவரிக்கின்றார்!

அரங்கத்து அமலன் முகத்து

1. கரியவாகி, 2 புடைபரந்து, 3. மிளிர்ந்து, 4. செவ்வரி ஒடி, 5. நீண்ட 6. அப்பெரியாய கண்கள். —என்னை பேதமை செய்தனவே.

பிறந்த பிள்ளை கண்ணை விழித்த வண்ணமே இருந்தால் எப்படி? தூங்கவும் வேண்டாமா? அதோ! இந்திரனும், தேவலோகத்திலேயே தயாரிக்கப்பட்ட கிலுகிலுப்பையைக் கொண்டுவந்து விட்டானே ஆட்டி தூங்க வைக்க. குழந்தை கண்ணைத் திறந்திருந்தாலும் அழகு! தூங்குவதற்காக மூடினாலும் அழகு. இந்திரனுடைய கிலுகிலுப்பையைக் கேட்டுத் தூங்கும் குழந்தையைச் சேவியுங்கள்.

இந்திரன் தானும், எழில்உடைக் கிண்கிணி, தந்து, உவனாய் (அருகில்) நின்றான்! தாலேலோ, தாமரைக் கண்ணோ தாலேலோ!

குழந்தை உறங்கி விட்டது. வயிற்றில் ஒன்றுமில்லை. பால் அருந்த வேண்டாமா! தாய்க்குரலில் தாயன்புடன் அழைக்கின்றார் பெரியாழ்வார், யாரை? எந்தப் பெயரால்!

"கண்ணா"

"என் கார்முகிலே கடல் வண்ணா!"

காவலனே! முலை உணாயே

குடித்துவிட்டது குழந்தை உடனே உறங்கிவிடுமே மறுபடியும், அதற்குள் தலையைச் சீவிமுடிக்க வேண்டாமா ஆட்டிப் படைக்குமே, சாதுவான குழந்தையா இது, காக்கையைப் பிராக்குக் காட்டியல்லவா சீவிமுடிக்க வேண்டும். காக்கா! வந்து கண்ணனுக்குத் தலை சீவ வாயேன் என்று அழைக்கின்றார்.

கண்ணனை வந்து குழல் வாராய் அக்காக்காய்!
கார்முகில் வண்ணன் குழல்வாராய் அக்காக்காய்,

கண்ணன் வளர்ந்து விட்டான். கன்றுகளை மேய்த்து வருகின்றான். "காலி (கன்றுகள்) பின்னே வருகின்ற கடல் வண்ணன் வேடத்தை வந்து காணீர், என்று அழைக்கின்றார் பெரியாழ்வார் இந்த வேடத்தைக் கண்டதும் என்ன படுகிறது மனதில் அவன் மாப்பிள்ளையாகும் பருவத்தை அல்லவா அடைந்துவிட்டான். சரி இன்று முதல் கன்று மேய்க்க விடக்கூடாதே! எந்தப் பெயரால் அவனை அழைக்கத் திட்டம் செய்கிறார்.

"கண்ணாலம் செய்யக் கறியும், கலத்தரிசியும், ஆக்கி
வைத்தேன்
கண்ணா நீ தொட்டுக் கன்றின்பின் போகேல் கோலஞ்
செய்து இங்கே இரு"

மாடு மேய்க்கும் சாதாரண மாப்பிள்ளையா கண்ணன் அவனை உண்மையில் யார் என்று அறிந்து கொள்ள வேண்டாமா! இதோ, பெரியாழ்வார் வெளிப்படுத்துகிறார் கண்ணன் யார் என்பதை.

"கண்ணா"

நான்முகனைப் படைத்தவனே! காரணா! கரியாய், நான்முகனைப் படைத்த நாராயணனே இவன் இவனுக்குத் தகுந்த மனைவி பூமிப் பிராட்டியாரல்லவா இருக்க வேணும்.

பூமிப்பிராட்டியும் ஸ்ரீ ஆண்டாளாகப்பெரியாழ்வாரின் திருமகளாக அவதரித்து விட்டாள் கண்ணனைக் கலியாணம். செய்து கொள்ள.

1. கண்ணன் என்றும், (2) கரியான் என்றும், (3) நான்முகனைப் படைத்த தெய்வம் என்றும் பெரியாழ்வார் போற்றியபடியே தான் மணக்க விரும்பும் மாப் பிள்ளையை விவரிக்கின்றாள் ஆண்டாளும்.

1. கண்ணன்—என்னும் 2. கரும்—தெய்வம்

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் திவ்யப் பாசுரங்களின் மேன்மை சொல்லில் அடங்காது வடமொழியில் கீதையின் சுலோகங்களை அருளிய கண்ணனும் ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு நிகராகப் பாடமுடியாதாம்! கண்ணனும் விரும்பினால், ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களின் ஆழ்ந்த பொருள்களை, கருத்துகளைக் கற்று மகிழலாம்.

கண்ணன் எழுந்தருளியிருப்பதால் திருக்கண்ணபுரம் எனப்பெயர் என்று திருமங்கை ஆழ்வார் திருக்கண்ணபுரம் கண்ணனிடமே ஒரு விதக் கூச்சமில்லாமல், இந்த உண்மை யைக் கூறுகின்றார்! கீதையை அருளியபோது பிடித்திருந்த வெண்சங்கையும் தரித்திருக்கிறானே!

மெய்மை சொல்லில் வெண் சங்கம் ஒன்று ஏந்திய கண்ணா! நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம்! கவியின் பொருள் தானே.

திருமங்கை மன்னன் வயலாலி மணவாளனிடம் திருமந்திர உபதேசம் பெற்றார்! திருநறையூர் நம்பியிடம்

திருவிலச்சினையைப் பெற்றார், என்றாலும் அதே பெருமாளிடம் உண்மையைச் சொல்லித்தானே ஆக வேணும்.

முதியவரான மதுரகவியாழ்வார் மதுரைப்பதிக்கு எழுந்தருளினார்' பல புலவர்கள் தங்களுடைய நூல்தான் உயர்ந்தது என்று கொக்கரித்துக் கொண்டிருந்தனர்! பொற்றாமரைக் குளத்தில் உள்ள சங்கப் பலகை உயர்ந்த நூலைத்தான் ஏற்கும்.

மதுரகவியாழ்வார் செய்தது இதுவே; தமது குருவான நம்மாழ்வாரால் இயற்றப்பட்ட ஆயிரம் பாடல்களைக் கொண்ட திருவாய்மொழியிலிருந்து இரண்டு அடிகள் கொண்ட நடு பாடலை ஒரு ஓலையில் எழுதிச் சங்கப்பலகையின் மீது வைத்தார். அந்தப் பாடல்;

கண்ணன் கழலிணை நண்ணும் மனம் உடையீர்
எண்ணும் திரு நாமம் திண்ணம் நாரணமே.

என்பது.

சங்கப் பலகை ஏனைய புலவர்களின் நூல்களைக் கவிழ்த்துவிட்டு இப்பாடலையே ஏற்றி மிதந்ததாம் பொற்றாமரைக் குளத்தில்;

எனவே கண்ணன் என்னும் திருநாமம் நாராயணன் என்னும் திருநாமத்திற்குச் சமம். என்றாலும் இறைவனின் உயர்ந்த நிலை பரம பதத்தில் உள்ள நிலையைக் காட்டுவது, நாராயணன் என்னும் திருநாமம்,

கண்ணன் என்னும் திருநாமம், நம்மிடையே மானிட உருவில் வந்து கலந்து பழகக் கூடிய இறைவனின் எளிமையை எடுத்துக் காட்டுகிறது. எனவே நாராயண நாமத்தைக் காட்டிலும், கண்ணன் என்ற திருநாமமே கற்கண்டு நமக்கு எனவே கண்ணன் கழலிணைகளை எண்ணும் மனம் உடையோராக நாம் வாழவேண்டும்,

சேவகக் கண்ணன்

'இராமாயணத்தின் சிறப்பு, சிறையிருந்தவள் ஏற்றம்' என்பது ஆசாரியர்களின் திருவுள்ளம். உலக அன்னையான இலட்சுமிப் பிராட்டியார் சீதையாகத் திருவவதரித்து இராவணனுடைய அசோகவனச் சிறைவாசம் இருந்து, தேவர், முனிவர்களுடைய துயரத்தைத் தீர்த்ததுதான் இராமயணத்தில் உள்ள சிறந்த அம்சம் என்பது பொருள்; அது போலவே தூது சென்ற எளிமை மகாபாரதத்தின் பெருமையைக் காட்டுகிறது. அனைத்துலக நாயகனான திருமால் கண்ணனாகத் திருவவதரித்து, பாண்டவர்களுக் காகத் தன் கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு, தூதுவனாக நடந்தானாம் இலட்சம் சுலோகங்களையுடைய மகா பாரதக் காவியத்தில் பக்தர்களுக்குச் சுவையான பாகம் இதுவே.

சமண முனிவரான இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காவியத்தில், இறைவனது இந்தப் பரம எளிமைக்கு—சேவகத்திற்கு உருகிக் குரவையர் வாயிலாக மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம் கடந்தானை, நூற்றுவர்பால் நால்திசையும் போற்ற, படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது நடந்தானை; ஏத்தாத நா என்ன நாவே? நாராயண என்னாத நா என்ன நாவே?.' என்று எதிர்மறையில் வினவுகிறார். நரனான அர்ச்சுன னுக்காக தேர்த்தட்டிலே நின்று சாரத்தியம் செய்ததை ஒரு பெருமையாகக் கொண்டு, பார்த்தசாரதியாக நித்திய சேவை சாதிக்கின்றான் கண்ணன், திருவல்லிக்கேணியிலே.

ஆண்டவன் பக்தர்களுக்காகத் தனது மிக உயர்வையும் மதியாமல் அடிமைப் படுவதைப் பல கதைகள் நமக்கு விளக்குகின்றன. இறைவனின் இப்பெருங்குணத்தில் ஈடுபடுகிறார் பாரதியாரும் தமக்கே உரிய புதிய பாணியிலே இதை வெளியிடுகின்றார். "கண்ணன் என் சேவகன்!" என்ற மகுடமிட்டுக் கண்ணனை அனுபவிக்கும் முன்பு, சேவகனைப் பற்றி நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார் பாரதியார். சேவகன் என்றால் ஏதோ பழங்காலத்துச் சேவகன்—சொன்னபடி எல்லாம் நடப்பவன்—அடக்கமே உருவம் என்றெல்லாம் நாம் நினைத்து விடுவோம் அதற்காகப் பாரதியார் தற்காலச் சேவகனைச் சரியாக அறிமுகப்படுத்துகிறார். "கூலி மிகக் கேட்பார்." அதன்படியே நாமும் அள்ளித் தருகிறோம். ஆனால் அவர்கள், "கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்" வீட்டில் தலை போகிற காரியம் என்ன செய்வார்கள் "வேலை மிக வைத்திருந்தால், வீட்டிலே தங்கிடுவார்" வராததற்குக் காரணம் கேட்டால், விந்தையாக இருக்கும் அவர்கள் பதில்.

"பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்
வீட்டிலே பெண்டாட்டிமேல் பூதம் வந்ததென்பார்!
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்'

பேச்சுத்தான் இப்படி! நடத்தையோ வயிற்றெரிச்சல் தான். "ஓயாமல் பொய்யுரைப்பார் ஒன்றுரைக்க வேறு செய்வார்!" நமக்கு ஆகாதவர்களிடம் எப்படி எல்லாம் நடந்து கொள்ளுவார்கள்? "தாயாதியோடு, தனிஇடத்தே பேசிடுவார்! ரகசியமான சேதியா? சரி சரி "உள்வீட்டுச் சேதி எல்லாம், ஊர் அம்பலத் துரைப்பார்" மேலும், "என் வீட்டில் இல்லை என்றால்" போதுமே கழுத்தில் டமாரத்தையே மாட்டிக் கொண்டு, "எங்கும் முரசறைவார்" பாரதியார், "சேவகரால் பட்ட சிரமம் மிக உண்டு" என்றாலும், அவருக்குச் சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை"

எனவே, ஒரு தகுந்த வேலைக்காரனைத் தேடிக் கொண்டிருந்தார். இப்படி இடர்மிகுந்து வாடுகையில் பாரதியாருடைய அதிர்ஷ்டத்தைப் பாருங்கள், அவனாகவே எங்கிருந்தோவந்தான். வேலையும் கேட்டான். இந்த வேலைக்காரனுக்கு என்னவெல்லாம் தெரியும் என்றா கேட்கின்றீர்கள். அவனே சொல்வதைக் கேட்கலாமே, ''மாடு கன்று மேய்த்திடுவேன், மக்களை நான் காத்திடு வேன்'' அதாவது பகுத்தறிவுடையது, இல்லாதது என்ற வித்தியாசமில்லை. அஃறிணை உயர்திணை எல்லாவற்றை யும் காக்கமுடியுமாம் ''சின்னஞ்சிறு வேலைகளா? ஊம் வீடு பெருக்கி, விளக்கேற்றி வைத்திடுவான். அவன் கால் பட்டால் போதும்; வீடு தூய்மையாகிவிடும், ஒளிவீசும், அது மட்டுமா சொன்னபடி கேட்பான், என்ன வேலை யானாலும் கொடுங்கள். துணிமணிகள் தோய்த்திடுவான்? ஊளையிட்டு உயிரை வாங்கும் பாப்பா இருக்கிறதா சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே, ஆட்டங்கள் காட்டி, அழாதபடி பார்த்திடுவான். எவ ருடைய அழுகையும், துக்கமும் போய்விடுமாம் அவனைக் கண்டால்.

வீட்டைத் தானா அவன் காப்பான் காட்டு வழியானா லும், கள்ளர் பயமானாலும் வேலை நேரமும், கட்டுப் பாடும் கிடையாதாம். இரவில், பகலில், எந்நேரமானாலும் சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர் தம்முடனே சுற்று வேன் தங்களுக்கோர் துன்பமுறாமல்காப்பேன் என்பான், மிக்க உரை பல சொல்லி விருதுபல சாற்றுகின்ற இந்த ஆள் ஆரம்பிக்கிறதே, இப்படி இருக்கிறது, கூலிக்காகத்தான் அடி போடுகிறானோ, அந்தச் சந்தேகத்திற்கும் பதில் கிடைக்கிறது.

'ஐயனே தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏது மில்லை. நானோர் தனியாள்' கடைசியில் பார்த்தால் அவன்தான் மிச்சம். ஒண்டிக் கட்டைதான், எனவே

செலவுகள் கிடையாது. அவன் வயதையும் பார்க்கலாமே. நரை திரை தோன்றாவிடினும், ஆன வயதிற்கு அளவில்லை சரி வேலை செய்கிறவனுக்கு, ஏதாவது கொடுக்கத்தானே வேணும். இவனுக்கு அப்படி ஒன்றும் தேவையில்லை ஆனால், தேவரீர் ஆதரித்தாற்போதும் அடியேனுக்கு, கூலி என்று கொடுக்கத் தேவையில்லையாம்; பட்சமாக வைத்துக் கொண்டால் போதுமாம். ஏன் இப்படிச் சொல்லுகிறான். நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்கு, காசு பெரிதில்லை என்றான். அவனிடம் அன்பு செலுத்திவிட்டால் போதும் ஐந்து, ஐம்பது என்று கொடுக்க வேண்டியதில்லையாம்.

தற்காலச் சேவகர்களின் இலட்சணத்தை மேலே பார்த்தோம். இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு வேலைக்காரனா! இவன் பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே கண்ட பாதியாரும், களிப்புடனே அவனை ஆளாகக் கொண்டுவிட்டார். அதனால் என்ன பலன் ஏற்பட்டது. அன்று முதற்கொண்டு நாளாக நாளாகநம்மிடத்தே கண்ண னுக்குப் பற்று மிகுந்து வரப் பார்க்கின்றேன். கண்ணனு டைய பற்று மிகுந்ததால் என்னவெல்லாம் நன்மை கிடைத் தது. பாரதியாரின் 'கவிதா சாமர்த்தியம் போதவில்லை, ஒப்புக் கொள்ளுகிறார். கண்ணனால் பெற்றுவரும் நன்மை எல்லாம் பேசி முடியாது. சரி எப்படித்தான் கண்ணன் வேலை செய்கிறான், கண்ணை, இமை காப்பதுபோல், என் குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான் இமையிருந்தால் விழிக்கு அபாயமில்லை இவனிருக்கிறதால் பாரதியாருக்கும் அபாயமில்லையாம்.

கண்ணன் வீதி பெருக்குகிறான், வீடு சுத்தமாக்கு கிறான் தவறு கண்டு பிடித்தால் தமுக்கா போடுகிறான்? தாதியர் செய் குற்றமெல்லாம், தட்டியடக்குகிறான். குழந்தைகளிடம் எப்படி? பெரியவர்களுக்கு எல்லா வேலை களையும் செய்யாமல் போனால், அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள். ஆனால் குழந்தைகள் விஷயம் அப்படி யல்லவே அதனால்தான கண்ணன!

மக்களுக்குவாத்தி வளர்ப்புத் தாய்
வைத்தியனாய் ஒக்கயம் காட்டுகிறான்

பொருள்கள் என்றால் மிக அலட்சியம் வேலைக்காரர்களுக்கு; விலைவாசிகளின் கஷ்டம் ஒன்றும் தெரியாது அவர்களுக்கு. கண்ணனோ, ஒன்றும் குறைவின்றிப் பண்டமெல்லாம் சேர்த்து வைத்துப் பால் வாங்கி, மோர் வாங்கி, வைப்பான். இது மட்டுமா? இந்தப் பொறுப்பை ஆற்ற வேண்டியவர்கள் வீட்டுப் பெண்மணிகள்! சோம்பலும் அறியாமையும் அகன்றால்தானே, அவர்கள் இவைகளைக் கவனிப்பார்கள். அப்படியிருந்தும் பெண்டுகளைத் தாய் போல் பிரியமுற ஆதரித்து வீட்டில் எல்லோருக்கும் கண்ணன் நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் விளங்குகிறான்.

பாரதியார் ஐயப்பட ஆரம்பித்தார் இவைகள் சாதாரண வேலையாளின் குணங்களல்லவே. தெய்வத் தன்மைகள் தாம் ஆனாலும், அவன் பார்க்கிற பார்வையைப் பார்த்தால் வேலைக் காரனாகவே தோன்றுகிறானே பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் எங்கிருந்தோ வந்த இவன் சந்தேகத்துக்கு இடம் வைகக்கமல், தன்னை இடைச்சாதி என்று சொல்லிக் கொண்டான். இத்தகைய கண்ணனை அடைந்த பாரதியாருக்கு ஏற்படும் பெருமையைப் பாருங்கள், ''இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்?''

''உண்ணுஞ் சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையு
மெல்லாம்'.
''கண்ணன் எம்பெருமாள் என்றே கண்கள் மல்கி''

என்று உருகினார் நம்மாழ்வார்!

''சேம நல்வீடும் பொருளும் தருமமும் சீரிய நல்
காமமும் என்றிவை நான் கென்பர் நான்கினும்
கண்ணனுக்கே
ஆம் அது காமம் அறம், பொருள், வீடு இதற்கென்
றுரைத்தான்;
வாமனன் சீலன் இராமாநுசன் இந்த மண்மிசையே''

என்று அனைத்து வாழ்க்கைப் பேறுகளையும் கண்ணனுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென இராமானுசர் உபதேசித்தருளியதைத் திருவரங்கத்து அமுதனார் இராமானுச நூற்றந்தாதியில் சாதித்தருளுகின்றார்.

நாம் இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். அவன் நம் வேலைகளையெல்லாம் முடித்துவைப்பான்; உடனிருந்தும், முன்னிருந்தும் என்று மகான்கள் உபதேசித்தருளிய பெரும் உண்மையை மகாகவி பாரதியார், புதுமை மெருகு கொடுத்து இப்படியெல்லாம் நம்மை ரசிக்க வைத்துள்ளார் மேலும்!

"எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம் இளமாண்பு சீர் சிறப்பு நற்கீர்த்தி
கல்வி, அறிவு, கவிதை

முதலான ஒளிசேர் நலமனைத்தும் கண்ணனால் ஓங்கி வருமாம்! அருச்சுனா சகல பற்றுக்களையும் விடுவாயாக. என்னையே சரணாகப் பற்றுவாயாக நான் காப்பாற்றுகிறேன். எனக் கண்ணன் கீதையில் அருளியதைக் கடைப் பிடித்து!

கண்ணனை நான் ஆட்கொண்டேன்!

கண்டு கொண்டேன்; கண்டு கொண்டேன்

கண்ணனை (நான்) ஆட்கொள்ளக்

காரணமும் உள்ளனவே

எனத் தன் எக்களிப்பை வெளியிடுகின்றார், வரகவி சுப்பிரமணிய பாரதியார்! நம் கவலைகளை எல்லாம் கண்ணனிடம் ஒப்படைத்தால், அவைகளை அவனே நிறைவேற்றி வைப்பான் என்ற மயர்வறும் மதிநலத்தைப் பெறுவோமாக!

திரு நாராயணபுரம்

இராமாநுசர் ஸ்ரீ வைணவ மதத்திற்குச் செய்த சேவை மிகவும் மகத்தானது, ஆழ்வார்களுடைய பாடல்களை எல்லாக் கோயில்களிலும் விசேஷங்களிலும் ஓதும் படி நியமித்தார்.

ஆழ்வார்கள் பாடியுள்ள தலங்களே திவ்ய தேசங்கள் என்று சிறப்பித்துக் கூறுவார்கள்.

இப்படியாக திவ்விய தேசங்கள் என்று போற்றப்படுபவை 108 தலங்களாகும். இவற்றுள்ளும் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் தலங்கள் நான்கு.

அவையே 1. திருவரங்கம்; 2. திருமலை, 3. பெருமாள் கோயில் எனப்படும் காஞ்சி அல்லது கச்சியம்பதி, 4. மேல் கோட்டை என்று பொது மக்களால் அழைக்கப்படும் திருநாராயணபுரம். திருவரங்கத்தை,—போக மண்டபம் என்றும், திருமலையை-புட்ப மண்டபம் என்றும், காஞ்சியை —யாகமண்டம் என்றும் திருநாராயணபுரத்தை—ஞான மண்டபம் என்றும் ஸ்ரீ வைணவர்கள் போற்றுவார்கள்.

இந்த நான்கு திவ்ய தேசங்களும் மிகச் சிறப்படைந்தமைக்குக் காரணம் நம் இராமாநுசரே. இராமாநுசர் இந்த நான்கு திவ்ப தேசங்களிலும் பல காலம் வாசம்புரிந்து இத்தலங்களை மிகவும் சிறப்பாகப் பரிபாலித்து வந்தார்,

அவர் ஏற்படுத்திய நடைமுறைகள் படியே இன்றும் இத்தலங்களை நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

திருநாராயணபுரம், கர்நாடக மாநிலத்தில்—பங்களூரிலிருந்து மைசூர் செல்லும் நெடுஞ்சாலைக்கு அருகாமையில் உள்ளது. மைசூருக்குச் சமீபம். இராமாநுசரால். திருநாராயணபுரம் சிறப்படைந்ததைப் பற்றிக் காணலாம், திருநாராயணபுரத்திற்கு அடியேன் குடும்பத்துடன் சில தடவை சென்று அனுபவித்துள்ளேன். ஸ்ரீரங்கத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்ட சோழ மன்னன் வைணவ விரோதி. நம் இராமாநுசரைக் கொடுமைப் படுத்த முயன்றார். எனவே சீடர்களின் வேண்டுகோளின்படி இராமாநுசர் சோழ நாட்டைவிட்டு கர்நாடக தேசத்தில் உள்ள திருநாராயணபுரம் சேர்ந்தார்.

கர்நாடக மன்னன் ஜைன மதத்தில் சேர்ந்திருந்தான். ஜைனர்கள் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது, அவர்களை வாதில் வென்று அவர்களையும், கர்நாடக மன்னனையும் ஸ்ரீவைணவராக்கினார் இராமாநுசர்.

இராமாநுசர் ஜைனர்களை வென்றதற்குச் சான்றாக இன்றும் திரு நாராயணபுரத்தை அடுத்த தொண்டனூரில் ஆதிசேடனின் விரித்த படங்களுடன் இராமாநுசர் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். மன்னனும் வைணவனாகி விஷ்ணு வர்த்தனன் என்று பெயர் சூடினான்.

விஷ்ணு வர்த அரசனின் துணையுடனும், வைணவத்தைத் தழுவிய ஜைனர்கள் பல்லாயிரக்கணக்கானவர் உதவியுடனும் தோண்டனூரில் மிகப் பெரிய ஏரியை ஸ்ரீ இராமாநுசர் ஏற்படுத்தினார்.

ஸ்ரீ வைணவ பக்தர்கள் குறைந்து விட்டகாரணத்தால் திருநாராயணபுரம் கோயில் மிகவும் சேதமாகி, பூசையற்றுக் கிடந்தது. இராமாநுசருடைய கனவில் திருநாராயணப்பெருமாள் தோன்றி தாம் இருக்கும் இடத்தைக்

குறிப்பிட்டு, தமது கோயிலைத் திருப்பணி செய்து புதுப் பிக்க நியமித்தார்.

இராமாநுசரும் புற்று மூடப்பட்டு இருந்த திரு நாராயணப் பெருமாள் சந்நிதியைப் புதுப்பித்தார்;

திருநாராயணப் பெருமாளும், அடுத்துள்ள யதுகிரி நாச்சியாரும் மிக்க அழகாகச் சேவை சாதிப்பார்கள் கர்நாடக தேச அலங்கார பாணியின் அம்சங்களை இத்தலத்தில் பெருமாளையும், தாயாரையும் சேவிக்கையில் நன்கு ரசிக்கலாம்.

திரு நாராயணபுரத்தில் உள்ள திருக்குளத்திற்கு கல்யாணி தீர்த்தம் எனப் பெயர். இத்திருக்குளத்தில் இராமாநுசர் நீராடி வந்தனைகள் செய்து கொண்டிருந்த சமயம், சோழ தேசத்தில் தம்மை வருத்திய, கிருமி கண்ட சோழன் இறந்துபோன சேதி எட்டிய கதை மங்களமான சேதியாக ஏற்று ஸ்ரீ உடையவர் "கல்யாண்" என்ற படியால் இத்திருக்குளத்திற்குக் கல்யாண தீர்த்தம் எனப் பெயர்.

திருநாராயணபுரத்தைச் சூழ்ந்தபடி எட்டு தீர்த்தங்கள் உள்ளன. அந்த தீர்த்தங்கள் அஷ்ட தீர்த்தங்கள் என அழைக்கப்படுகின்றன!

திரு நாராயணபுரத்தில் ஸ்ரீ எம்பெருமானார் 12 ஆண்டுகள் தங்கியிருந்தார். ஒரு சமயம் வெள்ளைத் திரு மண் கிடைக்கவில்லை. ஸ்ரீ பாஷியக்காரர் மிக்க கவலை யுடன் துயில்கையில் திருநாராயணப் பெருமாள், திருநாராயணபுரத்தைச் சூழ்ந்துள்ள மலையடிவாரத்தில் வெள்ளைத் திருமண் கிடைக்கக் கூடிய இடத்தைக் குறிப்பிடவும். அவ்விதமே தோண்டிப் பார்த்ததில் வெள்ளைத் திருமண் கிடைத்ததாம். இன்றும் திரு நாராயணபுரம் வெள்ளைத் திருமண் உயர்ந்ததாக உள்ளது.

திருவீதிகளில் வாகனங்களில் எழுந்தருளி விழாக் கண்டருளிய உற்சவ மூர்த்தியை முகலாய மன்னன் திரு நாராயண புரத்தைக் கொள்ளையடித்த சமயம் டில்லிக்கு எடுத்துச் சென்று விட்டதாக கேள்விப்பட்டார்.

உடனே ஸ்ரீ உடையவர் பல்லாயிரக் கணக்கானப் பக்தர்களுடன் டில்லிக்குச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவனை மகிழச் செய்து உற்சவமூர்த்தியைத் தரும் படி வேண்டினார்;

உற்சவமூர்த்தியை முகலாய மன்னன் மகள் மிக்க காதலுடன் பாராட்டி வந்தாள். "உடையவரும் அவ் விளவரசியின் அந்தப்புரம் சென்று உற்சவப் பெருமாளை" என் செல்லப் பிள்ளயாய்! வாராய்!" என அழைக்கவும்; செல்லப் பிள்ளையும் ஓடி குதித்து வந்து ஸ்ரீ உடையவர் மடியில் அமர்ந்து கொண்டார் ஒரு குழந்தைபோல.

இப்படி ஸ்ரீ இராமாநுசர் 'செல்லப் பிள்ளையே!' என அன்புடன் அழைத்ததால் இந்த உற்சவ மூர்த்திக்கும் செல்லப்பிள்ளை என்று தமிழிலும், சம்பத்குமாரர் என்று வடமொழியிலும் திருநாமங்கள் ஏற்பட்டன. இம்மூர்த்திக்கு ராமப்பிரியர் எனவும் ஒரு திருப்பெயர் உண்டு. அயோத்தி யில் ஸ்ரீராமபிரானால் பூசிக்கப்பட்டதால் இப்பெயர் உண்டாயிற்றாம்.

செல்வப் பிள்ளையின் விழாக்களில் வைர முடி சேவை மிகவும் சிறப்பானது. அன்று செல்வப் பெருமாள் கருடன் மீது ஏறி மிக விலை உயர்ந்த திருமுடியை சாற்றிக் கொண்டு இரவில் எழுந்தருளுவார். வைண தேவன் என்றால் கருடன். வைண தேவன் மீது காட்சியளிக்கையில் அணியும் முடி வைணமுடி. பிறகு இதைவைரமுடி என்று பொதுமக்கள் கூறுவார்கள்.

மைசூர் மன்னன் அளித்த இராசமுடியை அணிந்து பெருமாள் எழுந்தருளுகையில் இராசமுடி சேவை என்பார்கள்.

ஸ்ரீ உடையவர் இத்தலத்தில் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தினார். தீண்டப்படாத மக்கள் என்று கூறப் பட்டவர்கட்கு இராமாநுசர் திருக்குலத்து அடியார்கள் எனப் பெயரிட்டு, அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை யும் அளித்தார். அவருக்குப் பின் இந்த உரிமை கால வழக்கில் தேய்ந்து வைண முடிசேவை சமயம் மட்டும் மூன்று நாட்களுக்கு திருச்சுற்றுகளில் மட்டும் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. மகாத்மா காந்தி அடிகளின் பெருமுயற்சியால் இன்று இந்திய தேசத்தில் எல்லாக் கோயில்களிலும் அரிசன ஆலய வழிபாடு சட்டப்படி பாதுகாக்கப்பட்டுள்ளது.

திருநாராயணபுர ஆலயத்தின் எதிரில் உள்ள மலையில் யோக நரசிங்கப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். மலை ஏறுவது சுலபம் தான். யோக நரசிம்மப் பெருமாள் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறார். இந்த மலையின் உச்சியில் இருந்து பார்த்தால் திருநாராயணபுரமும், தொலைவில் மைசூரும் தெரியும்.

ஸ்ரீ எம்பெருமானார் திருநாராயணபுரத்தில் தமது கைங்கரியங்கள் முடிவு பெற்றதும் திருவரங்கம் செல்ல விரும்பினார். சீடர்கள் மிகவும் வருத்தமுற்று அவரைப் போன்ற ஒரு திவ்ய திருமேனியை ஏற்படுத்தித்தரும்படி வேண்டினர் அவ்விதமே அவரைப் போன்ற அழகான வடிவும் ஏற்படுத்தப்பட்டது. சீடர்களுக்குத் திருப்தி இல்லை இராமாநுசரைப் போன்றே அவரது திருவடிவும் தம்முடன் பேச வேண்டும் எனச் சீடர்கள் வேண்டினர்.

தமது திருவடிவுக்கு முன் ஒரு திரையை இடச் செய்து, 'அருளப்பாடு' நம் இராமாநுசன்! என்று அர்ச்சகரைக் கொண்டு அழைக்கவும். உள்ளிருந்த இராமாநுச வடிவும் நாயந்தேன்! நாயந்தேன்! என்று பதில் தந்தது. பெருமாள் சார்பில் மரியாதை செய்ய அர்ச்சகர் இப்படி அழைப்பதும் அழைக்கப்பட்டவர் பரம பக்தியுடனும் பணிவுடனும் இப்படி பதில் உறைத்துக் கொண்டு வருவதும் வழக்கமாக ருந்து வருகிறது.

இப்படியாக இத்தலத்து இராமாநுசர் பேசிய—படியால் இவரைப் ''பேசும் எதிராஜர்'' என்று போற்றுவார்கள். இராமாநுசரின் சீடர்களின், அதாவது தமர்கள்—மிகவும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டபடியால் இத்தலத்தின் எழுந் தருளியுள்ள இராமாநுசரின் வடிவை ''தமர் உகந்த திருமேனி'' எனக் கொண்டாடுகின்றனர்.

இன்னும் ஒரு குறையிருந்தது. இத்தலத்திற்கு ஆழ்வார்கள் பாடல் இருந்தால் தான் திவ்விய தேசம் எனச் சிறப்பிக்கப்படும். எனவே அக்குறையும் தீர இராமாநுசர் இத்தலத்திற்கு; நம்மாழ்வார், திருவாய்மொழியில் ஒரு நாயகமாய் என்று தொடங்கும் பத்துப் பாடல்களை அளித்தருளினார்.

அதன் முதல் பாசுரம் இதுவே!

ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்,
கருநாய் கவர்ந்த காலர், சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாராயணன் தான் காலம் பெறச் சிந்தித்து
உய்ம்மினோ!

ஸ்ரீ வைணவ தரிசனம் மிக எளியது. இதனைக் கடைப் பிடிக்க மிகச் சுலபமான வழிகளைத் தன் சீடர்களுக்கு உபதேசித்துக் கொண்டு வந்த ஸ்ரீ உடையவர் கடைசியாகச் சொன்ன சுலபமான அறிவுரை.

ஒரு நாளாகிலும், திருநாராயணபுரத்தில் குடிசை போட்டிருங்கள்! ஒரு நாள் திருநாராயணபுர வாசம் செய்தால் போதுமாம். சகல ஸ்ரீ வைணவ சம்பத்தும் கிடைக்குமாம். எனவே இதுவரை திருநாராயணபுரம் சென்று சேவிக்காதவர்கள், எப்படியாவது ஒரு முறை யாவது திருநாராயணபுரம் சென்று ஸ்ரீ திருநாராயணப் பெருமானையும், யதுகிரி நாச்சியாரையும், ஸ்ரீயோக நாசிம்மரையும், ஸ்ரீ செல்வப் பிள்ளையையும் பேசும் எதிராஜரையும் சேவித்து மகிழுப்படி வேண்டிக் கொள்ளு கிறேன்.

கடவுள் பக்தியும் நம் நாடும்

இந்திய நாடு மதப் பற்றுடைய நாடு. கடவுள் பக்தி மிகுந்த நாடு. மேல் நாட்டவர்களும், நம் இந்திய நாட்டின் மதக்கொள்கைகளைப் பற்றியும், கடவுள் பக்தியைப் பற்றியும் மிகவும் கொண்டாடுகின்றனர். கடவுள் பக்தியின் அடிப்படையில் அவர்கள் வாழ்க்கை அமையாததால், எவ்வளவு செல்வம் குவிந்திருந்தாலும், அவர்கள் வாழ்க்கையில் அமைதி இல்லை. பரஸ்பரக் கூட்டுறவு இல்லை. வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு, செய்து கொள்ளும் தற்கொலைகளுக்குக் கணக்கில்லை.

வாழ்க்கையில் பொருள்வளம் அற்றவர்களும், அமைதியாகவும், பண்புடனும் வாழ உதவுவது, கடவுள் பற்றும் மதக் கொள்கைகளும்தான். அழியும் உலக வாழ்வையே மதித்து, மாறிவிடும் செல்வ வளப்பத்தை நம்பி வாழாத நாடு நம் நாடு. செம்மையிலும், வறுமையிலும், "கடவுள் செயல்" என, ஏற்றத்தாழ்வுகளுக்கு அஞ்சி வருந்தாமல், நாம் வாழ உதவுவது கடவுள் பக்தியேயாகும். நம்முடைய ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இதனையே உபதேசித்துள்ளார்கள். இவ்வழியில் நிற்பது நம் கடமை. பணத்தால் ஒருவரை மதிப்பதைவிட அவருடைய குணத்தாலும் பக்தியாலும் மதிப்பது நலம்.

மாதரும் மதமும்

நம் நாட்டின் மதமும், கடவுள் பக்தியும் வளர மிகவும் உதவியவர்கள் மாதர்களே. ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு சிறு கோயில் அல்லது பக்திக்கூடம் உண்டு. இவைகளைத் தினமும் சுத்தம் செய்து விளக்கி, திருவிளக்கேற்றி லட்சுமிகரமாக வைப்பார்கள் மாதர்கள். வெள்ளி, சனி விசேஷ கிழமைகளில் வீடுகளில் விசேஷ தெய்வாம்சம் ஏற்பட மாதர்கள் செய்யும் பணிகள், பக்தி வளரச் செய்யும் உதவிகளாகும்!

குழந்தைகளுக்குக் கடவுள் பக்தியை ஊட்டுவதை. மாதர்கள் தம் பெருங்கடமையாக்கிக் கொண்டுள்ளனர். வீட்டில் பெருந் துன்பங்கள் ஏற்படவிருந்தால், உடனே இறைவனை நினைத்து பிரார்த்தனை செய்து கொள்வது முதலில் மாதர்களே.

கிருஷ்ண பக்தியில் மிகவும் ஈடுபட்டவர் பெரியாழ்வார் கண்ணனைத் தொட்டிலிலிருந்து வளர்த்து, மணம் புரியும் வரை அநுபவித்தார். இவ்வளவு பருவங்களையும், பலவித வளர்ச்சிகளையும் நன்கு அநுபவிப்பதற்காகப் பெரியாழ்வார் தாயுள்ளத்தையே துணையாகக் கொண்டார். யசோதையாக தம்மை மாற்றிக்கொண்டதால்தான் அவர் கண்ணனை நன்கு அநுபவிக்க முடிந்தது.

பள்ளமடையான பக்தி

அன்பு உணர்ச்சியில் புனிதமும், சக்தியும் மாதர்களிடம் தான் செம்மையாகக் காணப்படும். இறைவனிடம் அன்பு உணர்ச்சியை வெளியிட விரும்பிய ஆழ்வார்கள், தங்களை நாயகிகளாக அமைத்துக் கொண்டார்கள். பராங்குச பரகால நாயகிகளின் மேன்மையை யாவரும் அறிந்ததே!

இவர்களுடைய பக்தி, மேட்டுமடையாகவே அமைந்தது நம் அன்னை ஆண்டாளுடைய பக்திக்காதல் பள்ளமடை

யாக அமைந்தது. இயற்கையாக அமைந்தது. அவருடைய பக்திக் காதல் பாடல்களுக்கு உலகில் ஈடு காண முடியாது என்பது மிகப் பெரிய அறிஞர்களுடைய அபிப்ராயமாகும்!

ஸ்ரீ வைணவத்திற்குத் தமிழ் நாடு தந்த பரிசு

ஸ்ரீ வைணவத்திற்குத் தமிழ்நாடு தந்த பரிசு ஆண்டாள் தான்! பூமாலையும் பாமாலையும் தொடுத்து இறைவனுக்குச் சமர்பித்த பெருமை ஆண்டாளுடையதாகும்! ஆண்டாளுடைய திருப்பாவை, வேதம் அனைத்துக்கும் வித்தாகும்! பாதகங்கள் தீர்க்கும், பரமன் அடி காட்டும்! திருப்பாவையை ஒவ்வொரு பெண்மணியும் அவசியம் மனப்பாடம் செய்து, வணக்கப் பாடல்களாகப் பாடிக் கொண்டிருக்க வேண்டும். குடும்பத்தில் மற்றவர்கட்கும் கற்றுத்தரல் வேண்டும். சிற்றஞ்சிறு காலே பாசுரம்தான் சிகரமான பாசுரம்.

"இன்றைப் பறை கொள்வான் அன்று காண், கோவிந்தா,
எற்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும், உன் தன்னோடு
உற்றோமே, யாவோம், உனக்கே நாம், ஆட்செய்வோம்,
மற்றை, நங்காமங்கள் மாற்று"

என்பதுதான் ஒவ்வொரு பக்தரும் செய்யவேண்டிய பிரார்த்தனை.

குன்றாத வான் போகம் தன்னை இகழ்ந்து; பெரியாழ்வார் திருமகளாராய்! திருவாடிப்பூரத்தில், நமக்காக அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தருளினார். ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய், பிஞ்சாய்ப் பழுத்தாளைப், பக்தியுடன், நாம் வாழ்த்துவதே நம் மனதிற்கு மகிழ்ச்சி!

ஸ்ரீ வைணவத்திற்குத் தமிழ்நாடு தந்த தனிப்பெரும் பரிசு ஸ்ரீ ஆண்டாள். ஸ்ரீ ஆண்டாள் தமிழுக்குத் தந்த பரிசுகள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியுமாகும்!

திருப்பாவையிலே கோவிந்தனுடன் கூடியிருந்து குளிர்ந் தார்! திருமொழியிலே நம் நாச்சியார் தனித்திருந்து தவித்தார்! காமதேவன் காலில் [விழுந்தார். சங்கொடு சளைத்தார்! கூடலைக் கூடிடக் கோரினார்! குருந்திடைக் கோவார்த்தனனைக் கூறை பணிக்கக் கும்பிட்டார்! குயில் விடு தூது! அவர் குரல் நறும் தேனே! மேகவிடு தூதும், அவர் மோகம் படும் பாடே! மாலிருஞ்] சோலையான் அவர் தொடுத்தளித்த மலர் மாலையான்! கார்க்கோடல் பூக்களும், மேல் தோன்றிப் பூக்களும், கோவை மணாட்டி யும் முல்லைப் பிராட்டியும் பாடும் குயில்களும், நடமாடும் மயில்களும், மழையும், கடலும் நாகணைக்கே சென்று, அவர் நடலை நோய் உரைக்குமாம்! கண்ணைமூடினாலும், கனவில் நினைத்துக் கண்ணனைக் கலியாணம் செய்து கொள்வார்!

மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து அவரைக் கைத்தலம் பற்றினால்; அவனுடைய புக்ககம் செல்ல வேண்டுமல்லவா! இதோ அவர் புக்ககம் செல்லப் பதைப் பதையும், பரபரப்பபையும் பார்க்கலாம்!

மதுரைப் புரத் தென்னை உய்த்திடுமின்!
ஆயர் பாடிக்கே என்னை உய்த்திடுமின்!
நந்தகோபாலன் கடைத்தலைக்கே என்னைஉய்த்திடுமின்!
யமுனைக் கரைக்கு என்னை உய்த்திடுமின்!
பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின்!
பத்த விலோசனத்து என்னை உய்த்திடுமின்!
பாண்டி வடத்தென்னை உய்த்திடுமின்!
கோவர்த்தனத்து என்னை உய்த்திடுமின்!
துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்!

பொறுமைக்கு இது தருணமன்று: "போவேன் புறப் படுவேன் பாரீர்" என்று விரைந்து கொண்டே, எதிர்ப்படு! பவர்களை!

அவர் கேட்பதும்:	அவருக்குக் கிடைக்கும் விடையும்:
இங்கே போதக் கண்டீரே?	விருந்தாவனத்தே கண் டோமே!
குணங்கு நாறிக்குட்டேற்றை கோவர்த்தனனைக் கண்டீரே?	மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண் டோமே!
ஏலாப் பொய்கள் உரைப் பானை இங்கே போதக் கண்டீரே?	மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண் டோமே!
என்னை ஈர்த்துக் கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக் கண்டீரே?	வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே கண் டோமே!
ஏதும் ஒன்றும் கொளத்தாரா ஈசன் தன்னைக் கண்டீரே?	வீதியார வருவானை விருந் தாவனத்தே கண்டோமே!
புருவம் வட்டம் அழகிய பொருத்தம் இலியைக் கண்டீரே?	விரியும் கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண் டோமே!
கருத்தைப் பிழைத்து நின்ற அக்கருமா முகிலைக் கண்டீரே?	விருத்தம் பெரிதாய் வரு வானை விருந்தாவனத்தே கண்டோமே!
அளிநன்குடைய திருமாலை ஆழியானைக் கண்டீரே?	மிளிர நின்று விளையாட விருந்தாவனத்தே கண் டோமே!
வீட்டைப் பண்ணி விளை யாடும் விமலன் தன்னைக் கண்டீரே?	வேட்டையாடி வருவானை விருந்தாவனத்தே கண் டோமே!

வேட்டையாடியது ஸ்ரீ ஆண்டாள் மனமே! ஆம்! வேட்டை ஆடப்பட்டதும் அவள் மனமே. இந்த பக்தி இலக்கியத்திற்கு இணையும் உண்டோ! ஈடும் உண்டோ! காதலும் பக்தியும் கரை புரண்டு ஓடும் காவியம் அல்லவா இது? இதனால்தான் கூடியிருந்து குளிரும், திருப்பாவையை முதலில் அமைத்து தனித்திருந்துத் தவிக்கும் நாச்சியாரின் திருமொழி அந்தி அமைந்தது போலும்! நாச்சியார்

திருமொழி முதலில் அமைந்திருந்தால் நம்மைப் பக்தி வெள்ளத்தில் அமிழ்த்தித் திக்குமுக்கல் ஆட்டுமே! கரை ஏற முடியாமல் திகைக்க வைத்துக் காட்டுமே?

ஸ்ரீ ஆண்டாளின் அருளிச் செயல்களைச் சேவிக்கும் நமக்கு ஏற்படும் நன்மையை அவர் திருவாக்கினாலேயே அறியலாம்:

அல்லல் விளைத்த பெருமாளை ஆயர் பாடிக்கு அணி
விளக்கை
வில்லி புதுவை நகர் நம்பி விட்டு சித்தன் வியன் கோதை,
வில்லைத் தொலைத்த புருவத்தாள் வேட்கையுற்று மிக
விரும்பும்
சொல்லைத் துதிக்க வல்லார்கள்; துன்பக் கடலுள்
துவளாரே

இறைவனின் நிலைகள் ஐந்து :

ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவையே, பாவையால் அருளப் பெற்றது. மார்கழித் திங்கள் முப்பது நாட்களும் சேவிக்க இயலுவது. கருத்துத் தொடர்ச்சி உடையது. இதுவே வேதம் அனைத்திற்கும் வித்தாகும்.

இதோ ஒரு உதாரணம் :

இறைவனான ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளியுள்ள நிலைகள் ஐந்து:

முதல்நிலை பரமபதம், பரத்துவ நிலை, நித்யர்களும், முக்தர்களும் சேவிப்பதற்காகப் பரமபதத்தில் எழுந்தருளி யுள்ள நிலை. இங்கே குறைகளும் கிடையாது. கூப்பாடும் கிடையாது. கும்பீடுதான்.

இரண்டாவது நிலை, திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வானாகிற ஆதிசேடன்மீது திருப்பள்ளி கொண்டுள்ள நிலை. இது வியூக நிலை. இங்கேதான் தேவர்களும், முனிவர்களும் வந்து தங்கள் குறைகளை விண்ணப்பித்துக் கொள்வது. இங்கே கும்பீடும் உண்டு, கூப்பாடும் உண்டு.

கூப்பாடுகளைக் கேட்டருளிய இறைவன், பக்தர்களுடைய வேண்டுகோள்களுக்காக, இவ்வுலகிலே அவதரித்தருளும் நிலை விபவ நிலை. இது மூன்றாவது நிலை.

எங்கும் எக்காலத்திலும் நம் ஊனக் கண்ணிற்குப் புலப்படாமல் பரவி எழுந்தருளியுள்ள நிலை அந்தரியாமித்வம். இது நான்காம் நிலை.

எங்குமுள்ள பக்தர்களும் வந்து எக்காலத்திலும் சேவிப்பதற்காக திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருக்கோலம் அர்ச்சை நிலை.

பரத்துவம்	:	மேக மண்டல நீர் போல—நம் கைக்கு எட்டாதது!
வியூகம்	:	கடல் நீரைப்போல—நமக்கு உபயோகமாகாதது!
விபவம்	:	பெருக்கொடுத்து ஓடி அடங்கிய ஆறுகளைப் போல தற்காலத்தவர்களான நமக்குக் கிட்டாதது!
அந்தர்யாமித்வம்	:	மழை பெய்து பூமிக்கு அடியில் அடங்கி விட்ட நீர்போல! நாம் தோண்டித் தோண்டி அடைய வேண்டியது!
அர்ச்சை	:	தேங்கின மடுக்கள்போல! ஊருணி நீர் நிறைந்தற்று போல! அர்ச்சை நிலையே எளிமை நிலை!

மிகச் சுலபமாக நாம் இறைவனை அடைய உதவும்படியாக உள்ள, திருக்கோயில் நிலையான அர்ச்சை (வழிபடும்) நிலையை நமது ஆழ்வார் ஆச்சாரியர்கள் மிகவும் போற்றுகின்றனர்.

இவ்விதமாக நாம் வழிபட வசதியாக திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள 108 தலங்களை ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளியுள்ளார்கள். இவைகளை 108 திவ்விய தேசங்கள் எனப் போற்றுகிறோம்.

அணி புதுவைப் பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதையான ஸ்ரீ ஆண்டாள், அருளிய சங்கத் தமிழ் மாலையாம் திருப்பாவையில்; இறைவனது இந்த ஐந்து நிலைகளையும் முதல் ஐந்து பாசுரங்களில் வரிசைக் கிரமமாக மங்களாசாசனம் செய்தருளுகிறார்!

பரமபதத்தில் எழுந்தருளியுள்ள நாராயணனை, முதல் பாசுரமான மார்கழித் திங்கள் பாசுரத்தில்,

''நாராயணனே நமக்கே பறை தருவான்''

எனப் போற்றுகின்றார் சூடிக்கொடுத்த சுடர்கொடி!

திருப்பாற்கடலில் அனந்தசயனனாகக் காட்சி அளிக்கும் வியூக நிலையை இரண்டாவது பாசுரமான வையத்து வாழ்வீர்காள்! பாசுரத்தில்,

''பையத் துயின்ற பரமன் அடிபாடி !''

என்று போற்றுகின்றார்; பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர் கோன் விட்டு சித்தன் கோதை!

சாதுக்களை ரட்சிக்கவும்; கொடியவர்களைத் தண்டிக்கவும் உலகில் இறைவன் எடுத்தருளிய 10 அவதாரங்களில் நடு நாயகமானது திரிவிக்கிரம அவதாரம்; இதுவே ஓங்கி உயர்ந்த அவதாரம்!

திருப்பாவையின் மூன்றாவது பாடலிலே
''ஓங்கி உலகளந்த உத்தமன்!''

என்று போற்றித் திரிவிக்ரம அவதாரத்தின் மூலம் ஏனைய எல்லா அவதாரங்களையும் மங்களாசாசனம் செய்தருள்கிறார்; பொன்னியல் மாடங்கள் சூழ்ந்த புதுவையர் கோன் பட்டன் கோதை.

நான்காவது பாசுரத்திலே

கரந்து எங்கும் பரந்துள்ள அந்தர்யாமித்வம், மழை பெய்து பூமிக்குள் கண்ணுக்கு எளிதில் புலனாகாது, மறைந்துள்ள நீர் போல! இந்த அந்தர்யாமித்வ நிலையை நான்காவதான ஆழி மழைக் கண்ணா பாசுரத்தில் அமைத்துள்ளார்; பண்ணுறு நான்மறையோர் புதுவை மன்னன் பட்டர்பிரான் கோதை.

ஐந்தாவது பாசுரத்திலே ''வடமதுரை மைந்தன்''

108 திவ்ய தேசங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள, வணங்கும் நிலையான அர்ச்சை நிலைய ஐந்தாவது பாசுரமான மாயனை மன்னுவடமதுரை மைந்தனை பாசுரத்தில் போற்றியருளுகிறார். திருப்பாவை முப்பதும் செப்பி யருளிய கோதை;

ஸ்ரீ வைணவப் பெண்மணிகள் :

ஸ்ரீ வைணவ மதத்தில் போற்றுதலுக்கும், புகழ்தலுக்கும் உரிய பெண்மணிகளின் வாழ்க்கைச் சரிதங்கள் பல உள. பொன்னாச்சியார், திருக்கோளூர் பெண்பிள்ளை, கூரத்தாழ்வானுடைய தேவி ஆண்டாள், திருமங்கையாழ்வாரை ஸ்ரீ வைணவ பக்தராகத் திருத்திய குமுதவல்லி நாச்சியார் முதலியோருடைய விருத்தாந்தங்களை நாம் அறியும்போது பரவசமாகிறோம்,

ஸ்ரீ வைணவப் பெண்களுக்கு அளித்த உயர்வு :

ஸ்ரீ வைணவ சித்தாந்தத்தில் இறைவனை நாராயணன் என்று அழைப்பதைவிட, ஸ்ரீமந் நாராயணன் அல்லது லட்சுமியோடு கூடிய நாராயணன் என்றுதான் அழைக்க வேண்டும். பக்தர்கள் சரணமடையும்போது, திருமகளோடு கூடிய திருமாலைத்தான் சரணம் அடைய வேணும். அப்போதுதான் சரணாகதி வெற்றி பெறும். திருமகள், உபதேசத்தாலே திருந்தாத குற்றம் நிறைந்த சேதனனைத் தன் அருளாலே திருத்துகிறார். சேதனனின் குற்றங்கண்டு கோபம் அடையும் நாராயணனை, அருகில் உள்ள பிராட்டியார் தன் அருளாலே திருத்துவார். சரணாகதி கத்தியத்தை, ராமாநுஜரும், ஸ்ரீரங்கத்தில் பங்குனி உத்திரத்தில், ரங்கநாதப் பெருமாள், பிராட்டியாருடன் எழுந்தருளியிருந்த சமயத்தில்தான் அருளினார்.

இரணிய சம்கார சமயத்தில் அடங்காத கோபம் கொண்ட நரசிம்ம மூர்த்தியின் கோபத்தைத் தணிக்க லட்சுமி தேவியால்தான் முடிந்தது.

இதிகாசங்களில் பெண்களின் மேன்மை :

ஸ்ரீராமாயணமும், மகாபாரதமும் நம் இரு கண்கள் சிறை இருந்தவள் ஏற்றம் சொல்வதே ஸ்ரீராமாயணம் என்பது பெரியோர் கொள்கை. அதாவது, தேவ மாதர்களின் சிறை மீட்கவும், அவதிப்படும் உலகின் கஷ்டத்தை நீக்கவும், கருணையே வடிவான சீதா பிராட்டியார் ராவணன் சிறையில் தங்கி வாடினார். இத்தகைய தன்னலமற்ற தியாகம்தான் இராமாயணத்தின் பெருமையாக விளங்குகிறது.

கம்பனும், ராமாயணம் பாடியது, தெய்வமாகக் கதை மாட்சி தெருவிக்கவே என்கிறார். அதாவது மாலட்சுமியின் மேன்மையை விளக்கத்தானாம்.

தூது சென்ற எளிமையைக் கூறுவது மகாபாரதம் பஞ்ச பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது போனானாம் சர்வேச்வரனான பகவான். எதற்காக அப்படித் தூது போனான் கண்ணன். பக்தையான த்ரௌபதி கௌரவர் சபையிலே துகில் உரியப்பட்டாள், அப்போது அவள் அலறி, தன்னை மானப்பங்கப்படுத்திய துச்சாதனனையும், துரியோதனனையும் கொல்விப்பதாகச் சபதம் செய்தாள். இவள் சபதம் நிறைவேறும் பொருட்டே கண்ணன் தூது சென்று, பாரதப்போர் நடத்தி, கௌரவர் களைப் போர்களத்தில் மடியச்செய்தான். மைத்துனன்மார் காதலியாகிய திரௌபதியை மயிர் முடிப்பித்து அவர் களையே மன்னராக்கினான்.

கிருஷ்ணாவதாரம் முடிந்து, தன் அடிச்சோதிக்கு எழுந்தருளுகையில் மனதில் வருத்தம் இருந்ததாம், திரௌபதி கௌரவர் சபையில் துகில் உறியப்பட்டபோது இருகையையும் விட்டு, தன்னை நினைத்துக் கூப்பிச் சரணாகதி செய்தாள்; உடனடியாக நேரே ஓடிப்போய் காக்காமல், அவ்வளவு மானபங்கப்பட்டுக் கதறும் வரை விட்டுவிட்டோமே என்ற துரயம்தான், வட்டியால் அமிழும் கடனைப் போல மிகுந்து பெருகியதாம்.

ஸ்ரீ வைணவத்தில் பெண்மையின் உயர்வு :

இறைவனான பெருமாள், இறைவியாகிய லட்சுமி யைத் திருமார்பில் வைத்துக் கொண்டிருப்பது. ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தின் மேன்மையாகும். உடலில் இருதயம், மார்பு பாகத்தில் இருப்பது அனைவரும் அறிந்ததே. பக்தர் களை ரட்சிக்க மார்பு பாகத்தில் உள்ள இறைவனின் மனதில் கருணை நிரம்பி இருக்கவேணும் என்ற ஆர்வத்தி னால் தான, இலட்சுமி இறைவனின் மார்பில் எழுந்தருளி யிருப்பதற்கான காரணமாகும். இச்சிறப்பு ஸ்ரீ வைணவ மதத்திற்கே சிறப்பாகும்.

திருவிட வெந்தை திவ்ய தேசத்தில், எம்பெருமான் பிராட்டியை இடப்பாகத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறான் இதனால்தான் இத்தலத்திற்கு திரு இட எந்தை என்று பெயர் ஏற்பட்டது. இதுமாதிரி சேவை இத்தலத்திற்கே உரிய சிறப்பாகும்.

இத்தலத்தில் பெருமாள் வராகமூர்த்தியாக அவதரித்த போது, பிராட்டியை இடப்பாகத்தில் அமர்த்திக்கொண்டு உறுதிமொழி கொடுத்தாராம். அதாவது, ஒரு பக்தர் இறைவனை தன் வாழ்க்கையில் ஒரு முறை தியானித்து சரணம் அடைந்தால் போதும்; அவனை அவன் கடைசி காலத்தில் தாமே வந்து பரம்பதத்திற்கு அழைத்துச் செல்வ தாக வாக்குறுதியளித்தாராம். இத்தகைய மிக உயரிய வாக்குறுதியை வாங்கி பக்தர்கட்கு அளித்த பெருமை பிராட்டியைச் சாரும்!

திருக்குடந்தையை அடுத்த திருநறையூரில் நாச்சி யாருக்கே சிறப்பு அதிகம் இதனால் இத்திருப்பதியும் நாச்சியார் கோயில் என அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் வஞ்சுளவல்லித்தாயார் எப்போதும், பெருமாளுக்கு முன் தள்ளி தலைமை வகித்து வீற்றிருப்பார்; புறப்பாட்டின் போதும் தலைமை வகித்துச் செல்வார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் சந்நிதிக்கு நாச்சியார் தேவஸ்தானம் என்றே பெயர். அங்கு ஆண்டாளுக்கு அளிக்கப்படும் உயர்வு களைச் சொல்லி முடியாது. ஆண்டாள் ரங்கமன்னார் கருடனுடன் ஒரே ஆசனத்தில் எழுந்தருளி இருக்கிறார். இக்காட்சி இத்தலத்திற்கு சிறப்புடையதாகும்!

அலர்மேல் மங்காபுரத்திலும், உறையூரிலும் உள்ள சந்நிதிகள் தாயாருக்காகவே ஏற்பட்டனவாகும்!

ஸ்ரீவைணவ திருக்கோயில்களில் பிராட்டியின் சந்நிதியை தாயார் சந்நிதி என்றுதான் குறிப்பிடுவார்கள் பக்தர்கள் இறைவனிடம் கொள்ளும் பாசத்தையும், பக்தி யையும் 'தாயார்' என்ற உறவு எவ்வளவு ஆச்சரியமாகவும் ஆணித்தரமாகவும் குறிப்பிடுகிறது!

கதி அருளும் நாடு

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களின் தலைவரான, பிரபந்த ஜன கூடஸ்தரான ஸ்ரீ நம்மாழ்வார் அருளிய,

''சூழ்விசும்பு அணி முகில் தூரியம் முழக்கின!
ஆழ்கடலலை திரை கையெடுத்தாடின
ஏழ் பொழிலும் வளம் ஏந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக் கண்டு உகந்தே''

என்ற பாசுரம் முதல்.

''அவா அறச்சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடு பெற்று குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும் முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார்
உயர்ந்தே''

என்ற பாசுரம் வரை சேவித்துமகிழும் ஸ்ரீ வைணவப் பெருமக்கள்,

''கதி அருளும் நாடு''

என்ற மகுடத்தைத் திருச்செவி ஏற்றதும் இச் சொற்றொடர்.

பரமபதத்தைத்தான் குறிக்கின்றது. எனத் திருவுள்ளம் பற்றலாம்.

மேலும், இதனை,

''வைகுண்டம்''

''கலங்காப் பெருநகரம்''

''திருநாடு''

''நலம் அந்த மில்லதோர் நாடு''

''விஷ்ணுவின் விண்ணாடு''

''ஸ்ரீ வைணவர்கள் அடைய விரும்பும் நற்கதி அருளுப் நாடு''

எனவும் தீர்மானிக்கலாம். கதியை, நற்கதியை அருளும் நாடு, அதாவது அளிக்கும் நாடு வேறு அப்படி அடையப் பட்ட கதியாலே திகழும் நாடு வேறு!

முன்னையது உபாயம்; பின்னையது உபேயம்.

ஒன்று கதியை அடைய உதவும் நாடு: மற்றது, கதியாகத் திகழும் திருநாடு! ஒன்று ஏணி; மற்றையது மாடி.

சரணமாகும் தன் தாள் அடைந்தார்க்கு எல்லாம்,
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்!

மரணமானால் கவலை வேண்டாம் — வைகுந்தம் கொடுக்கும் பிரான்! வைகுந்தமே கதியாகத் திகழும் திருநாடு ஆனால் யாருக்கு வைகுந்தம் கொடுப்பான்.

இம்மண்ணுலகில் வாழும் போது பிரபந்தவழி நின்று சரணமாகித் தன் தாள் அடைந்தார்க்குக் கொடுப்பான். எனவே,

கதியருள உதவும் நாடு இம்மண்ணுலகம்: கதியாகவே அமைந்துள்ளதோ விண்ணுலகம்!

அயர்வறும் அமரர்கள் அதிபதியான மதிட்கச்சி ஊரனான வரதராசப் பெருமாளும் ஆறு வார்த்தைகளை அருளியதில் திருக்கச்சி நம்பிகள் மூலமாக ஸ்ரீ எம் பெருமானாருக்கு 'வாழ்வு முடிந்தால் வைகுந்தமே' எனத் தன் திருவுள்ளத்தையே வெளியிட்டான்;

'கர்மம் தொலைந்தால்தான் பேறு' எனப் பிறர் கூறுவது ஸ்ரீ வைணவ தரிசனத்திற்கு ஒப்புதல் ஆகாது!

சரணாகதி மார்க்கத்தில் நின்ற ஸ்ரீ வைணவனுக்கு மரணமானால் பெருநாடுதானே அருளப்படும்.

வைணவம் என்றால் வைகுண்டப் பதவிக்கு வாய்தா கேட்டுக் கொண்டிருப்பது அல்ல;

வாய்தா போட்டுக் கொண்டிருப்பதும் கூட அல்ல! வரட்டு வேதாந்தம் பேசுவது அல்ல; மக்களுக்குப் புரியாத சொல் வாக்கியம் கருத்தை வைத்துக் குழப்புவது அல்ல. நல்ல பகுத்தறிவு ரத்தத்தில், சதையில், உயிரில் ஊறியது "வைணவம்"

"கடல் சூழ்ந்த மண் உலகம் வாழ!" எனக்களித்து வாழ்வதே வைணவம்!

"விண்ணும் ஆள்வர் மண்ணூடே," என்பதே ஸ்ரீ வைணவப் பெருங் கொள்கை.

அர்ச்சையில் காணும் அருள் :

1 பரமபதத்தில் இறைவன் மேகத்து நீரானான். எட்டாமல் போனான், கிட்டாமல் போனான்!

2. வியூகத்திற்கு வந்த இறைவன் முனிவர்களும் இமையவரும் வணங்க நின்றான்; மற்றவர் கால் வைக்க முடியாத உப்புக்கடல் நீரானான்.

3. பூ உலகில் விபவம் அல்லது அவதாரம் எடுத்த இறைவன் பெருக்கெடுக்கும் வெள்ளம் போல் ஓடி மறைந்தான். அணை கட்டாத ஆறானான்.

4. அர்தர்யாமித்துவத்தில் இறைவன் பூமியில் அடி வயிற்றில் கிடக்கும் நீரானான்; எனவே எளிதில் கிடைக்காதவனானான்.

5. அர்ச்சையில் எழுந்தருளிய இறைவன் தேங்கின மடுக்கள் போல எளிதில் உதவியருளுகிறான்.

''நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதோர் அருள்
தன்னாலே''

கதி அருளும் நாடு வேறெதுவும் அல்ல; அர்ச்சையால் சூழப்பட்ட கண்டியூர்,அரங்கம் மெய்யம்,கச்சி பேர் மல்லை என்று மலிந்து கிடக்கும் இப் பூமண்டலமே!

பூமியில் கதியருளும் நாடு

பக்தி முதிராத பாமரனை விசாரிக்கின்றோம் ''நலமா' என்ன பதில் ''நலத்திற்கு என்ன கேடு, ஐயா எனக்கு ஒரு கதியும் சரி இல்லை'' என்று வரும் இவன் கணிப்பில் ''கதி'' என்றால், உணவு, உடை, இன்னும் போனால் உறையுள். இம்மூன்று தேவைகளுமே எல்லோருக்கும் அவசியம் எனவே பக்தர்களுக்கு இம்மூன்று தேவைகளுமே பூர்த்தி செய்யப் பட்டால் தான் இவ்வுலகு கதி அருளும் நாடாகத் திகழும்; திகழ முடியும்!

''ஊன் வாட உண்ணாது உயிர்காவலிட்டு
உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டாம்''

என்னும் வாழ்க்கையைத் தரும் கதி அருளும் நாடு:

பூமியே கதியருளும் நாடு கண்ணன் அருளிய நாடு கதி அருளும் நாடாகும்.

பூமியே கதி அருளும் நாடு

கண்ணன் தென்னாட்டில் பிறக்கவில்லை. ஆனால் பிறக்க வைக்கிறார்! எங்கே? கோட்டியூரில், வெறும் கோட்டியூரில் அல்ல; கோட்டியூர்! எப்படிப்பட்ட கோட்டியூர் விஷ்ணு சித்தன் விரும்பிய சொல் கேட்போம் மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர். என்ன மாடம்? இடிந்து விழுந்து சிதிலமாகிவிட்ட மாடமா? இல்லை அப்பொழுதுக்கு அப்போது புதுப்பிக்கப்பட்ட வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர் சரி அவன் பிறந்தான்! அங்கு மக்கள் நிலை என்ன? அவர்கள் செல்வர்கள் செல்வத் திருநாட்டில் வளமும் நலமும் எப்படி?

ஊர் வளம், கண்ணோட்டம்; மக்கள் உணவு வளம் எப்படி? உவகை வளம் எப்படி? விடை கிடைக்கிறது.

''உறியை முற்றத்து உருட்டி நின்று ஆடுவார்!
நறு நெய்பால் தயிர் நன்றாகத் தூவுவார்,
செறிமென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே!''

இதுவே கதியருளும் நாடு!

இக்கதி அருளும் நாட்டை மேலும் கவனிப்போம்!

திருக்கோட்டியூர் வெறும் திருக்கோட்டியூரா? வயல் சூழ் திருக்கோட்டியூர் நெல் ஆர்வயல் திருக்கோட்டியூர்! அதுவும் செந்நெல் ஆர்வயல் திருக்கோட்டியூர்.

எனவே, நமது பூ மண்டலம் அருள் கொழிக்கும் அர்ச்சையுடன், திவ்ய தேசங்கள் வாழ பொருள் கொழிக்கும் திருநாடாக இருந்தால் தான், அது கதி அருளும் நாடு

சிகரம் மிகு வடபிரதேசங்களிலிருந்து சேது பரியந்தம் இந்த பூமண்டலம் முழுமையும் கதியருளும் நாடு ஆகலாம்.

வடக்கே தற்போது தேவப்ராகையாம். கண்ட மென்னும் கடிநகர் ஆற்று வளம் மிக்க நகர்,

''சதுமுகன் கையில் சதுப் புயன் தாளில்
சங்கரன் சடையினில் தங்கி கதிர் முகமணி கொண்டு
இழிபுனல் கங்கைக் கண்டமென்னும் கடி நகரே''

இது வடக்கே! தெற்கே எப்படி? போய்ப் பார்க்கலாம் தென்கிழக்கில் திகழும் திருவல்லிக்கேணியை அடைவோம்; நேரமில்லையால் விமானம் மூலம் அடைவோம்.

''குரவமே கமழும் குளிர் பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தரியாத் திருவல்லிக்கேணி''

வளமிக்க நகராய், வாழ்வினை நலமுற நல்கும் பதியாய் தலத்துள் திருத்தலமாய்த் துலங்கும் திருவல்லிக்கேணி திவ்யதேசம் ' கதி அருளும் நாட்டிற்கொரு'' எடுத்துக் காட்டு.

இன்னும் தெற்கே, பூவர் சோலை மயிலாடுங் காவிரி யின் கரையில் ஒரு திவ்யதேசம், காவிரி அருளும் இதுவும் கதி அருளும் நாடுதான்.

''சேவலொடுபெடையன்னம் செங்கமல மலர் ஏறி ஊசலாடி
பூவணை மேல் துதைத்து எழு
செம்பொடியாடி விளையாடும் புனலரங்கமே''

என்று திசை விளக்காய் நிற்கின்ற திருவரங்கத்தின் நிலவளம், நீர்வளம் தெரிவிக்கப்பட்டபின், நினைவில் நெருடுவது தென்கோடியில் உள்ள குறுங்குடித் திருநகர்.

கோல மயில் பயிலும் புறவின் குறுங்குடி அதற்கும் அப்பால் உள்ள அனந்தபுரம்! இவையாவும் கதியருளும் நாடுகளே!

"சுரும் பலற்றும் தடமுடை வயல் அனந்த புரநகர்"
(திருவாய்மொழி 10—2—1)

"குன்று நேர் மாடம் மாடே குருந்துசேர் செருந்தி புன்னை மன்றலர் பொழில் அனந்தபுரநகர்"
(திருவாய்மொழி 10—2—2)

"மடைத் தலை வாளை பாயும் வயலணி அனந்தபுரம்"
(திருவாய்மொழி 10—2—7)

என்று இப்படி இமயதேச பரியந்தம், வைணவம் வளர்ந்தது கதியருளும் நாட்டின் சிறப்புகள் உண்டு.

கதி அருளும் நாடும்—கதி அருளும் தமிழும் :

வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொண்டது தான் ஸ்ரீ வைணவம். வரட்டு வேதாந்தம் பேசி, வாழ்க்கையைப் பொய் என்றும், பேதைமை என்றும் எண்ணியும் செயல் பட்டும் வீணாக்குவது வைணவம் அல்ல.

நாட்டை, நாம் வாழும் மண்ணை, பூமியை, வாழ்வை கதியருளும் நாடாகக் கண்டு, அதற்கான இலக்கணம் வகுத்து இலக்கியமும் காணுவது. ஸ்ரீ வைணவம்.

தமிழுக்குக் கதியாக விளங்குபவர்கள் 'கல்வியிற் பெரியவர்' என சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒப்புக் கொள்ளப்படும் கம்பரும் 'தெய்வப் புலவர்' என்றே சிறப்பித்துக் கூறப்படும் திருவள்ளுவரும் தாம்.

திருவள்ளுவர் தனது பொது மறையாகிய திருக் குறளிலே 'நாடு' என்பதற்கான இலக்கணம் வகுக்கிறார்.

கம்ப நாடு உடைய வள்ளல் அந்த இலக்கணத்தை எண்ணத்தில் ஏந்தி, அதையே தனது இராம காதையில் ஏட்டில் ஓர் இலக்கியம் ஆக்குகிறார். பாலகாண்டத்தில் கோசலநாடு கதி அருளும் நாடாகிறது.

''காவிரி நாடு அன்ன கழனி நாடு'' என சோழ நாட்டின் பிரதிபலிப்பாகவே இந்த கோசல நாடு சித்தரிக்கப் பெறுகின்றது. இதில் கம்பரும், வள்ளுவரும் அருளும் கதி எப்படித் தெரியுமா?

இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள பொருளாதார சாத்திரம், பல மேனாட்டு அறிஞர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவே!

இதன்படி ஒரு நாடு வளமுடைய, நலமுடைய நன்னாடு எனப் பெயர் பெறவேண்டுமானால், மூன்று சிறந்த அம்சங்களைக் கொண்டு அமைந்திருக்க வேண்டும்.

1. மனிதர்களுக்குத் தேவையான உணவு, தானியம் ஏனைய பொருள்களும் அமோகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

2. உற்பத்தி செய்து விட்டால் மட்டும் போதாது. அவற்றை சரியான முறையில் சட்ட திட்டம் வகுத்துப் பங்கீடு செய்யும் அறிஞர்களின் அமைப்பு இருத்தல் வேண்டும்.

3. மூன்றாவதாக, விளைந்த அமோகமான பொருள்களைச் சரியாகவும் நியாயமாகவும் பங்கிட்டு மக்களுக்கு அளித்தால், அதைப் பெற்ற மக்கள் அவைகளை நுகர்ந்து அநுபவித்து, ஏற்றத் தாழ்வு இல்லாமல் இன்பமாக வாழ்தல் வேண்டும்.

இதுவே பொருளாதார வளத்தின் இரகசியம்; மேனாட்டுக் கருத்து என்று மெச்சப்படும். இதை கம்பநாடர் கோசல நாட்டின் வளப்பத்தை விவரிக்கும் முறையில் திறம்படத் தீட்டி உள்ளார்,

மண்டபம் காட்டும் மண்வளம்

அமோகமான விளைச்சல் கோசல நாட்டில் விளைந்து விட்டது. எப்படித் தெரிகிறது?

அதோ மக்கள் தாங்களாகவே நாட்டு நிர்வாகத்திற்கான தங்களது பங்கை குறுநில மன்னர்களிடம் வந்து கொட்டுகின்றார்கள்; அக்குறுநில மன்னர்களும் அதை தசரதச் சக்கரவர்த்தியின் அரசுக் களஞ்சியத்தில் வந்து அளிக்கின்றார்கள்.

''மன்னவர் தரும் திறை அளக்கும் மண்டபம்''

இப்படிச் சேர்ந்த தானியச் செல்வத்தை மக்களுடைய நலன்களுக்காக நியாயமான வகையில் பகிர்ந்து தரும் சான்றோர்களின் அமைப்பும் சரிவர இயங்குகிறது.

''உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்''

சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பால் கோடாத சான்றோர்கள் இவர்கள்!

இதனால் பயன்பெற்ற மக்கள் என்ன சொல்கிறார்கள். வாழ்க்கையை எப்படி அநுபவித்து இன்புறுகின்றார்கள் தெரியுமா? பட்டி மண்டபமல்லவா நடத்தி கல்விக் கலம்பம் பயிலுகின்றனர்.

''பன்னரும் கலைபயில் பட்டி மண்டபம்!''

செவியின் சுவை உணராது வாய் உணர்வு உடைய மக்கள் இல்லை இவர்கள்!

சரி! ஆண்கள் பட்டி மண்டபம் சென்று விட்டனர் வேலையற்று. கோசல நாட்டின் பெண்கள் எங்கே? சமையலை முடித்து விருந்தோம்பி, உணவு உண்டு, வேலை முடித்துப் பின் அவர்கள் ஆனந்திக்கும் இடம் எங்கே?

''அன்ன மென் நடையார் மண்டம் ஆடும் மண்டபம்''

முழுப் பாடலையும் மறுபடி சேவிக்கலாம்.

''மன்னவர் தரும் திறை அளக்கும் மண்டபம்;
உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்
பன்னரும் கலைபயில் பட்டி மண்டபம்
அன்னம் மென் நடையார் ஆடும் மண்டபம்''

கல்வியில் பெரியர் கம்பரல்லவா? இத்தோடு நிறுத்தினாரில்லை.

மண்டலம் காட்டும் மண்வளம்

கோசல நாட்டின் வளத்தை காணத் தரை ஊர்தியில் ஏற்றி அழைத்துச் செல்கிறார் கம்பர். திருப்தி ஏற்படவில்லை.

உடனே நம்மை வான ஊர்தியில் ஏற்றிக் கொண்டு கீழே திகழும் கோசல நாட்டின் வளத்தை, அவ்விடங்களிலிருந்து எழும் புகை மண்டலங்களைக் கொண்டே காட்டுகிறார். இப்படியொரு aerial survey பாடலைக் காண்பது அரிது! அரிது! அரிதினும் அரிது!

வானத்தில் புகை மண்டலத்தில் ஊடுருவிப் பறக்கின்றோம். புகையால் மூச்சுத் திணரவில்லை! மாறாக, மூக்கைத் துளைக்கிறது! நல்ல சமையல் பள்ளிகளின் வாசனையல்லவா அது!

அட்டில் சமைத்தல்

''அட்டில் இடும் புகை''

அட்டில் என்றால் சமைத்தல்; சமையல் வாசனையிலிருந்து என்ன தெரிந்து கொள்கிறோம்; அமோக விளைச்சலின் காரணமாக ஏராளமாகச் சமையல் நடக்கின்றது. இது உணவுப் பெருக்கம். வெறும் அரிசி மாத்திரமா? கரும்பும், ஏனைய உணவு வகைகளும் தயாரிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்தெல்லாம் கிளம்பும் புகை என்ன ரம்யமாக இருக்கின்றது.

''நகல் இன் ஆலை நறும் புகை''

இப்படியாய், வெள்ளமாக விளைந்த உணவுப் பொருள்களைக் கள்ளச் சந்தைக்குள் சிக்கி விடாமல், கறுப்பு வியாபாரத்திற்குப் போகச் செய்யாமல், மக்களுக்கு நியாயமாகப் பகிர்ந்து கொடுக்கும் சான்றோர்கள் உள்ளனரா?

ஓ! உள்ளனரே! அதோ, அச்சான்றோர்கள் கூடி இயற்றும் யாகங்களிலிருந்து வரும் வேள்வியின் புகையல்லவா இந்தப் பக்கத்தில் வருகிறது.

''நான் மறை புகழும் வேள்வியிற் பூமிபுகையோடு''

சரி, விளைவின் பயனால் வளத்தின் பயனாய் மக்கள் இன்பம் அடைந்தனரா? அடையாளம் ஒன்று தெரிகின்றது —என்ன?

வண்ண மாடங்களில் வசிக்கும் மகளிர் தங்கள் கூந்தலுக்கு அகில் ஊட்டி ஆனந்திக்கின்றனர்.

''அகில் இடும் புகை''

இவ்வளவு பிரம்மாண்டமான புகை மண்டலங்கள் எப்படிக் காட்சியளிக்கின்றன. மேக மண்டலம் போல் அல்லவா எங்கும் பரந்து முழங்குகின்றன.

''முகிலின் விம்மி முயங்கின எங்கணும்''

சரி! கல்வியிற் பெரிய கம்பரின் முழுப்பாட்டையும் பார்க்கலாம். ஒரு கஷ்டம்! இந்த புகை மண்டலங்களை முன்னர் பிரித்துச் சொன்னபடி முறையாக அனுபவிக்க முடியாது!

புகைக் கூட்டம் அல்லவா; ஒன்றோடு ஒன்று கலந்து கலந்து நம்மையும் கலக்குகின்றன.

''அகில் இடும்புகை; அட்டில் இடும் புகை,
நகல்இன் ஆலை நறும் புகை; நான் மறை
புகழும் வேள்வியில் பூம் புகை யோடு அளாய்
முகிலின் விம்பி முயங்கின எங்கணும்''

தமிழ் கதி தரும் கதி

இவ்வாறாக, கம்ப நாடர் நாட்டுப் பொருளாதாரம், விளைச்சலிலும் பங்கீட்டு முறையிலும் நுகர்ந்துஆனந்திக்கும் மக்கட் கூட்டத்திலுமாக, பல்கி அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். இந்த இலக்கியம் இயற்றப் பெற்றது எந்த இலக்கணத்திலிருந்து? வேறெங்கு? பெருமறை வகுத்த தெய்வப்புலவரான திருவள்ளுவரிடம் இருந்துதான்.

திருக்குறளிலே நாடு என்னும் அதிகாரத்தில் முதல் குறளிலேயே, கதியருளும் நாட்டின் இந்த மூன்று குணாதிசயங்களையும் திருவள்ளுவர் தெளிவாகக் காட்டி அருளியுள்ளார்

முதலில் தேவைப்படுவது விளைச்சல், அதுவும் குன்றாத விளைச்சல்—

''தள்ளா விளையுள்''

அடுத்தது, பகிர்ந்து தரும் அமைப்பான சான்றோர்கள்

''தக்காரும் மக்களால் மதிக்கத் தக்கரும்''

இவ்விதம் கிடத்ததை ஆண்டு அனுபவித்துக் குறை வற்றவர்கள்—

''தாழ்விலாச் செல்வரும்''
இவை யாவும் சேர்வது நாடு!

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு!''

அப்படிச் சேராதது, காடு தான்!

கதி அருளும் நாடு

கதியருளும் நாடாக, பூமணங்கள் செழிக்க வேணு மென்று, ஆழ்வார்களின் அருளிச் செயலும் ஒப்புக் கொள்கிறது. திருமங்கை மன்னன் அரிமேய விண்ணகராம் திவ்ய தேசத்தைச் சேவிக்கையில், பொருளாதாரத்தில் அமைந்துள்ள இம்மூன்று அம்சங்களையும் பேசுகிறார்.

தள்ளா விளையுள் : ''வளங்கொள் பொழில்'' என்ப தாலும்,

தக்கார் : ''அருமறையின் ஒலி'' என்பதால் தக்க சான்றோர் உண்டெனவும்

தாழ்விலாச் செல்வர் : ''அண்டமுறு முழவொலி'' ஆக்கும் ஆடவரும் ''மடவார் சிலம்பின் ஒலி'' கூட்டும் பெண்டிரும் நிறைந்தனரெனவும் இப்பொருளாதாரப் பகுப்பு அமையும்.

''...வளங்கொள்ள பொழில் அயலே அண்டமுறு
முழவொலியும்
வண்டினங்கள் ஒலியும் அருமறையின் ஒலியும்
மடவார் சிலம்பின் ஒலியும் அண்டமுறும் அலைகடலின்
ஒலி திகழும் நாங்கூர் அரிமேய விண்ணகரம் வணங்கு
மடநெஞ்சே''

அரிமேய விண்ணகரம் கதியருளும் நாடுதான்!

பிறர்க்கும் உதவும் பெரும்பயன்

தள்ளா விளையுளை, மேலும் விவரிக்கின்றார். திருவள்ளுவர்.

அடையத் தக்க பொருள்களால் மிகவும் விரும்பத் தக்கதாக. கேடுகளைப் போக்கும் வகையிய் அதிக விளைச் சலைத் தருவதுதான் நாடு;

''பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு''

கோசல நாட்டில் விளைந்த கதிர்களை கற்றைகளாக்கி அடுக்கினால் வானைத் தொடுக்கின்றனவாம் அந்த உயரத்தில் ஏதோ அடையாளமும் வைக்கிறார்கள்.

''ஏறி தரும் அரியின் சும்மை எடுத்து வான் இட்ட
போர்கள்
குறிகளும் போத்தின் கொல்வார் போரடித்துக் குவிந்த
நெல்லைக் குன்றங்களாக்கி
கொன்ற நெல்குவைகள் செய்வார்

நெற்குன்றுகளை உடனே வீட்டுக்குக் கொண்டு போவதில்லை, ஏழை எளியவர்கட்கு உதவுவார்களாம். வறியவர்க்கு உதவி மீதியைத்தான் வீட்டுக்குக் கொண்டு போவார்களாம்! எதற்காக விருந்தினர்களை உபசரிக்கவே.

மிக்க விருந்துண மனையின் உய்ப்பார்

இப்படி நிரப்பப்பட்ட வண்டிகள் பளுவை தாங்க முடியாமல் பூமியின் முதுகு நெளிய ஊர்ந்து செல்கின்றனவாம்.

''நெறிகளும் புதைய, பண்டி நிரைத்து மண் நெளிய
ஊர்வார்!''
''எறிதரும் அரியின் சும்மை எடுத்து வான் இட்ட போர்கள்
குறிகளும் போத்தின் கொல்வார் கொன்ற
நெற்குவைகள் செய்வார்
''வறியவர்க்கு உதவி மிக்க விருந்துஉண மனையின்
உய்ப்பார்''
நெறிகளும் புதையபண்டி நிறைத்து மண் நெளிய
ஊர்வார்''

விளைவின். பயன், மேலும் விரிந்து பரந்து, கோசலத்தில் ஈகையும் விருந்தும் நடக்கிற விதம்;

"பெருந் தடங்கண் பிறைநுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும்; வைகலும்"
விருந்தும், அன்றி விளைவன யாவையே!

விருந்துண்டவர்களுடைய எக்களிப்பு மயர்வற மதிநலம் உடைய ஆழ்வார்கள் திருஉள்ளத்திலும் திரளுகிறது.

விளைச்சலைப் பார்க்க வேண்டுமா? திருவரங்கத்திற்கு வாருங்கள்.

"உரம் பெற்ற மலர்க் கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட
வரப்புற்ற கதிர்ச்செந்நெல் தாள் சாய்த்துத் தலை வணங்கும் தண்ணரங்கமே

வந்தார்க்கும் உதவும் விளைவு

இத்தகைய விளைவுகளால் விளைந்த தானமும் பலனும் பெற்றவர்கள் யார்?

நாட்டில் நிரந்தரமாக உள்ள ஜனப் பிரளயம் மட்டுமின்றி வெளி நாடுகளிலிருந்தும் மக்கள் பஞ்சம், பகை, பிணிகளால் உன்நாட்டிற்கு வர நேரினும் அவர்களையும் ஆதரித்துக் காப்பாற்ற வேண்டும்.

மக்கள் மேலும் தன் நாட்டின் அறத்திற்கும் "தளராது" உழவும் வளம் பெற வேண்டும்.

பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கு இறைவற்கு,

இறை ஒருங்கு நேர்வது நாடு,

மேலும், கோசலை நாட்டின் வளங்காட்டுகிறார் கம்பர்.

கப்பலிலே வந்து குவிகிறது நிதி, நிலமும் அள்ளித் தருகிறது வளத்தை சுரங்கங்களும் மணிகளை தோண்டத் தோண்ட தருகின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம்,

அடைய முடியாத உயர்ந்த உழைப்பும், ஒழுக்கமும் நாகரீகமும் பண்பாளரும் தான்!

''கலம் சுரக்கும் நிதியம் கணக்கும் இலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நல்மணி அரியதம்
பிலம் சுரக்கும் பெறுதற்கு
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெல்லாம்''

ஆழ்வார்கள் கூட்டமும், பொருள் வளத்தைப் பற்றிப் பேசுகிறது.

''சந்தொடு காரகிலும் சுமந்து தாங்கள் பெறாது
வந்திழியும் இலம் பாலுடை மாலிருஞ்சோலை''

''இமந்தத் தொடங்கி இருங்கடலளவும்
இருகரை உலகிரைந் தாட இமையுடைப் பெருமைக்
கங்கையின் கரைமேல கண்டமென்னுங் கடிநகரே''

''ஊரும் வறியரவும் ஒண்குறவர் மால் யானை
பேர எறிந்த பெருமணியை—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே—மேலசுரர்
எம்மென்னும் மாலதிடம்'' பொய்கைஆழ்வார்

என இவை நீளும்!

வளமையின் நிலைமை

இவ்வளவு வளமையா? நியாயமான சில கேள்விகள் நம் மனத்தே எழும். கம்பர், எப்படி விடை கூறுகிறார் பாருங்கள்!

i) கோசல நாட்டில் தான தருமங்கள் உண்டா?

இல்லை! இல்லை! ஏனோ?

அங்கே வறியவர்கள் தாம் கிடையாதே!

''வண்மை இல்லை! ஓர் வறுமை தாம் யின்மையால்''

ii) படைபலம், பயிற்சி, ஒத்திகை ஏதேனும் உண்டா
இல்லை! இல்லை!

பகைவர் படையெடுப்பே கிடையாதே!

"திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்"

iii) சரி, மக்கள் வயிற்றுக் கொடுமைக்காகவாவது பொய் சொல்வார்களா?

இல்லை! இல்லை! மெய் தவிர உண்மையைத் தவிர வேறு அறியார்களே அவர்கள்;

அங்கு "உண்மையில்லை, பொய் உரை இலாமையால்;

iv) அது சரி கல்வியறிவு பெறாதவர்கள் உண்டா?

இல்லை! இல்லை! நிச்சயமாக இல்லை அங்கே கல்வியின் உச்சியில் உள்ளவர்கள் தான் உண்டு!

"ஒண்மை இல்லை பலகேள்வி மேவலால்"

கம்பரின் ராஜ முத்திரை தாங்கிய இப்பாடலை சேவிப்போம்:

"வண்மை இல்லை! ஓர் வறுமை இன்மையால்;
திண்மையில்லை! ஓர் செறுநர் இன்மையால்,
உண்மை இல்லை! பொய் உரையில்லாமையால்;
ஒண்மை இல்லை! பல்கேள்வி மேவலால்"

திருவள்ளுவரும் ஒரு நாட்டில் எது எது சேரக் கூடாது என வரிசைப் படுத்துகிறார்.

"உறுபசியும், ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

இதற்கும் ஈடாகவே உள்ளது ஆழ்வார்களின் திரு உள்ளத்தில் தோன்றும் கதி அருளும் நாடு!

"பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து புலன்கள் ஐந்து பொறிகளால் ஏகம் ஒன்றும் இலாதவன் கையினார்கள்

வாழ்திருக் கோட்டியூர்'' குற்றம் இங்கு இல்லை குறையும் ஒன்றில்லை.

' நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய
பாததூளி படுதலால் இவ்உலகம் பாக்கியம் செய்ததே''

—குறையொன்றுமில்லாத நிறையில் குவலயமே ஏற்றம் பெறுகின்றது.

'குற்றம்' என்பதை நாவினாலும் சொல்லக் கூடாது!

''நா அகாரியம் சொல்லிலாதவர் நாள் தொறும் விருந்து
ஓம்புவார்
தேவ காரியம் செய்து வேதம் பயின்று வாழ் திருக்
கோட்டியூர்''

''குற்றம் இன்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கு அனுகூலராய் செற்றம் ஒன்றும் இலாத வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்''—

''காசின் வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டு தேசவார்த்தை படைக்கும் வணிகயினார்கள் வாழ்திருக்கோட்டியூர்''

''கேசவா! புருடோத்தமா! கிளர் சோதியாய்! குறளா என்று அழைக்கும் பக்தர்கள் வாழும் ஊர்—குற்றமின்றி குணம் மட்டுமே பெருகும் இத்தலம் கதி அருளும் திருத்தலமே!

வளமைசீர் பகைமை எப்படி?

கோசல நாட்டின் தலைநகருக்கு ஒரு தனித்த ஒப்பற்ற பெயர் உண்டு. அதாவது, யுத்தத்தில் பிறரால் ஜெயிக்க முடியாத நகரம்—அதுதான் ''அயோத்தி''

வெளியில் இருந்து பகைவர்களின் படையெடுப்பு கிடையாது! பின், தயரதன் தன் பருத்த திண் தோள்களை எவ்விதம் பயன்படுத்தினான்?

ஒரு பரம ஏழைக்கு கால் காணி நிலம், கிடைத்து விட்டது; என்ன செய்வான்? அதை நூறு பாகமாக்கி யல்லவா வேறு வேறு பயிர் செய்து காப்பான்.

அவ்விதமே, தயரதனும் தன் குடி மக்களைக் காத்து அரசு செய்தானாம்.

'எய்' என ஏழு பகை எங்கும் இன்மையால்
மொய் பெறாத் தினவுறு முழவுத் தோளினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து' இனிது அரசு செய்கின்றான்!

இந்த இலக்கியத்தின் ஆதாரம் திருவள்ளுவரின் குறள்!

''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு''

ஆழ்வார்கள் அருளும் வீரக் காட்சிகளும், இவ் விலக்கணத்தை எட்டுகின்றன.

''கவ்வை மாகளிறு உந்தி வெண்ணியேற்ற கழல் மன்னர் மணி முடிவேல் காகமேற தெய்வவாள் வலங் கொண்ட சோழன் சேர்ந்த திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே! வெங்கண்மாகளிறு உந்தி வெண்ணியேற்ற விறல் மன்னர் திறல் அழிய வெம்மாவுய்த்த செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே'' என்னும் போதும் சரி,

''ஒண் திறல் தென்னன் ஓட வடவரசு ஓட்டங் கண்ட
திண் திறலாளர் நாங்கூர்த் திரு மணிக் கூடம்''

''துண்'' என மாற்றார் தம்மைத் தொலைத்தவர் நாங்கை,'' என்னும் போதும் சரி, இக்கூற்று மெய்ப்பிக்கப் படுகிறது:

பல்லவன் வில்லவன் என்று உலகில் பலராய்ப் பலவேந்தர்
வணங்கு கழல்
பல்லவன், மல்லையர் கோன் பணிந்த பரமேச்சுர
விண்ணகரம்—அதுவே

தேர் மன்னு தென்னவனை முனையில் செருவில்திறல்
வாட்டிய திண் சிலையோன்
பார் மன்னு பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர
விண்ணகரம் அதுவே!''

என்னும் வரிகள் கூட இவற்றை விளக்குபவைதாமே?

கூற்றம் இல்லை!

கோசலப் பெருநாட்டிலே துர் மரணம், அகால மரணம் கிடையாது. யாரும் கொலை செய்வதில்லை; மருந்து கொடுத்துச் சாகடிப்பதுமில்லை.

''கூற்றம் இல்லை; ஓர் குற்றம் இலாமையால்''

குளிர்ந்த திருவுள்ளமா—எனவே சீற்றம் என்பதற்கே இடமில்லை.

''சீற்றம் இல்லை, தம் சிந்தையிற் செம்மையால்''

வாழ்க்கை முழுவதும் அறவழியில் தான்! மனதிலும் உயர்வு, அதனால் சொல்லிலும் உயர்வு, அதனால் செயலிலும் உயர்வுதான்; ஏற்றம்தான், இழிவு என்பதே கிடையாது.

''ஆற்றல்நல் அறம்; அல்லது இலாமையால்;
ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே''

எப்படி? எப்படி?

''கூற்றம் இல்லை! ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை! தம் சிந்தையிற் செம்மையால்;
ஆற்றல்நல் அறம்! அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழி தகவு இல்லையே!

கோசலத்தின் இந்தக் கணிப்புகளுக்குக் குறிப்பு தருகிறார் குறளாசிரியர்:

''கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டில் தலை''

இத்தகைய நாடு, நாடுகளுக்குள்ளே சக்ரவர்த்தி நாடாகும்;

தப்பு நடவாத திரு அயோத்தியிலே எது நடந்தாலும் நல்லதாகவே முடியும்! கூனி முதுகில் பெரிய பெருமாள் அடித்தார்; விளைவுண்டாகவே, அது ராம வனவாசத்திலும் இராவண வதத்திலுமல்லவா முடிந்து நலம் தந்தது. இதை மனங் கொண்டே அருளினார் மழிசைக்கிறைவர் இவ்வாறாக.

''கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு கூனிகூன்
உண்டைகொண்ட அரங்களோட்டி உள்மகிழ்ந்த
நாதன் ஊர்
நண்டையுண்டு நாரைபேர வாளைபாய, நீலமே
அண்டை கொண்டு கெண்டைமேயும் அந்தணீர
ரங்கமே,

நீரும் நிலமும்

ஒரு நாடு செழிக்க ஆற்று நீரும் வேண்டும், ஊற்று நீரும் வேண்டும்—அதாவது 'இருபுனல்'

அந்த ஆறுகளுக்கு நீர் வளம் அளிக்கும் மருதங்கள் ஏற்படுத்தவும் மலைச் சாரல்கள் வேண்டும்—அதாவது 'வாய்ந்த மலை'

பின் வேண்டுவது நல்ல கோட்டையும், காவலும்; அதாவது 'வல்லரண்'

பல்வேறு சாதனங்களிலிருந்து வந்து பாயும் நீரும், வருபுனலும், பலம் பொருந்திய கோட்டை மதில் காவல்களும் ஒரு நாட்டிற்கு அவசியமான உறுப்புகளாகும்.

''இருபுனலும் வாய்ந்த மலையும் வரு புனலும்
வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு''

என நவின்றார் திருவள்ளுவர்.

இதே நீர் வளச் சாயலைக் காட்டுகின்றார் கம்பர்! சூரியோதயம், சூரிய அஸ்தமனக் காலங்களில் வரைகள் (மலைகள்), பொன் மலைகளாகக் காட்சியளிக்கின்றன. பொன் மலையோ என்னும் வியப்பில் வெள்ளி மழைத்துளிகளை வானம் சாரை சாரையாகப் பொழிகின்றது, பொன் மலைகளைப் பெயர்த்தன வெள்ளிக் கடப்பாறைகள்!

''புள்ளி மால்வரைப் பொன் எனத் நோக்கி வான்
வெள்ளி வீழிடை விழ்ந்தன தாரைகள்!''

மேகங்கள் எப்படிக் கொடுத்தன மழைத் தாரைகளைத் தெரியுமா?—நெஞ்சத்தையே பறித்துத் தரும் நேர்மையாளர்களைப் போல், ஒன்றும்கூட !ஒளிக்காமல் அள்ளித் தரும் உள்ளங்களைப் போல் வழங்கினவாம்!

''உள்ள உள்ளம் எலாம் உவந்து ஈயும் அவ்
வறியோரின் வயங்கின மேகமே''

இக்கவிதை மழையைக் கண்டு மகிழுங்கள்.

''புள்ளி மால் வரைப்பொன் என நோக்கி
வெள்ளி வீழிடை வீழ்ந்தன தாரைகள்
உள்ளி உள்ளமெலாம் உவந்து ஈயும் அவ்
வறியோரின் வழங்கின மேகமே!''

இந்த நீர் வளம் எப்படி எல்லாம் பரந்து காட்சி தருகிறது: உடல் முழுவதும் பரவிய உயிர் எல்லா உறுப்புகளையும் வளர்ந்து செழிக்க வைப்பது போல,

"தாது உகுசோலை தோறும் சண்பகக் காடுதோறும்
போது அவிழ் பொய்கை தோறும் புதுமணல் தடங்கல்
தோறும்,
மாதவி வேலிப் பூகவனம் தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாயது அன்றே"

"இறைவன் உடல் மிசை உயிர் எனப் பரந்து எங்கும்
கரந்துளன்"

என்ற நம்மாழ்வாரின் திருஉள்ளத்தைச் சிரமேற்கொள் கின்றார், கம்ப நாட்டு ஆழ்வார். ஆழ்வார்கள் காட்டும் ஆற்றுவளம் அதுவும் காழிச் சீராம விண்ணகர ஆற்று வளம் பாயும் அழகே அழகு!

மை அணைந்த குவளைகள் தன்கண்கள் என்றும்
மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசி மார்கள்
செய்யணைந்து, களைகளையாது ஏறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே!

அவ்வாயவாள் நெடுங்கண் குவளைகாட்ட
அரவிந்தம் முகம் காட்ட, அருகே ஆம்பல்
செவ்வாயின் திரள் காட்டும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே!

உறக்கத்தின் இறக்கம் :

முன்பு,கோசல நாட்டின் வளத்தை எக்களிப்பில் காட்டி னார் கம்பர்; பின் குதூகலத்தில் காட்டினார் கம்பர். அதே லட்சுமி கடாட்சத்தை உறக்கத்தில் காட்டும் கம்ப சித்திரத்தையும் காண்போம்.

சத்தம் செய்யாதீர்கள்! பேசாதீர்கள்! எல்லாமும் எல்லாரும் உறக்கத்தில் உள்ளன; உள்ளனர். முதலில் எது உறங்குகிறது தெரியுமா? சங்குகள் பெருத்தால் அது நீர் வளத்தைக் காட்டும். சங்குகள் சுகமாக உறங்குகின்றன.

''நீர் இடை உறங்கும் சங்கம்'' காட்டெருமைகள், கட்டிள மேதிகள் உண்டு கொழுத்து நிழலைக் கண்டதே சுகம் என உறங்குகின்றன. இதனால் பால் வளம் தெரிகிறது.

''நிழல் இடை உறங்கும் மேதி'' வண்டுகளா அவை பறக்கவில்லை, பாடவில்லை, படுத்துத் தூங்குகின்றன. எங்கே, வீரர்கள் அணிந்துள்ள மாலைகளிலே; மணமக்கள் அணிந்துள்ள மாலைகளிலே! வீரமும் காதலும் விரவிக் கிடக்கின்றனவாம்.

''தாரிடை உறங்கும் வண்டு'' சிரி இலட்சுமி தேவி எங்கு குடிகொண்டிருக்கிறாள்? தாமரையில்தான்! ஆனால் எவ்வளவு நேரம் விழித்துக் கொண்டிருக்க முடியும்.

''தாமரை உறங்கும் செய்யாள்'' நீர் வளம் என்றால் சேறு எங்கேனும் பக்கத்தில் இருக்கும். இதைவிடவா தூங்கு வதற்கு சாதனம் வேண்டும் திருவாளர் ஆமையாருக்கு!

''தூரிடை உறங்கும் ஆமை'' நீர் வளம் என்றால் அலை அலைக்கும் துறைகள் உண்டே துறைகளில், அதோ முத்துச்சிப்பிகள் ஆனந்தமாக உறங்குகின்றனவே.

''துறையிடை உறங்கும் சிப்பி'' அது சரி, அன்னங்கள் எங்கே? தண்ணீரில் தூங்க இயலாதே; அதனால் என்ன பரவாயில்லை, நெற் போர்கள் குளுமையாக இருக்கின் றனவே, அங்கே தூங்குகின்றன.

''போரிடை உறங்கும் அன்னம்'' இவ்வளவும் இருக்க மயில்கள் எங்கே? அதோ அவை சோலைகளில் உறங்கி விழிக்கின்றனவே.

''பொழிலிடை உறங்கும் தோகை'' அப்படியானால் முழுவதும் பார்த்தால், அஷ்டலட்சுமி கடாட்சமும் மலிந்து கிடக்கின்றதே.

இதைப் பாட வேண்டிய விதம் எப்படி?

1. நீரிடை உறங்கும் சங்கம்!
2. தாமரை உறங்கும் செய்யாள்!
3. நிலத்திடை உறங்கும் மேதி!
4. தாரிடை உறங்கும் வண்டு!
5. தூரிடை உறங்கும் ஆமை!
6. துறையிடை உறங்கும் சிப்பி!
7. போரிடை உறங்கும் அன்னம்!
8. பொழிலிடை உறங்கும் தோகை!

இந்த நிலைகளால் என்ன தெளிவாகிறது என்பது வள்ளுவப் பெருமான் வார்த்தைகளை ஒத்துநோக்கும் போது புரிகின்றது,

ஒரு நாட்டில் இருக்கக் கூடாதது பிணி! ஆனால், என்னென்ன அணிகள் இருத்தல் வேண்டும்?

செல்வம், விளைவு, இன்பம், ஏமம் அப்படியென்றால் பிணி இன்மையும் ஒரு அணிதான்.

பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம்;
ஏமம்—அணி என்ப நாட்டிற்கு.

இவ்வையந்தும் அருளிச் செயலில் காணும் அரிதுயில் அழகு!

வயிறு வீங்கச் சாப்பிட்டுவிட்ட குழந்தை ஆனந்தமாகத் தூங்கும். தன் வேலை எல்லாம் முடிந்தது என்று ஆலிலையில் கண் வளர்ந்து கிடந்த இந்தத் தூங்குமூஞ்சிப் பெருமாளுக்கு அரவணையும் கிடைத்து விட்டதே! அதாவது, புறச் சூழலும் தூங்குவதற்கு என்றே அமைந்து விட்டது இதில் பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம் ஏமம் (பாதுகாப்பு பயமின்மை) ஆகியவை காணப்படுகின்றன.

பாலனாகி ஞால மேழும் உண்டு பண்டு ஆலிலைமேல்
சால நாளும் பள்ளி கொள்ளும் தாமரைக் கண்ணன்
எண்ணில்
நீலம்ஆர் வண்டு உண்டு வாழும் செய்தலின்:தண்கழனி
ஏலம் நாறும் பைம் புறவின் எவ்வுள் கிடந்தானே!

அவ்வுள் அப்பன் தூங்குகின்றான்; உஸ்! சத்தம் செய்யாதீர்கள்! ஆகட்டும், ஆனால் உறக்கம் மட்டுமே வளமல்ல, மேலும் தெளிவு அருளுகின்றார் வள்ளுவப் பெருமான்!

''நாடு என்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம் தரும் நாடு''

நல்ல மாட்டுக்கு ஒரு அடி கூட வேண்டாம்! வளத்தைத் தேடுவதைவிட வளம் தாமாகத் தேடி வரவேண்டும்.

தாமே நாடும் வளம்—அதுவே நாடு வளம்

கோசல நாட்டிலே செங்கால் அன்னம், தன் குஞ்சுகளுக்குப் பால் ஊட்டக் கூடக் கவலைப்படுவது இல்லையாம்!

குட்டையில் மலர்ந்து இருக்கும் தாமரையில் வளர்த்தி விட்டால் போதுமே, தன் கன்றை நினைத்தே வீடுதிரும்பும் எருமைகள் சொரியும் பாலையே குடித்துக் கொண்டால் போதாதா?

சேல்உண்ட ஒண் கணாரின் திரிகின்ற செங்கால்,
அன்னம்
பால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயிலப் பச்சைத் தேரைத் தாலாட்டும்
பண்ணை

இந்தக் காட்சியை இன்னொரு விதமாகக் காட்டுகிறார் கம்பநாடர் வெறும் நீரால் மட்டுமன்று பாலாலும் தாமாக எருமைகள் சொரியும் பாலாலும் வயல்களில் வளம் செழிக்கிறது.

கார்கள் என்ன வரும் கருமேதிகள்
ஊரில் நின்ற கன்று உள்ளிட உண்முலைத்
தாரை கொள்ளத் தழைப்பன் சாலியே!

எருமைகளின் பால் சொரியும் வளத்தால், வயல்களிலும் உள்ள பயிர்கள் செழிக்கின்றன. வயல்கள் பாலுண்டால் கடலில் உள்ள மீன்கள் தேனாற்றைப் பருகுகின்றனவாம்!

"ஆலைவாய்க் கரும்பின் தேனும், அரிதலைப் பாளைத் தேனும்
சோலை வீழ்க் கனியின் தேனும், தொடைஇழி இறாலின் தேனும்
மாலை வாய் உகுத்த தேனும், வரம்பு இகந்துஓடி வங்க
வேலைவாய் மடுப்ப மீன் எல்லாம் களிகும் மாதோ"

என்று தேனில் மீன், மீனில் தேனை மிளிர வைப்பார் கம்பர் ஆழ்வார்கள் அருளும் காட்சியிலும், இதற்கொப்பதோர் இடமுண்டு.

நாடாமலேயே மக்களை நாடும் லட்சுமி கடாட்சம் உண்டு.

சிலை யிலங்கு மணி மாடத்து உச்சி மிசைச் சூலம்
செழுங் கொண்டல் அகபிடி ரியச் சொரிந்த செழு முத்தம்
மலையிலங்கு மாளிகை மேல் மலி வெய்தும் நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சமே!"
(பெ. திரு. 3.9.4)

கழனிகள் கதம்பமாகிக் கிடக்கின்றன. நெல், கமலம், சேல், கயல், வாளை, செங்கழுநீர் எல்லாம் பிரிக்க

முடியாமற் பிணைந்து கிடக்கின்றனவே! இந்த வளத்தில் மறையவர்களும் தானங்கள் பெற்றுக் கிடக்கின்றனர்.

(1) செந்நெலொடு, (2) செங்கமலம் (3) சேல் கயங்கள், (4) வாளை (5) செங்கழுநீரொடும் இடைந்து கழனி திகழ்ந்து எங்கும். மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்தும் நாங்கூர் வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சமே!

இங்கு, தேன் வெள்ளம் பொங்கிப் பரவிட யார் வந்து தடுத்தாலும், பெருஞ் செல்வத்தைத் தடுக்க முடிய வில்லையே!

மாறாத மலர்க் கமலம் செங்கழுநீர் ததும்பி
மது வெள்ளம் ஒழுக வயல் உழவர் மடையடைப்ப
மாறாத பெருஞ் செல்வம் வளருமணி நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சமே!

(பெ. திரு. 3.9.8)

நாடு இது—நாட்டரசன் எப்படி?

நாட்டுக்கு நல்ல அரசன் அமைவது; சகல நலன்களும் உள்ள பெண்ணுக்கு திரு மாங்கல்ய பாக்கியம் போல!

ஆங்க மைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே,
வேந்து அமைவு இல்லாத நாடு!

வேந்தன் அமையும் வரத்தையும் விளக்குகிறார் கம்பநாட்டாழ்வார்.

சக்ரவர்த்தியான தயரதன் மக்கள் மீது அன்பு செலுத்துவதில் அவர்களுக்கு நலம் தருவதில் நல் தவமே! 'புத்' என்னும் நரகத்தில் பெற்றோர் விழுவதைத் தடுக்கும் புத்திரன்போல் மக்களுக்கு! பகைவர்கள் நோய் என்றால் தயரதன் அதற்கு மருந்து! எல்லோருக்குமே தயரதன்தான் அறிவுப் பெட்டகமாக விளங்கினான்.

தாய் ஒக்கும் அன்பின் தவம் ஒக்கும் நலம் பயப்பின்;
சேய் ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு
கேள்வி!
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும். எவர்க்கும் அன்னான்!

மேலும் ஒரு பாட்டுக்குத் தவறாகப் பொருள் கொண்டால் அது படுத்தும் பாட்டையும் பார்க்கலாம்! ஜனங்களெல்லாம் உயிர்கள்; தயரதன் அது உறையும் உடலாம். இந்தப் பாடல் எப்படி அமைந்து விட்டது எனக் காணலாம்.

''வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்''

சிங்கம் போன்ற வீரமுடைய தயரதச் சக்கரவர்த்தி,

''உயிரெலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்''

மக்களை எல்லாம் தன்னுடைய உயிரைப் போலவே மதிக்கலானார்.

''செயிரிலா உலகினில்''

குற்றமில்லாத தனது சாம்ராஜயத்தில்,

''சென்று நின்று வாழ்''

உலவியும், ஓரிடத்திலும் வாழும் பிராணிகளும் மக்களும் உயிர்களெல்லாம் தங்கி இருக்கின்ற உடலைப் போன்று இருந்தான்!

உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்!

''திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக் கண்டேன்''

என்னும் பண்தமிழ் மாறன் பசுந்தமிழன் பாணியில்அமைந்துள்ள கவிச் சக்ரவர்த்தியின் ராஜ முத்திரை தாங்கிய இப்பாசுரத்தின் கடைசி வரியை இப்படி எழுதியவன்

யாரோ ஏட்டைக் கெடுத்திருக்கின்றான்! பாடியவன் யாரோ பாட்டையே கெடுத்து விட்டான்! ஸ்ரீ வைணவ சமயத்தின் தலையாய கருத்தையே தகர்த்து விட்டான்!

''உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்''

இந்த அடியை தற்காலத்தில் உடல் கூற்று சாத்திரம் பயின்ற மாணவனின் வழியில் பாடிப் பாருங்கள்!

அவன் கேட்கும் கேள்வி, தயரத சாம்ராஜ்யத்திலே, பேரரசிலே எத்தனை மக்கள்?—கோடானு கோடி!

சக்கரவர்த்தி யின் எண்ணிக்கை என்ன?—ஒன்றே ஒன்று தான்.

அவ்விதமாயின் கோடானு கோடி உயிர்கள் ஒரு உடம்பில் தங்கிக் கிடந்ததா? ஒரு உடலில் ஒன்றுக்கு மேற் பட்ட உயிர் இருக்க முடியுமா?

மாதுளம் பழத்தைப் பாருங்கள், ஒரு பழத்தில் தான் எத்தனை மணிகள்!

அதைப்போல,தயரதன் என்னும் பழத்தில் கோடானு கோடி மக்கள் பழத்தில் உள்ள மணிகள் போல உறைந்தனர் எனக் கொள்ளலாமா? தயரதன் உயிர்க் களஞ்சியமா? அப்படியானால் தயரதன் ஒரு உயிர் போனால். வேறு உயிருடன் வாழலாமே; அவன் இறக்க வேண்டியது இல்லையே! முன்னுக்குப் பின் முரண் அல்லவா இது?

பெருமாள் வனம் சென்றது அறிந்தும் இறந்தும் விட்டவன் தயரதன்.

''தேன் நகும் மாமலர்க்கூந்தல் கௌசலையும்
சுமித்திரையும் சிந்தை நோவ
கூன் உருவின் கொடுந் தொழுத்தை சொற் கேட்ட
கொடியவள் தன் சொற் கொண்டு இன்று
கானகமே மிக விரும்பி நீ துறந்த
வள நகரைத் துறந்து, நானும்
வானகமே மிக விரும்பிப் போகின்றேன்
மனு குலத்தார் தங்கள்கோவே''

என்பதல்லவா தயரதன் பற்றி கூரார்ந்த வேல்வலவன் கோழியர் கோன் குடை குலசேகரன் சொற் செய்த சீரார்ந்த தமிழ்மாலை;

வடமொழியில் இராமாயணத்தைப் பலர் பாடினார்கள். வான்மீகி முனிவருக்கு மட்டும் சிறப்பாக இராமாயணம் பாடிய பெருமைக்காக வான்மீகி பகவான் என்ற மகுடம் உள்ளது; இராமாயணம் ஸ்ரீ இராமாயணம் ஆயிற்று! வட மொழியில் பாரதத்தைப் பலர் பாடினார்கள். ஆனால் வியாசர் பாரதத்தைப் பாடிய பெருமையால் வியாச பகவான் எனப் போற்றப்பட்டார். பாரதமும் மகாபாரதம் ஆயிற்று!

இதே பாரதத்தைத் தமிழில் பலர் பாடினர்!

ஆனால் பெருமை என்னவோ வில்லிபுத்தூராருக்குத் தான்; பாரதம் பாடிய பெருமைக்காக வில்லிபுத்தூர் ஆழ்வார் எனச் சிறப்புத் திருநாமம் அவருக்கு ஏற்பட்டது. கிருஷ்ணன் தூதுப்படலத்தை அவர் எழுதினாரா, கண்ணன் அவர் மனதில் இருந்து எழுத வைத்தாரா என்பது பாகவதர் கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

தமிழில் பலர் இராமாயணம் பாடினார்கள். ஆனால் இராமாயணத்தைப் பாடிய பெருமைக்காக கம்பருக்கே 'கம்பநாட்டு ஆழ்வார்' என்னும் விருதை ஸ்ரீ வைணவர்கள் அளித்துள்ளனர். அவர் பாடியதும் தெய்வமா கதையின்

தெய்வமார்க்கத்தை! இரணியன் வதைப்படலத்தை எழுதிய புலவர் அல்லவா, கம்பர்? சிரித்தது! எது? திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது! எது தெரியுமா? 'செங்கட்சீயம்'

இந்த அடியை சேவிக்கையில் அம்மேட்டழகிய சிங்கர் கையை உயர்த்திச் சிரித்து நின்ற காட்சியையே மக்கள் மீண்டும் காணச் செய்தருளினாரே!

கம்பராமாயணத்தை அரங்கேற்றம் செய்ய பெருமாள் அருள் பாலிக்க வேண்டுமென்று; ஆர்வம் மேலிட்டு அரங்கன் திருமுன்பு ஏடும் எழுதிய கையுமாகச் சேவிக்க நின்ற கம்பரா? அவர் இப்படி சந்தேகம் வரப் பாடுவாரா?

நாராயணன் பரமாத்மா, உயிர்; இவ்வுயிர் ஜீவாத்மாக் களை உடலாகக் கொண்டு அவற்றுக்கு உயிராகத் திகழ்ந்து அவற்றை இயக்கி வருகின்றான். உயிரில்லாமல் உடல் இயங்காதது போல, அவனின்றி ஏதும் இயங்காது; இதைத் தான்; நம்மாழ்வார் உரைத்த தமிழ் மறை.

திடவிசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை
படர் பொருள் முழுவதுமாய் அவை அவை தொறும்
உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே!

இப்பாசுரத்தின்படி உடல்கள் உருப்படிகள் அனேகம் உள்ளன. அசித் சித் அனேகம். ஆனால் அவைகளை இயக்கும் பரமாத்மாவாகிய உயிர் ஒன்றே! பரமாத்மாக்களாகிய உயிர்கள் பல இருப்பின் என்ன ஆகும்? எண்ணமே நடுங்க வைக்கிறது.

கம்பரும் முன் ஒரு பாடலில் உயிர் ஒன்றுதான், அதுவே பல அங்கங்களில் பிரவேசித்து மிளிர்கின்றது; பரமாத்மா வாகிய உயிர் பற்பல பொருள்களிலும் பரவி அவைகளை மிளிரச் செய்கிறது என்றார்; இதற்கு மாறாக அவர் இங்கு

பாடலாமா? பரமாத்மாவுக்கு, ஸ்ரீ வைணவத்தில் உள்ள தனிச் சிறப்பு எல்லா அசித், சித் வஸ்த்துக்களிலும் பரவி அவைகளை இயக்குவதுதான். இதுவே நாராயணன் என்பதன் பொருள்.

அவன் பரமாத்மா, மற்றவை ஜீவாத்மாக்கள். தன் காவியத்தில் எடுத்த எடுப்பிலேயே கம்பர் எதைக் காட்டுகிறார், காட்டியிருக்கிறார் என்பதை அவரின் பல பாடல்கள் தெரிவிக்கின்றன.

நாராயணன் விளையாட்டு எல்லாம் நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான் அறிந்த வான்மீகி என்பான்
சீரணி சோழ நாட்டில் திருவழுந்தூரில் வாழ்வோன்
சாரணக் கொடையான் கம்பர் தமிழனார்.

வான்மீகி பகவானும் கம்ப நாட்டாழ்வாரும் நாராயணன் விளையாட்டை 'நாராயணன்' என்பதன் பொருள் தெரியாமலா பாடினார்கள்? எனவே,

'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்'

என்பது சரியாகாது!

பரமாத்மா எப்படி அசித் சித்துக்களில் ஊடுருவி அவைகளுக்கு உயிராய் நின்று காப்பாற்றுகிறாரோ, அப்படியே தயரதனும் பரமாத்மாவைப் போல் இருக்கிறான். உயிர்கள் பரமாத்மாவுக்குள் அடங்குவது போல் மக்கள் என்னும் பல்வேறு உயிர்களும் பார் அரசாளும் தயரதனின் உயிருக்குள் அடங்குகின்றனர். எனவே, உயிரெல்லாம் உறையும் ஓர் உயிரும் ஆயினான், தயரதன்! இதுதான் சரி!

இக்கருத்து ஸ்ரீ வைணவத்திற்கே உரிய சீரிய கருத்தாகும்.

திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே.

என்னும் நம்மாழ்வாரின் திரு உள்ளம்தானே இதுவும்!

ஸ்ரீ வைணவத்தின் கருத்தை அறிந்தவரான கம்ப நாட்டாழ்வார், தயரதனைப் பற்றி உரைக்கையில்

''உயிர் எலாம் உறைவதோர் உயிரும் ஆயினான்''

என்று அருவினார்.

ஸ்ரீ வைணவ உலகம் இதைச் சிரமேற் கொண்டு நாடும் நகரமும் நன்கறியச் செய்ய வேண்டுவது பெருங் கடமையாகும்!

கோசல நாட்டில் உள்ள மக்களுக்கு நாட்டை வளமாக்கி நன்கு அரசு செய்வதால் பொருள் துறையில் கதியையும், இனி, பின்வரும் கதையில், காவியத்தில் சக்ரவர்த்தித் திருமகனாய் இராமனையும் அருளியதால் அருள் துறையிலும் கதியை அளித்து கோசலப் பெருநாட்டை மட்டும் அல்லாமல் செயிர் இலா உலகையே ''கதி அருளும் நாடு'' எனப் போற்றிப் புகழும் வகையில் திகழச் செய்தார் கவிச் சக்ரவர்த்தி!

கதி அருளும் நாடு

கம்பர் காட்டும் கதி அருளும் நாட்டிற்கு இலக்கணம் போட்டது வள்ளுவர்; வரைபடம் போட்ட வள்ளுவர் வாக்குப்படி, கட்டிடம் கட்டினார் கம்பர். தமிழ்ப்புலவர்கள் இவர்களை தமிழுக்கு கதி என்றால், இவர்கள் காட்டும் நாடு ''கதியருளும் நாடு'' தானே!

பக்தியின் எல்லை சக்தி!

உலகில் பல்வேறு பாகங்களிலும் வசிக்கும் மக்கள் பக்தி உணர்ச்சியுடன் காணப்படுகின்றனர். ஒரு பாகத்தில் 'அல்லா' என்ற பெயரால் வழிபாடு நடத்துகின்றனர் வேறு சில பாகங்களில் 'கிருஸ்து' என்று வணங்குகின்றனர். புத்தனை வணங்குகின்றவர்கள் பௌத்தர்கள். மகாவீரர் தொடக்கமான தீர்த்தங்கர ஆசாரியர்களைத் தொழுப வர்கள் சமணர்கள் அல்லது ஜைனர்கள். இவ்விதமே பார்சி மதம், யூத மதம், கண்பூசி மதம், தாவுமாரிசம் எனவும் அமைந்த வழிபாடுகள் உண்டு. இவை அல்லாமல் சென்றடைய முடியாத காடு, மலைப்பாகங்களில் ஏற்பட் டுள்ள வழிபாட்டு முறைகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. பாகுபாடுகள் இப்படிப் பலவாக இருப்பினும், இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக அமைந்துள்ளது, பக்தி உணர்ச்சி தான்!

பாரதியார் இதனைப் பாடுவதைக் கேட்கலாமே!

''பூமியிலே, கண்டம் ஐந்து மதங்கள் கோடி!
புத்த மதம், சமண மதம், பார்சி மார்க்கம்,
சாமியென யேசுமதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் ஹிந்து மதம், இஸ்லாம், யூதம்
நாமமுயர் சீனத்துத் 'தாவு' மார்கம்
நல்ல 'கண்பூசி' மதம் முதலாம் பார் மேல்
யாம் அறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே!
யாவினுக்கும் உட்புதைந்த (பக்திக்) கருத்திங் கொன்றே!

பாரதி வழிவந்த நாமக்கல் கவிஞர், தமிழ்நாடு அரசின் முதல் ஆஸ்தான கவி இராமலிங்கம் பிள்ளையும் இதற்குப் பின்பாட்டு பாடுவதைக் கேட்கலாம்;

''அல்லா! என்பார் சில பேர்கள்!
''அரன்! அரி!'' என்பார் பல பேர்கள்!
வல்லான்! அவன் பரமண்டலத்தில்
''வாழும் தந்தை!'' என்பார்கள்!
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சில பேர் சொல்வார்கள்!
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே''

உலகின் கண் பரவியுள்ள எல்லா மதங்களையும்விட பரத கண்டத்தில் பரவியுள்ள இந்த மதத்திற்கு ஒரு தனி ஏற்றம் உண்டு! ஏனைய மதங்களிலே தெய்வத் தன்மையை இறைக் குணத்தைப் பெண் வடிவில் காண இயலாது! தெய்வத்தில் பெண்மையையும், பெண்மையில் தெய்வத் தன்மையையுங் கண்டது பரத நாட்டின் கண் பரந்துள்ள இந்து சமயம் ஒன்றேயாகும்!

மற்ற மதங்களிலே ''அல்லா உண்டு'' ''அல்லி'' இல்லை! ''கிருஸ்து'' உண்டு! ''கிருஸ்தை'' இல்லை! புத்தன்! உண்டு; பௌத்தை இல்லை, மகாவீரரான நிர்வாணர் உண்டு; ஆண் உருவமே நிர்வாணம் என்றால் அதைப் பெண் உருவில் காண முடியாதே!

இந்து மதத்திலோ, பிரமன் என்றால் சரஸ்வதி உண்டு. பரமசிவன் என்றால் பார்வதி உண்டு திருமால் என்றால் திருமகள் உண்டு, முருகன் என்றால் தேவயானை உண்டு. வள்ளியும் உண்டாம். கணபதி என்றால் கூட சித்தியும் உண்டாம்; புத்தியும் உண்டாம். இந்திரன் என்றால் இந்திராணியும் நிரந்தரம்!

உலகம் எங்கும் ஆண்; பெண், தத்துவமாகவே அமைந்து, இயங்குகின்றது. எனவே கடவுள் தன்மையை ஆணாக மட்டும் கொண்டால். அது பூரண ஞானமாகாதே! உலகம் எங்கும் ஆண், பெண், தன்மையுடன் இயங்குவதால் இவ்வுலகினை உண்டாக்கி, இயக்கி அழிக்கும் பெரும் சக்தியும் ஆண், பெண் தன்மையுடன் தான் விளங்க வேண்டும்!

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே!
அதைத் தொழுது படித்திடடி பாப்பா!

எனப் பரவசப்பட்டு பாடினான் மகாகவி பாரதி: ஒரு சொல்லை எடுத்துக் கொள்ளுவோம். தமிழ்மொழியிலே உள்ள ''கடவுள்'' என்ற சொல்லே கடவுளைப் போன்று மிக மிக வியக்கத்தக்கது; இச்சொல் 'கட' என்ற பகுதியும் 'உள்' என்ற விகுதியும் இணைந்தது. 'கட' என்ற பகுதி கடவுள் நம் அறிவையெல்லாம் அதாவது அறியும் தன்மையை எல்லாம் கடந்து நிற்பவன் எனப் பொருள் தரும். ''உள்'' என்ற விகுதியால், அவன் நமது அறிவாலும் ஓர் அளவு எட்டப்படுபவன்: நமது அறிவிலும் உள் புகுந்தவன் என அறிகிறோம். கடவுளின் தன்மையை எல்லாம் நம் அறிவால் அறிந்து விட்டால் அவன் கடியாரம், மிதி வண்டி போன்று நம் அறிவுக்குள் அடங்கிவிட்டவனாவான்' இப்படியானால் நெடுங்காலம் அவனைப் பற்றி முனிவர்கள் தவம் செய்ய வேண்டாம்! நமது அறிவுக்கும் ஒரு சிறிதும் எட்டாதவன் என்றாலும் கடவுள் ஒரு கல்பாறைதான்! அதற்காக நம் மண்டையை அவன் மேல் மோதி உடைத்துக் கொள்ள வேண்டியதில்லை. நம் அறிவுச் சக்திக்கு இயன்ற அளவில் அவன் கிட்டியும், இயலாத அளவிற்கு அவன் எட்டியும் இருப்பதால் தான் அவன் 'கட+உள்' அல்லது ''கடவுள்'' எனப்படுகிறான். உலகில் பல்வேறு பாகங்களில் பக்தி உணர்ச்சி உருவானதைக் காண்போம்.

உலகினில் பற்பல பாகங்களில் தோன்றி வளர்ந்த மக்கட் சமுதாயம் படிப்படியாகக் கடவுள் தன்மையைக்

கண்ட விதமே இது! இதனால் சச்சரவு வேண்டாம் என ஆழ்வார்களில் தலைவரான சடகோபர் அருள்வதைச் சேவிக்கலாம்.

அவர், அவர், தமது, தமது, அறிவு அறிவு, வகை வகை;
அவர், அவர், ''இறையவர்'' என அடி அடைவர்கள்!
அவர், அவர் இறையவர் குறைவிலர்! இறையவர்!
அவர் அவர் விதி வழி அடைய நின்றனரே!

(திருவாய் மொழி 1-1-5)

உலகின் பல பாகங்களிலும், பல தரப்பட்ட மக்களிடையேயும் பரந்துள்ள பக்தி உணர்ச்சி, பாரத நாட்டின் நிதியான இந்து மதத்தில் சக்தி வழிபாடு என்று உருவெடுத்த கதை; ஒரு தொடர் கதையே. அறிவால் அறிந்து, பகுத்தறிவால் உணர்ந்து, மனச்சாட்சியாலும் தெளிந்து மகிழப்பட வேண்டியதாகும்!

மனித இனம் உலகில் தோன்றி வளர்ந்து படிப்படியாகப் பண்பாடு அடைந்து வாழ்ந்து சிறப்படைந்தது சிற்சில பகுதிகளிலாகும். இவைகளை பண்டைய நாகரீகங்கள் என்பார்கள். இப்படிப் புகழ் அடைந்தவை கிரேக்க—ரோமாபுரி நாகரீகம், எகிப்து நாகரீகம் சீன நாகரீகம் சிந்துவெளி நாகரீகம், கங்கைவெளி நாகரீகம், காவிரி நாகரீகம் என்பனவாகும். சிந்து, கங்கை, காவிரி, நாகரீகங்கள் பாரத நாகரீகங்கள். பாரத நாகரீகத்தை இந்து நாகரீகம் எனவும் கூறலாம்.

பாரத நாகரீகத்தைப் பிரதிபலிக்கும் இந்து சமயமே உலகில் முற்பட்டது. மற்ற மதங்களுக்கு ஆய்வு உண்டு. அல்லாவைத் தொழுத மகம்மது நபிக்கு முன் முகம்மதியம் கிடையாது.

பரமண்டலப் பிதாவைத் தொழுத கிருஸ்து பிறந்து இன்றளவும் 1997 வருடம்தான் ஆகிறது. இரண்டாயிரம்

ஆண்டுகட்கு முன் தோன்றிய புத்தனுக்கு முன் புத்த மதம் கிடையாது. அதற்குப் பின் தோன்றியதே சமண மதமும், ஏனையவைகளும்.

எல்லா மதங்களிலும் ஏற்பட்டுள்ள மத நூல்களைக் கொண்டும் இந்து மதத்தின் தொன்மையை அறியலாம், முகம்மது நபிக்குப்பின் தோன்றியதுதான் குரான். கிருஸ்துவுக்குப் பின் இணைக்கப் பட்டதே விவிலியம் எனப்படும் பைபிள். புத்த சமண நூல்கள் பிற்காலத்தியவைகளே!

இந்து மதத்தின், அடிப்படையான வேதங்கள் அதாவது நான்கு வேதங்களும் என்று தோன்றியவை! எனக்கூற இயலாது. ஆதியில்லாத வேதமே கடவுள் அறிவின் தொடக்கம்!

வேதங்களின் கால அளவைக் காண இயலவில்லை: அவைகளை இயற்றிய ஆசிரியர்கள்தான் யார்? இதற்கும் பதில் கூற இயலாது. நான் மறையாகிய இறைவனே வெளிப் படுத்தினான் என்பது மரபு.

வேதங்களை இயற்றியவன் இருப்பின் அவைகளை அவன் எழுதி வைத்திருப்பானே! எழுத்துத் தோன்றாக் காலத்தில் தோன்றியவைகள் வேதங்கள். எனவே, வேதங்கள் மனிதனால் தோற்றுவிக்கப்படாமையால், அவை ''அபௌர்ஷ்யம்'! என வடமொழியிலும்; ''எழுதாக் கிழவி'' எனத் தமிழ்மொழியிலும் போற்றப்படுகின்றன.

உலகில் பரத நாட்டின் கடவுள் பக்தி உணர்ச்சியின் பழமையைப் போலவே; தமிழ்நாட்டில் தோன்றி உருவெடுத்த கடவுள் பக்தி — உணர்ச்சியும் பழமை யானதே!

உலகின் சிகரம் எனப் புகழுடையது இமயமலை இமய மலையைவிடத் தொன்மையானது தமிழ்நாட்டில் விளங்கும் திருவண்ணாமலை. இது பூமி இயல் மேதைகள் ஒப்புக் கொள்ளும் உண்மை.

காவிரி நதிக் கரையில் உள்ள கும்பகோணத்தில் உயிர் தத்துவக் கும்பம் மிதந்து வந்து (உடைந்து) கோணமாகி மனித இனம்—உயிரினமே தோன்றியதாகப் புராணம் கூறும்! மனித இனமரத்தின் வேர் காவிரிக் கரையில் தான் ஊன்றியிருப்பதாக மேனாட்டு நூல்களும் சித்தரித்துள்ளன.

தமிழர்களின் தமிழ்த் திருநாட்டில் நம், கடவுள் பக்தி உணர்ச்சியும் சக்தி வழிபாடும் எவ்விதம் வளர்ந்தது? என்பதை, ஆராய்ச்சி செய்து, அறிந்து கொள்ள வேண்டியது நமது பெருங்கடமையாகும். பகுத்தறிவு இதைப் பகைக்க முடியாது. பாராட்டும்! மனச்சாட்சி இதை மறைக்க முடியாது. மதித்து மகிழும்!

கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்த மனித இனங்கள் காடுகளிலும் மலைக் குகைகளிலுமே வசித்தனர். சூரியன் தோன்றிய பிறகு, உலவி, உணவுகள் தேடி, உண்டு கதிரவன் மறையுமுன்பே குகைகளிலும், மரப்பரண்களிலும் விடியும் வரை தங்கித் தம்மைக் காத்துக் கொண்டனர். இப்படியாக சூரியன் தான் தங்களைக் காக்கும் நண்பன் என்று கண்டு மகிழ்ந்து வாழ்ந்தனர்.

மழையின்மையாலோ, வெப்ப நிலையினாலோ, மரங்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்ததாலோ காட்டில் தீப்பற்றிக் கண்ணுக்கெட்டிய தூரம் சாம்பலாகிவிட்டது. சூரியன் கோபமடைந்துவிட்டதாக அஞ்சினர். கதிரவனைச் சாந்தமடையத் தொழுந்தனர். இவ்விதமே நெருப்பு வணக்கம் ஏற்பட்டது.

சூரியன் இல்லையானால் மரம் செடி வகைகள் விளையாது. கதிரவனே மரம், செடி; மனிதர்கள் வளர வாழ உதவுகிறான். அவனே காட்டு நெருப்பாகவும் மாறி அழிக்கின்றான். எனவே சூரியனிடமும் நெருப்பினிடமும் படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழில்களைக் கண்ட மனிதன் சூரியனையும், நெருப்பையும்

கடவுள் என்றே போற்றி வழிபடலானான். எனவே பக்தி, பயத்தின் அடிப்படையில் தான் முதலில் பிறந்தது.

காலச் சக்கரம் சுழன்றது! சுழன்றது! சுழன்றது. மனிதனின் கடவுள் பக்தி உணர்வும் வளர்ந்தது! வளர்ந்தது! வளர்ந்தது!

அமோக மழை பெய்து கால் வைத்து ஊன்ற இடமில்லாமல் ஆடு, மாடு, மனிதன் எல்லோரும் மிதந்தனர். மரங்கள் எல்லாம் மிதந்து நீந்தின.

மழைத் தெய்வம், தண்ணீர்த் தெய்வம் கோபித்துக் கொண்டதாகப் பயந்து மனிதன் மழையை, தண்ணீரை, ஆற்றை, குளங்களை வணங்கினான்.

நீர் இன்றி அமையாது உலகம், நீர் இல்லாமல் எதுவும் முளைக்காது.

''விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலை காண்பு அரிது'' (திருக்குறள் 2—6)

தண்ணீரே உலகை உண்டாக்குகிறது. காப்பாற்றுகின்றது. அழிக்கவும் செய்கிறது என்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே
எடுப்பதூம் எல்லாம் மழை'' (திருக்குறள்2—5)

எனவே நீரை, மழை, ஆறு, ஏரி குளம் வடிவில் வழிபட வேண்டிய பெருஞ்சக்தி யெனவுணர்ந்து வணங்கினான். பயத்தின் அடிப்படையில்தான் இரண்டாவதாக நீரையும் வழிபட்டான்.

மேலும், சுழன்றது! சுழன்றது! காலச் சக்கரம்.

காற்றடித்தது! தூள் பறந்தது! கள்ளி மரம் கண்ணைக் குத்திற்று.

சுற்றெனை வந்தது, கூற்றமிங்கே எனக் குமுறினான் மனிதன்! திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்தியாயிற்று.

காட்டை அழித்த காற்றே, மூச்சை உண்டாக்கி வாழ்க்கையை உண்டாக்கியது; மூச்சை நீடித்து வாழ்வையும் நீடித்தது.

எனவே படைத்து, அளித்து, அழிக்கும் காற்றையும் பயத்தின் அடிப்படையில் வணங்கினான் மனிதன்!

காலச் சக்கரமும் சுழன்று கொண்டே இருந்தது.

பூ நடுக்கம் (பூகம்பம்) உண்டாயிற்று; இனி வெடித்தது உலகு முடிந்தது அனேகமாக!

பூமி யதிர்ச்சி உண்டாச்சு; விண்ணைப் புழுதிப் படுத்தியதாம் சுழற்காற்று!

பூமி இல்லை எனின் உலகிற்கு ஆதாரம் எது? வாழ்வும் எங்கே? உளவாக்கலும் நிலை பெறுத்தலும், நீக்கலும் வாய்ந்த பூமியையும் வணங்கினான். பகுத்தறிவு வளரப் பெற்ற மனிதன்; வணங்கி மகிழ்ந்தான் மனச் சாட்சி யுடைய மனிதன்!

மேலும் சுழன்று சுழன்று ஓடியது காலச்சக்கரம்.

குகையில் நுழைந்தபோது மனிதன் குனிந்து போனான் வெளியில் வந்த மனிதனோ நிமிர்ந்து நடந்தான்; காரணம் என்ன? குகைக்குள் ஆகாயத்தின் உயரம் குறைவு வெளியே அளவில்லாமல் உயர்ந்தது.

தென்னைமரம் அறுபது அடிக்கும் மேல் வளர ஆகாயமும் வளர்ந்து உதவியது. மழை மேகங்கள் உலாவ உதவ, ஆகாயம் பிரம்மாண்டமாகப் பரவி உதவியது. நெருப்பு மண்டலச் சூரியனின் கிரணம் தணிந்து பூமியின் மேல் தாங்கும்படி உதவியதும் ஆகாயப்பரப்பே! மதயானை போல் எழுந்த மேகங்கள் மலைத்தொடர் எனப் பரவிய மேகங்கள் துளித்துளியாகி பூமிமேல் பட உதவியதும்

விசும்பே! வாயு மண்டலம் பாய்ந்து பாய்ந்து சுழற்ற உதவியதும் வானமே; ஆறடிமனிதன் வாழ அவசியமாகத் தேவைப்படுவதும் ஆகாயமே; கல்லுக்குக் கீழே புல் முளைப்பதில்லையே! எனவே உண்டாக்கவும்; காப்பாற்ற வும்; அழிக்கவும் உதவும் ஆகாயமும் கடவுளாக மதிக்கப் பட்டு (1) சூரியன் (2) மழை, நீர் (3) காற்று (4) பூமி யுடன் சேர்க்கப்பட்ட (5) ஆகாயமும் வணக்கத்திற்குரிய தாகியது. இவ்வைந்துமே பஞ்ச பூதங்கள் என வடமொழி யில் வழங்கப்படும்.

அனாதி காலமாகக் கடவுள் தன்னை நெருப்பு, நீர், பூமி, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பெரும் சக்திகளாக அதாவது பஞ்ச பூதங்களாக வெளிப்படுத்தியதை நிரந்தர மாக எக்காலத்தவரும் அறிந்து வணங்கும்படி செயல் முறையில் கொண்டு வந்தது தெய்வத் தமிழ்நாடே.

கார்த்திகை மாதம் இருண்ட மாதம். அந்த மாதப் பௌர்ணமி நாள் ஒளி வீசும் இரவு. அன்றைய இரவிலே தமிழ்நாட்டின் மிக மிகப் பழமையான திருவண்ணாமலை யின் சிகரத்திலே தீபம் ஏற்றிக் கடவுள் அக்னி சொரூப மாக உள்ளான்! என்பதை நிலைநாட்டும் படிக் கடவுள் அருளினான்.

திருவண்ணாமலையே ஒரு சோதியாகக் காட்சி அளிக்கும்படி பரமசிவன் தோற்றுவித்ததாகப் புராணமும் புகலும்! அந்த தெய்வசோதியே அணைந்து திருவண்ணா மலையாகக் காட்சி தருகிறது. இப்படியாக மலை எரிந்து அணைவதை Valcano (வல்கனோ) என்று கூறுவதால் திருவண்ணாமலை ஒரு அணைந்த நெருப்புப் பிழம்பே. திருவண்ணாமலையில் காட்சி தருவது சோதிலிங்கம்.

தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரி ஆறு. காவிரி கொள்ளிடம் காவிரியாகப் பிரிந்து மலையின் அடிப்பாகம் போல் இணையும் இடத்தை ஆழமாகச் செய்வதால், நீர் அமோகமாகச் சுரக்கும்; இப்படியாக நீர்பெருக்கமான

இடத்தில் கருவறை அமைத்து லிங்க உருவில் இறைவன் எழுந்தருளி இருப்பது திருவானைக்காவில் ஆகும். மழைக் காலத்தில் இந்த அப்புலிங்கமே சேவிக்க முடியாதபடி வெள்ளத்தில் அமிழ்ந்திருக்கும்.

இவ்விதமாகக் கடவுள் நீர் வடிவிலும் உள்ளான் என்பதை வெளிப்படுத்துவதற்காக இந்த காவிரி கொள்ளிடம் இணையும் திருவானைக்கா தலத்தை விடத் தமிழ்நாட்டில் வேறு இடம் தகுதியாகுமா? கருவறைக்குள் உள்ள அடித்தளக் கருங்கற்களின் இடையே உள்ள சிறு கோடுபோன்ற சந்துகளிலிருந்து காவிரியின் நீர்பெருக்கம் அதிகம் என்று இறைவன்தான் உணர்த்தியிருக்க வேண்டும். கருவறைக்குள் சேர்ந்த நீரை முன்பு ஏற்றம் கவலை கொண்டு இறைத்தது போதாமல் இப்போது எந்திரப் பொறியாலே இறைக்கின்றனர்.

சான்றோர்களான பக்தர்களால் சிறப்படைந்தது தொண்டை நாடாகும். சான்றோர்கள் செறிந்துறைந்து தினம் போற்றும் தொண்டை நாட்டின் திலகமாக அமைந் துள்ளது காஞ்சித் தலமாகும்! முக்தி தரும் நகர் எழில் முக்கியமாமம் கச்சி எனப்போற்றுகிறார் வேதாந்த தேசிகர் 'நகரேஷு காஞ்சி' எனச் சிறப்பித்துரைத்தான் மாகாகவி காளிதாசன். எனவே, காஞ்சிப் பதியின் மண்ணே சிறந்து தாகும்) வேகவதி ஆற்றின் கரையிலே மணலால் இலிங்கம் அமைத்து காமாட்சித் தாயார் பூசனை புரியுங்கால், வேகவதியாற்றில் சிவபெருமான் வெள்ளம் வரும்படி திருவிளையாடல் புரிய, காமாட்சித் தாயாரும் அந்தப் பூமி லிங்கத்தை மார்போடு அணைத்துக் கொண்டதால் தழுவிக் குழைந்த படலமும் பாடப் பெற்றுள்ளது.

இன்றும் காஞ்சியில் ஏகாம்பரேசுவரர் சந்நிதியில் உள்ள லிங்கம் மணலால் ஆனதே. மேலே புனுகுச் சட்டம் பூசப் பெற்றுள்ளது. இறைவன் காஞ்சி நகரில் பூமியின் அம்சமாக எழுந்தருளியிருப்பது தமிழர்களின் பேறாகும்.

'வீசு தென்றல்' காற்றாக இறைவன் காட்சி தரும் இடத்தைக் கவனித்தால் நம் மூச்சுத் திணறிவிடும். தென் கோடியில் நீலத்திரைக் கடல் ஓரத்திலே அமைந்துள்ள குமரி எல்லையில் உணரப்படும் தென்றல் காற்று, தமிழ் நாட்டின் வடக்கு எல்லையான வடமாலவன் குன்றத்தையும் தாண்டி ஸ்ரீ காளத்திப் புண்யபதியில் அமைந்துள்ள மலைச் சரிவுகளில் தவழ்ந்து விளையாடுகிறது. இக்காற்றின் சுண்டு விரல் பருமனான ஒரு பகுதி திருக்காளத்திநாதன் எழுந்தருளியுள்ள கருவறையில், ஒரு பக்கமிருந்து மறுபக்கம் வீசுகிறது. இப்படிக் காற்று மயமாக இறைவன் எழுந்தருளியிருப்பதைப் பக்தர்கள் சேவிப்பதற்காகவே ஒரு தீபம் அமைத்து, அத்தீபச் சுடர் மெல்லிய பூங்காற்றால் அசைந்து அசைந்து சேவை தருகிறது. இந்த மதிநுட்பத்தையும் அருளியது இறைவன்தான் என்பதைக் கண்கூடாகக் காணலாமே! கீழே அமைந்துள்ள ஆவுடையார் பீடத்தின் மேலே தூண் வடிவமான லிங்கம் இராது. காற்று லிங்கமாக வாயு லிங்கமாகக் காட்சி தருவதுதான் அங்கு அசைந்து வீசும் காற்றான கடவுள்.

ஆகாயம் நம்மைச் சுற்றிக் கண்ணுக்கு எட்டாதுள்ளது' இந்தப் பாழ் வெளியே நம் உள்ளத்திலும் உள்ளது. ஆகாயத்தில் அணுக்கள் தாண்டவம் செய்கின்றன, நம் உள்ளமும் துடிப்பது உள்ளே உள்ள இறைவனின் நடனத்தால் என்ற நம்பிக்கை, எல்லா திசைகளிலும் பரவியுள்ள இந்த இடவெளியை அம்பரம் என்பார்கள். இந்த இடவெளியையே, 'அம்பரம் என்றால் ஆகாசம் உற்றுப்பாரு என்று கோபாலகிருஷ்ண பாரதியின் வேதியன், நந்தனாரைப் பரிகசித்தான். இறைவன், ஆகாயமாக, அருவமாக, அம்பாரமாக உள்ள திருக்கோலத்தைச் சிதம்பரத்தில் சேவிக்கலாம்,

அம்பலத்தில் ஆடுவதும் இறைவனே! அம்பரத்தின் கீழ் உள்ள அம்பலத்தில் ஆடுவதும் இறைவனே என்பதையே இங்கு எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானும் உணர்த்து

கிறார். அருவமாக உள்ளதே சிதம்பர ரகசியம்: அடுத்துள்ள அம்பலத்தில் உருவவடிவில் நடமிடுபவரே அம்பலக்கூத்தர்

இவ்விதமாக பஞ்ச பூதங்களே இறைவனின் சொருபம் என்பதை (1) அக்கினித்தலமான திருவண்ணாமலையும் (2) நீர்த்தலமான திருவானைக்காவும் (3) பூமித்தலமான காஞ்சியும் (4) காற்றுத்தலமான திருக்காளத்தியும் (5) ஆகாயத் தலமான சிதம்பரமும் மக்களுக்கு எக் காலத்தும் உணர்த்தும் சீர்மைக்கு ஈடு உண்டோ? இணை யும் உண்டோ?

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களும் தாங்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களில், திருமாலும் ஐம்பூதங்களையும் உண்டாக்கி அவைகளை இயக்குகின் றான் என அருளுகின்றனர்.

ஓர் இரு உதாரணங்கள்:

(1) பார் (2) நீர் (3) எரி (4) காற்றினோடு (5) ஆகாயமும் இவை ஆயினான்; பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகும் இடம்.

காரும் வார்பனி நீள் விசும்பிடைச் சோருமா முகில்
தோய்தர
சேரும் வார்பொழில் சூழ் எழில் திருவேங்கடம் அடை
நெஞ்சமே

(திருமங்கை ஆழ்வார்—பெரிய திருமொழி 1—8—1)

திருமழிசை ஆழ்வார்: திருமால் படைத்துக் காத்தரு ளும் ஐம்பூதங்களில் உள்ள குணங்களையும் பிரித்துக் காட்டி யருள்வது!—

பூநிலாய வைந்துமாய் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகால் இரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறு வேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே!

ஐம்பூதங்களில் உள்ள குணங்களைப் பாகுபடு செய்து காட்டும் பாடல் தமிழ் இலக்கியத்தில் இது ஒன்றேயாம். ஐம்பூதங்களில் உள்ள தனித்தனி குணங்களிலும் பரவி, அவற்றின் சேர்க்கைகளிலும் பரவித் திருமால் பிரபஞ்சத்தை இயக்கும், இயங்கும் அதிசயத்தை யாராவது கண்டறிய முடியுமா? என விம்மிதம் அடைகிறார் திருமழிசை யாழ்வார் திருச்சந்த விருத்தத்தின் முதற்பாசுரத்திலே.

உலகில் உலவும் உயரினங்கள் யாவும் ஆண் இனமாக வும் பெண் இனமாகவும் இணைந்து வாழ்கின்றன. ஆண் இனம் தனித்து ஓரிடத்திலும், பெண் இனம் தனித்து மற்றொரு இடத்திலும் வாழ்வதில்லை. இணைந்தே வாழ்கின்றன.

ஆண் இனத்தின் தனிச் சிறப்பு ஆண்மை அல்லது ஆற்றல். பெண் இனத்தின் தனிச் சிறப்பு பெண்மை அல்லது அன்பு. ஆண்மை, அன்பின் அடிப்படையில் இயங்க வேண்டும். அன்பும் ஆற்றலுடன் இயங்க வேண்டும். இதுவே இருபாலாக உலகம் இயங்குவதின் உட்பொருள்.

உலகில் இணைந்து வாழும் ஆண் பெண் இனங்களைப் படைத்த இறைத்தன்மையும், ஆண், பெண் தன்மை களுடன் இயங்கத்தான் வேண்டும். எனவே, பெண் தன்மை யும், உருவும், தெய்வ வடிவில் மிளிர்வதைக் காணப் பெரு மிதம் அடைகிறோம். நமது உடலின் வலப்பாகத்தில் அதிகமாக ஆண் தன்மை அமைந்து ஆற்றலுடன் செயல்படு கிறது. உடலின் இடப்பாகத்தில் பெண் தன்மை அதிகமாக அமைந்துள்ளதால் இடப்பாகத்தில் இருதயம் இயங்கி, அன்பை வெளிப்படுத்துகின்றது. இடப்பாகத்தில் பெண்மையையும் வலப்பாகத்தில் ஆண்மையும் வெளிப் படுத்திக் காட்சி அளிப்பதே அர்த்தநாரிப் பெருமானின் திருக்கோலம் ஆகும். திருச்செங்கோட்டு மலையின் உச்சி யில் இறைவன் அர்த்தநாரீசுவரனாகச் சேவை தருகிறான்,

அம்மை அப்பனாகக் காட்சி தரும் அர்த்தநாரி (பாதி ஆண் பாதி பெண்) உருவத்தில் அமைந்துள்ள திருக்கோலமே சக்தி வழிபாட்டின் சிகரம்.

தனித்து இயங்கினால் சிவன் என்றும் சக்தி என்றும் காட்சி காணலாம்.

பார்வதியைத் தன் இடப்பாகத்தில் ஏற்றுக் கொண்டு உள்ளதால் சிவபெருமானுக்கு மாது ஒரு பாகன் என்று திருநாமம்.

திருமால் தன் வலமார்பினில் இலட்சுமிப் பிராட்டியை எழுந்தருள்வித்துள்ளான். வடிவாய் வலமார்பினில் வாழ் கின்ற மங்கையும் பல்லாண்டு! என்று மங்களாசாசனம் செய்தருள்கிறார் பெரியாழ்வார், திருப்பல்லாண்டிலே.

பிரமன் வேதங்களை ஒலிவடிவத்தில் தன் நாவில் ஏற்றுள்ளதால், சரசுவதியும் அவன் நாவில் எழுந்தருளி ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் தலைவியாகின்றாள்.

இப்படியாக மும்மூர்த்திகளும் ஆண், பெண் பாகு பாட்டிற்குத் தெய்வத்தன்மை தந்து, சக்தி வழிபாட்டை யும் அருள்கின்றனர். இதனைச் சிறப்பாக நவராத்திரி விழாவில் காணலாம்: இலக்குமி, பார்வதி, சரசுவதி என்னும் மூன்று சக்திகளையும் மூன்று தினங்களுக்கு ஒருவராக வணங்குவதே நவராத்திரியின் பெருமை.

பிரமனுக்கு ஏற்பட்ட ஒரு சாபத்தால் அவனுக்கு கோயில் இல்லை. அதனால் சரசுவதிக்கும் கோயில் இல்லை. ஆனால், ஆண்டுக்கு ஒரு முறை சரசுவதி பூஜையன்று விசேடமான வழிபாடு நடைபெறும். அறிவின் சின்னமாக புத்தகங்களையும், அறிவால் வேலைகள் செய்ய உதவும் ஆயுதங்களையும் கொலுவில் வைத்து வணங்குவார்கள். ஒவ்வொரு பள்ளித்தலமும், தொழிற்சாலையும் சரசுவதி தேவியின் திருக்கோயில்களே;

பரமசிவனின் பத்தினியான பார்வதிக்கும் கோயில்கள் பலப்பல. கயிலையிலே பரமசிவனுடன் அமர்ந்து தெற்கு நோக்கிப் பரத நாட்டைக் கடாட்சிக்கின்றாள்; தென் கோடியிலே கன்னியாகுமரியிலே வடக்கு நோக்கி வலது ஒற்றைக் காலில் நின்று தவமியற்றுகிறாள். வடக்கு தெற்குக் கோடிகளில் எழுந்தருளி பார்வதியம்மை பரதநாட்டின் காவல் தெய்வமாகவல்லவா விளங்குகின்றாள்'. கன்னியா குமரியிலே பாறை மீது வைத்தருளிய ஒற்றை வலது காலடி சுவட்டில் உள்ள மஞ்சள் குங்குமம், வண்ணங்களை இன்றும் யாரும் அழிக்க இயலாது. இப்படியான எல்லையைக் காத்து வந்த பெருமை எந்த நாட்டிற்கும் இல்லை.

சக்தி பெரிதா? சிவம் பெரிதா? என சச்சரவுகள் கூடாது.

ஒரு பழமொழிக்குத் தவறான பொருள் கூறிச் சச்சரவு கள் எழுகின்றன;

''சக்தியிருந்தால் செய்! இல்லையானால் சிவனே என்று இரு'' என்பதே அது.

இதன் உண்மைப் பொருள் என்ன? சக்தியின் அருள் பெற்றுக் காரியங்களை கவனி. அப்படி வேலையில்லாத போது சிவன் அருள் பெற்று சிவஞான அன்பில் திளைத்து தவம் செய்வாயாக:

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பும் சிவமும் ஒன்று என்று அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.

சக்திதானே பெரியவள் என மயங்கி சிவபிரானின் கண்களை ஒரு கணம் மறைத்தாளாம். உலகமே இருண்டு தோற்றுப் போனதைக் கண்டுதன் தவறுக்கு மன்னிப்புக் கோரினாளாம் சக்தி.

இன்னொரு கதை. சிவபெருமான் சகல ஜீவராசிகளுக்கும் படி (உணவு) அளிப்பதைச் சோதிக்க விரும்பிய பார்வதி, ஒரு எறும்பை ஒரு சிமிழுக்குள் அடைத்துக் கொண்டு, 'எல்லா சீவராசிகளுக்கும் படியளந்தாகி விட்டதா? என சிவனைக் கேட்டராம்.

'ஆம்' எனச் சிவபெருமான் பதில் அளிக்கவும்; பார்வதி தான் அடைத்து வைத்திருந்த எறும்பைச் சோதித்துப் பார்க்கவும், அந்த எறும்பிற்கும் ஒரு அரிசி அளிக்கப் பட்டிருந்ததை கண்டு, தன் அறியாமைக்கு வருந்தினாளாம்.

பார்வதியம்மைக்குப் பரத கண்டத்திலே மூன்று தலங்களில் அமைந்துள்ள கோயில்கள் மிகவும் பிரச்சித்தி வாய்ந்தவை. அவை;

காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி.

காஞ்சி காமாட்சியின் அருள் பெற்றவரே ஆதி சங்கரரும், தற்போதுள்ள ஏனைய சங்கராசாரியர்களும். காஞ்சி ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளை தெய்வமாகவே போற்றி வணங்குகின்றது பாரதம்.

உஜ்ஜியினி காளி, காளிதாசன் நாவில் அட்சரம் தீட்டி மகாகவியாக்கினாள். கம்பனைக் கடாட்சித்தவளும் ஒரு காளியே. காளி கோயில்கள் ஆயிரக்கணக்கில் அமைந்துள்ளன. காளியின் தலையை மாத்திரம் எழுந்தருள்வித்து வணங்குவதும் மரபு. ஆடி மாதத்தில் காளிகோயில்களில் விசேடமாக நடைபெறும். ஆடிமாதத்தில் தொடக்கமாகும் மாரி அல்லது மழையே மாரியம்மனாக வணங்கப்படுகின்றாள். 'மாரியல்லாது காரியம் இல்லை' என்ற பழமொழியும் எழுந்துள்ளது.

திருமாலின் தேவியான திருமகளுக்கு எல்லா வைணவ சந்நிதிகளிலும் தனிக் கோயிலும் உண்டு. தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ள பிராட்டியை சேவித்த பிறகுதான் பெருமாளைச் சேவிக்க வேண்டுமென்பது முக்கிய வழக்கம். காரணம்; பாபங்களும், தவறுகளும் செய்யும் நாம்,

பிராட்டியிடம் முதலில் போய் சேவித்தால், நம் பாபங்களை யும் தவறுகளையும் மன்னித்தருளும்படி பெருமாளிடம் சிபாரிசு அல்லது பரிந்துரை புரிவாளாம்! இதற்கு புருஷா காரம் என வடமொழியில் பெயர். நேரே பெருமாளிடம் சென்றால், அவன் தன்னுடைய கட்டுக்கு அடங்காத சுதந்திரத்தால், நம்மை தண்டிக்கவும் கூடுமே!

ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் என்ற ஸ்ரீ வைணவ ஆசாரியர் தாம் இயற்றியுள்ள ஸ்ரீ வசன பூஷணத்தில் அருள்வது :

''நீரிலே நெருப்புக் கிளறுமாப் போலே (பெருமானுடைய)
குளிர்ந்த திருஉள்ளத்தில் சீற்றம் பிறந்தால்
பொறுப்பது இவளுக்காக (லட்சுமி தேவிக்காகவே)

நீரில் நெருப்பு தோன்றாது. ஆயினும் கடலில்முத்தீ கூடும் என்பது புராணம். அப்படி கடல் போன்று குளிர்ந்த பெருமாளின் திரு உள்ளத்தின் சினம் தோன்றி னும், இலக்குமிப் பிராட்டியாரின் பரிந்துரையால் பெருமாள் சினம் தணிந்து நமக்கு அருள்வாராம்!

திருமால் அவதாரங்கள் எடுக்கும் போதெல்லாம் திருமகளும் அவதாரம் எடுக்கின்றாள். காரணம் திருமகள் அவதாரம் எடுக்கும் காலங்களிலும், ''தன் மக்களான பக்தர்களின் அபவாதங்களைப் பொறாது தண்டித்து விடுவாரே'' எனப் பயந்து திருமகளும் உடன் அவதாரம் எடுத்துப் பக்தர்களைக் காப்பாற்றுகிறாளாம்.

திருமகள் சீதையாக அவதரித்துத் திருமாலான இராமன் அருகில் இருந்த சமயம்,காகாசுரன் என்ற வடிவில் இந்திரன் குமாரனான ஐயந்தன் சீதையின் மார்பை ரணமாக்கிக் காயப்படுத்தினான். இராமன் சினந்து ஒரு புல்லை எடுத்துப் பாணமாக விடவும், காகம் எத்திசையும் திரிந்தோடி இளைத்து ராமபிரான் திருவடிகளே சரணம் என்று வந்து விழுந்தது. உடன் இருந்த சீதாபிராட்டி காகம் தனக்கு இழைத்த தீங்கையும் மறந்து, அவனை மன்னிக்கும்

படி வேண்டவும்; காகாசுரனின் தலையை அறுத்துவிடாமல் அதன் ஒரு கண்ணை மாத்திரம் சிதைத்துப் போக விட்டார் எம்பெருமான்.

இராம பிரானிடமிருந்து தூதாக வந்த அனுமன் வாயிலாகப் பெரியாழ்வார் அருளிவது;

சித்திர கூடத்திருப்பச் சிறுகாக்கை முலை தீண்ட,
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே! இராமாவோ! நின்னபயம் என்றழைப்ப
அத்திரமே அதன்கண்ணை அறுத்தது மோரடையாளம்!

(பெரியாழ்வார் திருமொழி 3—10—6)

போர்க்களத்தில் இராமபிரானுடன் போருக்கு வந்த இராவணன் களைத்து ஆயுதங்களை இழந்து தனியனானான். பெருமாள் அவனுடைய அவல நிலையைக் கண்டு இன்றுபோய் நாளை வா! என்றார். ஒரு வேளை மறுநாள் வந்து சரணாகதி செய்வான் என்றும் எதிர்பார்த்தார் பெருமாள். இராவணன் மறுநாளும் யுத்தம் செய்ய வந்தான், அந்த சமயம் சீதாபிராட்டி அசோக வனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்தாள். ஒரு வேளை அந்த சீதாபிராட்டி போர்க்களத்தில் இராமபிரானுடன் எழுந்தருளியிருப்பின், பிராட்டி இராவணனையும் மன்னிக்கும்படி இராமபிரானிடம் வேண்டி, அதை நிறைவேற்றியும் இருப்பாள். அப்படியான மிகச்சிறந்த பரிந்துரை செய்து சீவன்களைக் காப்பாற்றுபவள் இலக்குமி பிராட்டி என்பதை ஸ்ரீ வசன பூஷணம் என்னும் அரிய நூலில் ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் திருவுள்ளப்பட்டு அருள்வது:

இவள் (சீதாப்பிராட்டி) சந்நிதியாலே காகம் தலை பெற்றது!
அது இல்லாமையினாலே இராவணன் மடிந்தான்!

திருமாலின் சக்தியான திருமகளுக்கே சிறப்பாக அமைந்துள்ள புருஷாகாரம் அல்லது பரிந்துரைக்கும் கருணையைப் பல படியாகப் போற்றுவதை ஸ்ரீ வைணவ நூல்களிலே பரக்கக் காணலாம்.

பக்தனைக் காப்பாற்றும்படி பெருமாளிடம் பரிந்துரை செய்வதே பிராட்டியின் செயல். அவனைக் காப்பது பெருமாளின் செயல். இலட்சுமியின் கருணை ஏற்பட்டு விட்டால், பெருமாள் ரட்சிப்பார். ஆனால் பெருமாள் திருவுள்ளம் பற்றாவிடின் இலட்சுமியும் காப்பாற்ற இயலாது.

இதனை விளக்க இரண்டு கதைகள் :

திருமாலும், திருமகளும் ஒன்றாகப் போய்க் கொண்டிருந்த சமயம், ஒருவன் ஒரு மரத்தின் நுனிக்கிளையில் அமர்ந்து கொண்டு அடிக்கிளையை வெட்டிக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட திருமகள் திருமாலிடம் அந்த மூடனைக் காப்பாற்றும்படி வேண்டினாள். 'அம்மா' என்று அவன் விழுந்தால் நீ காப்பாற்று. அப்பா என்று விழுந்தால் நான் காப்பாற்றுகிறேன் என்றார், பெருமாள். பக்தி வாசனையில்லாத அவனோ 'ஐய்யோ!' என விழுந்தானாம், பெருமாள் அவனைக் காக்கத் திருவுள்ளம் பற்றவில்லை.

ஒரு கர்வம் பிடித்த பரம ஏழை ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பணம் உதவ வேண்டும் என்றாள், திருமகள். உன்னால் முடியுமானால் பாரேன்; என்றார் பெருமாள்! அப்படிப் போய் கொண்டிருந்தவன் முன்பாகத் திருமகள் ஒரு பணப்பையைப் போட்டாள். அந்த பக்தி வாசனையில்லாமல் கருவம் பிடித்தவன், நாம் இத்தனை காலமாக கண்ணைத் திறந்து கொண்டு நடக்கிறோமே! இன்று கொஞ்ச நேரமாவது கண்ணை மூடியபடி நடக்கலாமே இந்த அற்பமான காரியத்தைக் கூடவா செய்வதற்கு நமக்குத் திறமை இல்லை எனச் செருக்கடைந்து, அந்த பணப்பை இருந்த இடம் வருவதன் முன் தன் கண்களை மூடிக் கொண்டு, அந்தப் பணப்பையைக் கடந்தும் கண்களைத் திறந்து கொண்டு தன் திறமையை மிகவும் மெச்சிக் கொண்டானாம். தன் திருவுள்ளமில்லாமல் ஒன்றும் நடக்காது என்பதைப் பெருமாள் புன்னகையால் புலப்படுத்தினார். திருமகளும் பெருமாளின் சக்தியை உணர்ந்து கொண்டாளாம்.

பெருமாளைச் சரணம் அடைய வேண்டுமானால் நாம் பிராட்டியின் உதவியைக் கொண்டே, அவள் மூலம் தான் சரணடைய வேண்டும். பிராட்டி எப்போதும் நம்மை ரட்சிப்பதற்காக இடைவிடாது பெருமாளின் திருமார்பில்

எழுந்தருளியுள்ளாளே! நாயகன் நாயகியை தன் இனிய இருதயம் 'Sweet Heart' என்று போற்றுவது ஆங்கில மேல் நாட்டு மரபு. திருமாலும் திருமகளைத் தன் இனிய இருதயமாகவே 'Sweet Heart' ஆக வைத்துக் கொண்டுள்ளானாம். பெருமாளின் மனச்சாட்சியாகவே விளங்குகின்றாள், பிராட்டியார். அவன் அவள் மனமறிய ஒரு பக்தனையும் தண்டிக்க மாட்டான். காப்பாற்றாமல் விடமாட்டான், இது வைணவர்கள் தலைமேற் கொண்டு போற்றும் ஒரு சிறந்த கொள்கையாகும்;

ஆழ்வார்கள் பதின்மர்: இவர்களில் தலைவரானவர் நம்மாழ்வாரான குருகூர் சடகோபர் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள அரங்கத்தம்மானே குருகூர்ச் சடகோபரை, ''நம்மாழ்வார்'' என்று விசேட அன்பு காட்டிப் பாராட்டினார்.

நூற்றெட்டுத் திவ்ய தேசங்கள், ஆழ்வார்களின் அருளிச் செயல்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டவை. இந்த நூற்றெட்டுத் திவ்விய தேசங்களிலும் திருவேங்கடவர் எழுந்தருளியுள்ள திருமலையே, சரணாகதி செய்வதற்குச் சிறந்த இடம் என்பது நம்மாழ்வாரின் திரு உள்ளம். காரணம் என்ன? திருமலையில் பிராட்டிக்குத் தனிச் சந்நிதி இல்லை; பெருமாளுடைய திருமார்பிலேயே எழுந்தருளி அவளை ஸ்ரீநிவாசன் (திருமகள் உலாவும் இருடிய முராரி) என்ற திருநாமத்துடன் விளங்சச் செய்கிறான், அவனைத் திருமலையில் சரணாகதி செய்தால் திருமகளின் கிருபையுடன் பேறு தப்பாது கிடைக்குமாம். இதனை நம்மாழ்வார் அருள்வது :

''அகலகில்லேன் இறையும்'' என்று அலர் மேல் மங்கை
உறை மார்பா!
நிகரில் புகழாய் உலக மூன்றுடையாய் என்னை
ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்
தானே
புகலொன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே!
(திருவாய் மொழி 6—10—10)

இந்து சமய முச்சக்திகளின் துணை கொண்டு முத்தி பெறுவோமாக.

"PIRAATTI IN SRI VAISHNAVISM"

It is an unique feature of Hinduism that in addition to the realisation of God in the male form God-hood has been realised in the female form also;. The consort of Brahmmaa is Saraswathi - the Goddess of Learning. The consort of Siva is Paarvathi - the Goddess of Power (Shakthi). The consort of Maha Vishnu is Lakshmi - the Goddess of All wealth. Saaktheeyam which has Paarvathi as its head is recognized as one of the six sects of Hinduism. Saintly scholars in Tamil and Sanskrit in their valuable works have expounded the noble qualities of Piraatti - Goddess Lakshmi, the consort of Mahaavishnu i.e. Lord Naaraayanaa.

Kambar, the greatest of Tamil poets, in his outstanding work the Raamaayanaa has well brought out these qualities of the Piraatti in the character of Sitha - the consort of Sree Raamaa. I shall here present the salient thoughts of these Tamil saint - scholars and poets on the personality and qualities of Piraatti.

We see people going down the bowels of earth and bringing out the diamonds. So also people dive deep into the depths of the oceans and bring out the pearls. So also Pillai Lokaachaarya - scholar saint of Sri Vaishnavism diving deep into the Sanskrit and Tamil works of the Rishis, Alwars and Aachaaryaas has brought out the eighteen works known as Ashtaadass Rahasyam containing the most subtle and precious thoughts of Sri Vaishnava Philosophy. In the chapter on Thuvayam in Mumootshuppadi and the chapter on Purushaakaaram in Sri Vachana Bhooshanam, this great saint - scholar deals with the personality and qualities of Piraatti.

In Paramapadam or Vaikuntam (Heaven) Lord Mahaa vishnu is always with His consorts known as Peria Piraattiyaar and Bhoomi Piraattiyaar. Peria Piraattiyaar means the senior consort (Lakshmi).

In Sri Vaishnava Philosophy THE THIRUMANTHIRAM (Om Namoo Naaraayanaa) lays down that our salvation can be had by the efforts of the soul (Aathmaa). The Charama Slooka holds that salvation can be obtained by the blessings of Lord Naaraayanaa. The Thvaya Manthiram proclaims that salvation is obtained by the blessings of Peria Piraattiyaar (Mumootshuppadi - Verse 118).

The Thvaya Manthiram is as follows:
"Srimathee Naaraayanaa Namaha - Srimathee Naaraayanaa Charanow Charanam Prapathyee"

The gist of this is as follows: Surrender to Lord Naaraayanaa who is clubbed with the company of Peria Piraattiyaar. Perform servitude or Kainkaryam at the feet of Lord Naaraayanaa clubbed with the company of Peria Piraattiyaar.

Pillai Lokaachaaryaa ordains that one should surrender himself to Lord Naaraayanaa together with Peria Piraattiyaar so that she may be pleased to render the needed Purushaakaaram or presentation with her best compliments in which case the Lord will certainly accept our obeisance even though we may be presenting ourselves, with all our innumerable infirmities.

The second thought is that one should do service (Kainkaryam) when Lord Naaraayanaa and Peria Piraattiyaar are together, as there can be no refusal on the part of Lord Naaraayanaa to accept our surrender when recommended by Her.

For these reasons it is proclaimed that as per the Dhvaya Manthiram salvation is secured by Peria Piraattiyaar.

Why is it said that salvation should be obtained through the blessings of Periya Piraattiyaar? If Lord Naaraayanaa

may not be accepting our direct surrender or Charanaagathi, then Periya Piraattiyaar will come to our rescue and plead on our behalf. The Lord will certainly accept our surrender even though we are a bundle of bad deeds. This act of kindness of Periya Piraattiyaar in presenting us with all our faults to the Lord with Her best compliments is called Purushaakaaram. Without Her kind intercession He may not accept . (Mumootshuppadi, 119).

The first sentence in the Manthiram refers to seeking the sacred Feet of the Lord through the good offices of Periya Piraattiyaar as our means to obtain salvation and the second sentence speaks of our performing service (Kainkaryam) at the Feet of Lord Naaraayanaa who is with Peria Piraattiyaar. (Mumootshuppadi - Verse 122).

Peria Piraattiyaar is referred to by the word Sree in Thvaya Manthiram, Sree Mathee denotes Lord Naaraayanaa in the company of Periya Piraattiyaar.

We gain our personality by securing the blessing of Peria Piraattiyaar in the first instance and She also gains, Her personality by appealing to the grace of the Lord for our salvation. She is looked up to, by us for purposes of Purushaakaaram i.e. sweet, unfailing, counselling. (Mumootshuppadi 123, 125 and 165).

Should there be the counselling of Periya Piraattiyaar? Yes. This is for the reason that even in the heart of Lord Naaraayanaa which is as cool as sea-water, there may be occasions when His heart may be swept by anger as hot waves appear in cool water. On those occasions the Lord pardons only on account of kind counselling of Periya Piraattiyaar. (Mumootshuppadi 127).

Lord Naaraayanaa has often to take Avataars or births on earth to protect the good, punish the bad and establish

Dharma. Periya Piraattiyaar also takes births and accompanies the Lord on all such occasions, since, the lord being uncontrollably independent and the earthly beings fallible. The Lord may also resort to severe measures. Her being in the company of the Lord while on earth will make Him more merciful. Therefore She will not get separated from the Lord. (Mumootshuppadi 132).

Periya Piraattiyaar is known by the shorter name of Piraatti when she comes down to earth along with the particular name She takes. She is thus known as Sitha Piraatti, Rukmani Piraatti, Nappinnai Piraatti etc.

We shall now study as to how the qualities of Periya Piraatti in Sri Vaishnavism are seen reflected in the personality of Sitha Piraatti, the consort of Sree Raamaa Piraan. Piraan means the Divinely Male and Piraatti, the Divinely Female. Piraan is the masculine of Piraatti. Both these are Tamil words;.

Pillai Lokaacharyaa holds that it is the greatness of Sitha who incarcerated Herself in the Ashoka Vana prison of Raavana that is extolled in the Sree Raamaayanaa Epic. (Sree Vachana Bhooshanam 5).

While the Raamaayana extolles the Purushakaara-Vaibavam (counseling on behalf of the erring devotee to the Lord of forbearance and protection) of Periya Piraattiyaar; Mahaa Bhaaratha extols the greatness of Lord Naaraayanaa in His being the goal and awarder of salvation. Therefore the Raamaayana speaks of the Upaaya (the means) and the Mahaa Bhaaratha of Upeeyam (the attainment). It is the domain of Periya Piraattiyaar to plead for our salvation with the Lord and it is the prerogative of Lord Naaraayanaa to grant them as per the very wishes of Periya Piraattiyaar. (Sree Vachana Bhooshnam - 6).

Sage and warrior Viswaamithra was leading Sri Raamaa and Lakshmana to the palace of the philosopher King Janakaa at Mithila. Sri Raamaa the Prince of Ayodhyaa and Sitha the Princess of Mithila glancing at each other instantaneously become one soul in two bodies. They easily realised that they have rejoined each other after their Blissful united life on the Adi Seesha in the milky ocean. Are words necessary at a closer range after such a seperation? - (Kamba Raamaayanaa - Baalakaandam - Mithilaa Padalam).

Sage Vasishtaa, the Royal Guru of Emperor Dasarathaa, also speaks supporting that Lord Naaraayanaa and Periya Piraatti are born as Sree Raamaa and Sree Sitha; "As our Raamaa who is the outcome of all the tapas of all of us is only the incarnation of the Supreme Being that rules the universe with the disc and the conch adorning His hands is the Bride groom, then the bride should only be Goddess Lakshmi, the periya Piraattiyaar who rests on the Lotus flower. (Kamba Raamaayanaa - Baalakaandam - Mithilaa Padalam.)

We shall now see a surprising feature in the Raamaayanaa. In Swayamvaras, choosing of the bride groom, a test for his bravery is prescribed. To get at the hand of Drowpati in Mahaabhaaratаa, Arjuna had to shoot at the fish model that was rotating in the ceiling by spotting it from its reflection in the plate of water that was kept below. Sri Krishna had to combat seven brutal bulls to secure the hand of Nappinnai, the Yadhava Princess.

Nowhere was it laid down that one had to break a bow to marry a princess, as it was the condition prescribed for marrying Sitha. It requires deep thought to understand the significance of such a condition prescribed.

The bow or the Danush kept in store at Mithila was that of Lord Siva, the God of Destruction. There was a

match before the Devas i.e. the celestials between the Siva Danush and the Danush of Lord Naaraayanaa. The Siva Danush representing the policy of Destruction and retributive theory, got tracked as the match was against the Danush of Lord Naaraayanaa which represented the policy of mercy and redemption and theory of protection.

A Prince before he succeeds to the throne had to learn the art of punishing the evil (dhushta nigraham) and protecting the good (Sishta paripalanam). Sri Ramaa with the blessings of the Sage Viswaamitra had surpassed in the art of Destruction of the Evil as seen in His killing the Demoness Thaataka. He had also excelled in the art of protecting the good as proved in his bringing back Ahalyaa to her former womanly state back from stone.

Sitha being the embodiment of Periya Piraatti could not tolerate Her husband resorting to the theory of Destruction and punishing anybody even though one may be wicked or bad. So it was laid down that anybody aspiring for her hand should break publicly the Siva Dhanush representing the theory of Destruction and punishment and thereby indirectly take an oath that he would not indulge in the Destruction or punishment of the wicked or evil but would accept her pleadings generously to pardon and redeem such persons, as they were also her children. Raamaa, the incarnation of Lord Naaraayanaa, the symbol of protection, accepted the standard laid down and lifted the bow (Siva Dhanush) treating it as a garland to decorate the bride Sitha and broke it in two setting at rest the fear that he would go against her pleadings and in Her divine presence.

Pillai Lookaacharya excellently summarises the personality of Sitha on earth reflecting that of Periya Piraatti in Heaven when he observes as follows:

"Because of Her (Periya Piraatti in the form of Sitha) presence (by the side of Sree Raamaa) the Crow (which

form Jayandhan the son of Indran intentionally took for cirminally molesting Sitha, even while Sree Raamaa was fast asleep on her laps), had saved his life by falling at his Feet in abject surrender (saranagathi) and it was again due Her absence (by the side of Sree Raamaa) that Raavanaa came to an end (which he would not have met with if Sitha was by his side at that time). (Mumootshuppadi, 135).

Periya Piraatti in the form of Sitha was able to exercise Her Persuasive influence of Purushakaara even though Jayandhan the Crow had with immoral intentions injured by the beaks the breasts of Sitha causing her bleeding injuries which is the most heinous of the sins that could be committed on the person of a wife and in the very presence of her spouse. Though Raavana had not in any way touched the body of Sitha even though he had also the immoral intentions and Sitha was in his custody for many months - yet he could not be saved as Sitha was not by the side of Raamaa to plead for the redemption of Raavana. This proves that the controlling and counselling influence of Peria Piraatti in softening the attitude of Lord Naaraayanaa towards the fallible and failing.

Pillai Lokaachariyaa exhorting us to perform service at the Feet of Periya Piraattiyaar and Lord Naaraayanaa while in each other's company, illustrates the point with an example in the Raamaayana. Ilaya Perumal - as Lakshmana was known in the Raamaayana - did service in the combined presence of Sitha and Ramaa, as it is only proper to render servitude in the joint company of Periya Piraattiyar and Lord Naaraayanaa. (Mumootshuppadi 168).

The sage saint declares in continuation: "Servitude itself is fruitful and relished in the conjunction of both (Periya Piraatti and Lord Naaraayanaa.. - Mumootshuppadi,, 169).

Pillai Lokaachaarya holds that the influence of Periya Piraatti is very great on Lord Naaraayanaa and illustrates the point from the Raamaayana.

Hanumaan the monkey messenger of Sree Raamaa in the Asoka Vanna though possessed of animal tendencies was prevailed upon by Sitha and made to refrain from hurting the Demonesses who had earlier subjected her to various harassments to make her agree to the carnal wishes of their chief Raavanaa. If that be so, cannot She prevail over Lord Naaraayanaa her husband who is always willing to respect and go by her wishers. (Mumootshuppadi, - 129).

Periya Piraattiyaar is a very high devotee of Lord Naaraayanaa and is always subject to His will. To equip Herself and enable Herself to render Purushakaaraa i.e (pleading with the Lord and making Him grant us salvation), She is possessed of kindness (Kirupa), and always places Herself at the disposal and will of the Lord alone (Para Thanthariyam) and never in any way looks upto others for any aid or help except to Lord Naaraayanaa (Ananyaargha Seeshathvam).

All these three qualities of Periya Piraattiyaar are found to be reflected in Sitha in the Raamaayanaa.

Sitha has set the example for us in abject surrender to the Lord. She lived with the firm faith that the Lord will redeem Her from Raavana's detention and therefore declined to accept the offer of Hanumaan to carry Her on His shoulders, to Raamaa. She also did not heed to the words of Raavana for the same reason i.e. abundant faith in the Lord.

Sitha with Her qualities of mercy, utter dependence on the Lord with firm faith in Him and never looking up to anybody else than the Lord is well qualified for rendering Purushakaaram - Divine counselling.

Let the blessings of Sree Lakshmi Naaraayanaa be ever with us all, at all times and at all places!

திருத்திப் படிக் கொள்க!

பக்	வரி	பிழை	திருத்தம்
6	5	நியமித்தருவிய	நியமித்தருளிய
9	20	திருப்பாற்க்கடல்	திருப்பாற்கடல்
12	26	காட்சித்	காட்சி
14	15	உயிர்த்திரன்கள்	உயிர்த்திரள்கள்
15	9	ஊயிர்த்திரன்கடையும்	உயிர்த்திரள்களையும்
15	22	அடியோற்றி	அடியொற்றி
16	11	இயங்குகின்றது	இயங்குகின்றன.
17	20	மூவுருவி விராமனாய்	மூவுருவிலிராமனாய்
24	11	இணைத்து	இளைத்து
74	17	எதிர்ப்	எதிர்
25	3	எவறும்	எவரும்
31	2	நற்பெருந்ள்	நற்பெருந்
31	19	எழுந்தளியுள்ள	எழுந்தருளியுள்ள
31	31	அபசாரப்பாட்டத்தை	அபசாரப்பட்டதை
33	1	பாரத்தி	பாத்திர
38	7,16,24	தலைப்	தலை
39	11	அரிய	அறிய
39	13,14	ஆட்சேபனை	ஆட்சேபணை
41	29	சேதனை	சேதனனை
42	25	பாண	பாணம்
44	30	அறிய	அரிய
54	29	சமர்பிக்	சமர்பிக்கு
55	26	அமைத்திருக்கும்	அமைந்திருக்கும்
66	29	உருவமற்	உருவமற்ற
68	26	பக்கலின்	பக்கலில்
70	16	நாமள்ளாயிர	நாமங்களாயிர
74	25	வாழவிளைவே	வாழ் வினையே
78	10	சித்	அசித்
81	1	உயிர்	ம—உயிர்
81	2	வாக்கிய	வாச்சிய
81	6	சிறிய	சிறியது

83	13	இப்பத்த	இப்பத்து
85	17	சுட்டுப்	வினாப்
95	15	சீதைபின்	சீதையின்
95	16	இல்லையே	இல்லையே
96	21	துஷ்ட	சிஷ்ட
109	4	குடல்விளக்கும்	குடல் விளக்கம்
111	6	நாராண	நாராயண
111	15	சோக்கை	சேர்க்கை
112	10	எனவெ	எனவே
116	23	திருத்துதாய்	திருத்துழாய்
117	3	நாற்றுச்	நோற்றுச்
122	24	அன்னைவயல்	அன்னவயல்
125	23	அடையக்	அடைய
126	25	குற்றவேல்	குற்றேவல்
127	20	திருப்பாற்கடலில்	திருப்பாற்கடலில்
136	11	சுணை	சுனை
136	14	ஆடைகணைக்	ஆடைகளைக்
136	14	எங்கன்	எங்கள்
136	21	பிராணே	பிரானே
138	13	கூறுவளே	கூறுவனே
138	26	தூர்க்குக்	தூர்த்துக்
140	25	மாற்றேலோன்	மாற்றேலோர்
141	2	கதிரோன்	கதிரோன்
141	3	சூடராழி	சுடராழி
143	10	இராமரனுசருக்கே	இராமானுசருக்கே
143	17	என்	எண்
144	19	உருகிப்	உருகி
145	10	திருவுள்ளதில்	திருவுள்ளத்தில்
150	9	ஒரான்	ஒராண்
152	16	கடைம்ப்	கடைசிப்
153	14	விரித்திரை	விரிதிரை
154	11	ஒரான்	ஒராண்
155	1	,,	,,

155	19	னிடத்ரு	நிடைதரு
155	20	ஸன்றிற்லாரில்லை	என்றறிவாரில்லை
162	14	காத்திக்	காத்துக்
172	30	பொறுத்தம்	பொருத்தம்
173	10	திருவல்விகேணி	திருவல்லிக்கேணி
176	27	மலர்க்கனைக்	மலர்க்கணை
177	20	வதுமை	வதுவை
182	19	அளராகி	அளறாகி
183	1	தொண்டரபொடி	தொண்டரடிப்பொடி
187	14	முளிவரான	முனிவரான
187	20	நாராயண	நாராயணா
188	22	வயிற்றெரிச்ல்ச	வயிற்றெரிச்சல்
190		190	191
191		191	190
190	14	பாதியாரும்	பாரதியாரும்
191	20	வைகக்கமல்	வைக்காமல்
194	11	மூயன்றார்	முயன்றார்
194	25	தோண்டனூர்	தொண்டனூரில்
196	22	செல்வப்	செல்லப்
196	29	வைணமூடி	வைணமுடி
197	39	உறைத்துக்	உரைத்துக்
197	40	ருந்து	இருந்து
198	29	செல்வ்ப்	செல்லப்
202	8	பரபரப்பபையும்	பரபரப்பையும்
203	9	ஈர்த்தக்	ஈர்த்துக்
208	30	தெருவிக்கவே	தெரிவிக்கவே
209	29	தெய்வமாகக்கதை	தெய்வமாக்கதை
209	19	துரயம்	துயரம்
210	19	புறப்பாடிள்	புறப்பாடின்
216	9	செய்தரியா	செய்தறியா
219	30	மண்ட்ம்	(தவிர்க்கவும்)
220	2	உன்னகும்	உன்னரும்
223	23	வகையீய்	வகையில்

224	2	பானைக் தொடுக்கின்கிறனவாம்	வானைத் தொடுகின்றனவாம்
224	4	ஏறி	எறி
224	12	உய்யப்பார்	உய்ப்பார்
224	19	தெற்குவை	நெற்குவை
226	14	வறியரவும்	வறியரவம்
226	17	எம்னென்னும்	எம்மென்னும்
229	8	முழுவுதும்	முழுவதும்
232	10	எனத்	என
232	25	வளர்ந்து	வளர்த்து
235	17	வினைவு	விளைவு
235	19	இவ்வையந்தும்	இவ்வைந்தும்
237	16	களிகும்	களிக்கும்
238	3	கயம்கள்	கயல்கள்
241	6	துறத்து	துறந்து
243	1	பாடாலாமா	பாடலாமா
249	22	கிழவி	கிளவி
255	22	உள்ன	உள்ள
257	1	குணங்கனைப்	குணங்களைப்
257	1	பாகுபடு	பாகுபாடு
257	27	பெண்மையையும்	பெண்மையும்
259	28	காரினாளாம்	கோரினாளாம்

A. No. 12342
LIBRARY, KOVILOOR